SWARNAMBAL

AN INTERESTING DETECTIVE NOVEL

BY

Arni Kuppusawmy Mudaliar

THIRD EDITION

CORRECTED & REVISED BY THE AUTHOR

PUBLISHED BY
N. MUNISAWMY MUDALIAR
in his
"Ananda Bodhini" Power Press,
MADRAS.

1922

 [Price. As. 12.

சுவர்ணம்பாள்

அல்லது

பெருவிரல் மர்மம்

ஓர் அதிசயமான துப்பறியும் நாவல்

ஸ்ரீமான்

ஆர்ணி-குப்புசாமி முதலியார் அவர்களால்

எழுதப்பெற்றது.

(மூன்றாம் பதிப்பு)

நூலாசிரியரால் திருத்திப் பதிப்பிக்கப்பெற்றது

"ஆனந்தபோதினி" பத்திராதிபர்
நா. முனிசாமி முதலியாரால்
வெளியிடப்பெற்றது
சென்னை

1922

 [விலை அணு 12.

PRINTED AT THE
"ANANDA BODHINI" POWER PRESS,
15, VENKATESA MAISTRY STREET, SOWCARPET, MADRAS.

முகவுரை

[illegible]ந்துப்பறியும் நாவல், கமலசேகரன், மின்சார மாயவன், பத்மாஸனி, சுவர்ணாம்பாள், தினகரசுந்தரி, பூங்கோதை, வீரநாதன், தேவசுந்தரி, மஞ்சள் அறையின் மர்மம், மதனபூஷணம், குணசுந்தரன், இரத்தினபுரி இரகசியம், கனகபூஷணம், கற்கோட்டை, ஆனந்தசிங் முதலிய அனேகம் நாவல்களை யெழுதிய ஸ்ரீமான், ஆரணி-குப்புசாமி முதலியாரவர்களால் இனிய செந்தமிழ் நடையில் எழுதப் பெற்றது.

இந்த நாவலை வாசிப்பதனால் நல்ல முன்யோசனையும், புத்திக் கூர்மையும், மனிதரைக் கண்டவுடனே யவர்கள் குணாதிசயங்களை யறிந்துகொள்ளும் நுண்ணறிவும் உண்டாகுமென்பது இதை வாசிப்பவர்களுக்குச் சுலபமாய் விளங்கும்.

மேலும் இக்கதையால், ஒருவன் எவ்வளவு தந்திரமாகவும் சாமார்த்தியமாகவும் குற்றங்களைச் செய்தாலும் முடிவில் அவன் கண்டுபிடிக்கப்பட்டுத் தண்டனைக்கும் அவமானத்திற்கு முள்ளாவானென்பதும், சத்தியமான நெறியில் நடப்பவர்களுக்கு என்ன ஆபத்து நேரிடினும் முடிவில் அது ஆதவனைக்கண்ட பனிபோலாய், அவர்கள் க்ஷேமத்தையும் சுகத்தையு மடைவார்களென்பதும் நன்ருய் நிரூபிக்கப்படுகின்றன.

மேலும் இக்கதையில் இலௌகிகத்திற்கு அவசியமான அனேக நீதிகள் அடங்கியிருக்கின்றன. இக்கதை

ஆதியிலிருந்து அந்தம் வரையில் வாசிப்ப
உற்சாகத்தையும், இனிமையையும் தரும்.
கத் தொடங்கினல் கதை முடியுமட்டும் புத்
மனம் வராது.

இந்த மூன்றும் பதிப்பு நூலாசிரியரைக்
சீர்திருத்தி வெளியிடப்பட்டது.

7—1—1922

இப்படிக்கு,
நா-முனிசாமி முதலியார்.

ஓடினான். கதி
பின் செல்ல
படியும் பி
தார்கள்,
கதிரேப
சபாப

வர்ணம்பாள்

அல்லது

பெருவிரல் மர்மம்

1-வது அத்தியாயம்

தற்கொலை செய்துகொண்டான்—பெருங்குழப்பம்—சரவணனும்—தாமோதரனும்—துப்பறியும் கமலநாதன்—அதிசய சம்பவங்கள்.

பூவுலகிற் புண்ணிய பூமியாகிய நம் பரதகண்டத்தின் மேற்கிலுள்ள நவீனபுரியில் பிரபலமான அச்சியந்திரசாலை யொன்றுண்டு. அதற்கு ச. கதிரேசன் கம்பெனி யென்றுபெயர். ஒருநாள் பிற்பகல் சுமார் இரண்டு மணிக்கு அந்த அச்சாபீசுக்குள் டுமீல் என்று ஒரு துப்பாக்கி வெடிச்சத்தம் கேட்டதும் சபாபதிப்பிள்ளை தற்கொலை புரிந்துகொண்டார் என்று தெளிவான ஒரு சத்தம் உடனே யுண்டாயிற்று.

சபாபதிப்பிள்ளை யென்பவர் அச்சாபீசில் கதிரேசன் பிள்ளையின் கூட்டாளி. இருவரும் அதன் சொந்தக்காரர்கள். துப்பாக்கிச் சத்தத்தைச் சுமார் ஐம்பது அறுபது வேலைக்காரர்கள் கேட்டார்கள். அதில் ஏறக்குறையப் பேர் பாதிப்பேருக்குப் பின்னால் உண்டான, "சபாபதிப்பிள்ளை தற்கொலை செய்துகொண்டார்" என்ற சத்தங் கேட்டது. அப்படிக்கேட்ட எல்லாரிலும் சரவணன் என்

பவனுக்கு மேற்படி சத்தம் நன்ருய்க் கேட்ட துப்பாக்கிச் சத்தம் உண்டான அறைக்கு அறையில் இருந்தான். சரவணன் அச்சு அடு களில் (கம்பாஸிட்டர்களில்) ஒருவன். சபாபதிட தற்கொலை செய்துகொண்டார் என்று கூவியது தரன் என்று குரலால் அவனுக்குத் தெரிந்தது. தாமோ தரன் அச்சாபீஸில் ஒரு பாகத்திற்கு மேஸ்திரி.

மேற்படி சத்தங்கள் உண்டாகும்போது சரவணன் எழுத்துக்களை யதனதன்குழிகளில் பிரித்துப் போட்டுக் கொண்டிருந்தான். சத்தத்தைக் கேட்டதே கையிலிருந்த எழுத்துக்களை யெறிந்துவிட்டுத் துரிதமாய்ப் படிக்கட்டு களின் வழியே கீழிறங்கினுன். அவன் அடிப்படிக்கு வந்த போது அங்கு நின்ற தாமோதரன்மேல் மோதிக்கொண் டான்; தாமோதரன் இவன் தோளைக் கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டு,

“அடே! மனுஷாள்மேல் கண் மூடித்தனமாய் இனி யிப்படி விழாதபடி யுனக்குப் புத்தி புகட்டுகிறேன். என்ன மூழுகிப் போய்விட்டதென்று இப்படி யலங்கோலமாய் வேலையை விட்டுவிட்டு ஓடுகிருய்?” என்று கோபத்தோடு கேட்டான்.

சரவணன் தாமோதரத்தினிடத்தி லிருந்து திமிறிக் கொண்டே, “யார் சுடப்பட்டதென்று பார்க்கப்போகி றேன்” என்ருன்.

தாமோதரன் கோபத்தோடு கடுமையாய், “நீ யுன் வேலைக்குப் போய்ச்சேர். நீ போலீஸ்காரனல்ல. துப் பாக்கிச்சத்தம் கேட்கும்போதெல்லாம் நீ வேலையை விட்டு விட்டு ஓடவேண்டிய அவசியமில்லை. போ! உன் வேலைக்கு” என்ருன்.

ஓடினான். கதி
பின் செல்[illegible]னுக்கு இதைக்கேட்டதும் கோபம் வந்து
படியும்பி[illegible] அவன் தலை நிமிர்ந்து தாமோதரனை நோக்கி,
தார்கள் [illegible]ன்ன சங்கதி நடந்ததென்று பார்த்தறிய எனக்
கதிரோபாத்தியமிருக்கிறதென்றே நான் நினைக்கிறேன்.
சபாபதிப்பிள்ளை தற்கொலை புரிந்துகொண்டார் என்று நீ
கூறியது என் செவிகளில் விழுந்தது. சபாபதிப்பிள்ளை
என் சிநேகிதர். ஆம்; நடுவீதியில் திக்கின்றி யலைந்து
கொண்டிருந்த என்னை அழைத்து வந்து ஆதரித்து
வேலை கற்றுக்கொடுத்தார். அவரை யாராவது சுட்டு
விட்டிருந்தால் நான் அதைத் தெரிந்துகொள்ளவேண்டும்.
இது உனக்குக் கவனமிருக்கட்டும்" என்றான்.

கட்டிட முழுதும் ஜனங்கள் ஓடிவருகிற காலடிச் சத்தங்கள் கேட்டதென்று சரவணன் அறிந்துகொண்டான். கதவுகள் திறக்கப்படுவதும் சாத்தப்படுவதுமாயிருந்தன. எங்கும் குழப்பமும் சந்தடியுமாயிருந்தன. ஆண்கள், பெண்கள், சிறுவர், சிறுமிகள், யாவரும் பயந்து திகிற்பட்டு இங்குமங்கும் ஓடினார்கள். எல்லாப் பக்கங்களிலும் ஆத்திரமான கேள்விகளும் விடைகளும் கிளம்பின; ஆனால் யாருக்கும் சரியான விடைகிடைக்கவில்லை. கீழே ஓடிக்கொண்டிருந்த அச்சடிக்கும் எந்திரம் நின்றுவிட அதன் சந்தடி யடங்கிவிட்டது. பெருங்கூட்டமான ஆட்களும் சிறுவர்களும், தாமோதரனும் சரவணனும் சந்தித்த விடத்தில் வந்து கூடினார்கள். ஆனால் அவர்களில் யாருக்கும் எந்தவழி செல்வதென்று தெரியாததால் எல்லோரும் திகிலோடு திகைத்து ஒருவரை யொருவர் பார்த்து விழித்தார்கள். சிலர் மேற்படி சத்தங்கள் மேலேயிருக்கும் ஒரு அறையிலிருந்து வந்தனவென்று எண்ணினார்கள். சிலர் துப்பாக்கிச்சத்தம் வீதியிலிருந்து வந்திருக்கவேண்டுமென்றும் சிலர் பக்கத்துக் கட்டிடத்திலிருந்து வந்திருக்கவேண்டு

மென்றும் உத்தேசித்தார்கள். சிலர் தா
கேட்கவேண்டுமென்று அவனை வந்து சூழ்ந்து
கள். சரவணனுக்கு அதுதான் தக்க சமயமாய்
அவன் திடீரென்று தன்னை விடுவித்துக் கொண்டு, த
தரன் மறுபடி தன்னைப்பிடிக்க வருமுன் அதை விட்டுத்
தாண்டிப் பக்கத்து அறையைநோக்கி யோடினான். அந்த
அறை கணக்கு வழக்குப் பார்க்கும் ஆபீஸ் அறை. அதன்
கதவு மூடப்பட்டிருந்தது. தொழில் நடக்கும்போது அந்தக் கதவும், பிரதான ஆபீஸ் அறையின் கதவுகளும் சாதாரணமாய்த் திறந்தேயிருப்பன வாகையால் சரவணன் அதைக் கண்டு அதிசயமடைந்தான்.

இதென்னமோ அதிசயமா யிருக்கிறது! என்று கெட்டியாய்க் கூறிக்கொண்டே கதவின்மேல் கையை வைத்தான். ஆனால் உள்ளேயிருந்து ஒரு சத்தமும் கேட்காதபடியால் சொல்லமுடியாத ஒருவித பயமடைந்து அப்படியே நின்றான். சரவணன் புத்திசூக்ஷமமுடையவன். அவனிடம் கோழைத்தன மென்பதே கிடையாது. அப்படியிருந்தும், கதவின் கைப்பிடியைத் திருப்பிக் கதவை மெதுவாய்த் திறந்ததும் ஒருவித நடுக்கமுண்டாகி அவன் தேகம் படபடத்தது. அவன் வாசற்படிக் கப்புறம் காலை வைத்ததும் அங்கேயே நின்று ஒத்துக்கேட்டான். பிறகு மெதுவாய்ச் சுற்று முற்றும் பார்த்தான். வேகமாய் வீசும் குளிர்ந்த காற்றினால் மேஜைமே லிருந்த கடிதங்கள் அங்கு மிங்கும் பறந்துகொண்டிருந்தன. வெடி மருந்தின் நாற்றம் வீசியது.

அச்சமயம் யாரோ ஆள்வரும் காலடிச் சத்தம்கேட்டு சரவணன் எச்சரிக்கையாய் நின்றான். முதல் ஒரு சாளரம் திறந்திருப்பதைக் கண்டான். அதற்கப்புறம் கற்சுவரால் சூழப்பட்ட நெருக்கமான முற்ற மிருந்தது. தரையில்

ஓடினன். கதி
பின் செல்லைகொண்டுபோய் எறியப்பட்ட சில பத்திரிகைக படியும்பிடி மேஜைக் கப்புறம் இருந்தவைகளில் அவை தார்கள் கண்களுக்குப் புலப்பட்டன. சரவணன் சொந் கதிரேசர்களும் இரயிட்டர்களும் வசிக்கு மிடங்களுக்குச் செல்லும் வழியிலுள்ள கதவைத்திறக்கத் துரிதமாய் சென் ருன். அங்கு நின்றபடி அப்புறம் எட்டிப் பார்த்து விட்டுச் சட்டென்று பின்வாங்கினன். அவன் முகம் சவம்போல் வெளுத்துவிட்டது. பயத்தால் திடுக்கிட்டுத் தன் எதிரில் வரும் கதிரேசன் பிள்ளையை நோக்கினன். கதிரேசன் பிள்ளையும் சபாபதிப்பிள்ளையுமே அந்த அச்சாபீசுக்குச் சொந்தக்காரராளுலும் கதிரேசன் பிள்ளையே அதில் நீடித்த காளாயிருப்பவர். அவர் சரவணனைக் கண்டதும்,

"சிறுவனே! என்ன அது? என்ன சம்பவம் நேரிட்டது?" என்று கம்மின குரலாய்க் கேட்டார்.

சரவணன்.—"தாங்களே பாருங்கள்—இந்த விபரீதம்—கோரமான விபரீதம்" என்ருன்.

அவ்வளவே அவன் கூறக்கூடியதா யிருந்தது. அவ்வாறு கூறியதும் அதற்குமேல் பார்க்கவாவது கேட்கவாவது அங்கு நிற்காமல், கதிரேசம் பிள்ளையோடுகூட அறைக்குள் செல்லும் ஆட்களின் கூட்டத்தைத் தள்ளிக்கொண்டு முன் சென்ருன்.

இரண்டொரு நிமிடங்களுக்குப் பின் அந்த எல்லையிலுள்ள போலீஸ் ஸ்டேஷனிலிருக்கும் டெலிபூனில் அபாயக் குறியைக் காட்டும் மணியடித்தது. அந்த டெலிபூன் கம்பியின் மறு முனையில் சரவணன் நிற்கிருன். அவன் அபாயத்தை ஸ்டேஷனுக்குத் தெரிவித்துவிட்டுத் திரும்புவதற்குள் தாமோதரன் அவன் தோளைக் கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டு மிக்க கோபமான குரலோடு, "ஏன் இதைச் செய்தாய்?" என்று அதட்டிக் கேட்டான்.

சரவணன்.—"தடையின்றிப் போலீஸாரைக் கூ
காக" என்று தன் சிறு கண்களில் கோபம்
பறக்கக் கூறினான்.

தாமோதரன்.—"இம்மாதிரியான கேஸில் போலீசாருக்கு என்ன வேலை யிருக்கிறது? சபாபதிப் பிள்ளை தற்கொலை புரிந்துகொண்டார், மேலும்—" என்று கூறுவதற்குள் சரவணன் "அது தற்கொலையல்ல; உனக்கு அது நன்றாய்த் தெரியும். அது அன்னியர் செய்த கொலையே" என்றான்.

தாமோதரன்.—நீ ஏன் அப்படி நினைக்கிறாய்?

சரவணன் திறந்திருக்கும் சாளரத்தைக் கையால் சுட்டிக்காட்டி "ஏனெனில் பகலில் இந்நேரத்தில் அது எப்போதும் திறக்கப்பட்டிருப்பதில்லையென்று உனக்குத் தெரியும். யாரோ சபாபதிப் பிள்ளையைச் சுட்டுவிட்டு அச்சாளரத்தின் வழியாய்த் தாண்டிக் குதித்து ஓடிப்போய் விட்டார்கள். அவன் எங்கே தாண்டினான் என்பதை நான் காட்டுவேன்" என்றான்.

தாமோதரன் ஒன்றும் கூறமுடியாமல் மிரளமிரள விழித்தான். சரவணன் அவன் கையைப்பிடித்துச் சாளரத்தண்டை யவனை யழைத்துச் சென்று அதனருகில் நிறுத்தினான். தாமோதரன் அச்சாளரத்தின் நெடுக்கு மரச்சம்பியில் ஒரு விரல் கறையைக்கண்டு திடுக்கிட்டவனாய் அப்பா! என்று பிரமித்து நின்றான்.

சரவணன் அவனை நோக்கி "அது என்னவென்று நினைக்கிறாய்? நான் போலீஸ்காரனல்லாவிட்டாலும் எனக்குக் கொஞ்சம் விவகாரம் தெரியும் என்று நினைத்துக் கொள்" என்றான்.

தாமோதரன் சாதாரணமாய்ச் சுலபத்தில் கலவரமடையாதவன். பூமியதிர்ச்சியுண்டானாலும் அவன் கலங்கமாட்

ஓடினன். கதி
பின் செல்ல யாவரும் கூறுவதுண்டு. அப்படிப்பட்டவன்
படியும் பிடி லங்கிவிட்டான். அவன் கடைசியில் சரவணனை
தார்கள். மதுவாய்,

கதிரேசம் வணு! நீ கூறியது சரியே. அது கொலையே; அதி ரமானகொலை. அப்படியிருந்தாலும் குற்றவாளியைப் பிடிப்பது சுலபம்போலவே தோன்றுகிறது" என்று மெதுவாய்த் தடுமாற்றத்தோடு கூறினன்.

சரவணன் கண்களுக்குப் புலப்பட்ட அந்த விசேஷ சங்கதியானது துரிதமாய் அங்கு கூடிய ஜனக்கூட்டம் முழுதும் பரவியது. அனேகர் திறந்திருந்த அச்சாளரத்தினருகில் நெருங்கிக் குழுமினார்கள். அவர்கள் அக்கொலைக்கு அத்தாக்ஷியான விஷயத்தைக்கண்டு நடுக்க முற்றார்கள்.

சாளரத்தின் கதவிலிருந்த அகன்ற இலைகள் வழவழப்பாய் வெள்ளைச்சாயம் பூசப்பட்டிருந்தன. அதன் மத்தியில் அதாவது யாராவது அதைத் திறக்கவேண்டுமானால் சுபாவமாய் எங்கே கைவைப்பார்களோ அந்த விடத்தில் இரத்தம் பட்ட ஒரு கைக் கட்டை விரலின் அடையாளம் நன்றாய்ப் பதிந்திருந்தது. இவ்வளவே மங்கிருந்தது. ஆயினும் அதிசயத்தோடு அதை யுற்றுப் பார்த்தவர்களில் அனுபவ மில்லாதவர்களுக்கும் அது எவ்வளவு வெளிப்படையான அத்தாட்சியா யிருந்தது!

அச்சமயம் போலீஸ் உத்தியோகஸ்தர்கள் அங்குவந்து விட ஜனக்கூட்டம் விலக்கப்பட்டதும் யாவரும் வெளியில் அனுப்பப்பட்டார்கள். சரவணன், தாமோதரன், கதிரேசம் பிள்ளை, இன்னம் இரண்டு மூன்று பேர்களும் போலீஸ் காரர்களும் மட்டுமே இங்கு இருக்கவிடம் பெற்றார்கள்.

சரவணன் யாரார் வந்திருக்கிறார்களென்று நன்றாய்க் கவனித்துப் பார்த்தான். போலீஸ் அதிகாரிகளுக்குப்பின் மெலிந்த நெட்டையான ஒரு மனிதன் இருந்தான். அவனை

மற்றபேர் யாவரும் கவனிக்கவில்லை. இம்மனி கண்ணாடி போட்டுக் கொண்டிருந்தான். அவ தால் ஏதோ தூரதிருஷ்டி தெரியாதவன் போல மேலும் அவன் செவிடன் போலவும் தோன்றினை னில், அவன் மற்றபேர் பேசும் சத்தத்தைக் கிரகிக்கத் தற் போல் அடிக்கடி தன் செவியின்மேல் கைகளை வைத்துக் கேட்டுக் கொண்டிருந்தான். அம்மனிதன் அந்தத் திறந் திருந்த சாளரத்தருகில் சென்று அதிலிருந்த இரத்தக் கறையாகிய கட்டை விரல் குறியை கவனத்தோடு பார்த் தான்.

மறு நிமிஷம் அம்மனிதன் தன் மடியிலிருந்து மிகப் கேர்த்தியான ஒரு சிறு இரம்பத்தை யெடுத்து அந்த இரத் தக்கறைக்கு நாற்பக்கமும் பள்ளமா யறுத்து, ஒரு கூர்மை யான பேனாக் கத்தியால் இரத்தக்கறை பட்டிருக்கும் பாகத்தை யப்படியேயொரு இலைக் கணம்பெயர்த்து எடுத்து ஒரு மெல்லியகடிதத்தில் வைத்து மிகப்பக்குவமாக மடித்து யாவருக்கும் தெரியாமல் ஜேபியில் வைத்துக் கொண்டான். இவ்வாச்சர்யமான செய்கையைச் சரவணன் தவிர வேறு யாரும் பார்க்கவில்லை. இவ்வளவும் அம்மனிதன் ஒரு நொடி யிற் செய்துவிட்டுத் தானும் மற்ற பேரைப்போல் அவர்க ளில் ஒருவனைப் நடித்துக்கொண்டிருக்கிறான். வந்திருக்கும் போலீஸ் அதிகாரிகள் என்ன செய்யப் போகிறார்களோ வென்றே யாவரும் அவர்களையே கவனமாய்ப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். போலீஸாராவது மற்றபேராவது இவனை யொருவரும் சட்டை செய்து கவனிக்கவில்லை.

"இலேசாயிருக்கும் வஸ்துக்கள் மேலேபறக்க, கனமா கிய வஸ்து எப்போதும் கீழேயிறங்கும்" என்பது இதனால் நன்றாய் விளங்குகிறது.

போலீஸ் உத்தியோகஸ்தரோடு கூட பரணவிசாரணை

ஓடினான். கதிரேச ரியின் உதவி உத்தியோகஸ்தர் ஒருவர் வந்
பின் செல்லவில்லை
வர் டாக்டர். அவர் சவத்தைச்சோதனை
படியும் பிடித்து ாபதிப்பிள்ளையின் சவம் தரையில் விழுந்து
தார்கள்.
ரு கையில் ஒருகைத் துப்பாக்கியிருக்கிறது.
கதிரேசம்பிள் குழை காலியாய்த் தோட்டா இல்லாமலிருக்
குற்ற அவன் இருதயத்தில் குண்டுபாய்ந்து தட்சணம் மரணத்தை யுண்டாக்கி யிருக்கிறது. திடீரென்று பார்க்கும் மேற்பார்வைக்கு இப்படியே தெரிகிறது. இது வரையில் தற்கொலை போலவே காண்கிறது.

கதிரேசம்பிள்ளைக்கும் இரண்டு போலீஸ் உத்தியோகஸ்தர்களுக்கும் எதிரில் துரிதமாய்ச் சவம் சோதிக்கப்பட்டது. போலீஸ் உத்தியோகஸ்தரில் ஒருவன் இன்ஸ்பெக்டர்.

இதற்கிடையில் கொலை நடந்திருக்க வேண்டும் என்று காட்டுகிற மற்றவிஷயங்களைப்பற்றித் தீர்க்காலோசனை செய்யப்பட்டது. தன் எஜமானனுடைய சவத்தைக் கண்ணால் பார்த்துக்கொண்டிருக்கும் தாமோதரன் முகம் சவத்தைப் போலவே வெளுத்து விட்டது. கதிரேசம் பிள்ளையோ மெதுவாய் அவன் தோளைத் தொட்டுப்பார்த்து,

"தாமோதரம் நீ மரணவிசாரணையில் முக்கியமான சாக்ஷி கூறுவாய் என்று நினைக்கிறேன்" என்றான். இதைக் கேட்ட தாமோதரன் கோபத்தோடு அவனை நோக்கி, "என்ன ஐயா நீர் கூறுவது?" என்றான்.

கதிரேசம் பிள்ளை சற்று நிதானித்தான். பிறகு ஏதோ திடீரென்று எதனாலோ தூண்டப்பட்டவன் போல், "சபாபதிப்பிள்ளை தற்கொலை புரிந்துகொண்டார்" என்று கூறியது நீதானே? அந்தச் சத்தத்தை நான் நன்றாய்க் கேட்டேன். ஏனெனில் துப்பாக்கி சுடப்பட்டபோது நான் இப்பக்கமாய்வந்து கொண்டிருந்தேன்" என்றான்.

கதிரேசம் பிள்ளை முதலில் இப்பணி[illegible] மென்று உத்தேசிக்கவில்லை. அந்தச்சமயபுவ[illegible] வாறு கூறியவன் தாமோதரன் என்று [illegible] டான். தாமோதரனுடைய கலவரமான [illegible]ரை. நினைப்பதற்குக் காரணமாயிருந்தது. [illegible]

தாமோதரன் சற்றுநேரம் பேசாமலிருந்தான். [illegible] கண்களில் ஒருவிதமான பிரகாசம் உண்டாயிற்று. போலீஸ் காரரும் கோரனர் மனிதனும் உற்று நோக்கினார்கள். தாமோதரன் கடைசியில் கதிரேசம் பிள்ளையைப் பார்த்து "நீர் என்மேல் குற்றஞ் சாட்டுகிறீரா?" என்றான்.

கதிரேசம்பிள்ளை.—"நான் முன்னே சொன்ன வார்த்தைகளைக் கூறியதாக மட்டுமே" என்றான்.

தாமோதரன்.—அப்படி நான் கூறினால்?

கதிரேசம்பிள்ளை.—விவரம்கூறு! அவ்வளவே.

தாமோதரன் போலீஸ்காரரை மிரட்சியோடு பார்த்துக்கொண்டே "நான் சொல்வதற்கு ஒன்று மில்லை" என்றான். பிறகு அவன் ஓடிப்போக வெண்ணியவன் போல அவசரத்தோடு திரும்பினான்.

கதிரேசம்பிள்ளையும் கோரனர் மனுஷனும் ஏககாலத்தில் போலீஸாருக்குச் சமிக்ஞைசெய்தார்கள். ஆனால் போலீஸார் அதை யறிந்துகொள்ளவில்லை. அதன் பிறகு கதிரேசம்பிள்ளையே அவனைப்பிடிக்க எத்தனித்துத் தாண்டிப் போய் அவன் இடுப்பில் கைபோட்டு அவனைப் போகவிடாமல் தடுத்தான். சற்றுநேரம் போராட்டமாயிருந்தது. உடனே தாமோதரன் தன் எஜமானனை கதிரேசம்பிள்ளையை உதறித் தள்ளிவிட்டு வெளிப்பக்கம் செல்லும் வாசற்படியில் நுழைந்து ஓட்டம் பிடித்தான்.

உடனே யொரு போலீஸ்காரன் அவன் பின்னால் துரத்திக்கொண்டு ஓடினான். சரவணனும் அவன் பின்னால

ஓடினான். கதிரேசம்பிள்ளையாவது கோரனார் மனிதனாவது பின் செல்லவில்லை. துரத்திச்சென்ற போலீஸ்காரன் எப்படியும் பிடித்துக் கொள்ளுவானென்று நம்பிக்கையா யிருந்தார்கள்.

கதிரேசம்பிள்ளை.—“என்ன அவனுடைய ஆர்த்தம்? அவன் குற்றம் செய்திருப்பானென்று நான் நினைக்கவில்லை. இல்லை யில்லை; நான் அதை நம்பமாட்டேன். அவன் நம்பகமான வேலைக்காரனா யிருந்தவன்” என்று தனக்குத்தானே கூறிக்கொண்டான்.

கதிரேசம்பிள்ளை யிவ்வாறு கூறிவிட்டு, திரும்பிப் பார்த்தான். அவன் பார்வை மூக்குக்கண்ணாடி போட்ட ஒரு மனிதன்மேல் விழுந்தது. அவன் முன் சரவணன் சாளரத்தண்டை ஏதோ செய்ததாய்க்கண்ட அதிசயமான மனிதன். அம்மனிதன் சாளரத்தைவிட்டு அப்புறம் சென்று கம்பிகளால் போடப்பட்ட வேலியைத் தாண்டிக்கொண்டிருக்கிறான். அதற்கப்புறந்தான் அத்துக்க சங்கதி சம்பவித்தவிடம். கதிரேசம்பிள்ளையும் டாக்டரும் அவனைப்பின்பற்றிச் சென்றார்கள்.

டாக்டர்.—“அவன்தான் புதுத் துப்பறிபவன். அவன் பெயர் கமலநாதன். அவன் சில ஆச்சரியமானகேஸ்களைக் கண்டுபிடித் திருப்பதாய்க் கூறுகிறார்கள்” என்றார்.

கமலநாதன் என்னும் அத்துப்பறியும் ஆசாமி இறந்தவன் கையிலிருந் தெடுக்கப்பட்ட துப்பாக்கியைச் சோதித்துப் பார்ப்பதைக் கண்டார்கள். அவன் பிறகு சவத்தின் மேல் பட்டிருக்கும் காயத்தைப் பார்த்தான். பிறகு தரையையும் சுவர்களையும் மேல் தளத்தையுல் உற்றுப் பார்த்தான்.

கதிரேசம்பிள்ளை அவனைக்குறித்து “ஒரு கர்துக்

குட்டி டிடெக்டிவ்" என்று கூறிக்கொண்டே அவன் செய்கைகளைக் கவனித்துக்கொண்டிருந்தான்.

அவன் அவ்வாறு கூறிய மறுநிமிஷமே தான் கூறியது தவறான அபிப்பிராயம் என்று அவன் மனதிற் பட்டது. ஏனெனில் அச்சமயம் அந்தத் துப்பறியும் ஆசாமி நிதானமாய்,

"சண்டையுண்டாயிற்று. துப்பாக்கிகள் உபயோகிக்கப்பட்டன. கொன்றவன் முதலில் சுட்டிருக்கிறான். சபாபதிப்பிள்ளை மடிந்தான்" என்று கூறினான்.

கதிரேசம்பிள்ளை சட்டென்று "சபாபதிப்பிள்ளை சச்சரவால் கொல்லப்பட்டானென்று நீ நினைக்கிறாய்?" என்று கேட்டான்.

கமலநாதன்.—"சந்தேகமின்றி — சபாபதிப் பிள்ளை தன்னைக் காத்துக்கொள்வதற்காகத் துப்பாக்கியைக்கையில் எடுத்திருக்கலாம். ஆனால் அதை யுபயோகிக்க அவருக்கு அவகாசம் கிடைக்கவில்லை" என்பது உண்மை.

கதிரேசம்பிள்ளை.—அப்படியானால் நீ அந்தத் துப்பாக்கியிலுள்ள காலிக்குழாயைக் காணவில்லையோ?

கமலநாதன்.—ஓ! பார்த்தேன். அது நெடுங்காலமாகக் காலியாயிருக்கிறது. அதிலிருந்த தோட்டா எடுத்துவிடப்பட்டது. குழாயில் புகைபட்டிருக்கவில்லை. அது நன்றாய்த் துடைத்து எண்ணெ யிடப்பட்டது. முதல் உபயோகிக்கப்பட வில்லை, கதிரேசம்பிள்ளை! நீர் தற்கொலை யென்ற கட்சியைச் சாரவில்லையே?

கமலநாதனுடைய தீக்ஷண்யமான கண்கள் தன்னை யூடுருவிப் பார்ப்பதைக் கண்ட கதிரேசம்பிள்ளையின் தேகத்தில் ஒருவித நடுக்க முண்டாயிற்று. அவன் "அந்த இரத்தக்கறை யுள்ள கட்டைவிரற்குறி சாளரத்தின் இலைக் கத

வில் காணப்பட்டது முதல் அந்த அபிப்பிராயம் இல்லை"
என்றான்.

கமலநாதன் "அப்படி யிருந்தும் இந்தத் துப்பாக்கி
தான் வெடி தீர்த்ததென்று நீ நினைத்திருந்தாயல்லவா?"
என்று வினவினான்.

கதிரேசம்பிள்ளை.—"கொன்றவன் தான் தப்பிப்போகுமுன்
அத்துப்பாக்கியை யிவன் கையில் வைத்துவிட்டுப்
போய்விட்டானென்று நினைத்தேன்" என்றான்.

கமலநாதன்.—அப்படி யல்லவேயல்ல. கொன்றவன் அதற்
காக நிற்கவேயில்லை. சபாபதிப்பிள்ளை ஒரு விரோதி
யோடு சண்டையிட்டுக் கொல்லப்பட்டான். குற்ற
வாளி யின்னவனென்று உனக்குத் தெரிந்திருக்க
வேண்டும். சபாபதிப் பிள்ளையின் கொடிய விரோதி
யார்?" என்று வினவினான்.

கதிரேசம்பிள்ளை.—அவனுக்கு இவ்வுலகில் ஒரு விரோதி
யாவ திருக்கிறானென்று எனக்குத்தெரியாது.

கமலநாதன் சோரனர் மனிதனை யொருமாதிரியாய்ப்
பார்த்துவிட்டு, கதிரேசம்பிள்ளையை நோக்கி,

"கதிரேசம்பிள்ளை! உமக்கு யாரும் விரோதிகளில்லை
யென்று நம்புகிறேன்" என்றான்.

கதிரேசம்பிள்ளை.—அய்யா! என்னால் அதைக் கூறமுடி
யாது. என்னாலியன்ற மட்டும் யாவரோடும் சினேகித
மாகவே நடந்து கொள்ளுகிறேன். என்னையு மறியா
மலே யாரையாவது விரோதம் செய்துகொண் டிருக்க
லாகும்.

கமலநாதன் சாந்தமாய் முன்சென்று மெதுவாய்க் கதி
ரேசம்பிள்ளையின் தோள்மேல் கையை வைத்து, "கதி
ரேசம்பிள்ளை! நம்மனதிலிருப்பதை யொருவருக்கொருவர்
அறிந்து கொள்ளுவோம்" என்றான்.

நாம் முன்கூறியதுபோல கதிரேசம்பிள்ளை அந்த அச்சாபீசின் பெரிய முதலாளி. வர்த்தகத்தில் மிக்க ஒழுங்கும் நாணயமு முடையவனென்று நவீனபுரியில் பிரக்யாதி பெற்றவன்; செல்வவந்தன். அவன் இதுவரையில் நம்பினவர்களுக்குத் துரோகம் செய்ததில்லை. எல்லா விஷயங்களிலும் நேர்மையானவனென்றே யிதுகாறும் யாவராலும் புகழப்பெற்றான். அவனோடு சூதுவாது செய்யும் வேலைக்காரனுக்கு ஆபத்து நேரிடுமென்பது திண்ணம். அவன் பேச்சில் கண்டிதமும் சற்று முன்கோபமு முடையவன். மூக்குக்கண்ணாடியணிந்த இந்த மெலிந்த மனிதனாகிய துப்பறிபவன் கூறியது அவனுக்குக் கோபத்தை யுண்டாக்கி விட்டது. அவன்,

"நல்லதையா, நீ என்ன சொல்லுகின்றாய்?" என்று கேட்டான்.

கமலநாதன் தீரத்தோடு நிதானமாய், "நான் சொல்வதெல்லாம்கூடி நீ எனக்குக் கூறியவனைத்தும் அடியோடு பொய்யென்பதே" என்றான். இதைக்கேட்ட கதிரேசம்பிள்ளை தன்முகத்தில் குண்டு பட்டவன்போலத் திடுக்கிட்டுப் பின்னிடைந்தான். பிறகு கோபத்தோடு அவனை நோக்கி, "நான் பொய் சொன்னதாகவா கூறுகிறாய்?" என்று அதட்டிக் கேட்டான்.

கமலநாதன்.—"இப்போது கூறியதைப்பற்றி மாத்திரமே" என்று சாந்தமாய்க் கூறினான்.

கதிரேசம்பிள்ளை.—நீ உண்மையாகவே கூறுகிறாயா?'

கமலநாதன்.—"ஆம், மெய்யாகத்தான்; நாம் இருவரும் ஒருவர் அபிப்பிராயத்தை யொருவர் நன்றாயறிந்து கொண்டு விவகாரம் செய்வது நல்லது. அப்போது முடிவில் இருவரும் நல்ல சினேகிதர்களாகலாம்" என்றான். கதிரேசம்பிள்ளை அடக்கமுடியாக் கோபத்தால் கை

களை முஷ்டியாய்ப்பிடித்துக்கொண்டு கமலநாதன்மேற் பாய்ந்தான். கமலநாதன் தந்திரமாய் அந்தக்குத்திற்குத் தப்பித்துக்கொண்டு, மறுபடிம் கதிரேசம்பிள்ளையைக் கெட்டியாய்ப் பிடித்து இரண்டு சுற்றுச் சுற்றி அருகிலிருந்த நாற்காலியின்மேல் அழுத்தி உட்காரவைத்தான்.

கதிரேசம்பிள்ளை சற்றுநேரம் ஆயாசத்தால் பெருமூச்சு விட்டுக்கொண்டிருந்தான். அவன் எழுந்திருக்க முயலவேயில்லை. கமலநாதனைமட்டும் கண்களை யுருட்டிப்பார்த்தான். கமலநாதன் நேர்ந்த இச்சம்பவத்தால் சற்றேனும் கலவரமடையவில்லை. அவன் முதலாளியை நோக்கி,

"ஐயா! சற்று உன் கோபத்தை யடக்கிக் கொள்ள வேண்டும்" என்று கூறிவிட்டு, அவனே சமாளித்துக் கொண்டு பேசட்டுமென்று காத்திருந்தான். கதிரேசம்பிள்ளைக்குக் கோபம் எவ்வளவு துரிதமாய் வந்ததோ அவ்வளவு துரிதமாயடங்கிவிட்டது. அவன் சாந்தமாய், "நான் உனக்குச் சூது செய்வதாய் நீ நினைத்தால், உன் சந்தேகங்களை நீ இதைவிட மரியாதையாய்க் கூறியிருக்க வேண்டும்" என்றான்.

கமலநாதன்.—"அப்போது நீ உண்மையை யடியோடு மறுத்துவிட்டிருப்பாய். "இப்போதே அவைகளை யொப்புக்கொள்வாய். சபாபதிபிள்ளைக்கு ஒரு விரோதியிருந்ததாயுனக்குத் தெரியும். உனக்கும் ஒரு விரோதியுண்டு. அந்தப் பகைவன் உங்களுடைய பழையகூட்டாளி. அவன் துர்நடக்கைகளில் தலையிட்டபடியால் அவனால் உங்களுக்கு அவமானம் நேரிடுமென்று அவனை நீக்கிவிட்டீர்கள்; அவன் பெயர் வேலாயுதன். அவன்உங்கள் இருவர்மேலும் வஞ்சம் தீர்த்துக்கொள்வதாய்க் கூறியிருக்கிறான். நான் கூறுவது சரிதானே" என்றான்.

கதிரேசம்பிள்ளை மெதுவாய் எழுந்தான். அவன்

முகத்திலிருந்த கோபக்குறியெல்லாம் ஒருவாறு மாறியது. அவன் கமலநாதனை நோக்கி,

"நீ கூறுவது உண்மையே. உனக்கு இதெல்லாம் எப்படித் தெரியுமோ கடவுளே யறிவார். அந்த இரகசியம் அடியோடு மறைந்துவிட்டதென்று எண்ணியிருந்தேன். எப்படியிருந்தாலும் அதற்கும் இத்துக்க சமாசாரத்திற்கும் ஒரு சம்பந்தமுமில்லை. வேலாயுதன் துர்நடக்கை யுடையவனாகவே யிருந்தான். ஆயினும் அவன் இப்படி யொருபோதும் செய்யமாட்டான்" என்றான்.

கமலநாதன்.—"நான் வேலாயுதன்மேல் இக்குற்றத்தைச் சுமத்தவில்லை. ஆனால் இக்கேஸில் ஒவ்வொரு சந்தர்ப்பத்தைப்பற்றியும் ஆராய்ச்சிசெய்தலே நலம். இன்று காலை யுன் கூட்டாளியை வந்து கண்டு பேசிவிட்டுச் சென்ற அம்முக்காடணிந்த ஒய்யாரமான கன்னிகையைப்பற்றிக் கூட ஆராயவேண்டியதே; கதிரேசரே! நீர் அவள் வந்ததையும் போனதையும் பார்த்தீரே, அவள் இக்கொலையைத் தூண்டியிருப்பாளென்று நீர் நினைக்கவில்லையே?" என்றான்.

இவைகளைக்கேட்ட கதிரேசம்பிள்ளையின் முகம் சவம் போல் வெளுத்து விட்டது. அவன் உதடுகள் துடித்தன. அவன் வாய் குழறிக்கொண்டே "ஐயோ கடவுளே! அவள் வந்த சங்கதி யுனக்கெப்படித் தெரியும்?" என்றான்.

கமலநாதன்.—அவள் உள்ளே வரும்போதும் வெளியில் செல்லும்போதும் நான் கண்டேன். அவள் உமது அச்சாபீசில் அச்சுப்பொருக்கும் ஒரு ஆள் என்றும் எனக்குத் தெரியும். அவள் பெயரையும், அவள் சபாபதிப்பிள்ளையைக்கண்டு பேசிய காரணத்தையும் இனி விசாரித்தறிந்துகொள்வேன். எல்லா விஷயங்களையும் தெரிந்துகொள்ளும் சக்தியெனக்கிருக்கிறதென்று உனக்குப

போது தெரிகிறதல்லவா? ஆகையால் என்னிடம் எதையும் மறைத்துக்கூறுவது எவ்வளவு பிரயோசன மற்ற விஷயம் என்பதைத் தெரிந்துகொள். ஆ! பேசா மலிரு. தாமோதரனைத் தேடிச்சென்ற போலீஸ் உத்தியோகஸ்தர்கள் திரும்பி வருகிறார்கள். அவன் அவர்களுக்குச் சிக்காமல் கடுக்கா கொடுத்தான் என்றான்.

போலீஸார் அங்குவந்து சங்கதியைக் கூறுவதற்குள் கமலநாதன் அதைவிட்டுப் புறப்பட்டான். அவர்கள் என்ன கூறுகிறார்கள் கேட்போமென்று கூட அவன் தாமதிக்கவில்லை.

போலீஸார்களோ கமலநாதன் கூறியபடியே தாமோதரன் அகப்படவில்லையென்றே கூறினார்கள்.

2-வது அத்தியாயம்.

நுட்பமான உளவு—கோரானர் விசாரணை—கமலநாதனும் கதிரேசம்பிள்ளையும்—தாமோதரன் தலைமறைதல்—சரவணன் ஒரு உளவறிகிறன்—அவனுக்கு நேர்ந்த ஆபத்து.

முன் அத்தியாயத்தினிறுதியில் கூறியபடி அச்சாபீசை விட்டுப் புறப்பட்ட கமலநாதன் என்னும் துப்பறியும் ஆசாமி துரிதமாய் வீதியின் வழியேசென்று நகரமத்தியிற் செல்லும் கால்வாயைக்கடந்து இரயில் ஸ்டேஷனுக்குச் சென்று முதல் புறப்படும் வண்டியிலேறிச் சற்றுநேரம் பொறுத்துக்கிழக்கு 47-வது வீதியில் இறங்கினான். அவன் வசிக்கும் அறை அங்கு சமீபத்திலிருந்தது. நேராய்த் தன் அறைக்குச் சென்றான்.

அவன் இருக்கும் அறைக்குள் இன்னொரு சிறு அறை

யிருக்கிறது, அது விசேஷமாய்ப் பூட்டப்பட்டே யிருக்கும். அந்த அறையில் சாளரம் இல்லை. அவன் அறைக்குள் சென்றதும் கதவை மூடிக்கொண்டு நாற்காலியிலுட்கார்ந்தான். அந்த அறையின் சுவரில் அலமாரிகள் இருந்தன. அவைகளிலும் அங்கிருந்த மேஜையிலும் பலவிதமான வஸ்துக்கள் நிறைந்து கிடந்தன. விதம்விதமான கத்திகளும், கொலைத்தொழிலுக்குரிய ஈட்டிகளும், கைத்துப்பாக்கிகளில் எல்லா மாதிரிகளும் எல்லா அளவுடையவைகளும், பலவிதமான கள்ளர்கள் ஆயுதங்களும், கருவிகளும், குற்றவாளிகளிடமிருந்து அகப்பட்ட பலவித ஆயுதங்களும் அங்கிருந்தன.

மேஜைமேல் ஒரு திறந்த புத்தகம் இருந்தது. அதில் அநேகம் குற்றவாளிகளின் புகைப்படங்களும், கையிலெழுதிய குறிப்புப்படங்களும், பத்திரிகைகளிலிருந்து வெட்டியெடுக்கப்பட்ட குற்றவாளிகளின் படங்களும் அதில் ஒட்டிவைக்கப்பட்டிருந்தன. ஒரு கண்ணாடி ஜாடிக்குள் திராவகத்தில், துண்டிக்கப்பட்ட ஒரு விரல் விடப்பட்டிருந்தது. இது கமலநாதனால் சமீபகாலத்தில் கண்டு பிடிக்கப்பட்ட ஒரு குற்றத்திற்கு உளவாயிருந்தது.

வேறொரு மேஜையின்மேல் பலவித மாறுவேடங்களையும் உடுப்புகளும் சாமான்களும் வைக்கப்பட்டிருந்தன. ஒரு பெரிய நிலைக்கண்ணாடியும் அங்கே வைக்கப்பட்டிருந்தது.

கமலநாதன் அச்சாபீஸ் சாளரத்தின் இலக்கதனிலிருந்துதான் அறுத்தெடுத்துவந்த இரத்தம்பட்ட கட்டைவிரற் கறையுள்ள மரத்துண்டைத் தன் ஜேபியிலிருந்தெடுத்து, அதன்மேலுள்ள காகிதத்தைப் பிரித்து ஒரு பூதக் கண்ணாடியால் அதை உற்றுப்பார்த்தான். பிறகு ஒரு அல

மாரியிலிருந்து ஒரு பழைய புத்தகத்தை யெடுத்து, அதில் குறிப்பிட்ட ஒரு பக்கத்தில் திறந்தான்.

அந்தப்பக்கத்தில் அச்சடிக்கப்பட்டிருந்த வரிகளில் ஒருவரியின் கீழ் கீற்றிடப்பட்டிருந்தது. அதில் "எந்த இரண்டு ஆட்களின் கட்டைவிரற் கீற்றுக்ளும் ஒரே மாதிரி யாயிருப்பதில்லை" என்று எழுதப்பட்டிருந்தது. இந்த விஷயம் மெய்யோ பொய்யோ கமலநாதனுக்குத் தெரியாது. ஆனால் அவன் அவ்விஷயத்தைப்பற்றி நன்றாய் வாசித்துமட்டு மிருக்கிறான். இது ஒரு சமயத்தில் பயன் படுமென்று மட்டும் அவனுக்கு நன்றாய்த்தெரியும். ஒரு சமயத்தில் இக்கட்டை விரலின் கோடுகளே ஒரு பெரிய குற்றவாளியைக் கண்டுபிடிக்க உளவாயுதவும் என்பது அவனுடைய அபிப்பிராயம்.

அடிக்கடி அவன் மனதில் இந்த யோசனை யுண்டாயிருக்கிறது. இப்போது அது வெகுவாய் நிறைவேறும் போலிருக்கிறது. இப்போது மிகவும் மர்மமான ஒரு கொலைக்குற்றம் நேர்ந்திருக்கிறது. அதற்கு எவ்விதமான உளவும் இல்லை; இந்தக்கட்டை விரற்குறி யொன்றுதான் இருக்கிறது. ஆனால் இந்தக்குறி பூரணமாயிருக்கிறது. ஒவ்வொரு கீற்றும் நன்றாய்ப் படிந்திருக்கிறது. ஏதோ கொலையாளியின் வினைப்பயனே இந்த விரற்குறியை மிக்க சாதுர்யவானான இத்துப்பறியும் ஆசாமியிடம் சிக்கச் செய்ததுபோ லிருக்கிறது.

கமலநாதன் அந்த மரத்துண்டை ஒரு கண்ணாடிப் பெட்டியில் தூசுபடியாமலிருக்க வைத்துவிட்டு "துப்பறியும் ஆசாமிகளில் அனேகர் இதை யொரு மிகவும் அற்பமான உளவென்று மதிப்பார்கள். ஆனால் நானோ, சபாபதிப்பிள்ளையைக் கொன்றவன் மிக்க அபாயமான உளவையே விட்டுவிட்டுப் போயிருக்கிறானென்று உத்தேசிக்

கிறேன். கூடிய சீக்கிரத்தில் அவன் என் கையிற் சிக்குவா னென்றே நான் நம்புகிறேன்" என்று தனக்குத்தானே கூறிக்கொண்டான். அதன்பிறகு அவன் தன் அறையைச் சாக்கிரதையாய்ப் பூட்டிக்கொண்டு வெளியிற் சென்றான்.

அன்றுமாலை அச்சாபீசில் சபாபதிப்பிள்ளையின் சவத்தைப்பற்றி மரண விசாரணை நடந்தபோது கமலநாதனும் அங்கு ஆயத்தமாயிருந்தான். அச்சாபீசில் அன்று வேலை நிறுத்தப்பட்டது. ஆயினும் அனேகம் ஆட்கள் நடக்கும் சங்கதியை யறிய அவாவுள்ளவர்களாய் அங்கு கூட்டங் கூடி யிருந்தார்கள்.

கமலநாதன் கதிரேசம்பிள்ளையை யவருடைய சொந்த அறையிற் கண்டான். அவன் அப்போதுதான் துப்பறியும் ஒரு போலீஸ் உத்தியோகஸ்தனிடம் நடந்த சங்கதியைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்து பேச்சு முடிந்தது. கமலநாதனும் ஒரு சாக்ஷியாய் விசாரிக்கப்பட்டான்.

விசாரணையில் தற்கொலை யல்லவென்றும், கொலை செய்யப்பட்டதேயென்றும் தீர்ப்புச் செய்யப்பட்டது. ஆனால் கொன்றது இன்ன ஆளென்று குறிக்கப்படவில்லை. விசாரணை முடிந்தபிறகு கமலநாதன் கதிரேசம்பிள்ளையைக் கண்டான். கதிரேசம்பிள்ளை யவனைக் கண்டதும் ஆசனமளித்து "வா, வா, உன்னைக் காண்பது மிக்க சந்தோஷமாயிருக்கிறது" என்றான். கமலநாதன் தன் கண்ணாடிகள் மூலமாய்க் கதிரேசப்பிள்ளையின் முகக் குறியை நன்றாய்ப் பார்க்க வசதியான இடத்தில் உட்கார்ந்து கொண்டான். அவன் கதிரேசம்பிள்ளையை நோக்கி, "நான் இக்கேஸில் பிரவேசித்து வேலை செய்யவேண்டுமென்று உனக்குப் பிரியமிருக்கிறதோ?" என்றான்.

கதிரேசம்பிள்ளை.—ஆகா, நீ சந்தோஷமாய் வேலை செய்ய

லாம். ஆனால் நான் மற்ற துப்பறியும் ஆசாமிகளை யிதில் பிரவேசிக்கவிடாமல் தடைசெய்ய முடியாது.

கமலநாதன்.—அது சரிதான். அப்படிச் செய்யமுடியாது. அந்தத் துப்பாக்கி வெடி கிளம்பியபோது நீ எங்கிருந்தாய்?

கதிரேசம்பிள்ளை.—நான் வீதியிலிருந்தேன்.

கமலநாதன்.—அச்சத்தத்தைக் கேட்கும்போது நீ எவ்வளவு தூரத்திலிருந்தாய்?

கதிரேசம்பிள்ளை.—நான் உள்ளே நுழைய வந்து கொண்டிருந்ததால் நாலைந்து கெஜதூரத்திலேயே யிருந்தேன். அங்கிருந்து ஆபீஸ் அறைக்கு ஓடினேன். அது பூட்டப்பட்டிருந்தது. அங்கிருந்து சுற்றிக்கொண்டுபோய் வேறொரு வாசற்படி வழியாய் நுழைந்து கொலை நடந்த விடத்திற்குச் சென்றேன்.

கமலநாதன்.—நீ முதலில் யாரைச் சந்தித்தாய்?

கதிரேசம்பிள்ளை.—வழியில் தாமோதரத்தையும் மற்ற ஆட்களையும் கண்டேன். பிறகு சரவணன் என்னும் சிறுவனைக் கண்டேன். குற்றம் நடந்ததை முதலில் கண்டு பிடித்தவன் அவனே.

கமலநாதன்.—முதல் குற்றம் நடந்ததைக் கண்டறிந்தவனும், முதல் அதிகாரிகளுக்குத் தெரிவித்து வரவழைத்தவனுமாகிய அச்சிறுவன் எங்கே?

கதிரேசம்பிள்ளை.—அவனைக்காணோம். விசாரணையில் சாக்ஷி சொல்வதற்குப் பயந்து எங்காவது ஓடி விட்டானோ என்னமோ தெரியவில்லை.

கமலநாதன்.—பெரும்பாலும் அவன் அப்படி யொன்றுமே செய்கிறான். அவனைத் தேடிப்பார்த்தீர்களா?

கதிரேசம்பிள்ளை.—அவன் வீட்டிற்கு ஆளனுப்பி விசாரித்தோம்.

கமலநாதன்.—தாமோதரன் சங்கதி யென்னவாயிற்று?

கதிரேசம்பிள்ளை.—அதுதான் எனக்குக் கலவரமா யிருக்கிறது. அவன் விடுமுழுதும் சோதனை செய்யப்பட்டது. அவன் அகப்படவே யில்லை. நகரமுழுதும் போலீஸார் அவனுக்காகக் கண்ணோக்கமாகவே யிருக்கிறார்கள்.

கமலநாதன்.—அப்படியானால் இக்குற்றத்தைப்பற்றி யவனுக்கு ஏதோ சங்கதி தெரியுமென்றே நீ நினைக்கிறாய்?

கதிரேசம்பிள்ளை.—அவனுக்குத் தெரியு மென்பது எனக்கு நிச்சயம். "சபாபதிப்பிள்ளை தற்கொலை செய்துகொண்டார்" என்று கூச்சலிட்டது அவனே யென்று எனக்கு நிச்சயமா யிருக்கிறது. துப்பாக்கிச் சத்தம் கிளம்பிய வுடனே அவன் கூச்சல் கேட்டது.

கமலநாதன்.—ஏதோவொரு அபிப்பிராயமில்லாமல் அவன் அப்படிக் கூவியிருக்கமாட்டான்.

கதிரேசம்பிள்ளை.—அதுதான் அவன் விஷயத்தில் சந்தேகத்தை யுண்டாக்குகிறது.

கமலநாதன்.—அவன் சபாபதிப் பிள்ளையைக் கொன்றிருப்பானென்று நீ நினைக்கிறாயா?

கதிரேசம்பிள்ளை.—இந்தச் சந்தர்ப்பமில்லாத பட்சத்தில் அவன் கொலை செய்திருப்பானென்று நினைப்பதிலும் நமது தேசத்து அரசனே செய்திருப்பாரென்று நினைக்கலாம்.

கமலநாதன்.—சாதாரணமாய் அவன் நடக்கை யெப்படி?

கதிரேசம்பிள்ளை.—நேர்த்தியானதே. நல்ல வேலைக்காரன். எல்லா விஷயங்களிலும் நம்பிக்கையுள்ளவன். எப்போதும் யோக்கியமானவன். தன்கீழ் வேலை செய்யும் சிறுவர்களை எப்போதும் பயப்படுத்துவதாகிய ஒரு குறையே அவன் நடக்கையில் நான் கண்டது. அது

மட்டுமே எனக்கு அவன் விஷயத்தில் வெறுப்பை யுண்டாக்கியது.

கமலநாதன்.—நீ அவனை முதல் வழியில் சந்தித்தபோது அவன் கலவரமடைந்திருந்தவன் என்று தோன்றியதா?

கதிரேசம்பிள்ளை.—அவன் மற்ற பேரைவிடச் சாந்தமாகவே காணப்பட்டான்.

கமலநாதன்.—அவன் கொலை செய்திருந்தால், அந்த அறையிலுள்ள சாளரத்தின் வழியாய் ஓடிப்போய் யாரு மறியாமல் மறுபடி நீ கண்ட அந்த வழியில் வந்து மற்ற பேரோடு கலந்துகொண் டிருக்கக்கூடுமோ?

கதிரேசம்பிள்ளை.—முடியாது.

கமலநாதன்.—ஏன் முடியாது?

கதிரேசம்பிள்ளை.—ஏனெனில் நான் சமீபத்திலிருந்தபடியால் அவனைப் பார்த்துவிட் டிருப்பேன்.

கமலநாதன்.—அப்படியானால் உண்மையாகவே அவன் கொலை செய்யவில்லை.

கதிரேசம்பிள்ளை.—நீ எப்படி யிவ்வளவு நிச்சயமாய்க் கூறுகிறாய்?

கமலநாதன்.—ஏனெனில் கொலை செய்தவன் சாளரத்தின் வழி போயிருக்கிறான்.

கதிரேசம்பிள்ளை.—ஒருவேளை யவன் ஏமாற்றவேண்டியே சாளரத்தின் இலைக்கதவைத் தொட்டுத் தூக்கியபின் நான் தாமோதரனைக் கண்ட அந்த வழியாகவே திரும்பி யோடி வந்திருந்தால்?

கமலநாதன்.—இல்லை; அப்படி நடக்கவில்லை. யாரோ அச்சாளரத்தின் வழியாய்த்தாண்டி யோடியிருக்கிறார்கள். அவன் சாளரத்தின் வெளிப்பக்கம் குதித்தபோது உண்டான காலடிச் சுவடுகள் நன்றாய்த் தெரிகின்றன. அது மட்டுமல்ல. முற்றத்தின் அப்புறம் வேறொரு

சாளரம் திறந்திருந்தது. அவன் அவ்வழியே தப்பி வீதிக்கு ஓடிவிட்டிருக்கிறான்.

இதைக்கேட்ட கதிரேசம்பிள்ளை ஆத்திரத்தோடு துள்ளியெழுந்து "அப்படியானால் அந்தப் பக்கமிருக்கும் கட்டிடத்தைச் சாக்கிரதையாய்க் காவல் செய்து சோதிக்க வேண்டும். இப்போதும் அவன் அங்கேயே பதுங்கிக்கொண்டிருக்கக்கூடும்" என்றான்.

கமலநாதன் அவன் கரத்தைப் பிடித்துக் கொண்டிரா விட்டால் ஆட்களைக் கூப்பிட அவன் மணியடித்திருப்பான். கமலநாதன் நிதானமாய் அவனை நோக்கி, "பொறு, எல்லாம் சரியாயிருக்கிறது. கோரனர் விசாரணை செய்துகொண்டிருக்கையில் நான் அந்தக் கட்டிட முழுதும் நன்றாய்ச் சோதனை செய்யும்படி செய்தேன். அங்கு ஒருவருமில்லை. ஆயினும் அதற்குக் காவல் வைத்திருக்கிறேன்" என்றான்.

கதிரேசம்பிள்ளை கமலநாதனை யாச்சரியத்தோடு உற்று நோக்கி, "கமலநாதம்! நீ நல்ல சமயோசிதமான யுக்தியுடையவன்" என்றான்.

கமலநாதன்.—"என் தொழிலில் அது அவசியம் வேண்டும். அப்பழக்கம் எனக்குச் சுலபமே. இக்கட்டிடத்தை யென் இஷ்டப்படி சோதனைசெய்ய எனக்கு அனுமதி தருகிறாயா?

கதிரேசம்பிள்ளை.—நீ யப்படியே செய்யவும், உன் இஷ்டமானபோது வரவும் போகவும் நான் பூரண அனுமதி தருகிறேன். ஈசுவரபக்தியுள்ள பெருந்தன்மையான ஒரு மனிதன் கொல்லப்பட்டிருக்கிறான். நான் என் சகோதரன்போல் நேசித்திருந்த மனிதன். கொலைபாளியைக் கண்டுபிடிக்க எல்லா முயற்சியும் செய்தே

நீரவேண்டும். கமலநாதம்! இந்த மர்மத்தைக் கண்டறிய நான் உன்னையே பூரணமாய் நம்பியிருக்கிறேன்.

கதிரேசம்பிள்ளை யிவ்வாறு கூறும்போது அவன் முகத்தைவிடாது நோக்கிக்கொண்டே யிருந்த கமலநாதன் முகத்தில் ஒருவிதக் கூர்மையான பார்வையுண்டாயிற்று. "இம்மனிதன் ஒன்று மெய்யாகவே தன் கூட்டாளி மடிந்ததற்கு மிக்க வியாகுலப்படுகிறவனு யிருக்கவேண்டும்; இன்றேல், மகா கைதேர்ந்த அபிநயக்காரனு யிருக்கவேண்டும்" என்று தன் மனதில் எண்ணிக்கொண்டான். பிறகு கெட்டியாய் "கதிரேசம்பிள்ளை! இரண்டொரு கேள்விகள் மட்டுமே கேட்டுவிட்டு நான் போய்வருகிறேன். சபாபதிப்பிள்ளை கொல்லப்படுவதற்குச் சற்று முன்னே அவனிடம் வந்து பேசிய அப்பெண்ணின் வாசஸ்தலம் உனக்குத் தெரியுமா?" என்றான். கதிரேசம்பிள்ளை யிதைக் கேட்டதே அவன் மனதிற் கலவரமுண்டாயிற்று. முகஜாடையால் கமலநாதன் மட்டும் அதைத் தெரிந்துகொண்டான்.

கதிரேசம்பிள்ளை.—"எங்கள் அச்சாபீசில் அனேகம் பெண்பிள்ளைகள் அச்சடுக்கும் வேலையிலிருப்பதால், நீ அவளை யெனக்குக் காட்டினாலன்றி, அல்லது அவள் பெயரைக் கூறினாலன்றி அவள் இருப்பிடத்தை நான் கூறமுடியாது" என்று சற்று கோபத்தொனியாய்க் கூறினான்.

கமலநாதன்.—பெண் வேலைக்காரர்கள் தொழில் முறைமையில் உங்களை வந்து கண்டு பேசுவது வழக்கந்தானே?

கதிரேசம்பிள்ளை.—"ஒருகாலு மில்லை; அப்படி வழக்கமில்லை. சபாபதிப்பிள்ளை யப்பெண்ணைச் சந்தித்துப் பேசியது என்ன காரியத்தை யுத்தேசித்தோ என்றால் கூறமுடியாது. உனக்குப் பிரியமிருந்தால் பெண் ஆட்களை யெல்லாம் வரவழைக்கிறேன், அக்கூட்டத்தில்

அப்பெண்ணிருந்தால் நீயே விசாரித்தறியலாம்" என்று கூறிவிட்டு மறுபடி மனியை படிக்க எத்தனித்தான்.

கபாலநாதன் மறுபடி யவனைத் தடுத்து, "இந்த விவகாரம் தற்சமயம் இதோடு நிற்கட்டும் * * " என்று கூறிக்கொண்டே யிருக்கையில்,

"நீ யென்மேல் கைவைத்தாயோ * * நான் அடிப்பேன்" என்று யாரோ கோபமாய்க் கூறும் சத்தமும் யாரோ ஆட்கள் வரும் காலடிச்சத்தமும் இவர்கள் செவிகளில் கேட்டுத் திடுக்கிட்டு நின்றார்கள்.

தாமோதரன் அறையிலிருந்து ஓடியபோது போலீஸ்காரரும் சரவணனும் அவனைத் துரத்திக்கொண்டு சென்றார்களென்று கூறினோமல்லவா? சரவணன் யாவரையும் தாண்டி முன்னோடி அஸ்திவாரத்தின் கீழிருக்கும் கிடங்குகளுக்குச் செல்லும் படிக்கட்டுகளண்டை சென்றான். திருடன் தெரு வாசற்படியை நோக்கி யோடுகிறானென்று நினைத்துப் போலீஸ்காரர்கள் சரவணன் சென்ற படிக்கட்டுகளிருக்கும் வழியைக் கடந்து சென்றார்கள். சரவணன் அப்படிக்கட்டுக ளண்டை சென்றபோது கீழே யேதோ சத்தம் கேட்டதால் அதை நோக்கிக் கீழேயுள்ள கிடங்குகளுக்குள் சென்றான்.

சரவணன் கீழே யிருந்த ஒரு சிறு அறைக்குச் சென்றதே அங்கு நின்று ஒத்துக்கேட்டான். அது பூமியின் கீழிருக்கும் மறையாகையால் அங்கே மங்கலாய் ஒரு தீப மெரிந்துகொண்டிருந்தது. தான் என்ன காரணத்திற்காகத் தாமோதரனைப் பின்பற்றிச் செல்வதென்பது அவனுக்குத் தெரியாது. போலீஸார் அவனை யேன் துரத்துகிறார்களென்பதும் அவனுக்குத் தெரியாது. அவன் என்ன

செய்தான், அவன் அக்கொலையைச் செய்திரான் என்று தனக்குத்தானே சிந்தித்துக்கொண்டான்.

சரவணனுடைய சிந்தனை அங்கே கதவிற்குக் குறுக்காய்த் தெரிந்த நிழலால் தடைப்பட்டது. அவன் சட்டென்று திரும்பிப் பார்த்தபோது தாமோதரனைத் தன் முன் கண்டான். தாமோதரன் தன் வாயின்மேல் கையைப் பொத்திக்காட்டி "பத்திரம்; ஒருவார்த்தைகூடப் பேசாதே; பேசினால் உன் உயிருக்கு ஆபத்தாய் முடியும்" என்று கூறினான். அதே வேளையில் கெட்டித்த ஒரு கைத்துப்பாக்கியை யச்சிறுவனுடைய முகத்திற்குச் சமீபத்தில் நீட்டினான். சரவணன் அப்படிப்பட்ட கட்டளையைத் தப்பி நடக்கும் முட்டாளல்ல; அப்படி யிருந்தும் அவன் பயப்படவில்லை. அவன் தாமோதரனை நோக்கிப் "போலீஸார் என் உன்னைத் துரத்திப்பிடிக்க வருகிறார்கள்?" என்று கேட்டான்.

தாமோதரன்.—"உஸ், நான் ஒளிந்துக்கொள்ள வேண்டும். நீ என்னைக் காட்டிக் கொடுக்கலாகாது, என்ன சொல்லுகிறாய்?" என்று மெதுவாய் இரக்கமான குரலாய்க் கேட்டான்.

சரவணன்.—"நீ என் போலீஸ்காரரிடமிருந்து ஓடிப்போகிறாய்?" என்று மறுபடி அதே கேள்வி கேட்டான்.

தாமோதரன்.—அவர்களிடம் சிக்கக்கூடா தென்பது என் இஷ்டம்.

சரவணன்.—இது நல்ல சாக்கு; அவர்களைப் பார்த்தால் நான் என் ஓடிப்போகிறதில்லை? நகரத்திலிருப்பவர்களெல்லாம் இரண்டு போலீஸாரைக் கண்டதேயேன் ஓட்டமெடுப்பதில்லை? தாமோதரம்! நீயேதோ தப்பிதம் செய்திருக்கிறாயென்று நினைக்கிறேன்.

தாமோதரன் சரவணன் தோள்களை இன்னும் உறுதி

யாய்ப் பிடித்துக்கொண்டு, பயமுறுத்துவதுபோல் அவனை உற்றுநோக்கி, "நீ என்னைக் காட்டிக்கொடுக்க எத்தனித்தால் உன்பாடு மோசமாய் முடியும்" என்றான்.

சரவணன்.—"நீ இன்னது செய்தாயென்று எனக்குத் தெரியாதிருக்கையில் நான் எப்படி உன்னைக் காட்டிக் கொடுப்பேனோ எனக்குத் தெரியவில்லை" என்றான்.

அவர்கள் தலைக்குமேல் தாமோதரனைத் தேடிக் கொண்டுவரும் போலீஸார் காலடிச்சத்தம் வரவர அதிகமாய் அவர்களுக்குக் கேட்டது. தாமோதரன், "சரவணா! நான் தப்பித்துக்கொள்ள நீ எனக்கு உதவி செய்யவேண்டும்" என்றான்.

சரவணன்.—"ஒன்றுந் தெரியாமல் கண்மூடித் தனமாய் நான் அப்படியொன்றுஞ் செய்யமாட்டேன்" என்றான்.

ஆயினும் சற்று நேரத்திற்குள் "அடடா ஏன் இப்படிக் கூறினேம்" என்று அவன் மனதிற்பட்டது. ஏனெனில் தாமோதரன் அவனைக் கோபத்தோடு பார்த்த பார்வையால் அவன் துப்பாக்கியால் சுட்டு விடுவான்போலிருந்தது. காலடிச்சத்தம் அதிகமாய்க் கேட்கக் கேட்க தாமோதரன் சட்டென்று ஒருகையால் சரவணன் வாய்மேல்கெட்டியா யழுத்திக்கொண்டு மற்றொரு கரத்தால் அவனை யிடுப்பில் பிடித்து அடியோடு குழந்தையைப்போல் தூக்கிக் கொண்டு துரிதமாய் அருகிலிருந்த ஒரு வாசற்படிக்குள் நுழைந்து கதவை யுட்பக்கம் தாளிட்டு விட்டான்.

இப்போது அவர்கள் இருவரும் நிர்ச்சந்தடியாகிய பெரிய எந்திர அறையிலிருக்கிறார்கள். அனேகம் விளக்குகள் மங்கலாய் எரிந்துகொண் டிருக்கின்றன. பிரம்மாண்டமான இராக்ஷதர்கள் போல் இயந்திரங்கள் அசைவற்று நின்றுகொண் டிருக்கின்றன. இருபுறமும் அச்சடித்ததும்

அடிக்காததுமாகிய கடிதக்கட்டுகள் அடுக்கடுக்காய் வைக்கப்பட் டிருந்தன. தாமோதரன் சரவணனைத் தூக்கிக் கொண்டே யிவைகளைக் கடந்து சென்றான். சரவணன் எப்படியாவது கூச்சலிட்டிருப்பான்; ஆனால் அப்படிச்செய் தால் அபாயமாய் முடியுமென்று சிந்தித்துப் பேசாமலிருந் தான். தாமோதரன் மனம் அதிக துணிவடைந்திருப்ப தால் அவனுக்கு அதிக கோபம் வரச்செய்தால் அபாயம் நேரிடும் என்று சரவணன் மனதிற்றோன்றியது. தாமோ தரன் அந்த அறையின் கோடியிற்போய் அங்கு திறந்திருந்த மற்றொரு கதவின் வழியாய்ச்சென்று நீராவி இயந்திரம் இருக்கும் அறையில் பிரவேசித்தான். இதற்கப்பால் இன் னொரு அறையிருந்தது; அதுதான் அந்தப்பாகத்தில் கடை சியிலிருக்கும் அறை. அவன் இந்த அறைக்கு வந்தபின் நின்றான். அது நீராவி இயந்திரத்திற்குத் தீயெரிக்குமிட மாதலால் அங்கே யாராவது ஒரு ஆளிருப்பானென்று நினைத்துச் சுற்று முற்றும் பார்த்தான்; ஒருவருமில்லை.

தாமோதரன் இந்த அறையில் சரவணனைக் கீழே விட்டு அறையின் கதவை மூடிவிட்டான்.

சரவணன் அறையைச் சுற்றுமுற்றும் பார்த்தான். தீபம் மங்கலாயெரிந்து கொண்டிருந்தது. தப்பியோடலா மென்றால் கதவின் வழியே போகவேண்டுமேயன்றி வேறே யொரு சந்துகூட இல்லை. அவன் தாமோதரனை நோக்கி "என்னை யென்ன செய்யப்போகிறாய்?" என்றான்.

தாமோதரன்.—நான் உன்னை யிங்கே விட்டு விடுகிறேன். தேடிக்கொண்டு வருகிறவர்கள் இங்கே வரும்போது உன்னை விடுதலைசெய்து விடுவார்கள்.

சரவணன்.—நான் அவர்களுக்கு என்ன சொல்கிறது?

தாமோதரன்.—உனக்குப் பிரியமானபடி எந்தக் கதை யாவது கூறு.

சரவணன்.—பொய் சொல்லி, ஒரு கொலையாளி ஒளிந்து கொள்ள உதவி செய்யவோ?

தாமோதரன் அவன் கரங்களைக் கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டு "நீ என்மேல் கூறுவது அபாண்டம்; நான் ஒரு குற்றமும் செய்யவில்லை; சபாபதிப்பிள்ளையைக் கொன்றது நானல்ல!" என்றான். சரவணன் முகம் வேறுபட்டு "தாமோதரா! உண்மையாய் நீ நிரபராதியா! சரி சரி. இப்போது தெரிந்துகொண்டேன். நீ போலீஸார் கையில் சிக்க என்னத்திற்குப் பயப்படுகிறா'யென்பதை யிப்போது தெரிந்துகொண்டேன். ஏனெனில் சபாபதிப்பிள்ளையை யார் சுட்டதென்று உனக்குத்தெரியும். அதை நீ கண்ணால் பார்த்தா யென்றே நினைக்கிறேன்" என்றான்.

தாமோதரன்.—"நான் அதை யொப்புக் கொள்ளுகிறேன். கொலை நடந்ததை நான் பார்த்தேன்" என்று மெது வாய் நடுக்கத்தோடு கூறினான்.

சற்று நேரம் இருவரும் மௌனமா யிருந்தார்கள். தாமோதரன் மறுபடி சரவணனை நோக்கி, "நீ முன்னமே யுண்மையை யூகித்துக் கொண்டாய்; இல்லா விட்டால் உன்னிடத்தில் கூட நான் இதை யொப்புக்கொண்டிருக்க மாட்டேன். இப்போது என்னைக் காட்டிக் கொடுக்க மாட்டேனென்று வாக்குத் தத்தம் செய்கிறாயா?" என்று வினவினான்.

சரவணன்.—"அப்படிச் செய்தால் கொலையாளியைத் தப்ப வைத்த மாதிரியாய் முடியும்" என்று தலையசைத்துக் கொண்டே கூறினான்.

தாமோதரன்.—இதுவே யுன் முடிவான தீர்மானமோ?

சரவணன்.—"நீ யொருவாரம் காத்திருந்தாலும் என் அபிப்பிராயம் மாறாது; அதைப்பற்றி யெனக்கு ஒரு அவசரமுமில்லை" என்றான்.

சரவணன் இவ்வாறு கூறி வாய்மூடுமுன் தாமோதரன் அவனைத் திடீரென்று அடியோடு தூக்கிக்கொண்டு அறைக்குக் குறுக்கே சென்றான்.

சரவணன் பயத்தால் துணிவடைந்து "ஐயோ ஐயோ" என்று கூவினான். சுற்றிலுமுள்ள சுவர்கள் மிக்க தடிப்பாயிருந்த படியால் இவன் கூவிய சத்தம் வெளியில் கேட்கவேயில்லை. தரையில் ஓரிடத்தில் ஒரு சதுரமான கதவிருந்தது. தாமோதரன் ஒரு கையால் அதைத் திறந்தான். அதன் கீழ் ஆழமாய் இருள்ாயிருந்தது. அது எவ்வளவு ஆழமிருப்பதென்பதும் புலப்படவில்லை. சரவணன் தப்பித்துக்கொள்ளத் தன்னால் கூடியவரையில் கஷ்டப்பட்டுத் திமிறிப்பார்த்தான். அவன் என்ன திமிறியும், எவ்வளவு கெஞ்சிக்கேட்டும் பயன்படவில்லை.

தாமோதரன் அவனை அப்பள்ளத்திற்குள் விட்டுச் சற்று நேரம் அந்தரத்தில் தொங்கவிட்டபடியிருந்து பிறகு விட்டு விட்டான். சரவணனுக்கு எங்கோ பாதாளத்தில் நெடுந் தூரம் விழுவதுபோலிருந்தது. கடைசியில் எங்கோ விழுந்து அடிபட்டதுபோ லிருந்தது. அவனுக்கிருந்த அதிகபயத்தாலும் தலையில் நன்றாய்க் காயம் பட்டதாலும் கெட்டியான அப்பூமியில் விழுந்தவுடனே அவனுக்கு ஸ்மரணை போய்விட்டது.

3-வது அத்தியாயம்.

சரவணனும், போலீஸ்காரனும் கமலநாதனும்—சரவணன் துப்பறிபவன், சீடனுகிறன்—சாசாபாய்—கொலைசெய்த துப்பாக்கி—கமலநாதனும் சாசாபாயும்—சில உளவுகள்.

நிலவறையில் வீழ்த்தப்பட்ட சரவணனுக்குச் சுமார் இரண்டு மணி நேரங்கழித்து அறிவு வந்தது. பிறகு அவன் எழுந்திருக்கப் பின்னு மொருமணிநேரம்

சென்றது. அவன் விழுந்திருந்த விடத்தின் ஒரு பக்கம் சுவரின்மேல் பெரிய சந்திருந்தது. அதிக கஷ்டத்தோடு அச்சுவரின்மேல் ஏறினன்: பலதரம் வழுக்கி வழுக்கி விழுந்தான். முன் பட்ட காயத்தோடு தேகத்தில் பல விடங்களில் பின்னும் காயம்பட்டது. கடைசியில் மெது வாய் சமாளித்துக்கொண்டு அச்சுவரின் மேலேறிப்பக்கத்தி லிருந்த அறைக்குள் குதித்தான். அதிலும் சில இயந்திரங்க ளிருந்தன. எங்கே தாமோதரனிடம் மறுபடி சிக்கிக் கொள்ளுகிறேமோ வென்று திகிலோடு நாற்புறமும் பார்த் தான். ஆனல் அவன் அங்கில்லை. அந்த அறையின் கதவு திறந்திருப்பதையும் அதன் தாழ்ப்பாளுக்குப் பதிலாய்ப் போடப்பட்டிருந்த ஒரு இரும்புக் குழாயின் துண்டு தரை யில் விழுந்து கிடப்பதையும் கண்டான். இதனல் சமயம் வந்தால் நம்மை நாம் காத்துக்கொள்ளலாமென்று நினைத்து அக்குழாய்த் துண்டைக் கையிலெடுத்துக்கொண்டு மீராவி இயந்திரம் இருக்கும் அறைக்குச் சென்றான். இதையும் மற்ற அறைகளையும் கடந்து கடைசியில் மேலேறும் படிக் கட்டுகளைச் சமீபித்தபோது, ஏதோ ஒரு கறுத்த நிழல் போன்ற உருவம் தன் பின் பக்கத்தில் பதுங்கி வருவது போல் தோன்றியது. உடனே துரிதமாய் நடக்க ஆரம் பித்தான். ஜாடையாய்ப் பின்னல் பார்த்தபோது அந்த உருவமும் துரிதமாய் வருவதைப்போல் தோன்றியது.

இனிச் சற்றும் சந்தேகமேயில்லை, தன்னைப் பின்பற்றி யாரோ வருகிறதாய்ச் சிறுவன் தெரிந்துகொண்டான். இதுகாறும் நேரிட்ட சம்பவங்களால் அவனுடைய நரம் புகளெல்லாம் தளர்ச்சி யடைந்திருந்தன. அவன் துரித மாய்ப் படிக்கட்டுகளின் வழியே யேறினன். ஏறி ஆபீஸ் அறையை நோக்கி நடந்தான். அவனைத் தொடர்ந்து செல்லும் ஆளும் பின்னல் விடாமற் சென்றான்.

சரவணன் அந்த அறையை நெருங்கியபோது காலில் ஏதோ தடுத்ததால் கீழே விழுந்துவிட்டான். மறு நிமிடமே அவனைப் பின்பற்றி வந்தவன் அவனருகில் வந்துவிட்டான்; அவன் ஒரு போலீஸ்காரன். சரவணன் துரிதமாய்ச் சமாளித்தெழுந்து நின்று தன்னைப் பிடிக்கக் கை நீட்டும் போலீஸ்காரனை நோக்கி "நீ என்மேல் கை வைத்தாயோ நானடிப்பேன்" என்று கூவினன். இச்சத்தமே அறைக்குள் பேசிக்கொண்டிருந்த கதிரேசம்பிள்ளைக்கும் கமலநாதனுக்கும் கேட்டு அவர்களைத் திடுக்கிடச் செய்தது. போலீஸ்காரன் சரவணன் கையில் பிடித்திருக்கும் குழாயை நோக்கி "அதைக் கீழே எறி" என்றான். சிறுவன் மாட்டேனென்றான். போலீஸ்காரன் பாய்ந்து பிடிக்கப் போனபோது சிறுவன் ஓங்கிக் குழாயாலடித்தான். போலீஸ்காரன் உயரமான ஆளானபடியால் அடி சரியாய்த் தாக்கவில்லை. அவன் உடனே அக்குழாயைக் கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டு ஒரு கையால் சிறுவனுடைய தொண்டையை யழுத்திப் பிடித்தான். அவனுக்கு மூச்சுத் திணறியது.

அச்சமயம் அப்போலீஸ்காரனுக்கு ஒரு அதிசய சம்பவம் நேர்ந்தது. அதாவது, அவன் பின்னாலிருந்து இரண்டு கரங்கள் அவனை யழுத்திப்பிடித்துப் பூமியிலிருந்து அடியோடு தூக்கி அறையின் மற்றொரு மூலைக்கு மோதி யடித்தன. அவன் அடிபட்டுச் சமாளித்து எழுந்து நின்றபோது சற்று தூரத்தில் சரவணன் நிற்பதையும், அவனருகில் மூக்கில் கண்ணாடியணிந்த ஒரு மெலிந்த மனிதன் நிற்பதையும், கதவண்டையில் கதிரேசம்பிள்ளை நிற்பதையும் கண்டான். அவன் கமலநாதனை யுற்று நோக்கிக்கொண்டே மெதுவாய் முன்னுக்கு நடந்தான். அந்த வழியில் தீபம் மங்கலாய் எரிந்துகொண்டிருந்தது. ஆயினும் அவன் சமீபத்தில்

சென்றபோது அக்கண்ணுடி பவரித்துகொண்டிருந்த மனிதனை யன்றுகாலை பார்த்திருப்பதாய் அவன் நினைவிற்குவந்தது. அவன் நினைத்து நினைத்துப்பார்த்தான். அச்சமயம் காலையில் இன்னொரு போலிஸ் உத்தியோகஸ்தன் கூறியது அவன் நினைவிற்கு வந்தது. அதாவது, "அவன் புதிதாய் ஊரில் வந்திருக்கும் புதுத் துப்பறியும் ஆசாமி; அவன் பெயர் கமலநாதன்; இந்நகரில் அவன் யாவரிலும் பலவானென்று கூறுகிறார்கள். துப்பறிவதில் சிங்கம்" என்று கூறியது இப்போது அவன் நினைவிற்கு வந்தது.

அவன் தட்டென்று நின்று மரியாதையாய் "நீர் துப்பறியும் உத்தியோகஸ்தரான கமலநாதன் என்பவரா?" என்று கேட்டான். கமலநாதன் நிதானமாய் "ஆம், நான்தான்" என்று கூறிவிட்டு, "இந்தச் சிறுவனை யிப்படி முரட்டுத்தனமாய்த் தொந்தரவு செய்ய உனக்கு ஒரு அதிகாரமுமில்லை: முரட்டுத்தனமாய்க்கையாடப்படுவதின் சுகத்தை யுனக்கு அறிவிக்க வேண்டுமென்று இப்படிச் செய்தேன்; எப்படியிருக்கிறது?" என்று போலீஸ்காரனை வினவினான்.

அதற்கு அம்மனிதன் "இவன் என்னை யடித்தான் அதிகாரத்திற்கு அடங்காமல் முரட்டுத்தனம் செய்தான்" என்றான். கமலநாதன் "நான் எல்லாம் கண்ணால் பார்த்துக்கொண்டுதானிருந்தேன். நீ அதை விவரித்துக் கூற வேண்டிய அவசியமில்லை. பையன் புத்தியுள்ளவன். ஜாக்கிரதையுடையவன். உனக்கு ஒரு அதிகாரமு மில்லாமலே யவனைத் தொந்தரவு செய்து பிடிக்கப் பார்த்தாய். அவனுடைய சுதந்திரம் அதனுக்குத் தெரியும். அவன் அதைக் காப்பாற்றிக் கொள்ள நின்றான். அவ்வளவே நடந்த சங்கதி; உனக்கு இது திருப்திகரமா யிராவிட்டால் சங்கதியை

மேல் அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்து. இச்சிறுவனுக்காக நான்வந்து பேசுகிறேன்" என்றான்.

இதைக்கேட்ட அந்தப் போலீஸ்காரன் திகிற்பட்டு நடுக்கமெடுத்துக்கொண்டு துரிதமாய் "ஐயா! இது இதோடு போகட்டும், இதோடு போகட்டும். இவன் கீழ் அறைகளில் பதுங்கிக்கொண்டிருக்கக் கண்டேன். இவன் கூடுமானால் காணாமற்போன அந்தத் தாமோதரன் என்பவனைப்பற்றிக் கூறக்கூடுமென்று நினைக்கிறேன்" என்றான். இவ்வாறு கூறியதும் அவன் வந்தனமளித்துக் கமலநாதனையும் சரவணனையும் கதிரேசம் பிள்ளையோடு விட்டுவிட்டுப் போய்விட்டான்.

கமலநாதன் சிறுவனருகிற் சென்று அவன் தோள்மேல் பட்சத்தோடு கையைவைத்து, "குழந்தாய்! நீ அடிபட்டிருப்பதுபோல் தோன்றுகிறது" என்றான்.

சரவணன் கமலநாதன் முகத்தைச் சட்டென்று ஏறெடுத்துப்பார்த்து, "அவ்வளவாய்ப் பலத்த காயம் படவில்லையென்றெண்ணுகிறேன்" என்று அசட்டையாய்க் கூறினான்.

கமலநாதன்.—அப்படியானால் நான் சும்மாவிருந்திருந்தால் நீ அவனோடு ஒருகை பார்த்தே யிருப்பாய்?

சரவணன்.—ஆம், தடையில்லை. நான் எப்போதும் என் சண்டையை நான் மட்டுமே சமாளித்துக் கொள்வது வழக்கம். கடைசியில் நான் அவனுக்குப் பின்னிடைந்திருக்க மாட்டேன்.

கமலநாதன்.—அது கிடக்கிறது. இப்போது கொலை செய்யப்பட்ட சபாபதிப்பிள்ளை யுனக்கு மிக்க சிநேகிதமென்று கேள்விப்படுகிறேன்.

சரவணன்.—ஆம், ஐயா! அவர் அனாதையாயிருந்த என்

னைக் காப்பாற்றினர். எனக்கு வேலைகற்பித்து உதவி புரிந்தார்.

சிறுவன் துக்கத்தோடு கூறிய மாதிரியால் இறந்தவனுக்காக அவன் எவ்வளவு மனவருத்தப் படுகிறானென்று நன்றாய்த் தெரிந்தது. கமலநாதன் அவனை யன்போடு நோக்கி, "பாவம், அவர் இறந்துபோனது உனக்கு மிக்க மனத்துயரை யுண்டாக்கி விட்டது" என்றான்.

சிறுவன்.—"ஆம். அவரைக் கொன்றவன் இன்னனென்று மட்டும் எனக்குத் தெரிந்தால், நான் ஒரு கத்தியும் துப்பாக்கியும் வாங்கிக்கொண்டு என் வஞ்சத்தைத் தீர்த்துக்கொள்வேன். இதில் ஏதாவது கொஞ்சம் உதவி செய்தால் என் மனதிற்குத் திருப்தியா யிருக்கும். நானொரு போலீஸ்காரனா யிராமற் போய்விட்டேன்" என்றான்.

கமலநாதன் அவன் இருதோட்கள் மேலும் தன்கரங்களை வைத்து ஆவலோடு அவன் முகத்தை யுற்று நோக்கினன். அவன் பார்வை தன்மேல் பட்ட மாத்திரத்தில் சரவணனுக்கு ஒருவித உற்சாகமும் கமலநாதன் மேல் பிரியமும் நம்பிக்கையு முண்டாயின. கமலநாதன் மெதுவாய் அக்கரையோடு "நண்பனே! நீ கொஞ்சம் இதில் உதவி செய்யக்கூடும். உன் அரிய நண்பனைக் கொன்ற பாதகனைக் கண்டுபிடிக்கும் விஷயத்தில் நீ எனக்கு உதவி புரியலாம். நீ யொரு துப்பறியும் உத்தியோகஸ்தனாகலாம். எனக்கு உதவியாய் நிற்கலாம்" என்று கூறினன்.

இதைக்கேட்ட சிறுவன் மிக்க ஆனந்த மடைந்து "மெய்யாகவா? நான் அப்படியாகக்கூடுமா?" என்று ஆத்திரத்தோடு கேட்டான். கமலநாதன் "உஸ்! அவ்வளவு கொட்டியாய்ப் பேசாதே. துப்பறிபவர்கள் முதலாவது பாடம் வாயை யடக்கியிருக்கக் கற்றுக்கொள்ள

வேண்டும். நீ நான் கூறுகிறபடியே நடக்கவேண்டும். மேலும் தற்சமயம் நான் சொல்லுகிறதை யன்றி வேறொன்றும் செய்யலாகாது. நான் கூறுவதற்கெல்லாம் காரணம் அநுபவத்தில் தெரியும்" என்றான்.

சரவணன்.—"சரி. நான் முதற் செய்யவேண்டிய வேலை யென்ன?" என்று கேட்டான்.

கமலநாதன்.—"நீ காலையிலிருந்து எங்கு சென்றிருந்தாய் கூறு?" என்றான்.

சரவணன் கதவினருகில் நிற்கும் கதிரேசம் பிள்ளையைச் சாடையாய்ப் பார்த்துக் குசுகுசுவென்று "நீ யறிய வேண்டியவைகளை யெல்லாம் நான் கூறுகிறேன்: ஆனால் அன்னியர்முன் கூறாமலிருப்பது நல்லதென்று நினைக்கிறேன். நீ அப்புறம் அவர்களுக்கு எவ்வளவு கூறவேண்டுமோ உன் பிரியப்படி கூறலாம்" என்றான்.

இதைக்கேட்ட கமலநாதன் கதிரேசம் பிள்ளையிடம் மெதுவாய் ஏதோ கூறினான். அந்த ஆள் தலை யசைத்துக் கமலநாதனுக்கு ஒரு அறையைக் காட்டினான்; அதில் யாருமில்லை. கமலநாதனும் சரவணனும் அங்கு சென்றதே கமலநாதன் "இனி நீ தாராளமாய்க் கூறலாம்" என்றான். சிறுவன் ஒன்றையும் மறைக்காமல் நடந்த சங்கதி முழுதும் கூறினான். இவன் கூறிய சங்கதிகளைக் கமலநாதன் முக்கியமானதா யெண்ணியதும் அல்லாததும் அவன் முகக்குறியால் அறியக்கூடவில்லை. அவன் அதைப்பற்றி யொன்றுங் கூறாமல் திடீரென்று, "இப்போது இந்த அச்சாபீசிலிருக்கும் அச்சடுக்குகிறவர்களில் அழகிய ஒரு கன்னிகையிருக்கிறாள். அவளைப்பற்றி யுனக்குத் தெரிந்திருக்கும் சங்கதிகளைக்கூறு. அவள்பெயர் சரசாபாய் என்று கூறுகிறார்கள்" என்றான்.

சரவணன் இதற்குப் பதில் கூறுமுன் "ஐயோ!

ஐயோ! என்னை விடு விடு!'' என்று கெட்டியாய்க் கூவும் பெண்குரலைக் கேட்டு இருவரும் திடுக்கிட்டார்கள். சரவணன், "ஆ! அது அவளுடைய குரல்தான் என்று கூறிக் கொண்டே ஆத்திரத்தோடு தட்டென்றெழுந்து போகப் போனான். அதற்குள் கமலநாதன் முன்னடிச் சென்று கதவைத்திறந்து சத்தடி செய்யாமல் முன்னே செல்லும் சிறுவன் பின்னால் நடந்தான். தாழ்வாரத்தின் வழியே பாதி தூரம் செல்வதற்குள் எதிரில் இரண்டுபேர் போராடிக்கொண்டிருப்பதைக் கண்டார்கள். அதில் ஒரு ஆள் உயரமான மெலிந்த வாலிபன்; அவன் முகம் சுபாவத்தில் அழகு வாய்ந்ததாயிருந்தாலும் துர்நடத்தையால் அந்தங் கெட்டு விகாரமடைந்திருந்தது. மற்றொரு ஆள் அழகான கன்னிகை. அவள்முகம் பூரணசந்திரன்போல் பளபள வென்று பிரகாசித்துக் கொண்டிருந்தது. அச்சமயம் கோபத்தால் முகத்தில் இரத்தம் ஏறிக் கண்களில் அக்கினிச்சுவாலை வீசுவதுபோ லிருந்தது. அந்த வாலிபன் அக்கன்னிகையின் புயத்தைப் பிடித்துக்கொண்டிருக்க, அக்கன்னிகை கோபத்தோடு அவன் பிடியிலிருந்து விடுவித்துக்கொள்ளக் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறாள்.

சரவணனும் கமலநாதனும் அருகிற் செல்லும் சமயம், அக்கன்னிகை தன் மடியிலிருந்த ஒரு கைத்துப்பாக்கியை யெடுத்து தன்னைப் பிடித்திருக்கும் வாலிபன் முகத்திற்கு நேராய் நீட்டி "இப்போது விட்டுவிடுகிறாயா?" என்று கோபத்தோடு கூறினாள். அவள் கோபத்தால் நடுக்கமுற்றுக்கொண்டே கூறினாலும் அவள் குரலின்இனிய நாதமானது சற்றும் மறையவில்லை. அவளைப் பிடித்துக்கொண்டிருந்த வாலிபன் சபாபதிப் பிள்ளையின் துஷ்டபுத்திரனாகிய குமரப்பன் என்பவன். அவன் துப்பாக்கியைக் கண்டதே அவளை விட்டுவிட்டுப் பயத்தோடு பின்னடைந்

தான். துப்பாக்கியைக் கண்டதே அவனுடைய அகங்கார மனைத்தும் அச்சமயம் பறந்து போய் விட்டது.

அவன் அவளை யச்சத்தோடு நோக்கி "சரசாபாய்! துப்பாக்கி வைத்துக்கொண் டிருக்கிறாயா?" என்றான். அதற்கு அக்கன்னிகை, "ஆம், நான் என்னைக் காப்பாற்றிக்கொள்ள ஆயத்தமாயிருக்கிறேன், தெரிந்துகொள்" என்றாள்.

குமரப்பன், "ஆயினும் நீ என்னைச் சுடமாட்டா யென்று எனக்குத்தெரியும். உன்போன்ற அழகு வாய்ந்த கன்னிகை கொலைசெய்யத் துணியமாட்டாள்" என்றான். அக்கன்னிகை, சற்றும் இரக்கம் பாராட்டாதவள்போல் "அப்படி நினைக்காதே. சமயம் நேரிட்டுத் தன்னைத்தான் காப்பாற்றிக்கொள்ள வேண்டியதா யிருந்தால் எப்படிப் பட்ட சாந்தமான கன்னிகையும் கொலை செய்யப் பின் வாங்கமாட்டாள். என்னைக் காப்பாற்ற யாரும் துணை யில்லாவிட்டால் என்னை நானே காப்பாற்றிக் கொள்ள வேண்டியதே. அதற்காகத்தான் நான் துப்பாக்கிவைத் துக்கொண் டிருக்கிறேன். அவசியம் நேரிடும்போது அதை யுபயோகிக்கத் தெரியும்" என்றாள்.

வாலிபன் இம்மொழிகளைக் கேட்டு அதிசயத்தோடு பிரமிப்படைந்து, "எப்படி யிருந்தாலும் நீ யொரு அபூர்வ மான பெண்" என்றான். அக்கன்னிகை, "நான் உன் புகழ்ச் சியை விரும்பிக் கேட்கவில்லை; நீ என்னை விட்டுவிட்டு உன் வழியைப் பார்த்துக்கொண்டு செல்வது நலம்" என்றாள். அதற்கு அவ்வாலிபன், "நான் உன் சிநேகன்; உனக்குப் பிரியமில்லாத மொழிகளை நான் கூறவில்லை. எப்படியாயி னும் நான் உன் பட்சத்தில் நிற்கிறேன். உனக்கு யாராவது தீங்கு செய்தால் அவன் யாராயிருந்தாலும் ஒருகை பார்த்

துக் கொள்ளுகிறேன்; நீ இதை நிஜமென்று நினை" என்ருன்.

இவன் இவ்வாறு கூறி வாய்மூடுமுன் யாரோ தன் பின்வந்து கழுத்தைப்பிடித்துப் பரபரவென்று நெட்டித் தள்ளிக்கொண்டு போவதை யுணர்ந்தான். தன்னால் கூடிய வரையில் விடுவித்துக்கொள்ளப் பார்த்தான்; சற்றும் முடியவில்லை. ஆள் யாரென்று பார்க்கலாமென்றால் தலையைச் சரியாய்த் திருப்ப முடியவில்லை. தன்னை யந்தரத்தில் தூக்கிக்கொண்டு போவதுபோ லிருக்கிறது. என்ன செய்வான். பாபம்! தன் முன் சரவணன் ஓடிப்போய் எதிரில் தூரத்திலிருக்கும் கதவைத் திறப்பதை மட்டும் கண்டான். மறுநிமிடம் தான் அவ்வாசற்படிக்கு வெளியில் தள்ளப் பட்டதையும் அக்கதவு மூடித் தாளிடப்பட்டதையும் கண்டான்.

இக்காட்சியைக்கண்ட சரசாபாய் மிக்கவியப்படைந்து நின்ருள். அவள் சற்றுசமாளித்து நிற்பதற்குள் கமலநாதன் அவளருகில்வந்து அவளை யுற்றுநோக்கி "அந்தத்துஷ்டனை நான் சுட்டுத்தள்ளி யுனக்கு அந்த வேலையை மீந்தி வைக்கலா மென்று நினைத்தேன். அவன் இதற்கு முன் கூட உன்னைத் தொந்தரவு செய்திருக்கிறானல்லவா?" என்ருன்.

சரசாபாய்.—"எத்தனையோதரம் இப்படிச் செய்திருக்கிருன்" என்று கோபத்தோடும் துயரத்தோடும் கூறிஞள்.

கமலநாதன்.—சதிரேசம் பிள்ளை தன்னிடத்தில் வேலை செய்யும் பெண்களைத் தன் மகன் இப்படி அக்கிரமம் செய்யும்படி விட்டுவிட் டிருக்கிருரா?

சரசாபாய்.—அதைப்பற்றி யவர் கவனிக்கிறதேயில்லை. குமரப்பன் எப்போதும் தன் மனம்போனபடிக் கெல்லாம் செய்துகொண் டிருக்கிருன்.

கமலநாதன்.—எப்போதுமே யப்படி முடியுமா; திருஷ்டாந்தமாய் இப்போது பார்த்தாயல்லவா?

சரசாபாய்.—தாங்கள் மிக்க பலாட்டியரா யிருக்க வேண்டும்.

கமலநாதன்.—நீ மிக்க துணிகரமுடையவள், உனக்குத் தாய் தந்தையரில்லை யென்று நினைக்கிறேன்.

சரசாபாய்.—என்னைக் காப்பாற்ற ஒருவருமில்லை.

கமலநாதன்.—உனக்குச் சிநேகிதர் இருக்கிறார்களா? என்பதைப்பற்றி நான் கேட்கவில்லை. தாய் தந்தையர் இருக்கிறார்களா வென்பதைப் பற்றியே கேட்டேன்.

சரசாபாய், அவனைத் திடீரென்று சந்தேகமான பார்வையாய்ப் பார்த்து, "ஐயோ! தாங்கள் எனக்கு இதுவரையில் அறிமுகமல்லாதவரா யிருக்கிறீர்கள்" என்றாள்.

கமலநாதன்.—உன் தாய்தந்தையர் இருப்பதும் இல்லாததும் எனக்குக்கூற ஏதாவது ஆக்ஷேபனை யிருக்கிறதோ?

சரசாபாய்.—புது மனிதர்கள் கேட்கிற கேள்விகளுக் கெல்லாம் நான் பதில்கூற கடமைப்பட்டவளல்ல வென்று நினைக்கிறேன்.

கமலநாதன்.—சரி, எனக்குக்கூற உனக்குப் பிரியமில்லை; அக்கரையில்லை. அதை நான் கண்டு பிடித்துக்கொள்வேன். உன் பெயர் சரசாபாய், நீ இந்த அச்சாபீசில் அச்சடுக்குகிறவர்களில் ஒருத்தி. நீ இன்று அதிகாலையில், ஆபீஸ் அறையிற் சென்று சபாபதிப்பிள்ளையைக் கண்டாயல்லவா!

அவள் இதைக் கேட்டதே முகம் வெளுத்து அப்படி யார் கூறியது என்றாள். கமலநாதன், "நான் உன்னைப் பார்த்தேன்; நீயுன் அடையாளத்தை மறைக்க நினைத்தாய்; நீ திரும்பி மறுபடி உன் வேலைக்குச் சென்றபோது நான் உன்னைக் கவனமாய்ப் பார்த்தேன். துப்பறிகிற நாங்கள்

சாதாரணமாகவே சூக்ஷ்மமான பார்வை யுடையவர்களல்லவா ?"

சரசாபாய்.—நீர் ஒரு துப்பறியும் உத்தியோகஸ்தரா ?

கமலநாதன்.—ஆம்; நான் இக்கொலையைப்பற்றி வேலை செய்கிறேன்; ஆகையால் அதைப்பற்றி யுனக்குத் தெரிந்தசங்கதிகளையெல்லாம் எனக்குக்கூறவேண்டும். சபாபதிப்பிள்ளையைப் பார்த்தபோது அவர் சாதாரணமா யிருப்பதுபோலவே யிருந்தாரா ?

சரசாபாய்.—அவரைக் கண்ட முக்காடிட்ட ஸ்திரீ நான்தான் என்று நான் ஒப்புக்கொள்ள வில்லையே.

கமலநாதன் புன்னகையோடு, "ஆ ! ஆ ! அவள் முக்காடிட்டிருந்தாளென்று நான் கூறவில்லையே. நீயே யகப்பட்டுக் கொண்டாய். ஆயினும் பயப்படாதே, நடந்த சங்கதியைக்கூறு ! பொய் கூறினால் நீ பயப்படவேண்டிய காரணமே யில்லை" என்று பட்சமாய்க் கூறினான்.

சரசாபாய்க்கு நடுக்கமுண்டாய்விட்டது. அவள் சாதாரணமாக சூக்ஷ்மபுத்தியும் எதற்கும் பயப்படாத தீரமுமுடையவள். இப்போது அந்த மனிதனிடத்தில் அவளுக்கு அச்சமுண்டாய்விட்டது. தான் பேசும்போ தெல்லாம் தான் கூறுவது எவ்வளவு மெய்யென்றும் எவ்வளவு பொய்யென்றும் அவன் தெரிந்துகொள்ளுகிறான் என்று அவள் மனதிற்பட்டது. அவள் தலைகுனிந்து கொண்டு "நான் சொந்தவேலையாய் அவரைப் பார்க்கப் போயிருந்தேன்" என்றாள்.

கமலநாதன்.—உன்னைப்பற்றியா ?

சரசாபாய்.—அல்ல, ஒரு சிநேகிதரைப்பற்றி.

கமலநாதன்.—அப்படியானால் உனக்கொரு சிநேகிதர் உண்டு.

சரசாபாய்.—என் என்னை இப்படிக் கிளறிக் கேட்கிறீர்?

ஒரு புது மனிதனிடம் இரகசிய சங்கதிகளை யெல்லாம் சொல்லவேண்டுமா ?

கமலநாதன்.—நான் இக் குற்றத்தைப்பற்றிய ருசுவுகளைக் கண்டுபிடிக்கவேண்டும். நீதான் கடைசியில் சபாபதிப் பிள்ளை உயிரோடிருக்கும்போது பார்த்த ஆசாமி.

சரசாபாய்.—அப்படி யிருந்தாலும் அதைப்பற்றி யெனக் கொன்றும் தெரியாது. துப்பாக்கி வெடி கிளம்பும் போது நான் என் இடத்தில் அச்சு அடுக்கிக் கொண் டிருந்தேன். இது உண்மை யென்று சுலபமாய்த் தெரிந்து கொள்ளலாம்.

கமலநாதன்.—தடையின்றி நீ இருந்தது உண்மையே; நீ காலையில் சபாபதிப்பிள்ளையைக் கண்டபோது உன் கையிலிருக்கும் துப்பாக்கியை வைத்துக்கொண் டிருந் தாயா ?

சரசாபாய் உடனே தன் கையிலிருந்த துப்பாக்கியைக் கீழே எறிந்துவிட்டு, "இல்லை, நான் வைத்துக் கொண் டில்லை" என்றாள்.

கமலநாதன்.—நான் அதைப் பார்க்கலாமா ?

சரசாபாய்.—என்னத்திற்காக ?

கமலநாதன் சாந்தமாகவே, "ஏனெனில் சபாபதிப் பிள்ளை சுடப்பட்டது இத் துப்பாக்கியால்தான்" என்று உத்தேசித்திருக்கிறேன் என்று கூறினார்.

இதைக்கேட்ட சர்சாபாய் திடுக்கிட்டு, "நீர் நினைத்தது தவறு. அப்படி யிருக்கமுடியாது" என்றாள்.

கமலநாதன் "நான் தவறாய் நினைத்திருந்தால் நீ கலக்க மில்லாமல் எதையும் கூறி நான் தவறிவிட்டதை மெய்ப் பிக்கலாமே" என்றான்.

இதுவரையில் பேசாமல் நின்றுகொண்டிருந்த சரவ ணன் இப்போது சற்று ஆத்திரத்தோடு கமலநாதனை

நோக்கி, "இக்கொலையைப்பற்றி இக்கன்னிகைக்கு ஒன்றும் தெரியாது. அது மெய்யென்று நான் என் தலையைத் தரு வேன்" என்றான்.

கமலநாதன் "நான் எல்லாம் தெரிந்துகொள்வேன். நீ இதைப்பற்றித் தொந்தரவு எடுத்துக்கொள்ளவேண்டாம். திடீரென்று ஒரு நிர்மானத்திற்குக் குதித்து விடாதே. ஒரே தாண்டில் உண்மை யகப்பட்டுவிடாது" என்றான்.

பிறகு கமலநாதன் நடுங்கிக்கொண்டிருக்கும் அக் கன்னிகையின் பக்கம் திரும்ப, "நான் இத்துப்பாக்கி யைப் பரிசோதித்துக் கொடுத்துவிடுகிறேன்" என்று கூறி விட்டு அதைக் கையிலெடுத்துப் பார்த்தான்.

அது ஐந்து தோட்டாக்கள் போடும் துப்பாக்கி. ஒவ்வொரு குழையிலும் ஒவ்வொரு தோட்டா இருந்தது. இப்படியிருப்பதைக் கண்டால் அனேகம் துப்பறிபவர்கள் ஏமாந்துவிட்டிருப்பார்கள். கமலநாதனோ எல்லாத் தோட் டாக்களையும் ஒவ்வொன்றாகப் பார்த்து, எல்லாவற்றிலும் புது மேனியாயிருந்த ஒரு தோட்டாவின்மேல் விரலை வைத்து "ஒரு தோட்டா இன்று சுடப்பட்டிருக்கிறது; அத்துவாரத்தில் இத்தோட்டா சரியாய்ப் பிடிக்கிறது. குழாயில் புகை படிந்திருக்கிறது. மேலும் இதைப் பார்" என்று கூறிக்கொண்டே துரிதமாய்த் தன் சொக்காய ஜேபியிலிருந்து ஒரு குண்டை யெடுததுத் துப்பாக்கிக் குழா யின் வாயில் சொருகி "சரியாய்ப் பிடிக்கிறது பார்த்தாயா? இந்தக் குண்டுதான் சபாபதிப்பிள்ளையின் பிராணனைப் போக்கியது. இது ஒரு சந்தேகமுமின்றி இந்தத் துப் பாக்கியிலிருந்துதான் சுடப்பட்டது" என்றான்.

சரசாபாய் ஆச்சரியத்தால் ஊமைபோல் பிரமித்து நின்றாள்.

கமலநாதன்.—"இத்துப்பாக்கி யுன்னிடம் எப்படி வந்தது?" என்றான்.

சரசாபாய்.—இது நெடுநாளைக்கு முன் என்னிடம் கொடுக்கப்பட்டது.

கமலநாதன்.—காலையில் சபாபதிப்பிள்ளையைக் காணச்சென்றிருந்தபோது இது எங்கே யிருந்தது?

சரசாபாய்.—என் வாசஸ்தலத்தில்; அதாவது கிழக்கு 15-வது வீதி, 15-வது நெம்பர் வீட்டில் இருந்தது?

கமலநாதன்.—நீ திரும்பி வீட்டிற்குச் சென்றபோது இது வைத்தவிடத்திலேயே வழுக்கும்போ லிருந்ததோ?

சரசாபாய்.—ஆம், ஐயா.

கமலநாதன்.—துப்பாக்கியைப் பற்றிய சங்கதி இந்த மட்டோடே போதும். ஆனால் நான் உன்னைப்பற்றி இன்னும் சற்று விவரமா யறியவேண்டும். உன் தகப்பன் உயிரோடிருக்கிறானா? எங்கிருக்கிறான்? கூறு பார்ப்போம்?

சரசாபாய்.—இப்போது அவர் எங்கிருப்பதும திட்டமாய்த் தெரியவராது.

கமலநாதன்.—உன் தந்தையின் பெயர் வேலாயுதனல்லவோ?

சரசாபாய்.—இச் சந்தர்ப்பத்தில் என் தந்தையின் பெயரைப்பற்றி யாகவேண்டிய தென்ன?

கமலநாதன்.—ஒன்றுமில்லை; ஆனால் நீ என்னை ஏமாற்றப் பார்க்கிறாய் என்று தோன்றுகிறது. உன் தந்தை நாடோடியாய் விட்டான். குடித்திருந்ததற்கும் சில லரைக் களவுகளுக்காகவும் பலதரம் கைது செய்யப் பட்டிருக்கிறான்; மெய்தானே?

சரசாபாய் மிக்க துயரத்தோடு, "ஐயா! என் தந்தையின் பெயரால் எனக்கு அவமானம் நேரிடக் கூடாதென்று அவர் பெயர் இங்கே ஒருவருக்கும் கூறப்படுவதில்லை,

உமக்குச் சற்றாவது இரக்கமில்லையா? என்னை யேன் இப்படி அவமானப்படுத்துகிறீர்?" என்றாள்.

கமலநாதன்.—குழந்தாய், உன்னை அவமானப்படுத்தவேண்டுமென்ற எண்ணம் எனக்கு இல்லவேயில்லை. இப்போது நான் கூறியது சரவணனுக்கு மட்டுமே தெரியும்; அவன் இதை யாருக்கும் கூறமாட்டான். உன் தந்தை இந்த முதலாளிகளோடு முன்னே கூட்டாளியாயிருந்து பிறகு மிக்க விரோதமடைந்து பிரிந்துவிட்டபடியால் நான் இந்த விஷயங்களை வெகுவாய் ஆராய்ச்சி செய்யவேண்டியது அவசியமா யிருக்கிறது.

அக்கன்னிகை கமலநாதன் கூறியதெல்லாம் தன் தந்தைமேல் சாடையாய்க் கொலைக் குற்றத்தைச் சாட்டுகிறதென்று உணர்ந்துகொண்டு, "ஐயா! அவர் கொலை செய்யவில்லை; அவர் நிரபராதி யென்பதற்கு என் உயிரைப் பிணை கொடுப்பேன்" என்றாள்.

கமலநாதன்.—உன் தந்தைமேல் சந்தேகம் கொள்வதற்கு எனக்கு ஒரு காரணமுமில்லை. ஆனால் நான் இந்த உளவுகளெல்லாம் தப்பென்று காண்கிற வரையில் அவைகளை யாராய்ந்து பார்த்தே விடவேண்டும். நீ கடைசியாய் உன் தந்தையை யெப்போது எங்கே கண்டாய்? கூறு.

சரசாபாய்.—"நான் ஒரு வாரத்திற்குமுன் அவரை வீதியிற் கண்டேன்" என்றாள்.

கமலநாதன்.—"தற்காலம் இதுவரையில் போதும். இனிமேல் இந்தக் குமரப்பனிட மிருந்தாவது இன்னும் யாரிடமிருந்தாவது காப்பாற்றிக்கொள்ள உனக்கு உதவி வேண்டுமாயின், நான் ஆயத்தமா யிருக்கிறேன். இதற்கிடையில் என்னிடமிருந்து எதையும் ஒளிக்காதே. நீ களங்கமற்றவளென்றும், உண்மையுள்ளவ

ளென்றும் ருசுப்படுத்த எனக்கு விருப்பம்" என்று கூறிவிட்டு, சரவணனை நோக்கி, "இரவு சமீபித்து விட்டது. நாம் போவோம் வா; எனக்கு அதிக வேலை யிருக்கிறது" என்றான்.

அவர்களிருவரும் ஆபீஸ் அறைக்குச் சென்றார்கள். சரசாபாயும் அதைவிட்டுச் சென்றாள். ஆபீஸ் அறைக்குள் சென்றதே கமலநாதன் சரவணனுக்குச் சில விஷயங்களைப் பற்றிக் கூறி, அந்த ஏற்பாட்டின்படிக்கு நடக்க வேண்டு மென்று திட்டம் செய்தான்.

கமலநாதன் அச்சாபீஸைவிட்டுச் சென்றபின் சரவணன் தனக்குண்டான சந்தோஷத்தினால் தொடைகளைத் தட்டிக்கொண்டு, "பேஷ்! துப்பறியும் வேலை இந்த அச்சுப் பொறுக்கும் வேலையைவிட எவ்வளவோ உயர்வானதா யிருக்கிறது. ஆம், அச்சுப் பொறுக்கும் வேலை ஒரு கொசு வானால் துப்பறியும் வேலை ஒரு கருடனைப்போலிருக்கிறது" என்று கூறிக்கொண்டான்.

4-வது அத்தியாயம்

கமலநாதன் மாறுவேடம்—அவனும் கொள்ளிவீரனும்—சரசாளும் வேலாயுதனும் கமலநாதன் கண்களுக்குப் புலப்படல்—கொள்ளிவீரன் வந்சம்—ஒருவனை யிருவர் பின்பற்றல்—ஒரு வேடிக்கை சம்பவம்—கமலநாதனும் ஜீவாஜியும்.

முன் அத்தியாயத்தின் இறுதியில் கூறியபடி அச்சாபீசை விட்டுத் தன் விடுதிக்குச் சென்ற கமலநாதன் இரவு சுமார் ஒன்பது மணிக்கு வீட்டைவிட்டு வெளியிற் புறப்பட்டான். இப்போது அவனை யார் கண்

டாலும் காலையில் கண்ட கமலநாதன் என்று கூறவே முடியாது. அவனுடைய மாறுவேடத்தால் அவன் உருவம் முழுதும் மாறிவிட்டிருந்தது. கருக்கான முறுக்கு மீசையும், பட்டுத் தலைஉருமாலும், கையில் பூண்கட்டிய பிரம்பும் உடையவனாயிருந்தான். அவன்மேல் புனுகு சவ்வாது இவைகளின் பரிமளம் கமகமவென்று வீசியது. மகா உல்லாசவானான ஷோக் பேர்வழியாய் மாறிவிட்டான். காலையிலிருந்ததை விட வேறே ஒருவிதமான மூக்குக் கண்ணாடி போட்டுக்கொண்டான். ஏனெனில் என்ன மாறுவேடமணிந்திருந்தாலும் நுட்பமான அறிவாளி கண்ணொளியைக் கண்டால் ஆளை யறிந்துகொள்ளலாம்; ஆகையால் கமலநாதன் எப்போதும் கண்ணாடியால் கண்ணைமட்டும் மறைத்துக்கொண்டிருப்பது வழக்கம்.

கமலநாதன் இவ்வகை மாறுவேடத்தோடு நகரத்தின் கீழ்ப்பக்கம் செல்லும் இரயில்வண்டியில் ஏறினான். அவன் ஏறியவண்டியில் இருந்தவர்கள் எல்லாம் இறங்கிவிட, தான் மட்டும் வண்டியில் தனியாயிருப்பதாய் எண்ணிக்கொண்டான். சற்றுநேரம் பொறுத்து நன்றாய்ப் பார்த்தபோது வண்டியின் ஒரு மூலையில் ஒரு ஆள் இருக்கக் கண்டான். அவன் ஒரு தடித்த மனிதன்; சாதாரணமான உடையணிந்துகொண்டிருந்தான்; அவன் ஏதோ ஆழ்ந்த யோசனையி லிருப்பவன்போல் காணப்பட்டான். கமலநாதன் மெதுவாய்ச் சென்று அவனுக்கு எதிரிலுள்ள ஆசனத்தில் உட்கார்ந்தான்.

கமலநாதன் அவ்வாறு உட்கார்ந்ததே அம்மனிதன் சட்டென்று தலை நிமிர்ந்து தன் முன் இருக்கும் நாணயமான மனிதனை வெறுப்போடு பார்த்தான். அம்மனிதன் முரட்டுத்தனமான பார்வையும், அழகில்லாத முகமும், குண்டுமணி போன்ற கண்களுமுடையவன்; புதர்போன்ற

கறுத்த தாடியுடையவன்; அவன் உரோமங்கள் காடுபோல் இருந்தன; சிப்புக் கண்டு எங்காவது ஆறுமாதமா யிருக்கலாம்; அவன் இடது கன்னத்தில் ஒரு வடுவிருந்தது.

சுமார் இரண்டு நிமிடங்கள் வரையில் இருவரும் ஒருவரை யொருவர் பார்த்துக்கொண் டிருந்தார்கள். கடைசியில் அம்மனிதன் "ஏ, பேஷா யிருக்கிறாய்! நேர்த்தி" என்று உறுமினான்.

கமலநாதன்.—நேர்த்திதான். சந்தேக மென்ன? நாமிருவரும் நேர்த்திதான் அல்லவா?" என்று வேணுமென்றே தைரியமற்றவன் போலப் பேசினான்.

அதற்கு அம்மனிதன் "ஊம், என்ன உன் அர்த்தம்?" என்று மறுபடி பன்றிபோல் உறுமினான்.

கமலநாதன்.—"சுடுகாட்டிற்குச் சென்றாலும் உனக்கு மரியாதை தெரியாது என்று அர்த்தம்" என்று சாந்தமாய்க் கூறினான்.

இதைக் கேட்டதே அந்த முரடன் தன் கரங்களை முஷ்டி பிடித்துக்கொண்டு எழுந்து நின்று "வேணுமென்றா அப்படிக் கூறினாய்?" என்றான்.

கமலநாதன்.—"ஆம்" என்றான்.

அம்மனிதன்—நான் யார் தெரியுமா?

கமலநாதன்.—"சற்றும் தெரியாது" என்றான்.

அம்முரடன் "என் பெயர் கொள்ளிவீரன் தெரிகிறதா?" என்றான்.

அதற்குக் கமலநாதன் "மிக்க நேர்த்தியான பெயர்" என்றான்.

கொள்ளிவீரன்.—"என்னிடத்தில் கண்ணடி போட்டுக்கொண்டிருக்கிற கில்லாடியானாலும் வாலாட்டக்கூடாது" என்று இறுமாப்போடு கூறினான்.

கமலநாதன்.—அப்படி ஆட்டினால் நீ என்ன செய்வாய்?

கொள்ளிவீரன்.—அவர்கள் மூச்சை யடக்கிவிடுவேன்.

கமலநாதன் சற்றாவது பயங் காட்டாமல், கலவரப் படாமல், "என்னிடத்தில் அப்படிச் செய்ய உன்னால் முடியுமென்று நான் நினைக்கவில்லை" என்றான்.

கொள்ளிவீரன்.—அப்படியா! ஏ!

கமலநாதன்.—ஆம். உண்மையாகவே அப்படித்தான் நினைக்கிறேன்.

அம்முரடன் கமலநாதனுடைய அஞ்சாத்திரத்தைக் கண்டு பிரமிப்படைந்தான். ஆயினும் மிக்க அகங்காரத்தோடு "அப்படியானால் உன்னை யுயிரோடு எமலோகமனுப்பட்டுமோ?" என்றான்.

கமலநாதன்.—"இவ்வளவு சீக்கிரத்தில் அந்தப் பிரயாணத்தை யெடுத்துக்கொள்வதாய் எனக்கு உத்தேசமில்லை; மேலும் என்னை அந்த விடத்திற்கனுப்ப உன்னால் முடியாது" என்றான்.

இதைக்கேட்டதே அம்முரடன் ஒரே பாய்ச்சலாய்க் கமலநாதன்மேல் பாய்ந்தான்; ஆனால் அவன் கரங்கள் வெறும் பலகைமேல்தான் மோதிக்கொண்டன. ஏனெனில், கமலநாதன் ஒரு விநாடிக்குள் இலகுவாய் அப்புறம் தாண்டிக்கொண்டதும், அந்த முரடன் முகத்தை நோக்கி ஒரு பலமான குத்துவிட்டான். மறுநிமிடமே யவன் அலறிக்கொண்டு தள்ளாடி வண்டியின் ஓரத்தில் மோதிக்கொண்டு கீழே விழுந்து உருண்டான்.

அச்சமயம் வண்டியும் ஒரு ஸ்டேஷனில் வந்து நின்றது. கொள்ளிவீரன் மெதுவாய்ச் சமாளித்து எழுந்து நிற்கும் சமயம், வண்டியின் கார்ட் "23-வது வீதி, 23-வது வீதி" என்று கூவினான். உடனே அனேகம் பிரயாணிகள் வண்டிக்குள் ஏறினார்கள். அப்போது வீரன் மறுபடி சண்டைக்குத் தொடங்குவதைப்போல் தன்முன் வரு

வதைக்கண்ட கமலநாதன் அவனைநோக்கி நிதானமாய் "இன்னொருதரம் காலமும் இடமும் வசதியாய் நேரிடும் வரையில் நமது விவகாரத்தை நிறுத்திவைக்கலாம் என்று நினைக்கிறேன்" என்றான்.

இதற்குள்ளாகவே வண்டியில் ஏறியிருப்பவர்களெல்லாம் தன்னையே பார்ப்பதை யுணர்ந்த வீரன் நமது வஞ்சத்தைத் தீர்த்துக்கொள்ள இது சமயமல்லவென்று அறிந்துகொண்டான். அவன் கமலநாதனுக் கெதிரிலிருந்த பலகையில் உட்கார்ந்து பெருமூச்சு விட்டுக்கொண்டு "நல்லது சமயம் வாய்க்குமட்டும் பொறு, பார்த்துக்கொள்ளுகிறேன்" என்றான்.

கமலநாதன்.—"ஆகா. அப்படியே பார்ப்போம்" என்றான்.

வீரன்.—ஆயினும் உனக்கு என்னிடம் என்ன கவை யிருக்கிறதோ அறியவேண்டும்.

கமலநாதன்.—எனக்கு உன்னிடம் அலுவல் என்று யார் சொன்னது?

வீரன்.—நீ யேன் என் எதிரில் வந்து உட்கார்ந்தாய்?

கமலநாதன்.—காலியாயிருக்கும் எந்த விடத்திலாவது உட்காரலாமென்று நினைக்கிறேன்.

அதன் பிறகு இருவரும் பேசவில்லை. வண்டியும் அதற்குள் பெரிய தெருவில் வந்து நின்றது. கமலநாதன் வண்டியைவிட்டிறங்கினான். வீரன் இறங்கி அவன் பின்னால் நடந்தான். கமலநாதன் அதை யுணர்ந்தும் சட்டை செய்யாமல் வீதியின் வழியே நடந்தான்.

கமலநாதன் இப்போது போய்க்கொண்டிருப்பது மிக்க அபாயகரமான வீதி. அதாவது கொலைக்கஞ்சாத கொடிய துஷ்டர்கள் வாசஞ்செய்யும் இடம். போகப்போக வீடுகளும் இழிவானவைகளாய்க் காணப்பட்டன. வீதியில் அம்மணமான சிறுவர்களும் சிறுமிகளும், அழுக்கு உடை

தரித்த ஸ்திரீகளும் புருடர்களும் கும்பு கும்பாய்த் தேங்கிக் கொண்டிருந்தார்கள். அந்த வீதிகளில் நாணயமான உடைதரித்த மனிதரைப் பார்ப்பது அரிது. அந்த வீதியின் கோடியில் குடிக்காரர்கள் சிலர் சண்டையிட்டுக்கொண்டிருந்தார்கள்.

கமலநாதன் அச் சண்டையைச் சாடையாய்ப் பார்த்துக்கொண்டே அப்புறம் நடந்தான். ஆனால் அக் கூட்டத்தில் ஒரு மனிதன்மட்டும் குடித்திருந்தாலும் சற்று மரியாதையான மனிதனாகவே தோன்றுவதைக் கண்டு அதிசயித்துக்கொண்டே நடந்தான். அம்மனிதன் அக்கூட்டத்திற்குத் தகாதவனென்று நன்றாய்த் தெரிந்தது. அவனோடு சண்டை யிடுபவன் ஒரு அன்னிய நாட்டான்போல் காணப்பட்டான். மற்றவன் உடைமட்டும் இவனிலும் உயர்ந்ததா யில்லாவிடினும், அவன் முகம்மட்டும் ஒரு பெரிய தனிகன் முகம்போலவே யிருந்தது.

அவன் தாடி சுத்தமாயில்லை. தலைப்பாகை கீழே விழுந்து கிடந்தது. கமலநாதன் அவன் முகத்தை யுற்று நோக்கியதும், ஆ! இவன்தான் வேலாயுதன் என்றான்.

பிறகு சட்டென்று திரும்பிப்பார்த்தபோது வீரன் தன்னை நோக்கிப் பதுங்கிக்கொண்டு வருவதைக்கண்டான். அச்சமயம் ஒரு குதிரைவண்டி வீதியின் கோடியில் வந்து தட்டென்று நின்றது. உடனே ஒரு பெண் அதிலிருந்து இறங்கிச் சண்டையிடும் கூட்டத்தை நோக்கி ஓடி வந்ததும் வேலாயுதன் பக்கத்தில் நின்றாள். அவள் சரசாபாய் என்று கமலநாதன் உடனே தெரிந்துகொண்டான்.

அதே நிமிஷம் அவள் வேலாயுதன் கரத்தைப் பிடித்துக்கொண்டு "அப்பா! சீக்கிரம் வந்துவிடு. போலீஸார் பார்த்துவிடுமுன் வந்துவிடு" என்றாள். வேலாயுதன் வலிவான கடித்த மனிதன். அவனோடு சண்டையிட்டவன்

அடிபட்டு முகத்திலிருந் தொழுகும் இரத்தத்தைத் துடைத்துக்கொண் டிருந்தான்.

வேலாயுதன், மகள் கூறியதற்கு "ஆம், ஆம், சரசா" என்றான். இருவரும் அந்த விடத்தைவிட்டு நடந்தார்கள். அந்தத் துஷ்டர்களெல்லாம் விலகி வழி விட்டு விட்டார்கள். அவர்கள் அப்பெண்ணின் நாகரிகத்திற்கு அஞ்சி விலகிவிட்டார்கள்.

கமலநாதன் இந்த அதிசயத்தையெல்லாம் நின்று உற்று நோக்கிக்கொண் டிருந்தான். அவர்களிருவரும் போகும்போதுதான் "அடடா! நாம் வேலாயுதனுக்காகத் தானே இந்த விடத்திற்கு வந்தோம்" என்று அவனுக்கு நினைப்பு வந்தது. உடனே யவர்களை நோக்கிச் சென்றான்.

அச்சமயம் கொள்ளிவீரன் அங்கிருந்த கூட்டத்தை நோக்கி, சமிக்கையாய் "போலீஸ்காரன்! பாருங்கள் ஒருகை" என்று கூவினான். இது உடனே மந்திரம் ஜபித்ததுபோலாயிற்று. தன் உண்மை யந்தஸ்தை யவன் அறிந்து கொண்டிருப்பானென்று கமலநாதன் சற்றாவது நினைக்கவில்லை. ஆனால் தன்மேல் வஞ்சம் தீர்த்துக்கொள்ள வெண்ணியே யிவர்களைத் தூண்டினானென்று எண்ணிக்கொண்டான்.

அக்கூட்டத்திற்குள் கோபமான ஒரு சந்தடி யுண்டாயிற்று; சிலர் சந்துகளிலும் வீடுகளுக்குள்ளும் ஓடிவிட்டார்கள். சிலர் என்ன நடக்கிறதோ பார்ப்போமென்று நின்றார்கள். ஆறு ஏழுபேர் துணிகரமான முரடர்கள் மட்டும் கமலநாதனை நோக்கிப் பாய்ந்தார்கள். சற்று நேரத்திற்குள் அவர்கள் கமலநாதனுக்கும், முன்னே செல்லும் சரசாபாய் வேலாயுதன் இவர்களுக்கும் இடையில் போய் நின்றார்கள்.

கமலநாதன் அவர்களை நோக்கிக் கோபத்தோடு,

"அடே போக்கிரிகளே! வழியைவிட்டுப் போங்கள் அப்புறம்" என்றான். அப்போது கொள்ளிவீரன், "ஆகட்டும்; அவன் மற்றபேரைக் கூப்பிட சீட்கை யடிக்குமுன் முடியுங்கள் வேலையை" என்று அவர்களைத் தூண்டினான்.

கமலநாதன் பார்த்தான், வேறேவழியில்லை. இந்தத் துஷ்டர்களுக்கிடையில் புகுந்துதான் அப்புறம் போகவேண்டும் என்று தெரிந்துகொண்டான். இவர்களோடு வாயால் வாதாடுவதிலும் பயனில்லையென்று தெரிந்தது. உடனே தன் கையிலிருந்த பிரம்பைத் தலைக்குமேல் தூக்கி வட்டமாய் ஒருதரம் சுழற்றி ரிவ்வென்று கீழே இறக்கினான். அதுவிளையாட்டுப் பிரம்பாயில்லை. ஏனெனில் முதலடி ஒருவன்மேல் விழுந்ததே யவன் குப்புறத்தரையில் விழுந்தான். மறுபடி இன்னொரு அடி விழுந்ததும் இன்னொரு துஷ்டன் தள்ளாடி மல்லாந்தபடி பின்னாலிருந்த தன் தோழர்மேல் சாய்ந்துவிட்டான். இதைக் கண்டதே மற்றபேர் திகைத்துவிட்டார்கள். அவர்களுக்கு இவன் ஐந்தாறு கைகளில் ஐந்தாறு கத்திகள் வைத்துக்கொண்டு அடிப்பதுபோலிருந்தது. அடிகள் அவ்வளவு துரிதமாய்ப் படபடவென்று விழுந்தன. இவர்கள்பாடு திக்குமுக்காடிவிட்டது. போதாக்குறைக்கு அச்சமயம் தற்செயலாய் ஒரு போலீஸ்காரனும் அங்குவந்துவிட்டான். மறுநிமிஷமே அந்தத் துஷ்டர்கள் ஜாலக்காட்சியைப்போல மாயமாய் மறைந்துவிட்டார்கள். கமலநாதன் பூரண ஜெயத்தோடு தப்பினான். ஆயினும் அதனால் நஷ்டம் அதிகம்; ஏனெனில் வேலாயுதனும் அவன் புத்திரியாகிய சரசாபாயும் அடியோடு போனவழி தெரியாமல் மறைந்துவிட்டார்கள்.

கமலநாதன் சுமார் ஒருமணிநேரம் அவர்களைத்தேடிப் பார்த்தும் பயனில்லை. கடைசியில் ஒரு மூலையில் ஒரு பாராக்காரனைக் கண்டு விசாரித்தான். அதற்கவன் "ஒரு அழ

கான கன்னிகையும் நாமேடாடிபோன்ற தடித்த ஒரு மனித னும் தானே ?'' என்றான். கமலநாதன் ஆம் என்றான்.

போலீஸ்காரன்.—''நான் அவர்களைப் பார்த்தேன்'' என்றான்.

கமலநாதன்.—''எந்நேரத்திற்கு முன் பார்த்தாய்?'' என்று கேட்டான்.

போலீஸ்காரன்.—''சுமார் முக்கால் மணி நேரமாயிருக்கும்'' என்றான்.

அவர்கள் எந்தத்திக்கே சென்றார்களென்று கமலநாதன் கேட்டதற்கு, அவன் அதோ எதிர் வாடையிலிருக்கும் 37-வது நெம்பர் வீட்டிற்குள் போனார்கள்'' என்றான்.

கமலநாதன் மறுபடி வெளியில் வரவில்லையே? என்று கேட்டதற்கு, அவன் ''வந்திருந்தால் நான் பார்த்திருப்பேன். உங்கள் மனிதரோ ?'' என்றான்.

கமலநாதன் 37-வது நெம்பர் வீட்டெதிரில் நின்று மூடியிருக்கும் சாளரங்களை நோக்கினான். அது ஒரு புராதனமான கட்டிடம்; மிக்கநிலமானது ''சரசாபாய் தன் தகப்பனைப் போலீஸாரிடம் சிக்கவொட்டாமல் மறைத்து வைக்க இங்கே யழைத்துவந்தாள்போ லிருக்கிறது'' என்று கமலநாதன் தன்மனதில் சிந்தித்துக்கொண்டான். ''கடைசியில் எப்படியும் வெளியில் வருவார்கள்; அப்போது நம்மிடம் சிக்குவார்கள். இப்போது நாம் உள்ளே நுழைந்தால் அவர்கள் எப்படியாவது தப்பித்துக்கொண்டு போய் விடுவார்கள். வெளியில் காத்துக்கொண்டிருப்பதே நலம்'' என்பது அவன் யோசனை.

இவ்வித யோசனையோடு கமலநாதன் எதிரிலிருந்த ஒரு காலிவீட்டின் வாசற்படியண்டை நின்று கொண்டு எப்படியும் அவர்கள் வருவார்களென்று காத்துக் கொண்

டிருந்தான். அவன் பொறுமை விருதாவாகவில்லை. ஏனென னில் சுமார் ஒருமணி நேரம் கழித்து 37-வது நெம்பர் வீட் டின் கதவு திறக்கப்பட்டதும் மெதுவாய் ஒரு மனிதன் வெளியில் வந்தான். கமலநாதன் முதலில் இவன் யாரோ புதுமனிதனென்று நினைத்தான். ஆனால் சீக்கிரத்திலேயே அவன் வேலாயுதனே யென்று தெரிந்தது. இப்போது அவன் தன் சிகையை வாரி முடித்து முகத்தைச் சுத்தி செய்துகொண்டிருக்கிறான். அது அவன் புத்திரி எடுத் துக் கொண்ட சிரத்தையாலுண்டான மாறுதல். கமல நாதன் "அப்பெண் கெட்டிக்காரி; அவள் எங்கே? இவன் எங்காவது சரியான இடத்தில் ஒளிந்துகொள்ளு மட்டும் இங்கேயேயிருப்பாளோ? இவன் தப்பித்துக்கொண்டு ஓடிப் போகுமுன் இவனைக்கண்டு ஒரு வார்த்தை பேசவேண்டும்" என்று எண்ணிக்கொண்டு, சரசரவென்று அவனை நோக்கிச் சென்றான். அதற்குள் வேலாயுதன் வீதியின் கோடியிலிரு ந்த சந்தில் திரும்பிவிட்டான்.

கமலநாதன் ஓட்டமாய் ஓடினான். இவன் சந்தைத் திரும்பும் சமயம் அவன் அதிக வேகமாய் வேறொரு சந்தில் நுழைந்தான். கமலநாதன் "பின்னும் வேகமாய் நடந்தான். இதற்குள் துர் அதிஷ்டத்தின்படி ஒரு போலீஸ்காரன் அவனை மடக்கித் தடுத்தான். கமலநாதனுக்குக் கோபம் வந்துவிட்டது. "சீ, பைத்தியமே! வழிவிட்டு அப்புறம்போ" என்றான். அவன் உனக்கென்ன அப்படிப்பட்ட அவசர வேலையென்று தோளைப்பிடிக்க வந்தான். கமலநாதன் "சீ! மடையா போ அப்புறம்" என்று கூறிக்கொண்டே தன் உள் அங்கியின்மேல் தொங்கும் பதக்கத்தைக்கொஞ்சம் காட்டி யதும், போலீஸ்காரன் சிங்கத்தைக்கண்ட யானைபோல் திடுக் கிட்டுப் பின்னிடைந்து "தெரியாது, மன்னிக்கவேண்டும்" என்றான். கமலநாதன் அவன் கூறுவதைக் கவனிக்காமல்

ஓட்டமாய்யோடினான். சற்று தூரத்திற்கு முன் வேலாயுதன் போவதைக் கண்டான்.

இதற்குள் கமலநாதன் ஒரு அதிசய சம்பவத்தைக் கண்டான். அதாவது பாதையின் மறுபக்கம் இன்னொரு மனிதன் பதுங்கிக்கொண்டே வருவதைக் கண்டான். அவனும் வேலாயுதனையே பின் பற்றிப் போகிறானென்று தெரிந்தது. தன் பின்னால் இரண்டுபேர் தன்னைப் பிடிக்க வரவே வேலாயுதன் வேகமாய்ப் போய்க்கொண்டிருக்கிறான்.

இந்த இரண்டாவது மனிதன் யார்? இவன் ஏன் வேலாயுதனைப் பின்பற்றிச் செல்லவேண்டும்?

வேலாயுதன வரவர ஓய்ந்து நடப்பவன்போல் தோன்றியதால் அவனைச் சீக்கிரம் பிடித்துவிடலாமென்று கமலநாதன் நினைத்தான். உண்மையில் வேலாயுதன் தள்ளாடி நடந்தான். பலதரம் தத்தி விழுகிறவன்போல் இருந்தது.

வேலாயுதன் திரும்பிப்பார்த்துத் தன்னைத் தூரத்திவருகிறவர்கள் சமீபத்தில் நெருங்கிவிட்டதை யறிந்து கொண்டு சட்டென்று வீதிக்குக்குறுக்கே யோடினான். இதனால் மறுபக்கம் வரும் மறைவான ஆசாமிக்குச் சமீபத்தில் போய் விட்டான். "ஓகோ! அவன் வேலாயுதன் மனிதன் தானாக்கும். அதனால் இவன் தன் கூட்டாளியோடு சேர்ந்து கொள்ளப் போகிறான்" என்று கமலநாதன் எண்ணிக்கொண்டான். இது உண்மையோ அல்லவோ போகப்போக வெளியாகும்.

கமலநாதன் அவ்வாறு நினைத்ததால் வேலாயுதன் தன் கூட்டாளியோடு சேர்ந்துகொள்வதற்கு முன்னமே யவனைப் பிடிக்கவேண்டுமென்று சிந்தித்து வேகமாய்ச் சென்றான். அந்த மறைவான மனிதனும் துரிதமாய் நடக்க ஆரம்பித்தான். அவன் அப்படிச்செய்ததே வேலாயுதன் சமீபத்திலிருந்த ஒரு இருண்ட பாதைக்குள் நுழைந்தான்.

அந்த மறைவான மனிதனும் இரண்டெட்டாய் அச்சந்தில் நுழைந்தான்.

கமலநாதன் பயப்படுகிற ஆசாமியல்ல. மேலும் வேலாயுதன் எவ்வளவு கெட்டுவிட்டாலும் கொலை செய்யும் பாதகனல்லவென்று கமலநாதனுக்குத் தெரியும். ஆனால் இப்போது எவ்வளவு மாறிவிட்டிருக்கிறானோ. மேலும், பின்னால் சென்றவன் வேலாயுதன் கூட்டாளியென்று இவன் எண்ணியிருப்பதால், இத்துஷ்டர்கள் மறைவில் பதுங்கியிருந்து சுட்டுவிட்டால் என்ன செய்வது? நாம் அவசரப்பட்டுக் கண்மூடித்தனமாய் இருட்டில் நுழையக் கூடாதென்று கமலநாதன் சற்று நிதானிக்கவெண்ணி அச்சந்தின் முனையிலிருந்த ஒரு கட்டிடத்தின் மூலையில் மறைந்து நின்றான்.

சற்றுநேரம் உற்றுக்கேட்டான்; ஒரு சந்தடியுமில்லை. இருவரும் ஓடிவந்து பிசகென்று எங்கோ ஒளிந்துகொண்டிருக்கிறார்கள்போல் காண்கிறது என்று நினைத்தான். நெடுநேரமாய்விட்டதால் வீதியில் ஒரு பூதருமில்லை. துஷ்டத்தொழிலுக்கு மிகவும் தகுதியான காலமாயிருந்தது. அந்த இடங்களில் பாராக்காரருமில்லை. கமலநாதன் தந்திர ஆசாமி. ஆயினும் இதைக் கைவிட்டுப்போக அவனுக்கு மனமில்லை. இவன் மிக்க அபாயமான இடங்களில் மகா போக்கிரிகளான கள்ளர்களை வேட்டை நாய்போல் பின்பற்றிச் சென்றிருக்கிறான். அபாயத்திற்கு அஞ்சுகிறவனல்ல. ஆனால் கண்மூடித்தனமாய் ஆபத்தில் சிக்கிக்கொள்வது மூடத்தனம் 'என்பது அவன் கொள்கை. அங்கு பதுங்கியிருந்து உற்று நோக்கினான்; ஒன்றும் புலப்படவில்லை. எங்கும் நிச்சந்தடியாயிருந்தது. தூரத்தில் பாராக்கொடுக்கும் ஒரு போலீஸ்காரன் காலடிச் சத்தம் மட்டும் டாக் டாக் என்று கேட்கிறது.

கமலநாதன் தன் மடியிலிருந்த எதையோ ஒன்றை யெடுத்துப் பாதையில் வீசி எறிந்தான். அது தரையிலுள்ள பலகைக்கல்லில் பட்டதே டுப் என்று சத்தம் கேட்டதும் பளிச்சென்று ஒரு வெளிச்சம் உண்டாயிற்று. அது சற்று நேரமேயிருந்தாலும் மிக்க சோதியாயிருந்தது. வழியிலிருந்த ஒவ்வொரு வஸ்துவும் நன்றாய்த்தெரிந்தது. வீதியில் குப்பைகொட்ட இரண்டொரு பிப்பாய்கள் வைக்கப் பட்டிருந்தன. ஒரு பிப்பாயின் பின் ஒரு மனிதன் பதுங்கிக்கொண்டிருந்தான். அவன் பின்புறம் வீதிக்கு வரும் வழியின் பக்கமாயிருந்தது. கமலநாதன் இதைக்கண்டதே அம்மனிதன் வேலாயுதனோ அல்லது அவனைப் பின்பற்றிச் சென்ற அந்த மறைவான மனிதனோ வென்று சிந்திக்காமலே, சமயம் வாய்ந்திருப்பதை விட்டுவிட லாதாதென்று, அங்கிருந்து ஒரே பாய்ச்சலாய்ப் பாய்ந்து அம்மனிதனைப்பிடித்துக் கொண்டான். ஆனால் அம்மனிதன் மிகவும் சாக்கிரதையாய்ச் சட்டென்று நின்று கொண்டான். கமலநாதன் அவன் தனக்குச் சமமான பலவானாயிருக்கிறானென்று கண்டான். தந்திரத்திலும், யுக்தியிலும், சுறு சுறுப்பிலும், பலத்திலும் அவன் கமலநாதனுக்குக் கீழ்ப்பட்டவனாயில்லை.

இருவரும் ஒருவர் தோளை யொருவர் கட்டிக்கொண்டு பற்களைக் கடித்துக்கொண்டு சற்றுநேரம் ஊஞ்சல்போல் முன்னும் பின்னும் சாய்ந்தாடினார்கள். இருவரும் வாய் பேசவில்லை. ஒருவர் முகம் ஒருவருக்குத் தெரியவில்லை. இருவரும் விடும் கடினமான சுவாசத்தை விட வேறு சந்தடியில்லை. கமலநாதனைவிட மற்றவன் அதிக உயரமும் பருமனுமுடையவனா யிருந்தான். சற்றுநேரம் ஒருவருக்கொருவர் இடங்கொடாமலே போராடினார்கள். அந்தப் புதுமனிதன் சட்டென்று தன் பிடியை விட்டுவிட்டுப் பின்னிடைந்தான்.

அவன் ஏதோ ஆயுதமெடுக்கப் போகிறானென்று கமலநாதன் சட்டென்று தன் மடியிலிருந்த கைத்துப்பாக்கியை யெடுத்தான். இதற்குள் மற்றவன் கையிலிருந்து ஒரு சிறு இராந்தல் வெளிச்சம் கிளம்பியது. அம்மனிதன் அவ்வெளிச்சத்தில் கமல்நாதன் முகத்தைப்பார்த்ததும் "ஆ கமலநாதன்! அப்படித்தான் சந்தேகப்பட்டேன்" என்றான்.

கமலநாதன் அவன் முகத்தைக்கண்டு மிக்க வியப்படைந்து "ஆ! ஜீவாஜி!" என்றான்.

நேயர்களே! ஜீவாஜி என்பவன் மிக்க பிரக்யாதி பெற்ற மற்றொரு துப்பறியும் ஆசாமி. கமலநாதனைவிட நாள்பட்ட அனுபவமுடையவன். மகா மர்மமான சில அபூர்வக் குற்றங்களைக் கண்டுபிடித்திருக்கிறான். அவன் உடனே இராந்தலை மூடிவிட்டுக் கமலநாதனை நோக்கி "நமது சண்டை போதுமென்று நம்புகிறேன்" என்றான். உடனே யிருவரும் புன்னகையோடு கைகுலுக்கிக் கொண்டார்கள்.

சற்றுநேரங் கழித்து ஜீவாஜி "நாமிருவரும் ஒரே வேட்டையைத் தேடுவதுபோல் காண்கிறது" என்றான்.

கமலநாதன் இருவரும் அதைக் கைநழுவ விட்டு விட்டோமென்று நினைக்கிறேன் என்றான். "ஜீவாஜி ஆம், தற்சமயம் அபபடித்தான்" என்றான். கமலநாதன் "நீ அவனைக் கைதுசெய்ய நினைத்திருந்தாய் என் றெண்ணுகிறேன்" என்றான்.

ஜீவாஜி என்னத்திற்காக வேலாயுதனைப் பின்பற்றினானென்பது கமலநாதனுக்குத் தெரியாது. அவன் இதற்குள் இந்த அச்சாபீஸ் கொலைக்கேஸில் தலையிட்டு இவ்வளவு மர்மங்களையும் அறிந்துகொண்டிருப்பானோ வென்று கமலநாதன் மிக்க வியப்போடு சிந்தித்தான். மேலும் வேலாயுதன் மேல் அவனுக்கு இவ்வளவு சீக்கிரத்தில் எப்படிச் சந்தேகம் உண்டாயிற்று? இவன் கொலைநடந்த விடத்திற்குக்கூட வர

வில்லையே யென்று சிந்தித்தான். நமது தந்திரத்தாலும் புத்தி சாமர்த்தியத்தாலும்தான் இந்த உண்மையைக் கண்டறியவேண்டும் என்று அவன் மனதிற்பட்டது.

கமலநாதன் கேட்ட கேள்விக்கு ஜீவாஜி "நான் அவனைக் கைது செய்ய நினைக்கவில்லை" என்று விடையளித்தான்.

அப்படியானால் என் அவனைத் துரத்திக்கொண்டு சென்றாய் என்பதை நான் அறியலாகுமா? என்று கமலநாதன் வினவினான். ஜீவாஜி "நீ என்னத்திற்கு வந்தாயோ அதற்குத்தான் என்று நினைக்கிறேன். அதாவது சபாபதிப்பிள்ளையின் கொலையைப்பற்றி அவனை விசாரிக்க" என்றான்.

கமலநாதன் "நீ உத்தேசித்தது சரியே; ஆனால் நீ இந்தக் கேஸில் தலையிட்டது எனக்கு மிக்க வியப்பாயிருக்கிறது" என்றான். ஜீவாஜி, "என்? நான் வன் இதில் பிரவேசிக்கக் கூடாது?" என்று கேட்டான். கமலநாதன், "தடையொன்றுமில்லை; ஆனால் கொலை நடந்தவிடத்தில் நான் மிகவும் ஜாக்கிரதையாய்ப் பார்த்துக் கொண்டிருந்தேன். உன்னைக் காணவில்லையே" என்றான். ஜீவாஜி, "நீ என்னைக் காணாததற்குத் தகுதியான காரணமொன்றுண்டு" என்றான். கமலநாதன், "என்ன காரணம்?" என்று வியப்போடு கேட்டான். "ஜீவாஜி, அந்தவிடத்திற்கு நான்கு வீதிகளுக்கருகில்கூட நான் வரவில்லை" யென்றான். பின்னையெப்படி நீ வேலாயுதனைத் துரத்திவந்தாய்?" என்றான். இதைக் கேட்டு ஜீவாஜி புன்னகைபுரிந்து, "பழைபசுவு எனக்குத் தெரியும். உண்மையில் சபாபதிப்பிள்ளை கொலையுண்டதைக் கேள்விப்பட்டபோது எனக்கு அதிக அதிசயமாயில்லை. நாமிருவரும் கொலையாளியைக் கண்டுகொள்ளலாமென்று நினைக்கிறேன். அதை ருசுப்படுத்த வேண்டியது

தான் இருக்கிறதேவேலே. அதற்கு ருசுவுதான் நான் தேடிக் கொண்டிருக்கிறேன்'' என்றான்.

இதைக் கேட்கக்கேட்கக் கமலநாதனுக்குப் பின்னும் வியப்பாயிருந்தது. இவன் உண்மையில் இக்கேசைப்பற்றி யிவ்வளவு விவரமாயறிந்து கொண்டிருக்கிறானா? அல்லது நமது போட்டியை யொழித்துவிட இப்படிப் பாசாங்கடிக்கிறானோ'' என்று சிந்தித்தான். ஆயினும் கமலநாதன் தன் வரையில் எச்சரிக்கையாகவே யிருந்தான். ஜீவாஜியை மிகவும் உள்ளத்தில் மெச்சிக்கொண்டானேயன்றி அவனுக்குப் பயப்படவில்லை. தேகபலத்தில் இருவரும் ஒருகை பார்த்து விட்டாச்சு. இனி மனோபலத்தில் சண்டை யிப்போது தான் ஆரம்பமாயிற்று.

கமலநாதன் அவனை நோக்கி, ''ஆம், ருசுவுதான் நமக்கு வேண்டியது'' என்று கபடில்லாமற் கூறினன். ''இந்த வேலாயுதன் நிமிரென்று எங்கேயொளிந்து கொண்டானோ? உனக்கு ஏதாவது உத்தேசமிருக்கிறதா?'' என்றான். ஜீவாஜி ''எனக்கொரு யோசனை யிருக்கிறது'' என்றான்.

கமலநாதன் ''புறக்கடைப் பக்கமாய் ஓடிவிட்டிருப்பானென்றா?'' என்று கேட்டான். ஜீவாஜி ''அதுவா உன் யோசனை?'' என்றான். கமலநாதன் ''அப்படி நான் கூறவில்லை. நாம் ஒருவர்க்கொருவர் நெஞ்சாழம் பார்ப்பதை விட இருவரும் நல்லவேலே செய்யலாம்'' என்றான். ஜீவாஜி ''ஆம், இன்னொரு சங்கதி; நீ என்னிலும் குறைந்த அனுபவமுடையவன்; வயதிலும் சிறியவன்; ஆனல் இது வயதாலும் உருவத்தாலும் ஆகிறகாரியமல்ல. நீ ஜெயித்தால் புத்திசாமர்த்தியத்தால் ஜெயிக்கவேண்டும்; நான் ஜெயித்தால் அது முதிர்ந்த அனுபவத்தால் முடியவேண்டும். இனி நான் போய்வருகிறேன்'' என்றான். உடனே இருவரும் கைகுலுக்கியதும் ஜீவாஜி போய்விட்டான்.

5-வது அத்தியாயம்.

கமலநாதனும் குள்ளனும்—மறுபடி வேலாயுதன்—சாரசா பாயும் புஷ்பாங்கியும்—சுவர்ணம்பாள் கொள்ளிவீரனிடம் சிக்கிக்கொள்ளல்—ஆபத்தும் அதிசயமும்—கதிரேசம் பிள்ளை வீட்டில் சுவர்ணம்பாள்—சூதும் தந்திரமும்

ஜீவாஜி சென்றபிறகு கமலநாதன் தான் அச்சத்தில் தனியாயிருப்பதை யுணர்ந்தான். அவன் அச்சத்தின் மறுகோடிக்கு இருட்டில் சாக்கிரதையாய்ச் சென்றபோது மேலிருந்து ஒரு வெள்ளைக் கடிதத்துண்டு போன்ற ஒரு வஸ்து தன் முகத்திற்கு நேரே பறந்துவந்து கால் எதிரில் பூமியில் விழுந்ததைக் கண்டான். அவன் உடனே நின்று அதைக் கையிலெடுத்தான். அது ஒரு பத்திரிகையின் ஓரத்திலிருந்து கிழித்தெடுக்கப்பட்ட ஒரு நீளமான கடிதத்துண்டு.

கமலநாதன் அதை யெடுத்துக்கொண்டு தூரத்திலிருக்கும் முனிசிபாலிடி தீபத்தண்டை சென்று பார்த்தான். அதில் அடியில்கண்டபடி எழுதியிருந்தது.—

"நான் செந்தலையீங்களைப் பிடிக்க ஒரு வலை பின்னுகிறேன்—குள்ளன்"

கமலநாதன் நிமிர்ந்து இதைத் தீபத்தண்டை வாசித்துப்பார்த்தான். அப்போது சமீபத்திலிருந்த ஒரு தாழ்ந்த வீட்டுக்கூரையின் ஓரத்தில் ஏதோ வொன்று மெதுவாய் மேலுக்குக்கிளம்பியது. கமலநாதன் கடிதத்தை வாசிப்பதுபோல் பாசாங்கு செய்துகொண்டே அதைச் சாடையாய்க் கவனித்துப் பார்த்தான். அந்த வஸ்து சற்றுநேரம் அசையாமலிருந்து பிறகு மெதுவாய் நகரத்தலைப் பட்டது. அது ஒரு மனிதனுடைய சிரசு என்று தெரிந்தது.

கமலநாதன் தட்சணம் அந்தக்கட்டிடத்தின் ஓரத்தில் இருந்த குழாயைப்பிடித்துத் தொத்தி யேறித் துரிதமாய்க் கூரைமேல் போய்விட்டான். அவன் கூரைமேல் கால்வைக்கும் சமயம் அங்கிருந்த சாளரத்தின் வழியே ஒரு மனிதன் உருவம் கீழே குதிப்பதைக்கண்டான். கமலநாதன் ஒரு விநாடியேனுந் தாமதிக்காமல் அவன் பின்னாலேயே குதித்தான். முன்னே சென்றவன் கூரையிலிருக்கும் சாளரத்தின் கதவை மூடுவதற்கு அவகாச மில்லாமற் போய்விட்டது.

அந்த அறையில் ஒரே ஒரு தீபம் எரிந்துகொண்டிருந்தது. முன்னே சென்றவன் துரிதமாய் அந்த அறையின் கதவைத்திறக்க முயன்றான். என்ன காரணத்தாலோ சாவி திரும்பாமல் பூட்டில் சிக்கிக் கொண்டது. அம்மனிதன் குட்டை உருவமும், நீண்ட கைகளும், குட்டைக் கால்களும், திக்ஷண்யமான சிறிய முகமும் உடையவனா யிருந்தான். கமலநாதன் இவனைப் பலதரம் பார்த்திருக்கிறான். ஆனால் இவனைப்பற்றி யொரு சங்கதியும் தெரியாது. அந்தப் பெரிய நகரத்தில் பார்ப்பவர்களை யெல்லாம் ஒருவன் விசாரிப்பதென்றால் முடியாத காரியம்.

அம்மனிதன் சட்டென்று திரும்பித்தன் கையில் ஒரு கூர்மையான ஈட்டியைப் பிடித்துக்கொண்டு கமலநாதனை நோக்கி "கைகளைத்தூக்கு!" என்றான். கமலநாதன் அவன் வார்த்தையைச் சட்டைசெய்யாமலே துணிந்து உள்ளே நுழைந்து விட்டான். இனி விவரமறியாமல் போய் விடுவதென்றால் அவன் மனதிற்குப் பிடிக்கவில்லை. ஒரு விநாடிக்குள் அம்மனிதன் ஈட்டி பிடித்துத்தூக்கிய கரத்தைப் பிடித்துக்கொண்டு ஈட்டியைப்பிடுங்கி யெறிந்து அவனைச் சுவரில் மோதியபடியே யழுத்திப் பிடித்துக் கொண்

டான். அம்மனிதன்பாடு திண்டாட்டமாய் விட்டது. அவ ஞல் அப்படி யிப்படித்திரும்ப முடியவில்லை.

கமலநாதன் அவனை நோக்கி "அடே! நான்கேட்பதை யெல்லாம் சொல்லிவிட்டால் உனக்கொரு தீங்கும் வராது. முதலாவது உன் நாமதேயமென்ன கூறு" என்ருன்.

அவன் "என் பெயர் குள்ளன்" என்ருன்.

கமலநாதன்.—சற்று நேரத்திற்கு முன் இக்கடிதத்துண்டை துண்டை யெழுதி வீதியில் போட்டது நீதானே?

குள்ளன்.—ஆம்.

கமலநாதன்.—நான் வைத்திருக்கும் நாட்டத்திலிருந்து என் னினைப்பைச் சிதரச்செய்ய வேண்டுமென்றுதானே நீ இதைப்போட்டாய்? நான் தேடிவந்த மனிதனைத் தப்பவைக்க வேண்டுமென்பதுதானே உன் எண்ணம்?

குள்ளன் முகத்திலுண்டான சந்தோஷக் குறியால் தான் கூறியது மெய்யென்று கமலநாதன் தெரிந்து கொண் டான். கமலநாதன் அவனைநோக்கி, "நான் துறத்திக் கொண்டு வந்த மனிதன் யார் தெரியுமோ? அவன் கொள்ளிவீரன் என்று உனக்குத் தெரியுமல்லவா?" என்று கேட்டான்.

குள்ளன் "அந்தப் பெயருடையவன் யாரும் எனக் குத் தெரியாது" என்ருன்.

கமலநாதன்.—"அப்படியாயின் வேலாயுதனே?" என்ருன்.

குள்ளன்.—ஆம், அவன்ருன். அவன் ஒரு காலத்தில் எனக்கொரு உதவி செய்திருக்கிருன். நான் அசௌக் கியமாய்ப் போலீஸ்காரருக்குப் பயந்து ஒளிந்து கொண்டிருந்தபோது அவன் எனக்கு உண்ண ஆகா ரம் கொண்டுவந்து கொடுத்ததோடு, போலீஸ்காரருக் குத் தப்புவழி காட்டினன்" என்ருன்.

குள்ளன் மிக்க சாமார்த்தியமாய் இப்படிக்கூறினான். ஆயினும் அது அடியோடு பொய்யென்று கமலநாதன் தெரிந்துகொண்டான். அவன் குள்ளனை நோக்கி,

"அடே, நீ எப்போது பொய் கூறுகிறாயென்றும், எப்போது மெய் கூறுகிறாயென்றும் நான் தெரிந்து கொள்ளுவேன். நீ வேலாயுதனுடைய சிநேகிதனல்ல வென்று நானறிவேன். இப்போது நீ உண்மையைக் கூறி விட்டால் உன்னை நோய்ப் போலிஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டுபோய் அடைத்து விடுவேன். இது சத்தியம் என்றான்.

குள்ளன்.—"நான் ஒப்புக்கொள்ளுகிறேன்; ஆனால், உனக்கு எப்படி தெரியுமோ எனக்குத் தோன்றவில்லை. மனிதர் மனதிலிருப்பதைத் தெரிந்துகொள்ளுகிறார்களே அந்த சித்துக்காரர்களில் நீ யொருவன் என்று நினைக்கிறேன். நான் எல்லாம் ஒப்புக்கொள்ளுகிறேன். வேலாயுதன் எனக்கு ஒருபோதும் உதவிசெய்ததில்லை. நான் அவனுடைய சிநேகிதனல்ல. ஆனால் அவனை புன்னிடம் சிக்கவிட மாட்டேன்" என்றான்.

கமலநாதன்.—நான் அப்படித்தான் நினைத்தேன். ஏன் அவன் தப்பித்துக்கொள்ளவேண்டுமென்று நினைக்கிறாய்?

குள்ளன்.—கொஞ்சம் பணம் சம்பாதிக்கத்தான்.

கமலநாதன்.—வேலாயுதன் தப்பித்துக்கொள்ளும்படி நீ அவனுக்கு உதவி செய்வதற்காக உனக்கு யாரோ பணம் கொடுக்கிறார்களல்லவா? நல்லது அப்படி கொடுக்கும் ஆள் யார்?

குள்ளன்.—அதைக் கூறுவது நேர்மையல்லவென்று நினைக்கிறேன். அது எப்படி சம்பவித்ததென்று கூறுகிறேன். நான் கூறுவதை நம்புகிறாயல்லவா?

கமலநாதன்.—உண்மையை யெல்லாம் நம்புகிறேன். ஆனால் பொய் கூறினாயோ அது உன் வாயிலிருந்து வரும் போதே தெரிந்துகொள்ளுவேன். உன் வாய் கூறு விட்டால் உன் முகம் எனக்குக் கூறிவிடும். உன் முகத்தால் மிகச்சுலபமா யறிந்துகொள்ளுவேன்" என்றான்.

குள்ளன்.—ஐயா! அது எப்படி நேரிட்டதென்று திட்டமாய்க் கூறுகிறேன். இன்று தீபம் வைத்ததே நான் ஒரு தெருவின் மூலையில் நின்றுகொண்டிருந்தபோது ஒரு மனிதன் என்னிடம் வந்தான். அவன் என்னை நோக்கி "உனக்கு வேலாயுதன் என்பவன் தெரியுமா?" என்றான். நான் ஆம் என்றேன். அவன் "போலீஸார் அவனைத் தேடித்திரிகிறார்கள். அவன் அவர்களிடம் சிக்காதபடி நீ அவனுக்கு உதவிசெய்ய வேண்டும்" என்றான். என்னை என்ன செய்யச் சொல்லுகிறாயென்று நான் கேட்டேன். அவன் என்னை யுற்றுநோக்கி "நீ மிகத்தந்திரவான். போலீஸ் காரரை எப்படியாவது ஏமாற்றிவிடுவாய்; இப்போது அவ்வளவு உதவி செய். உனக்கு இருபது ரூபாய் தருகிறேன்" என்றான். நான் அப்படியே யாகட்டு மென்று ஒத்துக்கொண்டேன். இவ்வளவே நடந்த சங்கதி.

கமலநாதன்.—உன்னிடம் பேசிய அம்மனிதன் யார் தெரியுமா?

குள்ளன்.—அதற்கு முன் நான் அவனைக் கண்டதேயில்லை.

கமலநாதன்.—அவன் எப்படி யிருந்தான்?

குள்ளன்.—நரைகலந்த செழிந்த தாடிமீசையோடு, மூக்குக் கண்ணாடி அணிந்திருந்தான்.

கமலநாதன்.—சரி, அவன் மாறுவேட மணிந்திருந்தான்.

குள்ளன்.—நான் எண்ணியிருந்தபடியே கூறினாய்.

கமலநாதன்.—அப்படியானால் நீ அச்சீட்டை யெழுதிப் போட்டு என்னை யேமாற்றி அவனைத்தப்பித்துக் கொண்டு போய்விடும்படி செய்தாய்?

குள்ளன்.—ஆம், நீ என் பின்னால் வந்துவிட்டாய்; அவன் தப்பித்துக்கொண்டு போய்விட்டான்.

கமலநாதன் கோபத்தோடு நீ மகா தந்திரமான கள்ளன். அவன் கொடுத்தது பணமா, நோட்டா? என்றான்.

குள்ளன் நோட்டு என்று மடியிலிருந்து எடுத்துக் காட்டினான். அதின் ஒரு மூலையில் ஒருவிதமான குறி போட்டிருந்தது. கமலநாதன் அதை யெடுத்துக்கொண்டு தன்னிடமிருந்த வேறொரு இருபது ரூபா நோட்டையும், இரண்டு ரூபாயையும் அவனிடமளித்து பத்திரம், நோட்டைக் கொடுத்தவன் வந்தால் நடந்த சங்கதியைக்கூறாதே, தவறி நடந்தால் உன்கைக்கு காப்புமாட்டிக்கொள்வாய். இனி கதவைத்திற நான் போகவேண்டும்" என்றான்.

கமலநாதன் வீதியில்வந்ததே, "வேலாயுதன் தப்பித்துக்கொள்ளவேண்டு மென்று அவ்வளவு ஆவலாயிருக்கும் அம்மனிதனை இன்னம் இருபத்துநான்கு மணி நேரத்தில் கண்டுபிடிக்கிறேன்" என்று தனக்குத்தானே கூறிக்கொண்டான். அரைமணி நேரத்திற்குள் வேலாயுதன் ஆற்றங் கரைக்குச்சென்று படகேறி புல்லூர் என்ற கிராமத்திற்குச் சென்றதாய்ச் சங்கதி தெரிந்துகொண்டான். உடனே வேகமாய் 23–நெம்பர் வீதிக்குச்சென்றான். அங்கிருந்து அருகிலிருக்கும் ஆற்றோரம் சென்றபோது ஒரு படகு புறப்படும் சமயமாயிருந்தது. அதில் ஏறி நகரத்தைக் கடந்து கரை யேறும்போது பொழுதுவிடிந்தது. இவன் இராஜ

பாட்டையில் ஏறும்போது ஒருவண்டி வேகமாய் வரு வதைக் கண்டான். அது ஒரு டாக்டர் வண்டி.

அவ்வண்டி கமலநாதனைத் தாண்டி கொஞ்சதூரம் சென்றபோது பாதையோரத்திலுள்ள செடிகளின் மறைவி லிருந்து ஒருமனிதன் பாய்ந்து அவ்வண்டியின் பின்னு லிருக்கும் பீடத்தில் ஏறிக்கொண்டதைக் கண்டான். வண்டி நிற்காமல் பறக்கிறது. அப்படி ஏறியவன் வேலாயுதனே யென்று கண்ட கமலநாதனுக்கு உண்டான வியப்பு சொல்லமுடியாது.

வேலாயுதன் முன் அந்த 37-வது நெம்பர் வீட்டி லிருந்து வெளியில் புறப்பட்டபோது சரசாபாய் அவ்வீட் டில் நின்றுகொண்டு தன் தந்தை கண்ணுக்கு மறையுமட்டும் பார்த்துக்கொண்டேயிருந்தாள். அவன் பின்னால் ஒருவருக் கிருவர் அவனைப்பிடிக்கச் சென்றதை யவள் காணவில்லை. தன் தந்தை தப்பித்துக்கொண்டாரென்று எண்ணிக்கொண் டாள். அவள் தன் பக்கத்திலிருக்கும் தன் சிநேகிதியை நோக்கி,

"புஷ்பாங்கி! என் தந்தைக்கு நான் என்னால் கூடிய உதவியைச் செய்துவிட்டேன் அல்லவா?" என்றாள்.

புஷ்பாங்கி சுமார் பதினாறு வயதுடைய நல்ல அழகான கன்னிகை; நற்குணமும் நன்னடக்கையு முடையவள். அவள் சரசாள் கூறியதற்குப் பதிலாய் "ஆம், நீ நல்ல உப காரம் செய்தாய். உன் தந்தை யென்னமோ பெரும்புண்ணி யம் செய்தபடியால் உன்னைப் புத்திரியாய்ப் பெற்றார். எல்லா ருக்கும் இம்மாதிரி மகள் கிடைப்பது அரிது; அதுமட்டும் நான் தீரமாய்க் கூறுவேன்" என்றாள்.

சுவர்ணம்பாள்.—அதற்காக நீ என்மேல் குற்றம் கூறமாட் டாயே?

புஷ்பாங்கி.—ஒருக்காலுமில்லை; உன் தந்தைமட்டும் அதிகமாய்க் குடிக்காதிருந்தால் அவரைவிடப் பெரியமனிதர் உண்டா! அவர் குடித்து அப்படித் தள்ளாடிக்கொண்டிருக்கும்போதும் அவருடைய நல்லகுணமும் தைரியமும் போகிறதா? அன்றைக்கு அந்தத் துஷ்டன் என்னை வழிமடக்கித் தொந்திரவு செய்தபோது உன் தந்தை பார்த்ததும், அவனை உதைத்துத் துறத்திவிட்டு என்னை என் வீடுவரையில் கொண்டுபோய் விட்டுவிட்டுத் திரும்பினாரல்லவா! இத்தனைக்கும் அப்போது வெறிக்கக் குடித்திருந்தார். என் உயிருள்ளமட்டும் நான் உங்கள் இருவர் நட்பையும் விடவேமாட்டேன்.

புஷ்பாங்கி மனப்பூர்வமாய்க் கூறும் அன்பான வார்த்தைகளைக்கேட்ட சுவர்ணம்பாள் அவள் விஷயத்தில் மிக்க சந்தோஷமடைந்தாள். புஷ்பாங்கியும் தாய் தந்தையில்லாத அனாதைப்பெண். சுவர்ணம்பாள் அவளை நோக்கி, "நீ உண்மையானவளென்று எனக்குத் தெரியும். இந்த உலகத்தில் எப்படிப்பட்ட ஆபத்திலும் நம்பக்கூடிய சினேகி நீ ஒருத்தியே" என்றாள்.

அச்சமயம் மணி ஒன்றடித்தது. அதைக்கேட்டதும் சுவர்ணம்பாள் எதையோ நினைத்துக்கொண்டு "ஆ! நான் வீட்டிற்குப்போகவேண்டும். புஷ்பாங்கி விடியுமட்டும் தங்கியிருந்துபோவோம். இந்த இரவில் நாம் புருஷத்துணையின்றி போவது பிசகு" என்றாள். சரசாபாய் "இல்லை, நான் போகவே வேண்டும்" என்றாள். புஷ்பாங்கி, "உண்மையாகவா? அப்படியானால் நீ மிக்க தைரியசாலியாயிருக்கவேண்டும்" என்றாள்.

சுவர்ணம்பாள் உடனே படிக்கட்டுகளின் வழியாயிறங்கித் துரிதமாய் தெருக்கதவண்டை சென்றாள். அவள் வீதிக்குச் சென்றபின் நின்று தன் சினேகி யின்னும் வாசற்படி

யண்டையே நிற்கிறுனென்று திரும்பிப் பார்த்தாள். ஆனால் இருட்டானதால் ஒன்றும் தெரியவில்லை. பிறகு அங்கிருந்த வீதியின் கோடிக்குச் சென்றபோது அங்கு ஒரு போலீஸ் காரனைக் கண்டாள். அவள் அங்கு நின்று ஏதாவது வண்டிகள் வருகிறதாவென்று செவிகொடுத்துக் கேட்டாள். போலீஸ்காரன் அதை யறிந்துகொண்டு, "அம்மா, வண்டி எதுவும் இனிமேல் வராது" என்றான்.

சுவர்ணும்பாள் அப்படியானால் நடந்துதான் போக வேண்டும், வண்டிகள் போகும் சமயத்திற்கு வரத்தவறிவிட்டேன் என்று கூறிவிட்டுத் துரிதமாய் நடந்தாள். அவள் சற்றுதூரம் சென்றபோது தடித்த ஒரு மனிதன் தன்னைப் பின்பற்றி வருவதாய்க் கண்டாள். அவன் அவளுக்குப் பின்னால் மெதுவாகவே நடந்தாலும் வரவர அவன் அவளை நெருங்கிக்கொண்டே வந்தான்.

சுவர்ணுமபாள் போகப்போக வேகமாய் நடந்தாள்; ஒருமாதிரி ஓட்டமே யோடினாள். அப்போதும் பின்னால் ஆள் வரும் காலடிச் சத்தம் கேட்டுக்கொண்டேயிருந்தது. அவனை விட்டுத் தப்புவதற்காக பக்கத்திலிருந்த ஒரு சந்தில் திரும்பிப் பின்னும் வேகமாய் நடந்தாள். பின்னால் வருகிறவனும் துரிதமாய் நடக்க ஆரம்பித்தான். இப்போது அவன் தனக்காகவே அப்படி வருகிறானென்று அவளுக்கு அய்யமின்றி தெரிந்தது. அவள் விசாலமான பக்கத்து வீதிக்குள் திரும்பினாள். அங்கே தீபங்கள் நன்றாக எரிந்துகொண்டிருந்தன. அவ்வீதிக்கு வந்ததே அம்மனிதன் வேகமாய் வந்து அவளைத் தாண்டியபிறகு திரும்பி பாதைக்குக் குறுக்காய் அவள் எதிரில் நின்றான்.

நேயர்களே! அம்மனிதன் அதே இரவு சற்றுமுன்னே இரயில்வண்டியில் கமலநாதனோடு சண்டைபிடித்த முரட்டுப் போக்கிரியாகிய கொள்ளிவீரன் என்பவனே. அவன்

தன் அழுக்குக்கையால் அவள் புயத்தைப் பிடித்துக் கொண்டு, "உன்பெயர் சுவர்ணம்பாளல்லவா? நீ வேலாயுதன் மகள்தானே" என்றான்.

சுவர்ணம்பாள் மிக்கபயமடைந்தாளேனும், மேலுக்குத் தைரியத்தோடு அஞ்சாதவள் போலவே திமிறிக்கொண்டே "விடு என்னை" என்றாள். அந்தப்போக்கிரி "பேசாமலிரு! இல்லாவிட்டால் உனக்குத் தீங்குண்டாகும்" என்றான். சுவர்ணம்பாள் இவனோடு நாம் தேகபலத்தைக்கொண்டு போராடுவது விருதாவென்று அறிந்துகொண்டு "நீ யாரையா? நான் உன்னை இதுவரையில் கண்டதேயில்லை. என்னால் உனக்கென்ன காரியம் ஆகவேண்டியது?" என்று சாந்தமாகவே கேட்டாள்.

அம்முரடன்.—"உன்பெயர் சுவர்ணம்பாள். நீ அங்கே வீதியில் சண்டையிட்டுக்கொண்டிருந்தானே அந்தக் கிழவனுடைய மகள் அல்லவா?" என்றான்.

சரசாபாய் ஆம், என்றாள். அத்துஷ்டன் அவளை நோக்கி, அப்படியானால் நான் சபாபதிப்பிள்ளையின் கொலையைப்பற்றி ஒரு சங்கதி உனக்குக் கூறக்கூடும். நீ யதையறியப் பிரியப்படுவாய். அவனைக்கொன்ற அத் துப்பாக்கியைப்பற்றிகூட" என்றான்.

அக்கொலையைப்பற்றி அறிந்துகொள்ள சுவர்ணம்பாளுக்கு ஆவலுண்டென்பதென்னமோ உண்மையே. சபாபதிப்பிள்ளையைக் கொன்றது தன் துப்பாக்கியென்பதும், அது எப்படியோ தான் வைத்தவிடத்திலிருந்து களவாடப்பட்டு, மறுபடி கொலை நடந்தபின், இருந்த விடத்திலேயே கொண்டுவந்து வைக்கப்பட்டதுமாகிய விஷயமே அவளுக்கு மிக்க அதிசயமாயும், துயரமாயும், கலவரமாயுமிருந்தது. அவ்வளவு தந்திரமாய் அதை யெடுத்துக்கொண்டு போய் அதனால் சபாபதிப்பிள்ளையைச் சுட்டுக்கொன்று

விட்டுப் பிறகு அங்கேயே கொண்டுவந்து வைத்தவர்கள் யார் என்பதேபெருஞ் சந்தேகமாயிருந்தது. கமலநாதன் மட்டும் தன் சூக்ஷ்மபுத்தியால் அந்த இரகசியத்தை யறிந்து கொண்டான். யாராவது தன்மேல் குற்றத்தைச் சுமத்த அப்படிச் செய்வார்களென்று அவளுக்கெப்படி தெரியும்? தன்தந்தைமேல் சந்தேகம் கொண்டிருக்கிறார்களென்பது மட்டும் அவளுக்கு முன்னமே தெரியும். தானும் தன் தந்தையும் ஆபத்தில் சிக்கிக்கொண் டிருப்பதாய் அவள் அறிந்து கொண்டாள்.

சுவர்ணும்பாளுக்கு அக்கொலை விஷயத்தைப் பற்றி தெரிந்து கொள்ள ஆவலா யிருக்கிறதென்று கொள்ளி வீரன் கண்டுகொண்டான். அவன் கோரியது இதுதான். ஆகையால் ஓடிவிட மாட்டாளென்று தெரிந்து கொண்டு அவள் தோளை விட்டுவிட்டான். அவள் அவனை விட்டுச் சற்று எட்டிநின்று, "அக்கொலையைப் பற்றி யுனக்கென்ன தெரியும்?" என்று கேட்டாள். அதற்கவன் "கொன்றது உன் துப்பாக்கி யென்றும் உன் தந்தைமேல் சந்தேகங் கொண் டிருக்கிறார்க ளென்றும் எனக்குத் தெரியும்" என்றான்.

சுவர்ணும்பாள்.—"துப்பாக்கியை யென் அறையிலிருந்து திருடிக்கொண்டுபோய் நான் பார்ப்பதற்குள் மறுபடி அங்கேயே கொண்டுவந்து வைத்து விட்டார்கள்" என்றாள்.

அத்துஷ்டன், "இப்போது அதைக் களவாடியது யாரென்று நான் கூறினல் உனக்கு வியப்பாயிருக்கும்" என்றான்.

சுவர்ணும்பாள்.—"உனக்குத் தெரியுமாயின் தயவு செய்து கூறு" என்று கெஞ்சினாள்.

வீரன்.—"சொல்லுகிறேன். ஆனால் இங்கே கூறமாட்டேன். அம்மா! இங்கே உதவாது. என்னோடு கூடவந்தால் கூறுகிறேன்" என்று அந்தவிடத்தை விட்டு நடக்க ஆரம்பித்தான்.

அக்கன்னிகை சற்றுதூரம் அவன் பின்னால் சென்று அதன்பிறகு நின்று "நீ புதுமனிதன், நான் உன்னை நம்பமாட்டேன்" என்றாள்.

வீரன்.—உனக்கொரு கெடுதியுமில்லை. தற்சமயம் அதோ ஒரு போலீஸ்காரன் நம்மிருவரையும் பார்த்துக் கொண்டேயிருக்கிறான். என் கூடவே வா, பயப்பட வேண்டிய காரணமேயில்லை.

சுவர்ணும்பாள் ஒன்றுந் தோன்றாமல் மறுபடி அவன் பின்னால் சென்றாள். என்றாலும் மறுபடி உள்ளத்தில் பயம் தோன்றவே நின்றாள். அச்சமயம் ஒரு சந்திலிருந்து இரண்டு கறுத்த உருவங்கள் இவர்களை நோக்கி ஓடி வருவதுபோல் தோன்றியது. வீரன் சீக்கிரம் வாவென்று ஓடினான். இவளும் அவன் கூடவே ஓடினாள்.

அப்போதுண்டான பயத்தால் அவன்கூட ஓடினாலும் அவனை முழுதும் நம்பிச்செல்ல அவளுக்குப் பிரியமில்லை. அவன் வீதியிலிருந்து இருண்ட சில சந்துகளின் வழியாக அவளையழைத்துக்கொண்டு போனான். கடைசியில் ஒரு வீட்டின் தெருவாசற்படியண்டை நின்றார்கள். அது ஒரு பாழடைந்த குடிசை வீடுபோலிருந்தது. சுவர்ணும்பாள் மூச்சு திணரிக்கொண்டே "நான் இனி அப்புறம் நகரமாட்டேன்; உன்னை நம்பிக்கொண்டும் வரமாட்டேன்" என்றாள்.

வீரன்.—"நான் உன் தந்தையின் சிநேகிதனல்லவா?" என்றான்.

சுவர்ணும்பாள்.—"சிநேகிதனென்றே நினைக்கிறேன்" என்று கூறினாள்.

வீரன்.—பிறகு ஏன் பயப்படுகிருய் ?

சுவர்ணும்பாள்.—நீ எனக்குப்புதிது.

வீரன்.—நான் சற்றுமுன்னே உன்னைப் போலீஸாரிடம் சிக்கவொட்டாமல் காப்பாற்றினேன். இப்போது நீ ஒளிந்திருக்க இடந்தருகிறேன்.

சுவர்ணும்பாள்.—நான் தனியாகவே தப்பித்துக் கொண்டிருப்பேன். இருந்தாலும் உன் அன்பிற்காக வந்தனமளிக்கிறேன். ஆனல் இதற்குமேல் உனக்குத்தொந்திரை கொடுக்க எனக்குப் பிரியமில்லை.

வீரன்.—ஒரு தொந்திரையுமில்லை. நீ இந்த வீட்டிற்குள் வா. அப்புறம் போலீஸார் வந்து உன்னைத் தேட நினைக்காத விடத்திற்குக் கொண்டுபோய் விடுகிறேன்.

சுவர்ணும்பாள்.—எனக்கு இங்கே தங்கப் பிரியமில்லை. எனக்கொரு சினேகிதி யிருக்கிருள். அவள் சந்தோஷமாய் எனக்கு வேண்டிய உதவி செய்வாள்.

சுவர்ணும்பாள் இவனோடு அங்கே நின்று போராடப் பயந்து சட்டென்று பாய்ந்து வீதிவழியே ஓட்டமெடுத்தாள். வீரன் அதட்டிக்கொண்டே அவள் பின்னல் துரத்திக்கொண்டு ஓடினன். சுவர்ணும்பாள் பெரிய வீதியில் ஓடும்போது காலிடறி விழுந்தாள். ஆயினும் சமாளித்துக் கொண்டு துரிதமாய் எழுந்து ஓடும்போது மறுபடி விழுந்தாள். இப்போதெழுந்து ஓடுவதற்குள் அந்தத் துஷ்டன் வந்து அவளைப் பிடித்துத் தன் கைகளில் தூக்கிக்கொண்டு ஒருகையில் அவள்வாயைத் திறக்கவொட்டாதபடி கெட்டியாய் அழுத்திப் பிடித்துக் கொண்டான்.

அவள் விழுந்த அதிர்ச்சியாலும், அந்தோ! 'இந்தத் துஷ்டனிடம் சிக்கிக் கொண்டோமே யென்ற பயத்தாலும் அவளுக்குப் பாதி ஸ்மரணை போய் விட்டது. அதன் பிறகு நடப்பதெல்லாம் அவளுக்குக் கனவுபோலிருந்தது. இந்த

நிலைமையில் அவன் எதையோ அவள் மூக்கில் காட்ட அவளுக்கு முழுதும் ஸ்மரணை தப்பிவிட்டது.

சுவர்ணம்பாள் எந்நேரம் மூர்ச்சையா யிருந்தாளோ அவளுக்குத் தெரியாது. நினைவு வந்து பார்த்தபோது அவள் அப்போதிருந்த நிலைமை அவளுக்கு மிக்க ஆச்சரியத்தை யுண்டாக்கிற்று. முதலில் எல்லாம் கனவென்றே நினைத்தாள்.

தான் இருக்கும் அறை மிகவும் நேர்த்தியாய் அலங்காரம் செய்யப்பட்டிருப்பதையும், தான் ஒரு நாணயமான மஞ்சத்தில் பஞ்சணை மெத்தைமேல் சயனித்திருப்பதையும் கண்டாள். அந்த அறை விசாலமாய் ஆரோக்கியமாயிருந்தது. அதிலிருந்த சாமான்கள் விலையுயர்ந்த நாணயமான சாமான்கள். அறையில் ஒரு மின்சாரதீபம் எரிந்துகொண்டிருந்தது. சற்றுநேரம் அவள் அசையாமற் படுத்திருந்தாள். அறையைமட்டும் நாற்புறமும் பார்த்துக் கொண்டிருந்தாள். அதற்குள் நடந்த சங்கதி நினைவிற்கு வந்து விட்டது. சபாபதிப்பிள்ளையின் கொலையும், தன் தந்தையின் ஆபத்தும், தான் கொள்ளிவீரன் கையிற் சிக்கியதும் ஒன்றின்பின் ஒன்றாய் நினைவிற்கு வந்தன.

யாவும் மனதிற்கு வரவே அவள் திடுக்கிட்டு படுக்கையில் உட்கார்ந்து கண்களை யுருட்டிப்பார்த்தாள். தன் அருகில் ஒரு மனிதன் நிற்பதைக்கண்டு உற்றுநோக்கினாள். சற்று நேரத்திற்குள் அவன் கதிரேசம்பிள்ளை யென்று தெரிந்துகொண்டாள். அவன் அவளை நோக்கி "சுவர்ணம்பாள்! இதென்ன சங்கதி?" என்று கேட்டான். அவள் "எனக்கு ஒன்றும் தெரியவில்லை. நான் எங்கேயிருக்கிறேன்? எப்படி யிங்கே வந்தேன்!" என்றாள்.

கதிரேசம்பிள்ளை.—நீ என் வீட்டிலிருக்கிறாய்; இங்கே யெப்படிவந்தா யென்பதை நீதான் கூறவேண்டும்.

சுவர்ணம்பாள்.—அந்த — அந்த — போக்கிரி யென்னை இங்கே கொண்டுவந்து விட்டிருக்கவேண்டும்.

கதிரேசம்பிள்ளை.—எந்தப்போக்கிரி?

அதன்மேல் சுவர்ணம்பாள் நடந்த சங்கதிகளை விபரமாய்க் கூறினாள். கதிரேசம்பிள்ளை தன் தந்தைமேல் வெறுப்படைந்திருப்பதும், அவனிடம் தான் போகக் கூடாதென்று திட்டம்செய்திருப்பதும் அவளுக்குத் தெரியும். ஆயினும் உண்மையைக் கூறவேண்டுமென்று கூறிவிட்டாள்.

கதிரேசம்பிள்ளை யாவற்றையும் கேட்டபின் கோபத்தோடு "ஓகோ! நீ இன்னும் அந்த நாடோடித் தந்தையை விடாமல் தேடிக்கொண்டு சென்றாயோ? அப்படியா சங்கதி?" என்றான்.

சுவர்ணம்பாள்.—"ஆம் ஐயா! நான் என்னால் கூடியவரையில் என் தந்தைக்கு உதவி செய்யவேண்டிய கடமைப்பட்டவளல்லவா? என் மனம் கேட்கவில்லையே" என்றாள்.

கதிரேசம்பிள்ளை.—"அவன் அவ்வளவிற்குப் பாத்திரம் உள்ளவனென்று நீ நினைக்கிறாயா? அவனுக்காக உன் பெயரையும் கொடுத்துக்கொள்ள வேண்டுமோ?" என்றான்.

சுவர்ணம்பாள்.—"ஐயா, அவர் உங்களுக்கெல்லாம் எவ்வளவு அபாத்திரவானா யிருந்தாலும், என்வரையில் அவர் எப்போதும் என் ஊழியத்திற்கும் உதவிக்கும் பாத்திரமுடையவ ரென்றே நான் நினைக்கிறேன்" என்றாள்.

கதிரேசம்பிள்ளை பின்னும் கோபமடைந்து, "சரி சரி, அவன் குணங்கள் உனக்கும் படிந்துவிட்டதுபோல் காண்கிறது. அவன் பரமதுஷ்டன், திருட்டுப்பயல், போக்கிரி இருக்கட்டும், இப்போது நடந்திருக்கும் கொலைக்கு எல்

லாரும் யார்மேல் சந்தேகங்கொள்ளுகிறார்கள் தெரியுமா?" என்று அதட்டிக்கேட்டான்.

சுவர்ணும்பாள்.—"என் தந்தைமேலல்ல. அவர் அக்குற்றத்தைச் செய்யவில்லை. இது சத்தியம். அவர் எவ்வளவு துஷ்டராயிருந்தாலும், போக்கிரியாயிருந்தாலும் கொலைபாதகம்செய்யக் கனவிலும் நினைப்பவரல்ல" என்று ஆத்திரத்தோடு கூறினாள்.

கதிரேசம்பிள்ளை.—அவனே சந்தேகமின்றி அக்கொலையைச் செய்தவன். தடையின்றி அது ருசுப்படுத்தப்படும். மிகவும் சாமர்த்தியவானான கமலநாதன் என்னும் துப்பறியும் உத்தியோகஸ்தன் இக்கேஸில் வேலை செய்துவருகிறான். இப்படிப்பட்ட பரமதுஷ்டனையவன் தப்பவிட மாட்டான். நீபேசாமல் அவன் தலையெழுத்தின்படி யவனை விட்டுவிடு. நீ சிறுவயதுள்ளவள். கடவுள் உனக்கு வனப்பும், நல்ல புத்தியும் கொடுத்திருக்கிறார். வேலையிலும் நீ கெட்டிக்காரியா யிருக்கிறாய். என்னால் கூடிய நன்மை நான் உனக்குச் செய்யப் பிரியமுள்ளவனா யிருக்கிறேன். நீ என் புத்திமதிப்படி நடந்துகொள். நீ அவனுக்கு உதவிசெய்ய முயன்றால் நீயும் அவனுக்கு உடந்தை யென்று கருதப்படுவாய். பேசாமல் அவனை யடியோடு விட்டுவிட்டு நான் கூறுகிறபடி நடந்துகொள்" என்றான்.

சுவர்ணும்பாள் மனதில் சொல்ல முடியாத பெருங்குழப்பம் உண்டாயிற்று. கொலைசெய்தது யாரென்று தெரியாத சந்தேகமும் தன் தந்தையின் ஆபத்தும், தன் அபிப்பிராயத்திற்கும் விருப்பத்திற்கும் விரோதமாய்க் கதிரேசம்பிள்ளை கூறும் புத்திமதியும் யாவும் சேர்ந்து அவள் மனதைச் சித்திரவதைசெய்ய ஆரம்பித்தன. இதெல்லாம் என்ன குழப்பம்? தன் தந்தை உண்மையில் கொலை செய்த

வரா? கமலநாதன் தன்னிடம் பட்சமாய்ப் பேசியது தன்னை ஏமாற்றத்தானோ? எதை நம்புவது? எதை விட்டு விடுவது ஒன்றும் தோன்றவில்லை. சற்றுநேரம் சிந்தித்துக் கடைசியில் தன் எஜமானனைநோக்கி,

"ஐயா ! என் தந்தைக்கு உதவிவேண்டிய ஆபத்தான வேளையில் அவரைக் கைவிடவேமாட்டேன். அவர் நிரபராதி; உமக்குப் பின்னால் அந்த உண்மை தெரியவரும்" என்று உறுதியாய்க் கூறினாள்.

கதிரேசம்பிள்ளை யுடனே யவள் தோளைப்பிடித்து தெருவாசற்படியண்டை கொண்டுவந்து கதவைத்திறந்து "நீயும் உன் நாடோடியப்பனோடு கூடப்போய் சேர்ந்து கொள்" என்று கூறிக்கொண்டே வீதியில் தள்ளிக் கதவை மூடித் தாளிட்டுக்கொண்டான்.

6-வது அத்தியாயம்.

சரவணன் துப்பறிதல்—அச்சாபீஸில் நடக்கும் இரகசியம்—அதிசயசம்பவம்—சரவணனும் கதிரேசம்பிள்ளையும்—சரவணன் ஆபத்தும் தந்திரமும்—வேலாயுதனும் கமலநாதனும்—அதிசய சம்பாஷணை—கமலநாதன் இடையூறு.

கமலநாதன் சரவணனுக்குச் சில கட்டளைக ளிட்டுவிட்டுச் சென்றான் என்று முன் கூறினோம். அந்த ஏற்பாட்டின்படி சரவணன் இரவு சுமார் பன்னிரண்டு மணிக்கு அச்சாபீசுக்குள் நுழைந்தான். அந்தக் கட்டிடத்தின் ஒவ்வொரு அங்குலமும் அவனுக்கு நன்றாய்த்தெரியும். இரவில் காவலிருக்கும் ஆளுக்ககப்படாமல் எப்படியோ உள்ளே நுழைந்துவிட்டான். முதல் சில்லரை வேலைகள் நடக்கும் அறையில் பிரவேசித்தான். கமலநாதன் அவனிடம் ஒரு இராந்தல் கொடுத்திருந்தான். ஆனால் கைத்துப்பாக்கி

முதலிய ஒரு ஆயுதமும் கையில் கொண்டு போக வேண்டா
மென்று திட்டம் செய்திருந்தான்.

சரவணனுடைய முக்கியமான வேலை யென்னவெனில்,
தாமோதரன் இன்னும் அங்கேயே ஒளிந்துகொண்டிருக்
கிறானா என்றறிந்து? அப்படியிருந்தால் அதைக் கமலநாத
னுக்கு அறிக்கையிடவேண்டியதே. சரவணன் உள்ளே
சென்றபின் ஏதாவது சந்தடி கேட்கிறதா வென்று
உன்னிப்பாய்க் கவனித்தான். சற்று தூரத்தில் ஒரு அச்சி
யந்திரம் இருந்தது. சரவணன் திமிர்ந்து அதற்கு அப்பாற்
பார்த்தபோது, அங்கே திறந்திருந்த கதவின்மார்க்கமாய்
யாரோ கீழ் அறைகளுக்குச் செல்லும் படிக்கட்டுகளை
நோக்கி நடப்பதுபோல் காணப்பட்டது. அவன் அங்
கிருந்த ஒரு சிறு தட்டிக் கதவைத் திறந்து படிக்கட்டில்
இறங்கிச்செல்ல முயன்றபோது தரையில் வெளிச்சத்தைக்
கண்டு திடுக்கிட்டு நின்றான். உற்று நோக்கியபோது அந்த
விடத்தில் தாமோதரனும் குமரப்பனும் உட்கார்ந்திருப்
பதைக் கண்டான். அவனுக்குண்டாகிய அதிசயம் கொஞ்ச
மல்ல. மூச்சைப் பிடித்துக்கொண்டு பதுங்கி நின்றான்.
அவர்கள் என்ன பேசுகிறார்களென்று உற்றுக்கேட்டான்.
வார்த்தைகள் இடையிடையில் கேட்கவில்லை.

தாமோதரன் குமரப்பனை நோக்கி “நான் சொல்லு
கிற சங்கதியை யுன் தகப்பனாரிடத்தில் போய் நீ கூறவேண்
டும்” என்றான்.

குமரப்பன் என்ன சங்கதி யென்றான். தாமோதரன்
குனிந்து, குமரப்பன் செவியண்டை வாயைவைத்து துரித
மாய் ஏதோ கூறினான். அது சரவணனுக் கேட்கவில்லை.
இவனுக்குண்டாகிய அதிருப்தியால் தட்டென்றெழுந்தான்.
எழுந்தபோது படிக்கட்டின் ஓரத்திலிருக்கும் இரும்புக்
கிராதியைப் பிடிக்க அது அதிர்ந்ததால் அதன்மேல் படிக்

திருந்த தூசுகள் பறந்து கீழறையில் உட்கார்ந்திருந்தவர்கள் தலைமேல் விழுந்தது. இரண்டுபேரும் சட்டென்றெழுந்து படிக்கட்டின் மேலேறினூர்கள். சரவணன் தனக்கு நேரிட்ட ஆபத்தை யுணர்ந்து துரிதமாய் அந்தவிடத்தைவிட்டுக் கதவின் வழியாயோடி கூடத்தில்போய் சற்று நின்று திரும்பிப்பார்த்தான். பின்னுல் யாரும் துறத்திவரவில்லையென்று கண்டு, "பேஷ் நல்லவேடிக்கை" யென்று தனக்குத்தானே கூறிக்கொண்டான். இந்த சந்தோஷம் மறுநிமிடமே திகிலாய் மாறிவிட்டது. ஏனெனில் தன் அருகிலிருந்து "நீ இங்கே யேனிருக்கிறுய் ?" என்று ஒரு சத்தம் உண்டானதைக் கேட்டதும் திடுக்கிட்டு திகிலோடு திரும்பிப்பார்த்தான். காவல்காரன் பின்னுல் வந்து நிற்பதைக்கண்டான்.

உடனே "இந்த நேரத்தில் என்ஜினையார் முடுக்கியதென்று பார்க்கவந்தேன்" என்றுன்.

காவலன்.—" ஓ ! இது வீண்சாக்கு. நான் என்ஜினை முடுக்கும்போது நீ கட்டிடத்திற்குள் ளிருக்கிறுய். நீ இங்கே சுற்றிக்கொண் டிருக்கிறுய். சற்று நேரத்திற்கு முன் உன் சந்தடியோ அல்லது ஏதோ வொரு சத்தம் கேட்டது" என்று கூறிக்கொண்டே சிறுவனை யுருட்டிப் பார்த்தான். ஆனுல் சிறுவன் அஞ்சவில்லை. அவன் காவலனை நோக்கி, " நான் ஒரு வேலையா யிங்கு வந்தேன் ; என்னை யிங்கனுப்ப அதிகாரமுடைய ஒருவர் அனுப்பினூர். எல்லாம் சரிதான், என்ன பிரண்டு பார்க்கிறுய். நான் என் சுய இச்சையாய் இங்கே வரவில்லை ; நீ தூங்கிவிட்டாய் என்று நினைக்கிறேன். இன்றேல் இங்கே என்ன விசேஷம் நடக்கிறதென்று நீ தெரிந்துகொண் டிருப்பாய். இங்கே இரண்டுபேர் பதுங்கிக்கொண் டிருக்கிறூர்கள். அவர்கள் பேசும்போது நான் பார்த்தேன் " என்றுன்.

இதைக்கேட்டதே காவற்காரனுக்கு மிக்க அவா வுண்டாய் விட்டது. அவனுக்குச் சற்று கலவரமு முண்டாய் விட்டது. ஒருமணி நேரத்திற் கொருதரம் அவன் உள்ளே யெல்லாம்போய்ப் பார்க்கவேண்டியது. கொலை நடந்தது முதல் பயநதுகொண்டு அவன் உள்ளே போகிறதில்லை. அவன் சிறுவனை நோக்கி, இரண்டுபேர் பேசுவதை நீ கண்டாயா ? என்று ஆவலோடு கேட்டான்.

சிறுவன்.—" ஆம் மெய்யாகவே பார்த்தேன் " என்றான்.

காவலன்.—" சற்று நேரத்திற்கு முந்தி சந்தடி கேட்டது. இந்தப் பாழுங்கொலை நடந்தது முதல் எனக்குப் பயம். அதனல் உள்ளேபோய் பார்க்கவில்லை. கலவரத்தால் அப்படித் தோன்றுகிறதென்று நினைத்துக் கொண்டேன். இதைப்பற்றி வெளியில் கூறமாட்டாயே ?" என்றான்.

சிறுவன்.—" உனக்குப் பிரியமானல் நான் பேசாமலிருக்கிறேன் " என்று கூறிவிட்டு தான் வந்த வழியே சென்றான்.

அவனுக்கு அதிக சந்தோஷ முண்டாயிற்று. ஏனெனில் கமலநாதனுக்குக் கூறத்தக்க சங்கதி கிடைத்தது.

அவன் வீதிவழியே போய்க்கொண்டிருக்கையில் " ஆகா ! தாமோதரன் குமரப்பனிடம் குசுகுசுவென்று கூறியசங்கதி மட்டும் நமக்குக் கேட்டிருந்தால் கமலநாதன் நம்மை புத்திசாலியென்று மதிப்பான் " என்று தனக்குத் தானே சிந்தித்தான். அவன் தன் வாசஸ்தலத்தை நெருங்கும்போது மணி மூன்றடித்தது. அதே நிமிஷம் சமீபத்திலிருந்த ஒரு வாசற்படியின் மறைவிலிருந்து ஒரு மனிதன் வெளிவருவதைக் கண்டான். சரவணன் அதைப் பற்றி கவனிக்காமல் தன் மடியிலிருந்த சாவியையெடுத்து வீட்டின் கதவைத்திறந்தான்.

இவன் உள்ளே செல்லக்காலெடுத்துவைக்கும்போது பின்னுலிருந்து ஒருவன் தன் தோளைப்பிடித்து வெளியி ழுக்க இவன் சட்டென்று திரும்பிப்பார்த்தான். அவன் தடித்த ஒரு போலீஸ்காரன். அவன் சிறுவனை நோக்கி "சரவணு சற்றேநில்! உன்னிடம் கொஞ்சம் வேலை யிருக்கிறது" என்றான். சிறுவன் என்னவேலை யென்றான். போலீஸ்காரன் "நீ என்கூட வரவேண்டும்" என்றான். சிறுவன் நான் ஒன்றும் செய்யவில்லையே யென்றான்.

போலீஸ்காரன்.—"ஒரு சமயம் செய்திருக்கமாட்டாய், ஒரு சமயம் செய்தேயிருப்பாய். சீக்கிரத்தில் அது வெளி க்கு வரும்" என்றான்.

அவ்வாறு கூறிவிட்டுச் சரவணனைப் பிடித்து வீதியின் வழியே யிழுத்துக்கொண்டு சென்றான். சமீபத்தில் ஒரு போலீஸ் ஸ்டேஷன் இருந்தது. தன்னை யங்குதான் கொண்டுபோகிறான் என்று சரவணன் எண்ணிக்கொண் டான். நான் அச்சாபீசுக்குள்ளே சென்றதையும் வெளியில் வந்ததையும் யாரோ கண்டு சந்தேகங்கொண்டு போலீஸ் அதிகாரிக்குத் தெரிவித்திருக்கிறார்கள் என்று சுபாவமாக எண்ணிக்கொண்டான்.

போலீஸ்காரன் வீதியின் மத்தியில் ஆயத்தமாயிருந்த ஒரு வண்டிக்குச் சமீபத்தில் சரவணனை யிட்டுக்கொண்டு போய் நிறுத்தியதும், சரவணன் எல்லா சங்கதிகளையும் விவரமாய் அவனுக்குக் கூறலாமென்று யோசித்தான். மறுபடி சே! அப்படி அவசரப்படக்கூடாது, போகப் போக சங்கதிகள் எப்படி நடக்கின்றனவோ பார்ப்போம்" என்று மௌனமாகவே யிருந்தான்.

போலீஸ்காரன் சிறுவனை! ஏறு வண்டியில் என்று அவனைப்பிடித்து உள்ளேயேற்றித் தானும் பின்னல் ஏறிக் கொண்டான். வண்டி யுடனே வேகமாயோட வாரம்

பித்தது. சிறுவன் ஒன்றும் பேசவில்லை. போலீஸ்காரன் சாரதிக்கு ஒரு கட்டளையும் கொடாதபடியால் சரவணன் வண்டி எந்தத்திக்கே செல்கிறதென்று கவனமாய்ப் பார்த்துக்கொண்டிருந்தான்; சுமார் கால்மணிநேரம் சென்றபின் ஒரு புராதனமான பெரிய கட்டிடத்தின் எதிரில் வண்டி நிறுத்தப்பட்டது.

போலீஸ்காரன் உடனே கீழிறங்கி சரவணனைப் பிடித்து இறக்கி இந்த வீட்டிற்குள்ளேவா என்று இழுத்துக் கொண்டு சென்றான். இவர்கள் உள்ளே சென்றதும் இவர்களுக்கெதிரில் வரும் கதிரேசம்பிள்ளை "சரிதான், சரவணா உள்ளேவா," என்று கூறிவிட்டு போலீஸ்காரனைப் பார்த்து "நீ போகலாம்" என்றான்.

போலீஸ்காரன் சென்றபின் கதிரேசம்பிள்ளை சிறுவனை யொரு பெரிய அறைக்கு அழைத்துக்கொண்டு போய் அவனை யுற்று நோக்கி, "உன்னோடு பேசவேண்டிய திருக்கிறது" என்றான்.

சிறுவன், "சரிதான் ஐயா, ஆனால் இரவில் மூன்று மணிக்குத்தானா இப்படி ஒரு ஆளை யிட்டுக்கொண்டு வருகிறது?" என்றான்.

கதிரேசம்பிள்ளை.—"நீ படுக்கைக்குப் போகவில்லை யென்று தெரிகிறது. தெருவில் திரிவதற்கு இது வேளையல்ல வென்று நினைக்கிறேன். நீ என்ன செய்துகொண்டிருந்தாய்?" என்றான்.

சிறுவன்.—"நான் என் வீட்டுக் கதவைத்திறந்து கொண்டிருந்தேன்" என்றான்.

கதிரேசம்பிள்ளை.—"நான் அதைக் கேட்கவில்லை. நீ மாலை யிதுவரையில் வீதியில் என்ன செய்துகொண்டிருந்தாய் என்று கேட்கிறேன்" என்றான்.

சிறுவன்.—"இரவு முழுதும் நான் வீதியிலில்லை" யென்ருன்.

கதிரேசம்பிள்ளை, யவன் தோளைக் கெட்டியாய்ப்பிடித்துக் குலுக்கிக் கோபத்தோடு, நான் கேட்பதற்கு மரியாதையாய்ப் பதில் கூறு என்று அதட்டினுன். சிறுவன் நான் பின்னை யெப்படி பேசுகிறேன்? நீர் என்ன செய்யச் சொல்லுகிறீர்? என்ருன்.

கதிரேசம்பிள்ளை, "நீ இரவு இந்த வேளையில் என் அச்சாபீஸில் என்ன செய்துகொண்டிருந்தாய் சொல்" என்ருன்.

சரவணன்.—நான் துப்பறிபவரான கமலநாதம் பிள்ளை சொன்னபடி ஒரு வஸ்துவைப் பார்ப்பதற்காகச் சென்றேன்.

கதிரேசம்பிள்ளை.—அப்படிப்பட்ட வேலை யேதாவதிருந்தால் ஏன் அவரே நேராய்ச்சென்று பார்க்கக்கூடாது? உன்னையொரு வேவுகாரனுக அனுப்பினுரா?

சரவணன்.—அது என்னமோ எனக்குத்தெரியாது.

கதிரேசம்பிள்ளை.—ஆம், அப்படித்தான் தெரிகிறது. நீயொரு வேவுகாரனே! என் தொழில்களின்மேல் வேவு பார்க்க அமர்த்தப்பட்டிருக்கிருய்; நான் இதையொருக்காலும் நடக்கவிடமாட்டேனென்பதை நன்ருயறிந்துகொள்.

சிறுவன்.—சபாபதிப் பிள்ளையைக் கொன்ற மனிதனைக் கண்டு பிடிக்க வேண்டுமென்று உமக்கு விருப்பமோ யில்லையோ?

கதிரேசம்பிள்ளை.—உண்மையாகவே விருப்பந்தான். அதற்கென்று துப்பறியும் ஆசாமிகள் அமர்த்தப்பட்டிருக்கிருர்கள். அவர்கள் அவ்வேலையைச் செய்வார்கள். நீ என்னிடத்தில் வேலை செய்கிறவன். நீ யாவது என் கட்

டிடமாவது கமலநாதம்பிள்ளைக்குச் சொந்த மல்ல. இரவில் சிறுபையன்கள் என் கட்டிடத்தில் நுழைவது எனக்குப் பிரியமில்லை. அப்படிப்பட்டவர்களை நான் நம்பமாட்டேன்.

சிறுவன்.—நான் கமலநாதம் பிள்ளையிடம் இதை யெல்லாம் கூறியபின் அவர் சொல்லுகிறபடி நடந்து கொள்ளுவேன்.

கதிரேசம்பிள்ளை கோபத்தோடு "கமலநாதம்பிள்ளைக்கு இதைப்பற்றியொரு சம்மந்தமுமில்லை, தெரிகிறதா? நான் சொல்வது, நான் உன்னை முதலில் வேலைக்கு அமர்த்திக்கொண்டவன்" என்றான்.

சரவணன்.—"நான் அப்படி நினைக்கவில்லை. சபாபதிப் பிள்ளை யென்னை முதல் முதல் வேலைக்கு இங்கு அமர்த்தினர். அப்போது நீர் வீதியிற் திரிந்துகொண்டிருக்கும் திண்ணைத்தூங்கிகள் வேண்டாம் என்று கூறினீர். அப்படியும் அவர் பிரியப்பட்டு எனக்கு வேலை கொடுத்தார். அப்படியிருக்க இப்போது நான் இன்னம் ஏதாவது மேல் வேலை செய்வதைப்பற்றித் தாங்கள் சங்கடப்படவேண்டிய காரணம் ஒன்று மில்லையே" என்றான்.

கதிரேசம்பிள்ளைக்கு மிக்ககோபம் வந்து விட்டது. அவன் சிறுவனைப்பிடித்து எதிரிலிருந்த நாற்காலியிற் றள்ளி,

அடேபயலே! நான் உன்னைக்காவலில் வைக்கவேண்டும். நீ மகா அதிகப் பிரசங்கியாய் விட்டாய். உன்னைப் போலீஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டுபோவதுதான் நலம்" என்றான். சரவணன் இதைக்கேட்டுத் திடுக்கிட்டு சமாளிப்பதற்குள், கதிரேசம்பிள்ளை சட்டென்று அறையைவிட்டு வெளியிற்சென்று கதவைமூடித் தாளிட்டு வெளிப்பக்கம்

பூட்டிக்கொண்டு போய்விட்டான். இதெல்லாம் திடீரென்று ஒரு விநாடியில் நடந்து விட்டதால் சாவி பூட்டில் திரும்பும்போதுதான் சரவணனுக்கு நடந்த சங்கதி யின்னதென்று மனதிற்பட்டது.

கதிரேசம்பிள்ளை தன்மேல் ஏன் இவ்வளவு கோபம் கொள்ள வேண்டுமென்பது சரவணனுக்கு விளங்கவில்லை. இதுவரையில் எந்த விஷயத்திலும் கதிரேசம்பிள்ளை இவனைக் கவனித்ததேயில்லை. வேலை நடக்கும்போது வேலைக்காரரிடம் அவன் வருகிறதேயில்லை. எல்லா வேலைக்காரரிடமும் நல்லதனமாகவே நடந்துகொள்வது வழக்கம். சரவணன் "நாம் செய்யத்தகாத காரியம் என்ன செய்து விட்டோம்?" என்று சிந்தித்தான். அந்த விசாலமான அறையைச் சுற்றிப்பார்த்தான்; வேறொரு கதவிருந்தது. அதைத் திறக்கப் பார்த்தான். அதுவும் வெளிப்பக்கம் பூட்டப்பட்டிருந்தது. சாளரத்தைத் திறக்கப்பார்த்தான், முடியவில்லை; தாழ்ப்பாள் கெட்டியாயிருந்தது. என்ன செய்யலாமென்று விழித்துக்கொண் டிருந்தான்.

அச்சமயம் வெளியிலிருக்கும் தெருக்கதவு திறக்கப்படுவதும், மனிதர் பேசும் சத்தமும் கேட்டது. கூடுமானால் போலீஸ் ஸ்டேஷனுக்குப் போகாமல் தப்பித்துக்கொள்ள வழிபார்க்க வேண்டும் என்று நினைத்துக்கொண்டு ஒரு பெரிய நாற்காலியை யெடுத்து சாளரத்தின் கண்ணாடிக் கதவின்மேல் மோதியடித்தான். அது மிக்க சத்தத்தோடு படீர் என்று உடைந்தது.

அதற்குள் வெளியில் ஆத்திரமாய்ப்பேசும் சத்தமும் ஆட்கள் அந்த அறையை நோக்கித் துரிதமாய் வரும் சத்தமும் இவன் செவிகளில் கேட்டன.

உடைந்த சாளரக்கதவின் வழியாய்க் குதித்து ஓடிவிடலாமென்று சென்றவன், மறுநிமிடமே ஒரு யுக்தி பிறக்கச்

சட்டென்று திரும்பி அங்கிருந்த பெரிய சோபாவின் கீழ் மெதுவாய்க்குனிந்து நுழைந்து சந்தடி செய்யாமல் பதுங்கிக்கொண்டிருந்தான். அதே நிமிஷம் கதிரேசம்பிள்ளையும் போலீஸ்காரனும் அறைக்குள் நுழைந்தார்கள்.

கதிரேசம்பிள்ளை யுள்ளே வந்ததும், உடைந்திருக்கும் கண்ணாடிக் கதவைக் கண்டதும், "ஆ! அந்தத் துஷ்டப் பயல் சாளரத்தின் கண்ணாடிக்கதவையுடைத்து விட்டான்" என்றான். போலீஸ்காரன் கூடவே, "உடைத்து விட்டு தெருப்பக்கமாய் ஓடிவிட்டான்" என்றான். இருவரும் ஓடிப் போய் சாளரத்தண்டை நின்று வீதியில் எட்டிப் பார்த்தார்கள்.

கதிரேசம்பிள்ளை "போ போ அவன் பின்னாலே ஓடிப் போய் பிடித்துக் கொள்ளவேண்டும். இந்த அடாத செய்கைக்கு அவனைச் சும்மாவிடக்கூடாது, தகுந்த தண்டனையடையச் செய்யவேண்டும்" என்று கூவினான். போலீஸ்காரன் உடனே சாளரத்தின் வழியாய்த் தாண்டிக் குதித்து ஓடினான். கதிரேசம்பிள்ளை பின்னால் தங்கியிருக்க மனந் தாளாமல் அவன் பின்னால் தானும் சாளரத்தின் வழியே தாண்டிக் குதித்து ஓடினான்.

இருவரும் சென்றதே சோபாவின்கீழ் பதுங்கியிருந்த சரவணன் வெளியில் வந்து நாற்புறமும் சுற்றிப் பார்த்து "பேஷ் நல்லவேடிக்கை, 'காற்றுள்ள போதே தூற்றிக் கொள்' என்றபடி இதேசமயம் அவர்கள் வருவதற்குள் நாம் கம்பிகாட்ட வேண்டும்" என்று மெதுவாய்க் கூறிக் கொண்டே, துரிதமாய் ஓட்டம் பிடித்தான்.

* * * * *

* * * *

வேலாயுதன் இராஜபாட்டையில் செல்லும் டாக்டருடைய வண்டியின்பின் தொத்தி யேறிக்கொண்டு போனான்

என்று முன் கூறினேமல்லவா. அவன் அப்படித் தப்பித் கொண்டுபோவதைக்கண்ட கமலநாதன் அதிசயமும் கோப மும் ஆத்திரமும் அடைந்து இந்த வேலாயுதனைப் பற்றி யார் என்ன சொன்ன போதிலும், வெல்வது மட்டும் சீக் கிரத்தில் ஆகிறகாரியமல்லவென்று தனக்குத் தானே கூறிக் கொண்டு தன்சேபியிலிருந்த சீட்கையை எடுத்துஊதினன். இச்சத்தத்தைக்கேட்ட டாக்டர் என்ன சங்கதி பார்ப்போ மென்று குதிரையை நிறுத்தினர். பின்னல் திரும்பிப் பார்த்தபோது தூரத்தில் கமலநாதன் நிற்பது தெரிந்தது. தன்வண்டியின் பின்னல் உட்கார்ந்திருக்கும் ஆள் தன் கண் களுக்குப் புலப்படவில்லை; ஆகையால் கமலநாதன் சைகை செய்தது இன்னகாரணத்திற்கென்று அவருக்கு விளங்க வில்லை. ஒருவேளை கள்ளர்கள் நம்மை வழிமடக்கிக் கொள்ளையடிப்பார்களென்று சைகைசெய்கிருனே வென்று உத்தேசித்தார். அவர் அவசரமாய்ப்போகவேண்டும். வேளை யும் அந்த இடமும் அப்படிப் பயத்தை யுண்டாக்கக் கூடிய வைகளா யிருந்தன. ஆகையால் அவர்சாட்டியால் குதிரை யைப் பளீர் என்று ஒரு அடி யடித்தார். குதிரை துள்ளிக் குதித்து வேகமாயோட ஆரம்பித்தது.

கமலநாதன் அட சனியனே! அவன் நிறுத்துவான் என்று பார்த்தால் முன்னிலும் துரிதமாய்த் தப்பித்துக் கொண்டு ஓடுகிருனே யென்று பின்னும் கோபமடைந்தவ னய், வண்டியின்பின்னல் அதிவேகமா யோடிக்கொண்டே, "நிறுத்து நிறுத்து, என்னமோ கீழேவிழுந்து விட்டது" என்று உறக்கக் கூவினன். இக்கூச்சலைக்கேட்டு டாக்டர் மறுபடி வண்டியை மெதுவாய் ஒட்ட ஆரம்பித்து, வண் டிக்கு வெளியே தலையை நீட்டி "என்ன வேண்டும்?" என்றார்.

கமலநாதன் ஓடிக்கொண்டே, "வண்டியின் பின்னல்

ஒரு ஆள் கள்ளத்தனமாய் சவாரி செய்கின்றானென்பார்" என்றான். இதைக்கேட்கவே டாக்டருக்குக் கலவரமும் கோபமுமுண்டாகி, குதிரையைத் தட்டென்று நிறுத்திக் கீழேகுதித்து வண்டியின் பின்னால் வந்தார். அதற்குள் வேலாயுதன் தட்டென்று கீழேகுதித்துப் பாதைக்குப் பக்கத்திலுள்ள மரங்களடர்ந்த காட்டிற்குள் ஓடிவிட்டான். டாக்டர் அவனைத் துரத்திப்பிடிக்க எத்தனித்தார். ஆனால் அவர் குட்டையான தடித்துக் கொழுத்த மனிதனானதால் சற்றுநேரத்தில் பெருமூச்சு வாங்கவே, திரும்பிவந்து வண்டியிலேறிக்கொண்டு சென்றார்.

கமலநாதன் தேகப்பயிற்சியில் தேர்ந்தவனானதால், டாக்டருக்கு ஏதாவது விபரம் கூறக்கூட நிற்காமல் துரிதமாய் வேலாயுதனைப் பின் தொடர்ந்து ஓடினான். காட்டிற்குள் நுழைந்து நெருக்கமான புதர்களுக்குள் புகுந்து ஓடினான். கொஞ்சதூரம் அவ்வாறு ஓடியபின், அங்கு ஒரு சிறு வெளியான விடமிருந்தது. கமலநாதன் அந்த வெளியில் நுழையும்போது, "பிராணன் வேண்டுமானால் நில் அப்படியே" என்று துணிகரமான ஒரு சத்தம் உண்டாயிற்று. கமலநாதன் அதைக்கேட்டதும் திடுக்கிட்டுத் தட்டென்று நின்று முன்னேபார்த்தபோது, வேலாயுதன் ஒரு கைத்துப்பாக்கியை கரத்தில் பிடித்து தனக்கு நேராய் நீட்டிக்கொண்டு எதிரில் நிற்பதைக்கண்டான். வேலாயுதன் முகம் அழகுவாய்ந்த முகம். அவன் கரியகண்கள் அம்புபோல் தீக்ஷண்யமான பார்வையுடையவை. அச்சமயம் அக்கண்கள் நெருப்பு போன்ற ஒளிவீசிக்கொண் டிருந்தன. அவனுடைய துணிகரத்தைக்கண்ட கமலநாதன் அங்கேயே நின்றான். ஆனால் அவன் பயப்படவில்லை. தன் துப்பாக்கியை யெடுக்கவு மில்லை. வேலாயுதன் இரண்டடி முன்னே வந்தான். கமலநாதன் அவனை நோக்கி, "நீ யுன் துப்பாக்கியை

வைத்து விடலாம். அதைப்பற்றி யிப்போது கவையில்லை'' என்றான். இவன் இவ்வாறு மெதுவாகவும் சாந்தமாகவும் கூறியதைக்கேட்ட வேலாயுதன் மிக்கவியப்படைந்து, சற்று நேரம் நிதானித்துப் பிறகு துப்பாக்கியை மடியில் வைத்துக் கொண்டு தன் கரங்களை மார்மேற் கட்டிக் கொண்டு நின்றான். அவன் கமலநாதனை நோக்கி "ஏதாவது துரோக மிருந்தால் அது உன்னிட மிருக்கவேண்டியதன்றி என்னிடமிராது'' என்றான்.

கமலநாதன் "நாமிருவரும் நல்ல சினேகிதர்களாய் விடலாம் என்று நினைக்கிறேன். ஏனெனில், நீ சபாபதிப் பிள்ளையைக் கொன்றாயென்பதை நான் நம்பவில்லை. நான் ருசுவுக்குத்தான் தேடிக்கொண்டிருக்கிறேன். நீ நீதிக்குப் பயப்பட வேண்டியதற்குக் காரணம் இருந்தாலன்றி நீ பயந் தோடவேண்டிய நிமித்தமே யில்லை'' என்றான்.

வேலாயுதன்.—நான் நீதிக்குப் பயப்படவில்லை.

கமலநாதன்.—மற்றேன் பயந்தோடுகிறாய் ?

வேலாயுதன்.—அநீதிக்கே நான் பயப்படுகிறேன்.

கமலநாதன்.—உன்மேல் பொய்க்குற்றம் சாட்டுவார்கள் என்று அஞ்சுகிறாயோ ?

வேலாயுதன்.—அப்படியே சாட்டுகிறார்களென்று எனக்குத் தெரியும்.

கமலநாதன்.—நான் உன்னிடம்வர ஏன் இவ்வளவு கஷ்டம் எடுத்துக்கொண்டேன் தெரியுமா ?

வேலாயுதன்.—சபாபதிப்பிள்ளையின் கொலையைப் பற்றிய விஷயங்களைக் கண்டறிய.

கமலநாதன்.—அந்த சங்கதியைப்பற்றி யறிந்து கொள்ள ஒரு துப்பறியும் ஆள் உன்னிடம் ஏன் வரவேண்டும் ?

வேலாயுதன்.—" ஏனெனில் நானி[illegible]க்கிறேன், நான் முன்னே அவர்களோடு உ[illegible]க்கிரத்தில் [illegible]யில் கூட்டா

ளியா யிருந்தேன். இப்போது ஊரில் நடக்கிற குற்றங்களெல்லாம், அவர்கள் செய்தாலும் செய்யாவிட்டாலும், யார் தலைமேல் சுமத்தப் படுகிறதோ அப்படிப்பட்ட நாடோடிகளின் கூட்டத்தில் நானும் ஒருவனைச் சேர்ந்துவிட் டிருக்கிறேன். இந்தத் துப்பறியும் தொழில் எப்படி நடக்கிறதென்று எனக்குத் தெரியும். ஒருதரம் ஒருவன் ஒரு குற்றஞ்செய்து போலீஸாரிடம் அகப்பட்டால், அதுஎவ்வளவு அற்ப குற்றமேயானாலும், அவன் பழைய குற்றவாளியாகிய சந்தேகப்பேர்வழி யென்று குறிவைக்கப் படுகிறான். அதுமுதல் போலீஸார் அவன்மேல் ஒரு கண்வைத்து விடுகிறார்கள். பிறகு இப்படிப்பட்ட ஒரு கொலை நடந்து விட்டால், உடனே மேற்கூறிய ஆசாமிகளின் குறிப்புப் புத்தகத்தைப் பார்த்து அக்கொலை செய்யக் காரணமுடைய வர்களாய்த் தோற்றப்படுகிற இரண்டு மூன்று ஆசாமிகளின்மேல் மோருல் போடுகிறார்கள். அவர்களோ நடந்த குற்றத்திற்கு எங்கே தங்களைப் பிடித்துக் கொள்ளுகிறார்களோ வென்று பயந்து ஒளிந்து கொள்ளப் பிரயத்தனப்படும்போது, இன்னும் சில சந்தேகத்திற் கிடமான விஷயங்களைச் செய்துவிடுகிறார்கள். கடைசியில் இச்சந்தேகங்களே காரணமாக அவர்கள் பிடிக்கப்பட்டு தப்பவழியின்றி தண்டனையு மடைகிறார்கள். இது நடக்கிற சங்கதி யின் மாதிரி. இதற்காகத்தான் நீயும் இப்போது என் பின்னுல் இவ்வளவு கஷ்டத்தோடு தேடிக்கொண்டு வந்தாய். நீ நியாயமே செய்கிறாய். உன் கடமையை நீ செலுத்துகிறாய். ஆனால் அதனாலேயே நான் உன்னை நம்ப வேண்டுமென்றும், என்னைக் காப்பாற்றிக் கொள்ள நல் வேஷனப்படக் கூடாதென்றும் எற்படவில்லை" என்றான் அவனை.

இவையாவும் கேட்ட கமலநாதன் இப்பரிதாபமான மனிதனுடைய விஷயத்தைப்பற்றி மிக்க மனவிரக்கப்பட்டு அவனை நோக்கி,

நீ கொலை செய்தாயென்று நான் நம்பவில்லையென் பதை முன்னமே கூறியிருக்கிறேன். ஆனால் மெய்யான குற்றவாளிக்குத் தண்டனை கிடைக்கும்படி செய்ய நீ எனக்கு உதவி செய்யலாமென்று மட்டும் நம்புகிறேன். உனக்குச் சபாபதிப்பிள்ளையின் பகைவர்கள் இன்னாரென்று பெரும்பாலும் தெரியும்" என்றான்.

வேலாயுதன்.—ஒருசமயம் எனக்குத் தெரியுந்தான்; ஆனால் அவனுக்கு அதிக விரோதிகளில்லை.

கமலநாதன்.—எப்படியிருந்தாலும் நீ இரண்டொரு விஷயங்களைப் பற்றிய விபரத்தை மட்டும் கூறவேண்டுமென்று விரும்புகிறேன். நீ உன் புத்திரி சரசாபாயிடம், சமயம் நேரிடுங்கால் அவள் தன்னைப் பாதுகாத்துக்கொள்வதற்காக, ஒரு கைத் துப்பாக்கியைக் கொடுத்தாய். அத்துப்பாக்கியால்தான் சபாபதிப்பிள்ளை கொல்லப்பட்டது"

வேலாயுதன்.—ஆம் ஆம். மரணவிசாரணையில் நடந்த சங்கதிகளை யெல்லாம் சரசாபாய் என்னிடம் கூறினாள்.

கமலநாதன்.—அது யாரால் எப்படி அவளறையிலிருந்து கொண்டு போகப்பட்டது என்பதை நீ கூறக்கூடுமா?

இதைக்கேட்டதே வேலாயுதன் முகம் வெளுத்துவிட்டது. அவன் மனதில் மிக்க குழப்பமுண்டாய்விட்டது தேகத்தில் ஒரு நடுக்கம் உண்டாயிற்று. ஆயினும் அவன் யாவும் சாமாளித்துக்கொண்டு, "கொலை நடக்கும் சற்று நேரத்திற்கு முன் அத்துப்பாக்கியை நான் எடுத்தேன்" என்றான்.

கமலநாதன் சுபாவமாய்ச் சீக்கிரத்தில் கலவரமடை

கிறவனல்ல. ஆயினும் வேலாயுதன் இப்போது கூறியதைக் கேட்டதும் அவன் மனம் மிக்க கலவரமடைந்துவிட்டது. அவன் ஆத்திரமாய் வேலாயுதன் தோளைப் பிடித்துக் கொண்டு, "அப்படியானல் கொன்றவன் யாரென்று உனக்குத் தெரியும்" என்றான்.

வேலாயுதன் கலவரமடைந்தாலும் திடமான குரலாய், "அந்தத் துப்பாக்கி சுடப்பட்டபோது நான் கண்ணால்காணவில்லை. அந்த வெடிச்சத்தத்தைக் காதாலும் கேட்கவில்லை. நான் என்மனதிற் கொண்டிருக்கிற சந்தேகத்தைத்தவிர எனக்கு அதைப்பற்றி வேறொன்றும் தெரியாது. இதே யுண்மை; ஆனால் அது என் மனதில்மட்டுமே யிருக்கவேண்டியதன்றி அதை யாருக்கும் கூறமுடியாது" என்று கூறினான்.

கமலநாதன் அவன் முகத்தைக் கவனமாய்ப் பார்த்துக் கொண்டேயிருந்து அதிகாரதோரணையாய் அடியிற் கண்டபடி கூறினான்:—

"குற்றஞ்செய்தவனைத் தண்டனை யடையச் செய்வதற்கு நம்மால் கூடுமானதா யிருக்கையில் அவன் தப்பித்துக் கொள்ளும்படி விட்டுவிடக்கூடாது."

வேலாயுதன்.—என் சந்தேகத்தை நான் கூறமாட்டேன்.

கமலநாதன்.—குற்றம் நடந்ததினம் காலையில் அந்தத்துப்பாக்கி யுன்னிடம் இருந்தது. அதன் பிறகு நீ யதை யாரிடம் கொடுத்தாய்?

வேலாயுதன்.—ஒருவரிடமும் கொடுக்கவில்லை.

கமலநாதன்.—அப்படியாயின் அது உன்கையைவிட்டு எப்படி வெளியே போயிற்று.

வேலாயுதன்.—எனக்குத் தெரியாது. ஒருவேளை—

கமலநாதன்.—ஒருவேளை என்ன?

வேலாயுதன்.—பழைய கதைதான். நான் குடித்துவிட்டிருந்

தேன். முட்டாள் தனமாய்த் துப்பாக்கியை வெளியில் காட்டிவிட்டேன். ஒரு போலீஸ்காரன் என்னை வழி மடக்கி அபாயமான ஆயுதம் உன்கையில் இருக்க விட லாகாது என்று அதைப் பிடுங்கிக்கொண்டான். அதே நான் அதைக் கடைசியாய்க் கண்டது. அப்புறம் அது எப்படி அந்த அச்சாபீசுக்குவந்ததும் கொலைக்குஆயுத மானதும் எனக்கு ஒன்றும் தெரியவில்லை. நான் முன் னே கூறியது போல் எனக்குச் சந்தேகமிருக்கிறது. ஆனால் அதை யாருக்கும் கூறமுடியாது.

கமலநாதன் இவன் பிடிவாதத்திற்குக் கோபமடைந்து ஆத்திரத்தோடு, "நீ இதில் முக்கியமான சாக்ஷியானதால் நான் உன்னைக் கைது செய்கிறேன்" என்று கூறிக்கொண்டே அவன் தோள்மேல் ஒரு கையை வைத்தான்.

வேலாயுதன் சற்றும் அசையவில்லை. அவன் கண்க ளில் திடீலென்று ஒருவிதப் பிரகாசம் தோன்றியது. அவன் கடுகடுப்பான முகத்தோடு, "என்னையா கைது செய்யப் போகிறாய்?" என்றான்.

கமலநாதன்.—"ஏன் செய்யக்கூடாது? அந்தக்கோரமான கொலையைச்செய்த படுபாவி யாரென்று உனக்கு உண்மையாய்த் தெரியும், அப்படியிருந்தும் நீ ஒரே பிடிவாதமாய்க் கூறமாட்டேனென்கிறாய். அதனால் நீயும் கொலைசெய்தவனுக்கு உடந்தை யென்கிறமாதிரி யே யாகிறது. அதனால் நான் உன்னைக் கைதுசெய்ய வேண்டியது என் கடமையாகிறது" என்றான்.

வேலாயுதன் அதில் சம்பந்தப்படவில்லையென்று கமல நாதனுக்கு நன்றாய்த்தெரியும். ஆனால் இவனை வெளியில் விட்டிருந்தால் கொலைசெய்தவன் இவனை யெப்படியாவது குற்றத்தில் அழுத்தி தப்பிப்போகாதபடி செய்து விடுவானு தலால், இவனைத் தற்காலம் கைதுசெய்து வைப்பதே

இவனுக்கும் நல்லது, தன் காரியத்திற்கும் அனுகூலமென் பதே அவன் கருத்து.

வேலாயுதன் நன்றாய் நிமிர்ந்து நின்று கமலநாதனை நோக்கி "எனக்கும் செய்யவேண்டிய ஒரு கடமையிருக் கிறது என் கடமைவரும்போது உன்போல் நானும் சரி யாகவே செய்வேன்" என்றான். இருவரும் சற்றுநேரம் ஒருவர் முகத்தை யொருவர் பார்த்தார்கள். அதன்பிறகு கமலநாதன் உன்கடமையென்ன வென்றான்.

அச்சமயம் வேலாயுதன் திடீரென்று இரண்டடி பின் வாங்கி ஒரு நொடிக்குள் கமலநாதன் முகத்தில் ஓங்கி யொரு குத்துவிட்டான். கமலநாதன் அக்குத்தைச் சற்று தடுத்துக்கொண்டபோதிலும் நாலைந்தடி பின்னால் இடறிப் போகவேண்டியதாயிற்று. அந்த நிமிஷத்தில் வேலாயுதன் சட்டென்று மடியிலிருந்த துப்பாக்கியை யெடுத்துச் சுமார் எட்டேழுமழதூரத்திற் குள்ளாகவே நிற்கும் கமலநாதனை நோக்கிச் சுட்டான்.

7-வது அத்தியாயம்.

சரவணன் அபத்து நீங்கல்—அவன் தப்பறிதல்—சாசாபாயும் புஷ்பாங்கியும் சந்தித்தல்—இருவரும் அடைக்கலம் பெறல்—அவர்கள் ஆபத்தும் உதவியும்—அதிசய சம்பவங்கள்.

வேலாயுதன் தன்னைச்சுட ஆரம்பிக்கும்போதே கமல நாதன் சாக்கிரதையாய்ப் பார்த்தான். அவன் குறிபார்ப்பது அபாயத்தை யுண்டாக்கக் கூடியதாயில்லை யென்று தெரிந்தது. துப்பாக்கிவெடியின் சத்தத்தால் எங்கும் பிரதித்தொனிகிளம்பியது. கமலநாதன் அசைவற்ற ஸ்தம்பம்போல் நின்றான். குண்டு அவன் வலது காலிற் பட்டது. குண்டு சர்மத்தின்மேல் உராய்ந்து கொண்டு

போயிற்றென்று கமலநாதன் எண்ணிக்கொண்டான். ஆனல் வேலாயுதன் ஓடும்போது இவன் அவனைத் துறத்திப்பிடிக்க எத்தனிக்கையில் காலை யெடுத்துவைக்க முடியாமல் அடியற்ற மரம்போல் தரையில் விழுந்துவிட்டான்.

வேலாயுதன் இதைக்கண்டதே ஓட்டம்பிடித்தான். கமலநாதன் சற்றுநேரம் பொறுத்து எழுந்து உட்கார்ந்து காயத்தைச் சோதித்தபோது, அவன் எண்ணியபடியே அது சுலபமானகாயமே யெனினும் தற்சமயம் நடக்க முடியாதென்று தெரிந்துகொண்டான். அவன் தன் கைக்குட்டையைக்கிழித்து காயத்தைக் கட்டிக்கொண்டே, "அவன் இவ்வளவுதான் செய்யவேண்டும் மென்று கருதியவன். அவனுடைய குறிபார்க்கும் சாமர்த்தியம் நன்ருய்த் தெரிகிறது" என்று தனக்குத்தானே கூறிக்கொண்டான். பத்து நிமிஷத்திற்கெல்லாம் மெதுவாய் எழுந்து நடக்க ஆரம்பித்தான். "வேலாயுதனை இனித் தேடிச்செல்வதில் பயனில்லை. மேலும் எந்தவேளையில் அவனைப் பிடிக்க வேண்டுமாயினும் நம்மால் முடியும்' என்று எண்ணிக் கொண்டு அங்கிருந்து சரவணன் வசிக்கும் வீட்டை நோக்கி நடந்தான்.

கமலநாதன் சரவணனுடைய வீட்டிற் கருகாமையில் வரும்போது தன் எதிரில் சரவணன் அதிவேகமாய் ஓடி வருவதையும், ஒரு போலீஸ்காரன் அவனைத் துறத்திக் கொண்டு வருவதையும் கண்டான். சிறுவன் இவனைக் கண்டதும் சந்தோஷமாய் இவனருகில் வந்து நின்றுகொண்டு தன்னைத் துறத்திவரும் போலீஸ்காரனைப் பார்த்து "என்னைத்தொடாதே. உன் மண்டை பிளந்து விடும்" என்று தைரியமாய்க்கூறினன்.

போலீஸ்காரன் அவனைப்பிடிக்கக் கையை நீட்டிக் கொண்டே "மொட்டைப்பயலுக்குப் பயந்துவிடுவேனு?'

என்றான். அதற்குள் கமலநாதன் "நீ அவனைப்பிடிப்பது அப்புறம் ஆகட்டும். அவன் என்னசெய்தான்? அவனைப் பிடித்து எங்கே கொண்டுபோகப்போகிறாய்? அதை முன்னே யென்னிடம் கூறு" என்றான்.

போலீஸ்காரன்.—"உனக்கு இதைப்பற்றி என்னசம்பந்தம்?" என்றான்.

கமலநாதன் "வேறொன்றுமில்லை. நான் அவனைக் காப்பாற்றுவேன்" என்றான். போலீஸ்காரன் "நீ போலீஸ் உத்தியோகஸ்தனுடைய வேலைக்கு இடைஞ்சல் செய்கிறாய்" என்றான்.

கமலநாதன் "ஒருசமயம் அப்படியு மிருக்கலாம், அதனால் வருகிறதை நான் பார்த்துக்கொள்ளுகிறேன், நானும் உன்போலொரு போலீஸ் உத்தியோகஸ்தன்றான், எனக்கும் கொஞ்சம் அதிகாரம் இருக்கிறது, இச்சிறுவன் என்ன செய்தான்?" என்றான்.

போலீஸ்காரன்.—இவன் ஒரு பெரிய மனிதன் வீட்டு சாளரக்கதவை யுடைத்துவிட்டான். திருடப்போனவன் போல தெரிகிறது" என்றான்.

கமலநாதன்.—எந்தப் பெரியமனிதன் வீடு?

போலீஸ்காரன்.—கதிரேசம்பிள்ளையின் வீடு

கமலநாதன் புன்னகையோடு "செய்திருப்பான். சரி வுறு! என்ன சொல்லுகிறாய்?" என்றான்.

சிறுவன் நடந்த சங்கதிகளை விவரமாய்க் கூறினான். அவன் சாளரக்கதவை யுடைத்துவிட்டு கதிரேசம்பிள்ளையையும் போலீஸ்காரனையும் ஏமாற்றிவிட்டு ஓடிவந்து விட்டதைக் கூறக்கேட்ட கமலநாதன் கலகலவென்று நகைத்துச் சிறுவன் தோளைத்தட்டி "பேஷ் நீ வேலைக்காரனாவாய், தடையில்லை" என்றான். அதை யெல்லாங்கண்ட

போலீஸ்காரன் மிக்கவியப்பும் கலவரமும் அடைந்தான். அவன் சிறுவனை நோக்கி,

அப்படியானல் நீ சாளரக்கதவை யுடைத்தபின் அறையைவிட்டு வெளியில் வரவேயில்லையோ? வென்றான்.

சிறுவன்.—"இல்லை. நீயும் கதிரேசம்பிள்ளையும் போவதற்காக சாளரக்கதவை யுடைத்தேன். நீங்கள் வந்த வழியேபோனபின் நீங்கள் திறந்துவிட்டுச்சென்ற கதவின் வழியாய் நான் வந்துவிட்டேன்" என்றான்.

தங்கள் கதவைத் திறந்துவிட்டுச் சென்றது முட்டாள்தனமென்றுணர்ந்த போலீஸ்காரன் நாணமடைந்து, கமலநாதனை நோக்கி "இச்சிறுவனைக் கைதுசெய்யும்படி எனக்குக் கட்டளை யிடப்பட்டிருக்கிறது" என்றான்.

கமலநாதன்.—"சரவணனைப் பிடித்துக்கொண்டு போவதானல் என்னையும் கூடப்பிடித்துக்கொண்டுதான் போகவேண்டும்" என்று கூறிக்கொண்டே தன சட்டைக்குள் தொங்கவிட்டிருக்கும் பதக்கத்தைக் காட்டினன்.

அதைக்கண்டதே போலீஸ்காரன் கருடனைக் கண்ட நாகம்போ லொடுங்கி, "எனக்குத் தெரியாது. நான் இவனைப்பற்றி யென்னவென்று கூறுகிறது. கட்டளைப்படி நடந்துகொள்ளுகிறேன்" என்றான்.

கமலநாதன் "அவன் அகப்படவில்லை. எப்படியோ ஓடிவிட்டான் என்று கூறிவிடு" என்றான். போலீஸ்காரன் உடனே வந்தனமளித்துச் சென்றான்.

அவன் சென்றபின் கமலநாதன் சரவணனை நோக்கி, நீ இப்போது உன் வாசஸ்தலத்திற்குச் செல்லவேண்டாம், என்னோடு கூடவாவென்று கூறினன். இருவரும் சற்று நேரத்திற்குள் கமலநாதன் வசிக்கும் மனையை யடைந்தார்கள். கதவைத் தாளிட்டுக்கொண்டு இருவரும் ஒரு அறைக்

குள் உட்கார்ந்தபிறகு கமலநாதன் சிறுவனைநோக்கி "சரி இனி நீ அச்சாபீஸ் கட்டிடத்திற்குள் கண்ட விசேஷங்களைத் தாராளமாய்க் கூறலாம்" என்றான். அதன்மேல் சரவணன் தான் தாமோதரனும் குமரப்பனும் பேசிக் கொண்டிருந்ததைக் கண்டதும், தன் செவிகளில் விழுந்த சங்கதிகளும் யாவும் கூறினான்.

கமலநாதன் யாவற்றையும் கவனமாய்க் கேட்ட பின் "ஆகா! அவன் கதிரேசம் பிள்ளைக்கு என்ன சமாசாரம் சொல்லியனுப்பினனோ, அது தெரிந்தால் மிக்க அனுகூலமாயிருக்கும். ஆயினும் பரவாயில்லை. நீ இனி யவர்களிடம் சிக்காமல் சற்று சாக்கிரதையா யிருக்கவேண்டும். எதற்கும் உன் உருவத்தைச் சற்று மாற்றிக்கொள்ளவேண்டும் என்றான். சரவணனுக்குத் துப்பறியும் வேலைமேல் மிக்க நாட்டம்; அதிலும் மாறுவேட மணிந்து கொள்வதென்றால் அவனுக்கு மிக்க உற்சாகமாயிருந்தது.

மூன்றுமணி நேரங்கழித்து அச்சாபீசுக் கெதிரில் ஒரு வீட்டுப் புறத்திண்ணையில் உட்கார்ந்திருக்கும் மனிதனைப்பார்த்தால் ஒரு நாட்டுப்புறத்து மனிதன்போல் இருந்தது. அவன் தாடியும் மீசையும் நடையையும் நோக்க வயது நாற்பதிருக்கலாம் என்று மதிக்கத்தக்கதா யிருந்தது. அவன் அந்த வீட்டுத் திண்ணைமேலிருந்தாலும் அவன் பார்வைமட்டும் அச்சாபீஸின்மேலேயே யிருந்தது. அவன் சரவணன் என்று சற்றுவது கூறமுடியாது.

* * * * *

கதிரேசம் பிள்ளையின் வீட்டிலிருந்து வெளியிற்றள்ளப்பட்ட சரசாபாய் தன் தலைவிதியை நொந்து கொண்டு, "ஓ! கடவுளே! நான் ஒரு குற்றமும் செய்யவில்லையே. எனக்கேன் இவ்வகைப்பட்ட துன்பங்களை விளைவிக்கிறீர். உம்மையன்றி யெனக்கு ஒரு ஆதரவு மில்லையே. நான் உம்

மையே உறுதியான துணையாய் நம்பியிருக்கிறே னென்பது உமக்குத் தெரியாதோ? எல்லார் உள்ளத்திலும் ஒளிந் திருக்கும் தேவரீர் என்னுள்ளத்தைமட்டு மறியீரோ. ஓ பரமகருணாநிதியே! என் தந்தைக்கு நற்புத்தியைப்புகட்டி யவரை யாபத்தினின்று மீட்டருளும். ஆனாதையாகிய இவ் வேழைமேல் கடுகளவு கிருபாநோக்கம் வைத்தருளும்'' என்றிவ்வாறு பகவானைப் பிரார்த்தித்துக் கொண்டே வீதி வழியேநடந்தவள், தெய்வ செயலாய்த் தன் ஒரே சிநேகி யாகிய புஷ்பாங்கி யிருக்கும் வீதியில் பிரவேசித்தாள். உடனே புஷ்பாங்கியின் நினைப்புவர, "ஓகோ! கடவுளே நமக்கு வழி காட்டினார். புஷ்பாங்கியே இந்த ஆபத்தில் நம் மைப் பாதுகாக்கக்கூடியவள் என்று சிந்தித்துக்கொண்டே'' அவ்வீட்டிற்குள் நுழைந்தாள்.

புஷ்பாங்கி யவளைக்கண்டதும் மிக்க அன்போடு ஆலிங் கனம் செய்துகொண்டு "உனக்கென்ன ஆபத்து நேர்ந்தது? ஏன் இப்படி யிருக்கிறாய்?'' என்று மிக்க கவலையோடு விசா ரித்தாள். சரசாபாய் மெதுவாய்த் தனக்கு நேர்ந்த விபத் தைக்கூறி, புஷ்பாங்கி! நான் இங்கிருந்தாலும் வந்து பிடித் துக்கொள்வார்கள் நாம் இன்றேபுறப்பட்டு எங்காவது ஒரு கிராமத்திற்குப் போய்விடவேண்டும் என்றாள். புஷ்பாங்கி "நீ மிகவும் களைப்படைந்திருக்கிறாய். நீ என் வீட்டில் இருந்தால்தான் சந்தேகம். எனக்கொரு நெருங்கிய சுற் றத்தாள் இருக்கிறாள்; அவள் என்மேல் மிக்க பட்சமுடை யவள். நாமிருவரும் அங்கே போயிருந்து நாளைக்கு யோசி த்து எதுவும் செய்யலாம் என்றாள். சரசாபாய் அப்படியே சம்மதிக்க, இருவரும் உடனே போசனம் செய்துவிட்டு அரைமணி நேரத்திற்குள் ஒரு வண்டியிலேறிக்கொண்டு புஷ்பாங்கியின் அத்தை வீட்டிற்குச் சென்றார்கள்.

மறுநாள் இரவு ஏழுமணிக்கு இருவரும் இரயிலேறி

நகரத்தின் ஓரத்திலுள்ள ஒரு ஸ்டேஷனில் இறங்கினார்கள். இறங்கி இருவரும் ஸ்டேஷனைவிட்டு ஒரு பாதை வழியே போய்க்கொண் டிருக்கையில், பின்னால் யாரோ ஒரு ஆள் வருவதுபோல் தோன்றியது. இவர்களுக்கு மிக்க பயமுண்டாய் விட்டது. துரிதமாய் நடந்தார்கள். மழைதூற ஆரம்பித்தது. இரண்டு கன்னிகைகளும் தூரத்திலிருந்து திரும்பிப் பார்த்தார்கள். அச்சமயம் அம்மனிதன் பாதையிலிருந்த ஒரு இராந்தலுக் கருகில் வந்துகொண்டிருந்ததால் இருவரும் அவனை யுற்றுநோக்கினார்கள். சரசாபாய் அவன் உருவத்தைக் கண்டதும் அலறிக்கொண்டு மரமும் செடிகளும் அடர்ந்திருந்த ஒருவழியே திரும்பியோடினாள், புஷ்பாங்கியும் பின்னால் ஓடிக் கொண்டே என்ன என்ன வென்றாள்.

சரசாபாய் அவன்றான் கொள்ளிவீரன். துரிதமாய்வா, காட்டிற்குள் நுழைந்து விடுவோம் என்று ஓடினாள். மழை பலமாய்ப் பெய்கிறது. இருவரும் கலவரத்தால் இன்ன வழி போகிறோமென்று கவனிக்காமலே யோடினார்கள்.

அவர்கள் துரிதமாயோடவே பின்னால் வருகிறவன் அதிக துரிதமா யோடிவர ஆரம்பித்தான். கடைசியில் அவன் இவர்களைத்தாண்டி வழிக்குக் குறுக்கே நின்று கொண்டு, பயப்படவேண்டாம் நில்லுங்கள் என்றான். சரசாபாய்க்கு அவனைக்கண்டதும மனதிற் பெருந்திகில் உண்டாயிற்று. ஏனெனில் அவள் முன் கூறியபடியே அவன் கொள்ளிவீரனே. அவன் சரசாவை நோக்கி "நீ யென்கூட வரவேண்டுமென்று அதிகாரத்தோடு கூறினான். சரசாபாய் மிக்கபயமும் துயரமுமடைந்து "ஐயோ! நான் வரமாட்டேன். என்னைத் தொந்திரவு செய்வதற்கு உனக்கு ஒரு நியாயமுமில்லை. எங்களுக்கு வழிவிடு நாங்கள் போகவேண்டும்" என்றாள். அந்த முரடன் உடனே எட்டி அவள்

புயத்தைப் பிடித்துக்கொள்ள புஷ்பாங்கி "ஐயா அவளை விட்டுவிடு அவள் உன்னை யென்ன செய்தாள்" என்றாள். அத்துஷ்டன் இவள் வார்த்தைகளைச் சட்டை செய்யவே யில்லை. சரசாபாய் கோவென்றலறிக் கூவினாள்.

அநேகமிடம் பக்கத்திலிருந்த புதர்களை விலக்கிக் கொண்டு உயரமான நிழல்போன்ற ஒரு உருவம் பாய்ந்து வந்ததும், கொள்ளிவீரனை முகத்தில் ஒரு குத்துவிட்டதே அவன் தட்டென்று சரசாபாயைப் பிடித்திருந்த பிடியை விட்டுவிட்டு. வந்தவன்பக்கம் திரும்பிக் கோபத்தோடு கையை யோங்கினான். அவனோ இவன்கை தன்மேல் தாக்காதபடி சட்டென்று இலகுவாய் ஒருபக்கம் ஒதுங்கிக் கொண்டு இவன் மறுபடி கை யெடுப்பதற்குள், பட் பட் என்று முகத்தில் இரண்டு மூன்று குத்துவிடவே வீரன் குப்புறத் தரையில் விழுந்தான்.

சரசாபாய் தான் விடுபட்டதே தனக்கு உதவி செய்தவன் யாரென்பதையும் கவனிக்காமல் புஷ்பாங்கியின் கரத்தைப் பிடித்து இழுத்துக்கொண்டு இருட்டில் நுழைந்து ஓட்டம்பிடித்தாள். இருவரும் நெடுந்தூரம் ஓடியபின் பெருமூச் செறிந்துகொண்டு நின்று திரும்பிப் பார்த்தார்கள். யாரும் காணோம். சமீபத்தில் ஒரு பாழடைந்த குடிசை யிருந்தது. மழையில் வெளியில் அடிபடுவதை விட இக் குடிசையிலாவது சற்று தங்கலாமென்று அதில் வீழாமல் மீந்திருந்த கூரையின் கீழ் பதுங்கிக்கொண் டிருந்தார்கள்.

சற்றுநேரம் பொறுத்து மழை தணிந்தது. இருவரும் புறப்படலாமா வென்று சிந்தித்தார்கள். அச்சமயம் புஷ்பாங்கி "ஆ! அதென்ன சத்தம்?" என்று சரசாளைச் சீண்டினாள். சரசாள் "ஒன்றும் கேட்கவில்லையே" என்றாள். புஷ்பாங்கி "இல்லை யில்லை. என்னமோ ஒரு பயங்கரமான சத்தம்—அது மனுஷர் சத்தமல்ல—பிசாசோ?" என்றாள்.

அச்சமயம் அச்சத்தம் மறுபடி யுண்டாயிற்று. சரசாள் "சே பேயல்ல பிசாசல்ல, அதோ கேட்கிறது அது வேட்டைநாயின் சத்தம்" என்றாள். நாயின் சத்தம் மேலும் மேலும் கிளம்பியது. வரவர சமீபத்தில் வருவது போலிருந்தது. பிறகு அச்சத்தம் திடீரென்று நின்றுவிட்டது; மறுபடி சற்றுநேரம் சத்தமேயில்லை.

இருவரும் எழுந்து குடிசையின் வாசற்படியண்டை வந்து நின்று உற்றுக்கேட்டார்கள். சமீபத்தி லிருக்கும் புதர்களில் ஏதோ நுழைந்து வருவதுபோல சலசலவென்று சத்தம் யுண்டாயிற்று. அச்சத்தம் இன்னும் அதிகமாய்ச் சமீபத்தில் வந்தது. இருவருக்கும் பயத்தால் நடுக்கம் உண்டாய்விட்டது. வேட்டைநாயின் சத்தம் காலடியிற் கேட்பதுபோ லிருந்தது. உடனே பயங்கரமான ரூபத்தை யுடைய ஒரு பெரிய வேட்டைநாய் இவர்கள் எதிரில் வந்தது.

அது உடனே இவர்களருகில் வந்தது. அந்நாயின் நீர் வடியும் தேகம் சரசாளுடைய கையில் உராய்ந்தது. அவள் பட்சத்தோடு அதன் தலைமேல் தடவிக்கொண்டே "புஷ்பா! இதற்கு நாம் பயப்பட வேண்டியதில்லை. இது நல்ல நாய்" என்றாள். மறு நிமிடம் மனிதர் காலடிச்சத்தம் கேட்டதும் "வீரா! எங்கே யிருக்கிறாய்?" என்று ஒரு கெட்டியான சத்தம் கேட்டது.

நாய் என்ன காரணத்தாலோ அவன் கூப்பிடுவதைக் கவனிக்கவில்லை. அது இவர்கள் இருவர் கால் மாட்டிலும் படுத்துக்கொண்டு அசையாம லிருந்தது. எங்கே நாய் என்று ஆத்திரத்தோடு மறுபடியும் அம்மனிதன் கேட்டான். இருவரும் நிமிர்ந்து பார்த்தபோது சற்று தூரத்தில் ஒரு மனித உருவம் சாக்கிரதையோடு நடந்து வருவதைக் கண்டார்கள்.

புஷ்பாங்கி.—"நாம் ஓடிப்போய் விடலாமா?" என்றாள்.

சரசாபாய்.—பொறு. அந்தக் குரலை யெங்கோ கேட்டிருக்கிற நினைப்பாயிருக்கிறது. எனக்கு அறிமுகமான மனிதனுகவே யிருக்கவேண்டும். ஆயினும் நம் வரையில் சாக்கிரதையா யிருப்போம்; இந்தக் குடிசை அம் மனிதனுடையதா யிராது. மேலும் நாமேன் வீணாய்ப் பயந்து கொள்ளவேண்டும். இதோ வருகிறான். நான் அவனைக் கேட்கிறேன் என்று கூறிவிட்டு,

"நீ—யாரையா?" என்றாள்.

அம்மனிதன் இவர்களைக் கண்டதும் திடுக்கிட்டு வியப்படைந்து, "ஆ! இந்தவிடத்தில் ஒரு பெண்பிள்ளை, ஆகா! இரண்டு பேரிருக்கிறார்கள்" என்று கூறிக்கொண்டே தான் தன்னுடைய சட்டைக்குள் மறைத்து வைத்துக் கொண்டிருந்த இராந்தலை வெளியிலெடுத்து, எதிரில் நிற்பவர்களைக் கண்டதும் "ஆ! சரசாபாய்!" என்றான். சரசாபாய் அவன் முகத்தைக் கண்டதும், ஆ! தாமோதரம், காணமற்போன போர்மென் என்று திப்பிரமையோடு கூவினாள்.

கதிரேசம்பிள்ளையின் அச்சாபீஸில் ஒளித்துக்கொண்டிருந்த தாமோதரமே இவர்கள் எதிரில் நின்றவன். அவன் அக்குடிசையின் உள்ளே வந்து நின்று "சரசாபாய்! நான் உன்னைப் பார்த்து ஓடிவிட மாட்டேன்" என்று நிம்மதியாய்க் கூறினான்.

சரசாபாய்.—"யாரிடத்திலிருந்தேனும் நீயேன் ஓடிப்போக வேண்டும்" என்று கூறிக்கொண்டே அவனைச் சந்தேகத்தோடு பார்த்தபடி நின்றாள்.

தாமோதரன்.—"அதைச் சுலபத்தில் கூறமுடியாது. நீ கூட ஓடியா வந்து விட்டாய்? உன்னைக்கூடவா சந்தேகிக்கிறார்கள்?" என்றான்.

சரசாபாய்.—என்ன சந்தேகிக்கிறார்களோ எனக்குத் தெரி

யாது. ஆனால் அவர்கள் என்னைப் பிடிக்கப் பார்க்கிறார்கள்—ஒரு சமயம் சாக்ஷியாய் விசாரிக்க—இன்னம் யாரையோ சந்தேகிக்கிறார்கள்.

தாமோதரன்.—யாரை?

சரசாபாய்.—நான் சொல்வதைப்போலவே நீயும் உத்தேசித்துக்கொள்ளலாம்.

தாமோதரன்.—உன் தந்தையை யென்று நினைக்கிறேன்.

சரசாபாய்.—அவர் யாருக்கும் ஒரு கெடுதியும் செய்யாவிட்டாலும் எல்லாவற்றிற்கும் அவர்மேல் சந்தேகிக்கிறதே.

தாமோதரன்.—சரசாபாய்! ஒரு சமயம் அவர்கள் நினைப்பது மெய்யாகவே யிருக்கலாம். வேலாயுதன் மிக்க முரட்டுக்குண முடையவனே.

சரசாபாய்.—அவர் நிரபராதி. அது உனக்கும் தெரியும்.

தாமோதரன்.—எனக்குத் தெரியுமா?

சரசாபாய்.—ஆம் உனக்குத்தான். சபாபதிப்பிள்ளையை யார் கொன்றதென்று நீ யறிவாய். நான் நீயே செய்தாயென்று பேர்பாதி நம்புகிறேன்.

இதைக்கேட்டதே தாமோதரன் முகம் சிவந்துவிட்டது. அவன் கோபத்தோடு "நீ கூறுவது பொய்யென்று நான் ருசுப்படுத்துவேன். ஆனால் சுட்டவன் யார் என்று எனக்குத் தெரியு மென்பதை யென்னமோ நான் ஒப்புக்கொள்ளுகிறேன். உனக்குப் பிரியமானால் குற்றவாளியின் பெயரை வேண்டுமாயின் கூறுகிறேன்" என்று கூறினான்.

சரசாபாய்.—சுட்டவன் இன்னவனென்று உனக்குத்தெரிந்திருந்தால் குற்றவாளியை ஏன் மறைத்து வைக்கிறாய்?

தாமோதரன்.—உனக்கு அது தெரியவில்லையா?

சரசாபாய்.—எனக்குத் தெரியவில்லை.

தாமோதரன்.—நான் பலதரம் உனக்குச் சொல்லி யிருப்பது

இன்னதென்று உனக்குத் தெரியும். நான் உன்னை மணம்புரியப் பிரியமாயிருக்கிறேன். உனக்குக் கொஞ்சம் துயரத்தை நீக்குவதானால் நான் எவ்வளவு கஷ்டத்தையேனும் ஏற்றுக்கொள்வேன்.

இவன் எவ்வளவோ இரக்கத்தோடு கூறினாலும் சரசாபாயின் பார்வையால் அவள் இவன் வார்த்தைகளை நம்பவில்லையென்று தெரிந்தது. அவள் சாந்தமாகவே 'நான் உன் வார்த்தைகளை நம்பவில்லை. நீ உன் சொந்த நன்மைக்கன்றி, வேறு எனக்காகவாவது இன்னம் யாருக்காகவாவது, எவ்வளவு கஷ்டத்தையும் ஏற்றுக்கொள்ள மாட்டாய்'' என்றாள்.

அவன் நான் உனக்காக உன் தகப்பனை மறைத்து வைப்பேன் என்றான்.

சரசாபாய் —நான் இதைச் சொல்லும்படி யுன்னைக் கேட்கவில்லை. சபாபதிப் பிள்ளையைக் கொன்றவனை நீ பார்த்ததாய்க் கூறுகிறாய். நான் என் தந்தை குற்றம் செய்ததாய் நம்பவில்லை. அவர் செய்திருந்து அது உனக்குத் தெரியுமானால் கூறு. சந்தேகத்தைவிட உண்மை முடிவைத் தெரிந்து கொள்வது நலமல்லவா. உண்மையை யறிந்துகொள்ள எனக்கு நியாயமிருக்கிறது. எதோ நேராய் என் கண்களைப் பார்த்து உண்மையைக் கூறு பார்ப்போம்.

அப்படி கூறும்போது அவள் முகம் வெளுத்து கண்கள் பிரகாசித்தன. தேகத்தில் சற்று நடுக்கமுண்டாயிற்று. தாமோதரன் குடிசையைச் சூழ்ந்திருக்கும் இருளைப் பார்த்துக்கொண்டே சற்றுநேரம் நிதானித்தான். பிறகு சரசாபாயை நோக்கிக் குனிந்து, "சரசாபாய், நான் கூறுவதைக் கேள். இக்கொலையைப்பற்றி எனக்குத் தெரிந்ததையெல்லாம் கூறுகிறேன்'' என்றான்.

சரசாபாய் தன்னருகி லிருக்கும் கன்னிகையை நோக்கி, "புஷ்பாங்கி, நீ சற்று எட்டப்போயிரு; இவன் கூறுவதை முதலில் நான் கேட்கவேண்டும். பிறகு உனக்குக் கூறுகிறேன்" என்றாள். புஷ்பாங்கி அவ்வாறே எட்டச் சென்றாள்.

தாமோதரன் (சரசாவை நோக்கி).—நான் கூறப்போவது ஒரு சிறு கதை. ஆனால் அதற்கு முன்னடி சில விவரங்கள் கூறவேண்டும். கொலை நடந்ததினம் காலை நான் அச்சாபீசுக்குச் சென்றவுடனே உன் தகப்பன் ஆபீஸ் அறைக்குள்சென்றதைக் கண்டேன். இது நீ சபாபதிப் பிள்ளையைப் போய்க்கண்டதற்கு முன்பு. நீ சென்றதையும் நான் பார்த்தேன். பிறகுநான்—"

என்று இவ்வாறு சரசாபாயின் முகத்தைப் பார்த்துக் கொண்டே கூறிக் கொண்டிருந்தவன் வாசற்படிக்கப்பால் எட்ட நோக்கினன். உடனே அவன் கண்களில் பயம் தோன்றியது. அவன் முகம் வெளுத்து விட்டது. அதே நிமிஷம் ஒரு நிழல் வருவதுபோல் தோன்றியதும் நெட்டையான ஒரு ஆள் குடிசையின் வாயிற்படிக்கு எதிரில் வந்து நின்றான்.

சரசாபாய் தாமோதரன் முகத்தில் தோன்றிய பயத்தைக் கண்டு திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தாள். உடனே அவனை விட அதிக பயமும் நடுக்கமும் அடைந்தாள். ஏனெனில் அங்கே நின்ற உயரமான தடித்த உருவம் ஜீவாஜி என்னும் பிரக்யாதி பெற்ற துப்பறியும் உத்தியோகஸ்தன். வழி கிடைத்தால் சரசாபாய் ஓட்டமெடுக்கத் தடையேயில்லை. ஆனால் வழியில்லை. குடிசைக்குள்ள ஒரே வழியில் ஜீவாஜி நின்றுகொண்டிருக்கிறான். எமனுக்குத் தப்பினாலும் தப்பலாம், அவனுக்குத் தப்பமுடியாது. ஜீவாஜி ஓரடி முன்னுக்கு வந்து பக்ஷத்தோடு,

"ஏதோ உங்களை விழுங்கிவிட வந்த பூதத்தைப்பார்ப் பதுபோல் பார்க்கிறீர்களே ஏன் ?" என்றான்.

சரசாபாய் மட்டுமே வாய்திறந்து பேச வாரம்பித் தாள். அவள் நிதானமாய் "ஐயா ! தங்களுக்கு என்ன வேண்டும் ?" என்றாள்.

ஜீவாஜி.—உனக்குக் கெடுதி செய்யவேண்டு மென்பது என் பிரியமல்ல. உனக்குப் பிரியமிருந்தால் உதவி செய்ய வேண்டு மென்பதே என் விருப்பம்.

சரசாபாய்.—எங்களுக்கு ஒரு உதவியும் வேண்டுவதாயில் லையே ஐயா.

ஜீவாஜி.—சற்று நேரத்திற்கு முன் உங்களுக்கு உதவி வேண்டியதா யிருந்ததே.

சரசாபாய்.—நீர் கூறுவது ஒன்றும் தெரியவில்லை.

ஜீவாஜி.—நீங்கள் ரயில் ஸ்டேஷனிலிருந்து வந்துகொண்டி ருக்கையில், அந்த முரட்டுப்பயல் உனக்கு இடையூறு செய்ய எத்தனித்தபோது.

சரசாபாய்.—அப்போது வந்து உதவிசெய்து எங்களைக் காப் பாற்றியது நீர்தானோ ?

ஜீவாஜி.—நான் தற்செயலாய் சமீபத்திலிருக்க நேர்ந்தது. அவனுக்கு நன்றாய் புத்திவரும்படி செய்தேன். பிறகு இன்னம் யாரிடத்திலாவது அகப்பட்டுக்கொள்ளு கிறீர்களோவென்று பார்ப்பதற்காக வந்தேன்.

சரசாபாய்.—அந்தத் துஷ்டனைப் போகும்படி விட்டு விட் டீர்களோ?

ஜீவாஜி.—அவனை தண்டித்தபின் விட்டுவிட்டேன், என் விவகாரத்திற்குத் தற்சமயம் அவனை யப்படி விட்டு வைப்பதே மிக்கநலமென்று தோன்றியது. இப்போது மறுபடி இன்னொரு தொந்தரவிலிருந்து உன்னைக்

காப்பாற்றவே இங்கே நான் சமயத்திற்கு வந்து விட்டேன்போல் காண்கிறது.

இக்கடைசி வாக்கியத்தைக் கூறும்போது ஜீவாஜி தாமோதரன் முகத்தை யுற்றுநோக்கினன். தாமோதரன் உடனே தலையைத்தொங்கவிட்டு கருடனைக் கண்ட நாகம் போல் நடுக்கங்கொண்டு மெதுவாய் அப்புறம் நகர்ந்தான். ஆயினும் தூரத்திற்குச் செல்ல வழியில்லை. ஜீவாஜி மறுபடி கூறத்தொடங்கி சரசாபாயை நோக்கித் தாமோதரனைச சுட்டிக் காட்டி,

"இந்த வாலிபன் உன்மேல் மிக்க காதல்கொண்டு உனக்கு உதவிசெய்ய அதிக ஆவலோடிருக்கிறன். உன் அன்பைப் பெறுவதற்காக உன்மனதிற்குப் பெரிய துயரத்தை யுண்டாக்கச் சித்தமா யிருக்கிறன். ஆகா! இவன் அன்பே அன்பு. இவன் நிரம்பத்தீரமுடைய சுத்த வீரன். உன்னிடத்தில் இவன்கூற ஆரம்பித்த முழுப் புளுகை யின்னம் கூறும்படி விடட்டுமா அல்லது இவன் யோக்யதைக்குத் தக்க மரியாதை செய்யட்டுமா?" என்று கூறிவிட்டு, கடகட வென்று நடுங்கிக் கொண்டிருக்கும் தாமோதரனை நோக்கி,

"நீ ஆரம்பத்திலேயே பொய்யோடு ஆரம்பித்தாய். இன்னும் மற்ற பொய்களும் வெளியில் வரவிருந்தன. ஆகையால் அவைகளை யென்னிடம் அளக்காதே; என்னிடம் அவை செல்லமாட்டா. வேலாயுதம் பிள்ளை அதாவது சரசாபாயின் தகப்பன் சபாபதிப்பிள்ளையைச் சுடவில்லை யென்பதும், கொன்றவன் இன்னவனென்ற சந்தேகமட்டுமே யன்றி, இக்கொலையைப்பற்றி வேறெந்த சங்கதியும் அவனுக்குத் தெரியாதென்றும், அவன் எவ்விதத்திலும் இதில் சம்பந்தப்படவேயில்லை யென்றும் உனக்கு நன்றாய்த் தெரியும். கொலை செய்தவன் யாரென்று

உனக்குத் தெரியும். நீ வேணுமென்றே யதைக் கூறாமல் மறைக்கிறாய். ஆகையால் சட்டப்படி நீ யக்கொலைக்கு உடந்தையா யிருந்தவனே யாகிறாய். இப்போது நான் உன்னைப் பிடித்துக்கொண்டு போகப் போகிறேன்" என்று கூறிக்கொண்டே நீட்டிய கரங்களோடு தாமோதரனைப் பிடிக்க முன்னுக்குச் சென்றான்.

தாமோதரன் சட்டென்று மடியிலிருந்த கைத்துப்பாக்கியை யெடுத்து கரத்தைத் தூக்கினான். ஜீவாஜி யவ்வளவு சுலபத்தில் ஏமாந்து விடுகிறவ னல்லவென்று அந்த மூடனுக்குத் தெரியாது. துப்பாக்கி பிடித்த கையைத் தூக்கும்போதே ஜீவாஜி தட்டிய ஒரு தட்டால் துப்பாக்கி பத்துமுழத் தூரத்தில் போய்விழுந்தது. வாலிபன் திகைத்து சமாளிப்பதற்குள் ஜீவாஜி யவன் கன்னத்தில் கொடுத்த அறையால் அவன் இடறிப்போய் குடிசையின் சுவரில் மோதிக்கொண்டான். ஜீவாஜி அதே நிமிஷம் அவன் தோளைப் பிடித்து இரண்டு சுற்று சுற்றித் தரையில்மோத வாலிபன் குப்புறக் கீழே விழுந்தான். ஜீவாஜி யுடனே தன் வலது முழங்காலால் அவனைத் தரையில் அழுத்திக்கொண்டு ஒரு நொடிக்குள் அவனுடைய இரண்டு கைகளுக்கும் விலங்கு பூட்டி விட்டான்.

8-வது அத்தியாயம்

ஜீவாஜியின் அதிசய ஆராய்ச்சிகள்—கள்ளநாணயம் செய்யுமிடம்—துமரப்பனும் ஜீவாஜியும்—கமலநாதன் மனக்கலக்கம்—கமலநாதனும் துமரப்பனும்—இரண்டு துப்பறியும் சிங்கங்களும் சம்பாஷித்தல்.

தாமோதரன் சாசாபாயின் எதிரில்நின்று அகங்காரத்தோடு பேசிக்கொண்டிருந்த கால் மணி நேரத்திற்குள் கைக்கு விலங்கிட்டுச் சிறையாக்கப்பட்டான்.

சரசாபாய் இருகரங்களாலும் தன் முகத்தை மூடிக்கொண்டு சற்றுநேரம் பேசாமலிருந்தாள். அவள் அவ்வாறு நின்றுகொண்டிருக்கையில் ஒரு மிருதுவான அஸ்தம் அவள் கன்னத்தின்மேல் வைக்கப்பட்டது. புஷ்பாங்கி செவியண்டை குனிந்து அழுயிற் கண்டபடி கூறினாள்.

“தமலைகாதன், இந்த ஜீவாஜி இவர்களிருவரும் நமக்குக் கெடுதி செய்வார்களென்று நாம் பயந்து ஒளிப்பது பிசகென்று நினைக்கிறேன். இருவரும் பக்ஷமுள்ளவர்கள் போலவே காண்கிறது. நாம் இவர்களை நம்புவோம், இவர்கள் அப்படி நம்பிய நம்மைத் துரோகம் செய்தால் கடவுள் எப்படியும் இவர்களைத் தண்டிக்காமல் விடமாட்டார்” என்றாள்.

சரசாபாய் சட்டென்று தன்முகத்தை நிமிர்த்தி ஜீவாஜியை நோக்கி, “நாங்கள் உம்மோடுகூட நகரத்திற்கு வந்துவிடுகிறோம். நீர் எப்படி நடந்துகொள்ளச் சொல்லுகிறீரோ அப்படியே நடந்துகொள்ளுகிறோம்” என்றாள். ஜீவாஜி அவளை நோக்கிச் சந்தோஷத்தோடு, “அம்மா குழந்தாய்! நீ கொண்ட தீர்மானத்திற்கு ஒருபோதும் மனஸ்தாபப்பட நேரிடாது” என்றான்.

அங்கிருந்து நால்வரும் இரயில் ஸ்டேஷனுக்குச் சென்றார்கள். ஜீவாஜி தன் கைதியை யொருகையிற் பிடித்துக்கொண்டே இரண்டு கன்னிகைகளையும் அழைத்துக் கொண்டு சென்றான். இவர்கள் இரயில் ஸ்டேஷனுக்கு வந்ததும் வண்டியும் வந்தது. உடனே யிவர்கள் வண்டி யேறி நகரத்தில் வந்து இறங்கினார்கள். சரசாபாயும் புஷ்பாங்கியும் புஷ்பாங்கியின் வீட்டிற்குச் சென்றார்கள். ஜீவாஜி சாக்ஷிகளைக் கொண்டு கொலைக் கேஸை ருசுப்படுத்தவேண்டிய காலம் வரும்வரைக்கும் தாமோதரனை மறைத்து வைப்பதற்காகத் தகுந்த ஒரு இடத்திற்கு அழைத்துக்கொண்டு சென்றான்.

ஜீவாஜி செல்லும்போது சரசாபாயை நோக்கி "நான் சாயரட்சைவந்து உன்னைக் காண்கிறேன். கூடுமானல் உன் தந்தை யிருக்குமிடத்தை யறிந்துவந்து கூறுகிறேன்" என்ருன். ஆனல் மாலைப்போதானபோது ஜீவாஜி வராமற் போகவே சரசாபாய்க்கு துயரமாய்விட்டது. நேரமாக ஆக அவள் மனத்துயரம் அதிகமாய்விட்டது. "அவனுக்கு ஏதோ இடையூறு நேரிட்டிருக்கவேண்டும். அல்லது அவன் நம்மைத் துரோகம் செய்ததாயிருக்கவேண்டும்" என்று சிந்தித்துக்கொண்டாள். சரசாபாய் தன் அபிப்பிராயத்தைப் புஷ்பாங்கிக்குக் கூறியபோது புஷ்பாங்கி,

"அந்த ஆள் தன்வாக்குத்தத்தத்தை யொருபோதும் மறந்துவிடமாட்டான். ஏதோ அசந்தர்ப்பம் நேரிட்டிருக்கவேண்டும்" என்ருள். சரசாபாய், அப்படியானல் என் தந்தைக்கு ஏதோ ஆபத்து நேர்ந்ததுபோ லிருக்கிறது. இச் சந்தேகம் என்னல் சகிக்கக் கூடியதாயில்லை. அவர் வழக்கமாய் இருக்கும் இடங்களைப் போய் பார்க்க வேண்டும். முன் எத்தனையோதரம் செய்ததைப்போல் இப்போதும் போய் அவர் க்ஷேமத்திற்கு வேண்டியவைகளைச் செய்யவேண்டும். உனக்கு என்னேடுவர பயமாயிருக்கிறதோ?" என்று கேட்டாள்.

புஷ்பாங்கி "நீ துணிந்து போகும்போது நான் ஒருக்காலும் பயப்படவே மாட்டேன்" என்ருள். சரசாபாய் "அப்படியானல் துரிதமாய்ப் புறப்படலாம் வா" என்ருள்.

அதேப்படி இரண்டு கன்னிகைகளும் உடனே புறப்பட்டு வீதியின் வழியே நடந்தார்கள். வீதிவீதியாய்க்கடந்து கடைசியில் மிக்க அபாயமான ஒரு வீதிக்கு வந்தார்கள். அது கொடிய துஷ்டர்கள் வாசம் செய்யுமிடமென்று அவர்களுக்குத்தெரியும். அவ்வீதியின் மத்தியில் செல்லும்

போது, வீதியின் மறுமுனையில் யாரோ கூச்சலிடுஞ் சத்தம் கேட்டது. உடனே ஒரு மனிதன் பிராணு பத்துக்குத் தப்பி போடுகிறவன்போல் அதிவேகமாய் ஓடுவதைக் கண்டார்கள்.

சரசாபாய் உற்றுநோக்கியதும் "ஆ! அது என் தந்தை" என்று ஆவலோடு கூறினுள். இது இப்படியிருக்க, ஜீவாஜி இக்கேஸில் பிரவேசித்த விஷயம் எவ்வாறென்பதைப் பற்றிமுன்னே கூறுவாம். இக்கொலை விஷயம் தன் செவியில் விழுந்ததே, ஜீவாஜி தன் மனதிற்குள் ஏற்பட்ட ஒரு சித்தாந்தத்தின்படி குற்றவாளியைக் கண்டு பிடிப்பதென்று தீர்மானம் செய்து கொண்டான். இவனுடைய விசாரணையில் கொள்ளிவீரன் வேலாயுதனுக்குச் சொல்ப அபிமுகமானவனென்று தெரியவந்தது. இதுவுமன்றி வேலாயுதன் எவ்வளவு செட்ட நடவடிக்கை யுடையவனுயிருந்தாலும் இப்படிப்பட்ட கொலைக்குற்றம் செய்யத் துணியமாட்டானென்றும், கொள்ளிவீரனே எந்தப் பாதகத்திற்கும் பின்னிடையாத பரம துஷ்டனென்றும் அவனுக்குத் தெரியும்.

முன் கூறப்பட்ட சங்கதிகள் நடந்ததினத்திற்கு முன் தினம் மாலை ஜீவாஜி மாறுவேட மணிந்து கொள்ளிவீரன் வாலாயமாய்ப்போகும் பாதையில் நின்றுகொண்டிருந்தான். சுமார் நான்கு நாழிகை நேரம் கழித்து வீரன் பாதைக்கு மறுபக்கம் வருவதைக்கண்டான். அவனுடைய நடையாலேயே ஜீவாஜி யவனை யறிந்துகொண்டான். வீரன் மகா தந்திரசாலி. கைக்கு அகப்படாமல் நழுவிவிடுவதில் மிக்க கெட்டிக்காரன். ஆயினும் ஜீவாஜி யவனுக்குத் தோற்றவனல்ல. வீரன் ஆற்றோரத்தில் இருந்த ஒரு பெரிய சிகப்புக் கட்டிடத்திற்குள் நுழைவதைக் கண்டான்.

அந்தக் கட்டிடத்தின் பக்கத்தில் ஒரு புராதனமான

சாமான் கிடங்கு இருந்தது. அதற்கு அப்புறம் ஒரு பெரிய சாராயம் காய்ச்சும் கிடங்கு இருந்தது. ஜீவாஜியின் மனதில் ஏதோ சந்தேகமான விவகாரம் நடப்பதாய்த் தோன்றிய படியால் சரசர வென்று நடந்தான். அந்த வீட்டில் யாரோ வசிப்பதாய்த் தெரிந்தது. ஏனெனில் வீரன் கதவைத்தட்டியதே யாரோவந்து கதவைத்திறந்தார்கள். இருவர் வாசற்படியண்டை பேசும் சத்தம் மட்டும் ஜீவாஜிக்குக் கேட்கிறது. ஆனால் வார்த்தை யொன்றுகூட இவன் காதில் கேட்கவில்லை.

இருவரும் உள்ளே சென்றபின் கதவை மூடிக்கொண்டார்கள். அதன் பிறகு ஜீவாஜி அந்தக் கட்டிடத்தைச் சுற்றிப்பார்த்தான். வீட்டின் முன்னுவது பின்னுவது தீப மில்லை. பக்கத்தில் இருந்த சாராயக்கிடங்கில் இரவும் பகலும் சதா எந்திரங்களின் இரைச்சல் காது செவிடுபடும்படியிருந்துகொண் டிருப்பதால் அச்சந்தடியில் வேறே எந்தத் தொழில் நடந்தாலும் சத்தம் கேட்காது. ஆகையால் கள்ளத்தனமாய் ஏதாவது செய்கிறதற்கு அது தகுந்த விடம். இதையெல்லாம் ஜீவாஜி யுணர்ந்துகொண்டான்.

ஜீவாஜி அக்கட்டிடத்தின் பின்பக்கம் போய்ப்பார்த்த போது அங்கே யொரு நாய் இருப்பதைக்கண்டான். அது ஒரு விடத்தில் கட்டப்பட்டிருந்தது. இருட்டில் அதன் உருவம் நன்றாய்த் தெரியாவிட்டாலும் அது போட்ட சத்தத்தாலும் சங்கிலியை யிழுத்துக்கொண்டிருந்த மாதிரியாலும் அது பெரிய பலமுடைய நாயென்று யூகித்துக் கொண்டான். கட்டிடத்தைச் சுற்றிப்பார்த்த பின் ஜீவாஜி யுள்ளே யெப்படி நுழையலாமென்று பார்த்தான். சாளரங்களைத் திறக்கப்பார்த்தான்; முடியவில்லை. ஒரு விடத்தில் நிலக்கரி கொட்டுவதற்காக ஒரு பக்கத்துச்சுவரில் ஒரு சிறு கதவிருந்தது. அது உள்பக்கம் தாளிடப்பட்

டிருந்தது. ஜீவாஜி தன்னிடமிருந்த ஒரு சிறு கத்தியால் தாழ்ப்பாளைத் தள்ளிவிட்டு கதவைத்திறந்து சாக்கிரதையாய் கள்ளனைப்போல் உள்ளிருக்கும் நிலக்கரியின் குவியல் மேல் முன்னே காலை விட்டுப்பார்த்தான். பிறகு அங்கே பூமியிருக்கிற மாதிரியைத் தெரிந்துகொண்டு உள்ளே நுழைந்தான். இப்போதிவனிருப்பது கரி கொட்டிவைத்திருக்கும் ஒரு அறை. எங்கும் இருட்டாயிருந்தது. உற்றுக் கேட்டான். ஒரு சந்தடியுமில்லை. அதை விட்டு அப்புறம் சென்றால் மறுபடி அந்தவிடத்திற்கு வர வழி தெரியாது. எதிரினில் ஒரு அடிக்கு முன்னிருப்பது தெரியவில்லை. திக்குத்திசையும் தோன்றவில்லை. ஆகையால் தீபவெளி வேண்டியது அவசியமாயிருந்தது. தன்னிடமிருந்த ஒரு நெருப்புக்குச்சியைக் கிழித்துப்பார்த்தான். சற்று தூரத்தில் ஒரு வாசற்படியும் நெருக்கமான மரப்படிக்கட்டுகளும் தெரிந்தன. கதவு பலகைக்கதவு. அதற்கப்புறம் என்ன இருப்பதும் தெரியாது. அந்தவிடம் சாராயக்கிடங்கின் பக்கமாயிருக்கிறது. சாராயக்கிடங்குகளுக்கெல்லாம் நிலவறைகளிருப்பதுண்டு. அப்படியிருக்குமோ அப்புறமிருக்குமிடம் என்று நினைத்தான்.

மெதுவாய்க் கதவண்டை சென்றான். கதவு சும்மா சாத்தப்பட்டிருந்தது. திறந்துகொண்டு அப்புறம் சென்றான். அந்தவிடம் ஒரு சுரங்கவழிபோல் தோன்றியது. வழி சுமார் நான்குமுழ அகலமேயிருந்தது. கைகளைவிரித்தால் இருபக்கச் சுவர்களும் தட்டுப்பட்டன. இடம் நீர்மயமாய் இருந்தது. அந்தவிடம் பக்கத்திலிருக்கும் ஆற்றின் நீர்மட்டத்திற்குக் கீழிருப்பதால் எப்போதும் ஈரமாய்த்தானிருக்கும். சற்று தூரம் சென்றதே வழி திரும்பியது. தூரத்தில் மினுக்கு மினுக்கென்று சொல்ப வெளிச்சம் தோன்றியது. வெளிச்சம் இரண்டு மூன்றிடங்களில் சிற்றுக்

கீற்றுகளாய்த் தோன்றியதால் ஏதோ வெடிப்பு அல்லது பிளவுகளின் வழியாய்த் தெரியும் வெளிச்சமென்று தெரிந்தது.

ஜீவாஜி ஆவலோடு சாக்கிரதையாய்ச் சென்றான். கடைசியில் வெளிச்சத்தினருகிற் சென்றான். அங்கே ஒரு கதவிருந்தது. அது பூட்டியிருப்பதும் சும்மா மூடப்பட்டிருப்பதும் தெரியாது. அதன் சந்துகளில்தான் உள்ளேயிருக்கும் தீபவொளி தெரிந்தது. கதவிற்கு அப்புறம் மனிதர் பேசும் சத்தம் கேட்கிறது. அதுமட்டுமல்ல. இன்னொருவிதமான சத்தமும் கேட்கிறது. அது இன்னதென்று விளங்கவில்லை. ஜீவாஜி மூச்சைப் பிடித்துக்கொண்டு கதவிலிருக்கும் சற்று பெரிதான வெடிப்பில் கண்ணை வைத்துப் பார்த்தான். திருப்தியாய்த் தெரியவில்லை. கத்தியையெடுத்தான். கத்தி மிகவும் கூரானது. மெதுவாய்க் கதவிலிருக்கும் வெடிப்பைக் கொஞ்சம் சீவிப் பெரிதாக்கினான். கீழேவிழும் மரச்சீவல்களை கையில் பிடித்துக்கொண்டு மடியில் வைத்துக்கொண்டான். ஏனெனில் பிறகு அவைகளைத் தரையில் யாராவது கண்டால் யாரோ வந்து பார்த்தார்களென்று தெரிந்துகொள்வார்கள். அப்புறம் தன் காரியம் அடியோடு கெட்டுப்போம். சந்து கொஞ்சம் பெரிதான பின் பார்த்தான் அப்போதும் அறை முழுவதும் தெரியவில்லை. ஆயினும் அது ஒரு அறையென்று தெரிந்தது. தீபங்கள் பிரகாசமாய் எரிந்துகொண்டிருக்கின்றன. ஒரு அடுப்பும் எரிந்துகொண்டிருக்கிறது.

இரண்டு மனிதர் அறைக்குள் இருந்தார்கள். ஒருவன் கொள்ளிவீரன் என்றும் மற்றொருவன் துரைத்தனத்தாருக்கு மிக்க தொந்தரைகொடுத்து அகப்படாமல் ஏமாற்றிக்கொண்டு திரியும் கள்ளநாணயம் செய்பவனென்றும் தெரிந்தது. இப்போதும் அவன் பூரணமாய் மாறுவேட-

மளித்துகொண் டிருக்கிறான். ஜீவாஜி எப்படிப்பட்ட மாறுவேடத்தையும் அறிந்துகொள்வதில் மிக்க சாமர்த்தியம் வாய்ந்தவனானதால் அவனைக் கண்டறிந்து கொண்டான். வேறே யாராயிருந்தாலும் அவனைத் தெரிந்து கொண்டிருக்கவே மாட்டார்கள்.

இது ஒரு புது ஆச்சரியசங்கதி. ஏனெனில் ஜீவாஜி வீரனைப் பின்பற்றிவந்ததில் இக்கள்ளநாணயம் செய்யும் கள்ளருடைய தொழிற்சாலையைக் கண்டறிந்தான். இதுவரையில் போலீஸாரெல்லாம் எவ்வளவோ பாடுபட்டும் இதைப்பற்றி ஒரு உளவும் அகப்படாமல் விழித்துக்கொண் டிருக்கிறார்கள். சில கள்ளநோட்டுகள் வெளிவந்து அதனால் துரைத்தனத்தார் அதிக கலவரமடைந்து, இதைக் கண்டுபிடிக்கும்படி போலீஸாருக்கு மிக்க கண்டிப்பான உத்தரவுகள் அனுப்பியிருக்கிறார்கள். போலீஸ் அதிகாரிகள் இதனால் மனங்கலங்கி மிக்க வேதனைப்பட்டுக்கொண் டிருக்கிறார்கள்.

ஜீவாஜி சற்றுநேரம் இவர்களைப் பார்த்துக்கொண்டேயிருந்தான். கொள்ளிவீரன் எங்கு மறைந்திருக்கிறானென்பது இப்போது தெரிந்துவிட்டது. வீரன் கூட இருப்பவன் அச்சில் வேலைசெய்கிறான். மிகத் திட்டமாய் வேலை நடக்கிறது. வீரன் நோட்டுகளை அடுப்பனலிலுலர்த்திக் கட்டுக்கட்டாய் அடுக்குகிறான். இதுவரையில் ஒரு பெரிய கட்டாய்விட் டிருக்கிறது. ஒருமாதம் இவர்களை யிவ்வாறே விட்டுவிட்டால் நாடெங்கும் கள்ள நோட்டுகள் நிறம்பி துரைத்தனத்தார் பாடு திண்டாட்டமாய்விடும்.

ஜீவாஜி மிக்க ஜாக்கிரதையா யிருந்தான். அவர்களுக்கு எள்ளளவு சந்தேகமாவது உண்டாகச்செய்தால் தன் பிராணனுக்கு ஆபத்துவரும். அது தப்பினால் பிறகு அவர்களைப் பிடிக்கமுடியாமற் போய்விடும். அவர்கள்

இருவரையும் பிடிக்க முயல்வது மூடத்தனமாய் முடியும். ஏனெனில் இருவரும் பூராய் ஆயுத மணிந்திருப்பார்கள் என்பதிற் சந்தேகமில்லை. இந்த யோசனையெல்லாம் ஜீவாஜிக்கு நன்றாய்த் தெரியும். பொறுமனமே பொறு என்று எண்ணிக்கொண்டான். சற்றுநேரம் பொறுத்து அங்கிருந்து திரும்பினான்.

ஜீவாஜி கிலக்கரியறையின் கதவண்டை வந்தபோது தனக்குப்பின் ஏதோ சந்தடிகேட்டது. சட்டென்று திரும்பிப்பார்த்தான். உடனே சற்று பயம் உண்டாயிற்று. ஏனெனில், பின்னால் பாதையில் ஒரு விளக்கொளி தெரிந்தது. அங்கிருந்த திருப்பத்தில் விளக்கு தென்படவில்லை. விளக்கைப் பிடித்துக்கொண்டிருக்கும் ஆள் வந்து கொண்டே யிருப்பதாய்த் தெரிந்தது. அங்கே ஜலமில்லாதபடியால் இருவரில் ஒருவன் ஜலத்திற்காக வருகிறானோ? விசேஷமாய் அந்தப் புது ஆளே வருகிறானோ? எப்படியிருந்தாலும் நாம் செய்யவேண்டிய ஜாக்கிரதையைச் சீக்கிரம் செய்யவேண்டும் என்று எண்ணிக்கொண்டான்.

ஒரு காட்டில் புலியெப்படி பதுங்கிச் செல்கிறதோ அவ்வாறே ஜீவாஜி கிலக்கரியறைக்குள் சென்று அங்கிருந்து சிறு சந்தில் நுழைந்து வீட்டைவிட்டு வீதிக்கு வந்துவிட்டான். தான் அந்த வீட்டிற்குள் வந்துபோன அடையாளம் ஒன்றும் தெரியவொட்டாமல் மிகச் சாக்ரதையாய் வந்துவிட்டான். கடைசியாய் இன்னொருதரம் அவ்வீட்டைப் பார்வையிட்டு சாராய்க்கிடங்கைக் கடந்து அப்பால் வந்து சற்றுநேரம் நின்றான். பிறகு இன்றிரவு செய்தவேலை திருப்தியானதே யென்றெண்ணித் தன் வாசஸ்தலத்தை நோக்கி நடந்தான்.

ஜீவாஜியை விட்டுவிட்டு கமலநாதன் என்னசெய்கிறான் என்பதைக் கவனிப்போம். முன்கூறிய சங்கதிகள் நடந்த மறுநாட்காலை கமலநாதன் நதிரேசம்பிள்ளையின் மாளிகையைநோக்கி நடந்தான். அதனருகிற் செல்லும்போது வாசற்படியண்டை யிவன் கண்ட காக்ஷி யிவன் மனதிற்குக் கலவரத்தையும் ஆயாசத்தையும் வியப்பையும் உண்டாக்கிற்று. அதென்ன வெனில் வாசற்படியில் குமரப்பனும் ஜீவாஜியும் நின்று வார்த்தையாடிக்கொண் டிருக்கிறார்கள். ஜீவாஜி மிகவும் இரகசியமான குற்றங்களைக் கண்டுபிடிப்பதில் அபூர்வ சாமர்த்திய முடையவனென்றும் ஒரு களவும் தோன்றவில்லையென்று எல்லோரும் கூறுமிடத்தில் கூட களவு கண்டுபிடிப்பதில் அசாத்திய புத்தியுடையவனென்றும் கமலநாதனுக்குத் தெரியும். ஆகலால் இச்சேவையில் எங்கே யிவன் நமக்குமுன்பே ஜெயமடைந்துவிடுவானோ வென்று அவன் மனதில் பயமுண்டாய்விட்டது. ஜீவாஜி வயதில் முதிர்ந்தவன், மேலான அனுபவமுடையவன். அவனுடைய வேலையின் ஒழுங்கு மிகவும் ஆச்சரியமானது. கமலநாதனோ வாலிபன், இப்போதுதான் சற்று பிரக்யாதி யடைந்துகொண்டு வருகிறான். இப்போது இதில் தான் ஜயமடைந்தால் பிரக்யாதி பெற்ற ஜீவாஜிக்குச் சமத்வத்தையாவது பெறலாம் என்பது அவன் எண்ணம்.

கமலநாதன் வாசற்படிக்கருகில் போகும்போது குமரப்பன் "அக் குற்றத்தைப்பற்றி யெனக்கொன்றும் தெரியாதென்று கூறுகிறேனே, தாமோதரம் எங்கே ஒளிந்துகொண் டிருக்கிறானோ எனக்குத் தெரியாது" என்று கூறுவது அவன் செவியிற் கேட்டது. அவன் ஒன்று மறியாதவன்போல் குமரப்பனருகிற் சென்று "உன் தந்தை வீட்டிலிருக்கிறாரா?" என்று கேட்டான்.

குமரப்பன் —"அவர் இன்னும் படுக்கையிலேயே யிருக்கிறார்" என்றான்.

கமலநாதன் —அப்படியானால் காணமுடியாதோ?

குமரப்பன் —அவசியமாயிருந்தால் காணலாம். ஆயினும் அதிக காலை யல்லவா?

கமலநாதன் உனக்கு மட்டும் இது அதிக காலையல்ல போல் காண்கிறது என்றதே, குமரப்பன் முகத்தைத் திருப்பிக்கொண்டு வீட்டிற்குள் நுழைய எத்தனித்தான். அதே நிமிஷம் ஜீவரத்ரி கமலநாதனுக்கு வந்தனை மளித்துவிட்டுப் போய்விடத் திரும்பினான். அப்போது கமலநாதன் சட்டென்று இருவர் தோள்மேலும் தன் இருகரங்களை வைத்து "நான் உங்கள் சம்பாஷணையைக் கெடுத்து விட்டேனோ?" என்று மெதுவாய்க் கேட்டான்.

ஸ்ரீவாஸ்ரீ —"நாங்கள் பேசிமுடிந்தது. எனக்கு அவசர வேலையிருப்பதால் போய்வருகிறேன். மன்னிக்க வேண்டும்" என்று கூறிவிட்டுச் சென்றான்.

அவன் சென்றதே குமரப்பன் கமலநாதனை நோக்கி "என்னால் உனக்கு ஆகவேண்டிய வேலை யென்ன இருக்கிறது?" என்றான்.

கமலநாதன்.—"உனக்குப் பிரியமிருந்தால் நீ சில முக்கியமான சங்கதிகளை யெனக்குக் கூறலாம்" என்றான்.

குமரப்பன்.—என்னால் கூடுமாயினும் எனக்குக் கூறப்பிரியமில்லாமலிருக்கலாம்.

கமலநாதன்.—இதில் நீ முழுதும் உன் பிரியப்படியே நடக்க இயலாததாயிருக்கலாம். முன் ஒரு சந்தர்ப்பத்தில் ஒரு கன்னிகையைப் பிடித்துக்கொண்டு தொந்திரை செய்தாயே அப்போது உன் பிரியத்திற்குமாறாக அவளை விட்டுவிட நேர்ந்தது கவனமிருக்கிறதல்லவா?

குமரப்பன்.—அப்போது நீ யுனக்குச் சம்மந்தமில்லாத விஷயத்தில் தலையிட்டாய்.

கமலநாதன்.—அதெல்லாம் சரிதான். இப்போதும் நான் இங்கே நடந்த கொலையைப்பற்றிய சிலவிஷயங்களைக் கேட்கத்தான் இங்கு வந்தேன். உனக்கும் என் போலவே இந்த இரகசியத்தைபற்றிய ஆவலிருக்கிறது. எனக்கு நேரான பதில் வேண்டும்.

குமரப்பன் மௌனமாயிருந்தான். ஆனால் அவன் மனதில் குழப்பம்மட்டும் அதிகமாய் உண்டாயிற்று. நெடு நேரம் பேசாமலிருந்து கடைசியில் "நீ என்ன தெரிந்து கொள்ளவேண்டும்?" என்றான்.

கமலநாதன்.—முதலாவது தாமோதரனோடு உனக்கு பழக்கமா? சில சமயங்களில் மூடியிருக்கும் அச்சாபீஸுக்குள் நீ நுழைந்து பார்த்ததுண்டா?

இதைக்கேட்ட குமரப்பன் தள்ளாடிப் பக்கத்திலிருந்த கம்பத்தைப் பிடித்துக்கொண்டான். அவன் முகம் சவம் போல் வெளுத்துவிட்டது. அதிக கஷ்டத்தோடு சமாளித்துக் கொண்டு சாந்தமாய்,

"நான் ஒவ்வொரு வேளை அச்சாபீசுக்குள் போயிருக்கிறேன். ஆனால் சரசாபாயைக் காண வேண்டுமென்றல்ல" என்றான்.

கமலநாதன்.—என்ன வேலையாய்ச் சென்றாய்?

குமரப்பன்.—அது என் சொந்த இரகசிய வேலை.

கமலநாதன்.—போர்மென் தாமோதரனைக் கண்டு பேசத்தானே?

குமரப்பன்.—ஆம். தாமோதரனைச் சந்திக்கவே.

கமலநாதன்.—அவனிடத்திலிருந்து சபாபதிப்பிள்ளையின் கொலையைப்பற்றிய சங்கதியைக் கேட்டுக் கொண்டாயல்லவா?

குமரப்பன்.—ஆம், ஜாடையாய்க் கூறினான்.

கமலநாதன்.—அவன் கூறியதை விபரமாய்க் கூறுகிறாயா?

குமரப்பன்.—ஐயா! அதைக்கூற எனக்கு அனுமதியில்லை.

கமலநாதன்.—அது யார் மேலாவது குற்றம் சுமத்துகிறதோ?

குமரப்பன்.—ஆம்.

கமலநாதன்.—அப்படியிருக்க அதை மறைத்துவைக்க உனக்கென்ன பாத்திய மிருக்கிறது?

குமரப்பன்.—மனிதருக்குள் ஒருவருக்கொருவர் ஜீவகாருண்யம் என்று ஒன்றிருக்கிறது. அதே சந்தர்ப்பம் உங்களுக்கு நேர்ந்தால் நீங்களும் செய்யக்கூடியதே. ஒரு குற்றத்தை யின்னொருவன் செய்துவிட்டால் அவனைத் தண்டனை யடையச் செய்யவேண்டும் என்பது துப்பறியும் உங்கள் அபிப்பிராயமா யிருக்கிறது. நான் தெளிவாய்க் கூறுகிறேன். இக்குற்றத்தை யொருவர்மேல் சாட்டக்கூடிய ருசு என்னிடம் இருக்கிறது. ஆனால் அது உத்தமியான நிரபராதிமேல் குற்றத்தைச் சாட்டுகிறது.

கமலநாதன் ஒரு விநாடி யவனை யுற்றுநோக்கி, "நீ முழுதும் சம்பவிக்கமுடியாத சங்கதியைக் கூறப்பார்க்கிறாய். அப்படித் தந்திரம்செய்து மெய்யான குற்றவாளியை மறைக்கப் பார்க்கிறாய். நீ கூறுகிற மாதிரியை நோக்க சரசாபாய்மேல் குற்றம் சாட்டுவதாய்த் தெரிகிறது. இது சபைக்கேறாத சங்கதி. நீ பாபம் உன் தந்தையின் மேல் அதிக பட்சம் பாராட்டுகிறாய். அவர் உனக்கு மிக்கசெல்லம் கொடுக்கிறார். நீ தடையின்றி அவரையே குறிக்கிறாயென்று எனக்குத்தெரியும்" என்றான்.

இதைக்கேட்டதே குமரப்பன் கரங்களை நெறித்துக்கொண்டு, முகம் வெளுத்து நடுக்கமுற்று அலறிப்பின்னி

டைந்தான். ஆனால் உடனே திமிறென்று முன்னுக்குப் பாய்ந்து கமலநாதனை நோக்கிக் குத்தினான். கமலநாதன் சமயோசிதமாய்ச் சட்டென்று ஒரு பக்கம் விலகிவிடாதிருந்தால் அக்குத்து அவன் முகத்தின் ஒருபக்கத்தில் பட்டேயிருக்கும். குமாரப்பன் மறுபடி குத்த ஆரம்பிப்பதற்குள் அவன் புயங்கள் இறுக்கிப் பிடிக்கப்பட்டதும் அவன் மூடப்பட்டிருக்கும் கதவின்மேல் மோதியடிக்கப் பட்டான்.

கமலநாதன் அவனை நோக்கி “நான் எதிர்பார்த்ததை விட அதிகமாய்த் தெரிந்துகொண்டேன். இதைப்பற்றி இப்போது இதற்குமேல் ஒன்றும் நீ எனக்குக் கூறவேண்டிய அவசியமில்லை. ஆயினும் தாமோதரன் ஒளித்துக் கொண்டிருக்கும் இடத்தைமட்டும் நீ கூறவேண்டும். மூன்றா நாளிரவு நீ யவனைச் சந்தித்தபிறகு அவன் எங்கே சென்றான் உனக்குத்தெரியுமா” என்றான்.

குமாரப்பன்.—“எனக்குத் தெரியாது” என்றான்.

கமலநாதன்.—உண்மையைக்கூறு பத்திரம். பொய் சொன்னால் நான் தெரிந்து கொள்வேன்” என்றான்.

குமாரப்பன்.—கடவுளறிய எனக்குத் தெரியாது.

கமலநாதன்.—அதன் பிறகு நீ யவனைப் பார்க்கவே யில்லையே?

குமாரப்பன்.—இல்லை, பார்க்கவில்லை.

கமலநாதன்.—இனி நீ போகலாம். நீ உன் ஆத்திரச் செய்கையால் விவகாரத்தைக் கெடுத்துவிடாதே. உன் தந்தை இக்குற்றத்தில் சிக்கிக்கொண்டிருந்தால் உனக்குக் கெடுதியே, அவர் சிக்கியிருப்பதாகவே நான் வெகுவாய் நம்புகிறேன்.

குமாரப்பன் பேசாமல் கட்டடத்திற்குள் நுழைந்தான். கமலநாதன் வீதியை நோக்கித் திரும்பும்போது, அங்கிரு

ந்த தூண்களில் ஒன்றின்மேல் ஜீவாஜியின் நெட்டையான உருவம் சாய்ந்துகொண் டிருப்பதைக்கண்டு மிக்க வியப்படைந்தான். கமலநாதன் வெறுப்போடு நகைத்துக்கொண்டே "இப்படித்தான் கள்ளத்தனமாய் ஒத்துக்கேட்டுக்கொண்டு ஒருவரை யொருவர் ஜெயிக்கிறதோ?" என்றான்.

ஜீவாஜி.—நீ தவறாய் எண்ணிக்கொண்டாய்.

கமலநாதன்.—நீ நான் பேசுவதை யொத்துக்கேட்கத் தானே இங்குவந்து நிற்கிறாய்?

ஜிவாஜி.—உண்மையில் அப்படியில்லை.

கமலநாதன்.—அப்படியானால் என்னத்திற்காக இங்குவந்து நிற்கின்றாய்? எப்படியும் நாங்கள் பேசியது உன் செவிகளில் விழுந்தேயிருக்கும்.

ஜிவாஜி.—சில சொற்கள் என் செவிகளில் விழுந்தன. ஆனால் அவைகள் எனக்குப் பிரயோசன மானவைகளல்ல. சங்கதி யென்னவெனில் நீ வருவதன் முன் நான் அவ்வாலிபன் மனதிலிருந்த சங்கதிகள் எல்லாவற்றையும் பிடுங்கிவிட்டேன். கேட்கத்தகுந்த சங்கதி யவனிடம் எவ்வளவிருந்ததோ அவ்வளவும் தெரிந்துகொண்டேன். கதிரேசம்பிள்ளைமேல் அய்யப்படக்கூடாதென்று தடையின்றி நம்மிருவருக்கும் தெரியும்.

ஜீவாஜி பேசிய நிதானத்தினால் கமலநாதன் மறுபடி கலவரமடைந்தான். உண்மையில் இவன் நம்மைவிட அதிகமாய்த் தெரிந்துகொண்டிருக்கிறானோ அல்லது நம்மையே மாற்றப் பார்க்கிறானோவென்று கமலநாதனுக்குக் கலவரமாய் விட்டது. ஜீவாஜியை ஜெயிக்க வேண்டுமாயின் மிக்க சாமர்த்தியம் வேண்டுமென்று நன்றாய்த் தெரிந்தது.

கமலநாதன்.—"அப்படியானால் நீயேன் திரும்பிவந்தாய்?" என்றான்.

ஜீவாஜி.—"உன் மனதில் கலவரமாயிருக்கும் ஒரு சங்கதியைப்பற்றி உனக்குத் திருப்திசெய்ய" என்றான்.

அதென்ன சங்கதியென்று கமலநாதன் கேட்டான்.

ஜீவாஜி.—நீ இப்போது குமரப்பனைத் தாமோதரன் ஒளித்திருக்கு மிடத்தைப்பற்றி கேட்டாயல்லவா. நீ வாலிபனானபடியால் அந்த விஷயத்தில் ஆவல்கொண்டிருப்பது மன்னிக்கத் தகுந்ததே; அதைத் திருப்திசெய்ய எனக்கு விருப்பமே. நான் தாமோதரனைக் கண்டு பேசினேன். அவன் சபாபதிப்பிள்ளையைக் கொன்றவனுடைய பெயரைக் கூறினான். அதைக்கூறும்படி நான் அவனைக் கட்டாயப் படுத்தினேன். அப்படியிருந்தும் அவன் கூறியது மெய்யென்று நான் நம்பவில்லை. உண்மையில் அது பொய்யென்றே யெனக்கு நிச்சயம். முதலிலிருந்ததுபோலவே யிப்போதும் எனக்கு ருசு வகப்படவில்லை.

கமலநாதன்.—அப்படியானால் தாமோதரன் பிசகிவிட்டானென்று நினைக்கிறாயா?

ஜீவாஜி.—அவன் பிசகாய் நினைத்தானென்று நான் கூறவில்லை.

கமலநாதன்.—ஆயினும் நீ ஏதோவொரு தீர்மானமான சித்தாந்தத்தை யநுசரித்து வேலை செய்கிறாய்.

ஜீவாஜி.—நீ அலட்சியமா யெண்ணி விட்டுவிட்ட சொற்பமான ஒரு உளவைப்பிடித்தே நான் வேலை செய்கிறேன். அது சொற்ப உளவானாலும் நீ நம்பியிருக்கும் பொய்ச்சித்தாந்தத்தை யது தோற்கடிக்குமென்று நம்புகிறேன்.

கமலநாதன்.—எந்த பொய்ச் சித்தாந்தத்தைப்பற்றி நீ கூறுகிறாய்?

ஜீவாஜி.—உன்னுடைய உளவெல்லாம் ஒருவன் கட்டை

விரலிலிருக்கும் ரேகைகளைப்போல் இன்னொருவனு க்கு இருக்கவே யிருக்காது என்ற சித்தாந்தத்தையே ஆதாரமாகக் கொண்டிருக்கிறது.

கமலநாதன் இந்த விரல் ரேகையைப்பற்றிய மர்மம் தன் ஒருவனுக்கன்றி வேறே யாவருக்கும் தெரியாதென்று நம்பியிருந்தான். இப்போது தன் அந்தரங்க ரகசியத்தை ஜீவாஜி யறிந்துகொண் டிருப்பதைக் கேட்டதே யவனுக் குண்டான ஆச்சரியம் சொல்ல முடியாது.

"ஓஹோ நீ என் நடக்கைகளை வேவுபார்த்துக்கொண் டேயிருக்கிறாய்" என்றான்.

ஜீவாஜி நகைத்துக்கொண்டே "இல்லை யில்லை. நான் கண்களை நன்றாய்த் திறந்து பார்த்தேன். எப்படியெனில், சாளரத்தின் மரச்சட்டத்தில் பட்டிருந்த இரத்தம் தோய்ந்த விரற்கறையை யப்படியே சீவி யாரோ எடுத்துவிட்டார் கள் என்று கேள்விப்பட்டேன். மிகவும் சூட்சுமபுத்தியும் முன் சாக்கிரதையுமுடைய துப்பறிபவனே யப்படிச் செய் யக்கூடியவன் என்று எனக்குத்தெரியும். இதோடு நீ அங்கு சென்றிருந்த சங்கதியும் கேள்விப்பட்டேன். இரண்டு விஷயங்களையும் சேர்த்து யூகித்துக்கொண்டேன். நான் அந்த விரல் ரேகையைப்பற்றி ஆராய்ச்சி செய்த தில்லை. அது பயனில்லையென்பது என்கொள்கை" என் றான்.

கமலநாதன்.—அப்படியானால் என் போட்டியைப்பற்றி யுனக்குப் பயமில்லை?

ஜீவாஜி.—நீ தீர்க்காலோசனைக்காரன். நான் எதையும் சீக் கிரத்தில் நம்புவதில்லை.

கமலநாதன்.—நானும் ஆய்ந்தோய்ந்து பாராமல் எதையும் நம்பிவிடமாட்டேன். நீ எண்ணியிருப்பதைவிட உன் சாமார்த்தியத்தை நான் அதிகமாய் மெச்சுகிறேன். நீ

எனக்கு முன்னர் ஜெயமடைந்துவிட்டால் நான் சந்தோஷமாகவே உன்னோடு கைகுலுக்குவேன். ஆனால் நான் ஜெயமடைந்துவிட்டால்—?

ஜீவாஜி.—அப்போது நான் சந்தோஷமாகவே கைகுலுக்குவேன்.

உடனே இரண்டு தம்பதியும் புலிகளும் கைகுலுக்கிவிட்டுப் பிரிந்தார்கள். ஜீவாஜி வீதிவழியே செல்லக் கமலநாதன் அச்சாபீசுக்குள் நுழைந்தான்.

9-வது அத்தியாயம்.

கமலநாதனும் கதிரேசம்பிள்ளையும்—கமலநாதன் உளவறியும் அற்புத சாமர்த்தியம்—கள்ளன் தந்திரம்—கமலநாதன் ஆபத்து.

கமலநாதன் அச்சாபீஸுக்குள் நுழைந்து ஆபீஸ் அறைக்குச் சென்றபோது கதிரேசம்பிள்ளை யங்கு உட்கார்ந்திருந்தான். அவன் முகம் வெளுத்து விகாரமடைந்திருந்தது. அவன் கமலநாதனைக் கண்டதும், ஒருவருக்கொருவர் வந்தன வழிபாடுகள் செய்துகொண்ட பின்னர், "நீ யுன் கேஸில் திருப்திகரமாய் வேலைசெய்கிறாயென்று நம்புகிறேன்" என்றான்.

கமலநாதன்.—ஆகா தடையின்றி. நான் இங்கே யொரு சோதனைசெய்யவேண்டும். அது விஷயத்தில் நீர் எனக்கு உதவிசெய்யவேண்டும். அதோடு நான் கேட்கும் இரண்டொரு கேள்விகளுக்கு விடையளிக்கவேண்டும். இதே யென் கோரிக்கை

கதிரேசம்பிள்ளை.—என்னாலியன்றமட்டும் இதில் உனக்கு உதவிசெய்ய நான் சித்தமாயிருக்கிறேன். தடையின்றிக் கேட்கலாம்.

கமலநாதன்.—அந்த நாடோடியாகிய வேலாயுதனுடைய

உருவம் முதலியதும் நடவடிக்கைகளும் உனக்கு நன்ருய்த் தெரியுமல்லவா? அவனுடைய வலதுகையில் ஒருவிரல் கத்தரித் தெடுத்துவிடப்பட் டிருக்கிற தல்லவா?

கதிரேசம்பிள்ளை.—ஆம்.

கமலநாதன்.—அவனுடைய கைகள் அதிக நீளமல்லவா?

கதிரேசம்பிள்ளை.—ஆம்.

கமலநாதன் கொலைநடந்த அறையிலுள்ள சாளரத் தருகில் சென்று நின்று அதன் இலைக்கதவுகளைச் சோதித் துப் பார்த்தான். அச்சமயம் அக்கதவிற்கும் கதிரேசம் பிள்ளைக்கு மிடையில் கமலநாதன் நின்றுகொண்டிருந்த படியால், அவன் முன் கதவில் இரத்தவிரல் குறிப்பட்டி ருந்தவிடத்தில் கொஞ்சம் மெழுகைத் தடவி விட்டதைக் கதிரேசம்பிள்ளை பார்க்கவில்லை.

கமலநாதன் நீ வேலாயுதனிலும் குட்டையல்லவா வென்றுன், கதிரேசம்பிள்ளை ஆம் என்றுன். கமலநாதன் உடனே அங்கிருந்த சில கடிதக்கட்டுகளை யெடுத்து சாள ரத்திற்கு நேராய்க் கீழேவைத்து கதிரேசம்பிள்ளையை நோக்கி நீ இதன்மேல் ஏறிநின்று அவசரமாய்ச் சாளரத் தின் கதவைத் திறப்பவன்போல் திற. நீ எப்படிச்செய் கிறுயென்பதை நான் பின்னுலிருந்து பார்க்கவேண்டும். அப்பொழுதுதான் கொலைசெய்தவன் எப்படி வேலைசெய்தா னென்பது எனக்கு சரியாய்த் தெரியும் என்றுன்.

கதிரேசம்பிள்ளை யவ்வாறே யேறிநின்று சாளரத் தின் இலைக்கதவைத் திறந்தான். கமலநாதன் சரி போதும் இறங்கிவிடு என்றுன். கதிரேசம்பிள்ளை இதனுல் நீ என்ன விஷயம் தெரிந்துகொண்டாய் என்று கேட்டபோது கமல நாதன் "இதனுல் அனேகவிஷயம் தெரிந்துகொண்டேன். ஆனுல் என் சந்தேகங்களை யிப்போது கூறலாகாது" என்

றன். கமலநாதன் சாளரத்தை மூடி விடுகிறேன் என்று கூறிவிட்டு அதை மூடும்போது தான் முன் ஒட்டிவைத்த மெழுகை யெடுத்துக்கொண்டான்.

சற்று நேரத்திற்குள் கமலநாதன் கதிரேசம்பிள்ளை யிடம் விடைபெற்றுக்கொண்டு அர்சாபீசை விட்டுப்புறப் பட்டான். அவன் வீதியிற் சற்றுதூரம் சென்றபிறகே மறைவான வொருவிடத்தில் நின்றுகொண்டு தன் ஜேபியிலிருந்த மெழுகுப் பில்லையை யெடுத்துப்பார்த்தான். அதன் ஒரு பக்கம் சாளரக் கதவில் முன் கமலநாதன் சீலியெடுத்து விட்ட விடத்தின் குறியிருந்தது. மறுபக்கம் கதிரேசம் பிள்ளையின் கைப்பெருவிரல் நன்றாய்ப்பதிந்திருந்தது. கமலநாதன் அதை யொரு கடிதத்தில் மெதுவாய் மடித்து ஒரு டப்பியில் வைத்து ஜேபியில் வைத்துக்கொண்டு "பேஷ், ஒவ்வொரு இரேகையும் நன்றாய்ப் பதிந்திருக்கிறது, இனி என் சித்தாந்தமே பலிக்கறதோ, ஜீவாஜியின் சித்தாந்தமே ஜெயமடைகிறதோ அறியவேண்டும்" என்று கூறிக்கொண்டே தன் மனையை நோக்கி நடந்தான்.

அச்சமயம் தனக்குப்பின் சற்றுதூரத்தில் தான் முன் னால் சந்தித்த அந்தக் குள்ளன் பதுங்கிப் பதுங்கி வந்து கொண்டிருப்பதை யவன் பார்க்கவில்லை.

கமலநாதன் தன் அறைக்குச்சென்று கதவை மூடிக் கொண்டு மேஜைமேல் தான் கொண்டுவந்த விரற்குறி பதிந்த மெழுகுப் பில்லையை யெடுத்துவைத்து பூதக்கண் ணாடியால் அதைச் சோதித்தான். பிறகு அலமாரியைத் திறந்து இரத்தவிரற்குறி பதிந்திருந்த மரப்பில்லையை யெடு த்து மெழுகுப் பில்லையின் பக்கத்தில் வைத்துப்பார்த்தான். திடீரென்று பார்க்கும்போது இரண்டும் ஒன்று போலவே காணப்படினும், ஆராய்ச்சிசெய்யின் இரேகைகளில் எவ் வளவோ வித்தியாசமிருக்கிறதென்றே தெரிந்தது. பிறகு

தன் பெட்டியிலிருந்து இன்னொரு மெழுகில் ஒத்தியெடுத்திருந்த விரற்குறியை மற்றவிரண்டின் பக்கத்தில் வைத்து மறுபடி சோதித்துப் பார்த்தான்.

அவன் முகத்தில் ஒருவிதப் பிரகாசம் உண்டாயிற்று. "ஒருக்காலும் எல்லாம் ஒரே மாதிரியல்ல. ஒன்றுக்கொன்று காணக்கூடிய வித்தியாசம் இருக்கவே யிருக்கிறது. இந்த விஷயத்தில்மட்டும் ஜீவாஜி நினைப்பது தவறே ஆயினும், நான் இதில் ஜெயமடைந்தாலும், இப்போது உலகிலிருக்கும் துப்பறியும் ஆசாமிகளில் ஜீவாஜியே மிக்க சாமர்த்தியவானென்று ஒப்புக்கொள்வேன். அதற்கொரு சந்தேகமுமில்லை. அவன் ஒருகேஸில் தலையிட்டாலே அதிலுள்ள மர்மங்களெல்லாம் ஆதவனைக் கண்ட பனிபோல் பறக்கின்றன. மற்றபேர்களுக்கு அசாத்யமென்று தோன்றுகிறவைகளையெல்லாம் அவன் மட்டும் எப்படியோ முடித்துவிடுகிறான். அப்படியிருந்தாலும் அவனுக்கிருக்கிற அறிவையே அனுபவத்தால் விர்த்திசெய்துகொண்டான். நான் இன்னும் வாலிபன். இந்தக்கேஸில் நான் எப்படியாவது அவனைச் ஜெயித்து விட்டால், அப்போது அவன் ஜெயிக்க முடியாதவனல்லவென்று தெரிந்துவிடுகிறது. நாளாவட்டத்தில் நான் அவனுக்குச்சமானமாய் விடுவேனென்ற நம்பிக்கையிருக்கிறது. எல்லாம் காலம் போகப் போகத்தெரியும்" என்று தனக்குத் தானே கூறிக்கொண்டான்.

அவன் மறுபடி யின்னொரு உயர்தரமான பூதக் கண்ணாடியை யெடுத்து அதனால் மேஜை மேலிருக்கும் மூன்று வஸ்துக்களையும் சோதனை செய்ய ஆரம்பித்தான். அச்சமயம் யாரோ அவசரமாய்க் கதவைத் தட்டினார்கள். கமலநாதன் எழுந்து மேஜைமேலிருந்த வஸ்துக்களைச் சட்டென்று எடுத்து பெட்டியில் வைத்து விட்டுப்போய் கதவைத்

கிறந்தான். தந்திபாபீஸிலிருந்த ஒருசேவகன் ஒரு தந்தி சாமாசாரம் கொண்டு வந்து கொடுத்தான். கமலநாதன் அதைப் பிரித்து வாசித்தான். அதில் அடியிற் கண்டபடி எழுதி யிருந்தது:—

"மரக்கடைவீதி, 66-வது நெம்பர் வீட்டிற்குவா தட்சணம், அவசரம்—சரவணன்."

இதை வாசித்ததும் தனக்கிருக்கும் வேலை யெவ்வளவு முக்யமான தெனினும் சிநேகிதன் ஒரு சமயம் ஏதோ ஆபத்தில் சிக்கிக் கொண்டிருப்பா னென்று எண்ணி உடனே புறப்பட்டான். அவன் டிராம் வண்டியிலேறி தான்போக வேண்டிய விடத்திற்குச் சமீபத்திலுள்ள ஒரு வீதியில் இறங்கித் துரிதமாய் நடந்தான்.

இவன் நாடிச்சென்ற 66-வது நெம்பர் வீடு மிக்க அயோக்கியர்களாகியபாமதுஷ்டர்கள் வசிக்கும்வீதியிலிருக்கிறது. அது ஒரு புராதனமான வீடு. கமலநாதன் சற்று நேரம் வீதியில் நின்று அவ்வீட்டை யுற்று நோக்கினான். அது ஒரு பயங்கரமான வீடாகவே யிருந்தது.

கமலநாதன் துணிந்து போய் கதவை நெக்கிப் பார்த்தான். அது திறந்துகொண்டது. உள்ளே நுழைந்தபோது நெருக்கமான வழியும் படிக்கட்டுகளு மிருந்தன. அவன் அங்கு நின்று நிதானிப்பதற்குள் பக்கத்திலிருந்த ஒரு கதவு திறக்கப்பட்டதும் ஒரு மனிதன் வெளியில் வந்தான். அவன் மிக்க பலாட்டியன். மகா முரட்டு சுபாவமுடையவனென்று பார்க்கும்போதே தெரிந்தது. அவனைக் கண்ட கமலநாதன் திடுக்கிட்டுத் தன்னை யறியாமலே இரண்டடி பின்னுக்குச் சென்றான். அம்மனிதனுடைய சிறிய கண்கள் கொள்ளிக் கட்டைகள் போல் தீக்ஷண்யமாய்ப் பிரகாசிக்க, அவன் கமலநாதனைக் கண்டதே முறைத்துப்பார்த்து, ஹா! என்று உறுமினான்.

கமலநாதனும் வேண்டுமென்றே, ஹா! என்று அவனைப்போலவே அதட்டிக் கூவினான்.

அந்த முரடனுடைய முகம் கோபத்தால் சிவந்து கண்கள் நெருப்புபோல் பிரகாசிக்க அவன் தன் கரங்களை முஷ்டிபிடித்துக் தயாராய்க் குத்த வருபவன்போல் "யார் நீ?" என்றான்.

கமலநாதன் அவன் கூறிய தொனியாகவே "அதைப் பற்றி யுனக்கென்ன?" என்றான்.

முரடன் பின்னும் கோபாவேசமடைந்து, "அடா இவ்வளவு தைரியமாய் என்னைக் கேலியா செய்கிறாய்?" என்றான்.

கமலநாதன்.—"அடே இவ்வளவு துணிவாய் என்னிடமா உன் வாலை யாட்டுகிறாய்?" என்றான்.

அந்த முரடன் கமலநாதனை ஒரே குத்தில் கட்டாயம் வீழ்த்தி விடுபவன்போலப் புலிப்போல் பாய்ந்து ஓங்கியொரு குத்துவிட்டான். ஆனால், பாபம், அவனது கை சுவரின்மேல்தான் தாக்கியது. ஏனெனில் கமலநாதன் இலகுவாய் விலகிக்கொண்டான். அம்முரடன் கை நோயினால் பின்னும் கோபமடைந்து மறுபடி கமலநாதன்மேற் பாய்வதற்குள் கமலநாதன் ஓங்கி யொரு குத்து விட அம்முரடன் வீறிட்டுச் சுவரின்மேற்போய் மோதிக்கொண்டான். அவன் சமாளித்துக்கொண்டு திரும்புமுன் கமலநாதன் அவன்மேற் பாய்ந்து அவனுடைய தொண்டையை யிறுக்கிப் பிடித்துக்கொண்டு, ஒரு கையால் தன் கைத்துப்பாக்கியை யெடுத்து அவன் கன்னத்தில் படும்படி "அடே பிணமே! அசையாதே, இன்றேல் மெய்யாகவே பிணமாய் விடுவாய்" என்றான்.

அந்த முரடன் தன் அபாயத்தையுணர்ந்து "அந்தோ என்னைக்கொன்று விடாதே நான் உன்னை ஏமாற்றினேன்" என்றான்.

கமலநாதன்.—"ஆ! அப்படியா சங்கதி. சற்று நேரம் உயிரை வைக்கிறேன். அதற்குள் ஒளிக்காமல் எல்லாம் கூறிவிடு. நீ மறுபடி சூரியனைப் பார்க்கவேண்டுமானால் கைகாலை யசைக்காமல் இப்படியே நட்டமரம் போல் நின்றுகேட்டதற்கு விடை கூறு. நான் சொல்வது தெரிகிறதா" என்றான்.

அந்தமூடன்—நான் உன்னைக் கள்ளனென்று எண்ணிக் கொண்டேன்" என்றான்.

கமலநாதன்.—"அடே மூடா! மறுபடி புளுகாதே, நான் கள்ளனல்லவென்றும் துப்பறிபவனென்றும் உனக்கு நன்றாய்த் தெரியும். ஆனால் நானொரு தூங்குமூஞ்சியென்று நீ எண்ணிக்கொண்டிருந்தாய். நீ எண்ணிக் கொண்டது தவறு. என்னிடம் இப்படி சேஷ்டை செய்யும்படி உன்னை யார் தூண்டியது?

மூடன்:—விகாரமான உருவமுடைய ஒரு குட்டை மனிதன். அவன் பெயர் குள்ளன்.

இதைக்கேட்டதே கமலநாதனுக்குக் கலவரமுண்டாய் விட்டது. முன் அவன் பணம் வாங்கிக்கொண்டு வேலாயுதனைத் தன்னிடம் சிக்கவொட்டாமல் தந்திரஞ்செய்தது அவன் கவனத்திலிருக்கிறது. அந்த நோட்டின் மூலமாய் ஒரு உளவு கண்டுபிடிக்கலா மென்றிருந்தான். ஆனால் அந்த நோட்டு வேலாயுதனே குள்ளனுக்குக் கொடுத்ததென்று தெரிந்தது.

"குள்ளன் உனக்கு என்ன சொன்னான்?" என்று கேட்டான்.

மூடன்.—"அவன் உன்னை யிங்கே நிறுத்திவைக்கச் சொன்னான்; அவன்—" என்று கூறியதும் தட்டென்று வாயைக் மூடிக்கொண்டான்.

கமலநாதன்.—"அப்புறம் முழுதுங்கூறிவிடு" என்றான்.

அம்மனிதன்.—"நான் முன்னமே யதிகம் கூறிவிட்டேன்." என்றான்.

கமலநாதன் துப்பாக்கியைச் சற்று அதிகயாக அவன் கன்னத்தில் நீட்டினான். அப்படியும் அம்முரடன் வாய் திறக்கவில்லை. அதன்மேல் கமலநாதன் "அடே! இன்னம் ஒருநிமிஷமே பார்ப்பேன். அப்புறம் குதிரையை இறக்கி விடுவேன் பத்திரம், சீக்கிரமாய்க் கூறிவிடு" என்றான்.

முரடன் சரி இனிப்பூரணமாய்க் கூறிவிடாவிட்டால் மோசமாய் முடியுமென்று எண்ணிக்கொண்டு, "நீ இங்கே வருவது குள்ளனுக்குத்தெரியும். அவன் உன் அறையி லிருக்கும் சிலசாமான்களைக் களவாடுகிறமட்டும் உன்னை விடாமல் இங்கே பிடித்துவைக்கும்படிக் கூறினான்" என்றான்.

கமலநாதன்.—உனக்குக் கூலி என்ன கொடுத்தான்?

முரடன்.—எனக்கு குள்ளன் பத்துரூபாய் கொடுத்தான்.

கமலநாதன்.—என் அறையில் அவன் என்ன திருடப்போ கிறதாய்க் கூறினான்?

முரடன்.—அந்தக் கொலைகேஸில் ருசுவுக்காக இரத்தக் கறையான விரல் அடையாளம் முதலியவைகள் உன் னிடமிருக்கின்றனவாம்.

இதைக்கேட்டதே கமலநாதனுக்கு எல்லாம் வெளிச்ச மாய்விட்டது. உடனே அம்முரடனைக் கெட்டியாய்ப் பிடித் துச் சுழற்றி பூமியில் மோதியடித்துவிட்டு ஒரு எட்டாய்த் தாண்டி அவ்வீட்டைவிட்டு வெளிப்பட்டான்.

கமலநாதன் அதிதுரிதத்தில் தன் அறையைச்சேர்ந்தான். அறைக்குள் சென்ற நிமிஷமே தானில்லாத வேளையில் யாரோ அங்கு வந்திருந்தார்களென்று தெரிந்து விட்டது. பின்னும் சற்றுநேரத்திற்கு முழுச் சங்கதியும் வெளியாய் விட்டது. அவன் அவ்வளவாய் நம்பியிருந்த அந்த இரத்

தக்கறையான விரற்குறி போய்விட்டது. இது மட்டுமேயல்ல, அன்று காலை தான் கொண்டுவந்துவைத்த மெழுக்குப் பில்லைபிலெடுத்த விரற்குறியும், இன்னும் சில சில்லறைச் சாமான்களும் களவு போய்விட்டிருந்தன.

"இது அந்தக் கள்ளப்பயல் குள்ளனுடைய வேலை. ஆயினும் அவன் தப்பமாட்டான், ஆகட்டும்" என்று கூறிக்கொண்டே வெளியறைக்குச் சென்று மணியை யடித்தான். உடனே ஒரு கன்னிகை வந்து "சரவணன் என்ற ஒரு சிறுவன் வந்து கேட்டான்" என்றாள். எம்மாதிரி சிறுவன் என்றதற்கு, "அவன் சிறிய உருவமும் சிறியகண்களும் உடையவன். அவன் மாதிரியெல்லாம் ஒரு விதமாயிருக்கிறது. தலை பஞ்சுபோலிருக்கிறது" என்றாள்.

கமலநாதன் கோபத்தோடு "நீ பெரிய தப்பு செய்துவிட்டாய். அந்தக் கள்ளப்பயலை யுள்ளே விட்டிருக்கக் கூடாது. அவன் தன் பெயர் சரவணன் என்று கூறினான்?" என்றான்.

அப்பெண்.—"ஆம் ஐயா. உன்னைக் காணவேண்டுமென்றான். அவன் வந்தால் உடனே யுள்ளே யனுப்பும்படி நீர் கட்டளையிட்டிருந்தீரே, நான் ஏதாவது தவறுசெய்துவிட்டேனென்று பயப்படுகிறேன்?" என்றாள்.

கமலநாதன்.—"நான் உன்மேல் குற்றங் கூறவில்லை. நீ பயப்படவேண்டாம். நீ கூறிய ஆள் அறையில், நானிருக்கும் வேளையில் வரவில்லை. நான் வெளியில் போகும் பட்டும் அவன் எங்கோ பதுங்கியிருந்து, நான் சென்றபின் என் அறைக்குள் வந்து எனக்கு மிக்க முக்கியமான சில சாமான்களைக் களவாடிக்கொண்டு போய்விட்டான். ஆகையால் இனிமேல் நாம் மிகவும் ஜாக்கிரதையாயிருக்கவேண்டும். அக்குள்ளன் எப்போது போனான் கூறு" என்றான்.

அக்கன்னிகை "கொஞ்சநேரத்திற்கு முந்திதான்போ னான். அவன் 33—வதுநெம்பர் தெருவுக்குச் சென்றான்" என்றாள்.

கமலநாதன்.—" ஆ ! அவன் இரயிலில் ஏறித் துரிதமாய்ப் போய்விடுவதற்காக அப்படிச் சென்றான். நான் எப் படியும்போய் அவனைப் பிடிக்கவேண்டும். என்சாமான் களைக் கண்டுபிடித்துவிட்ட பிறகே வேறே யொரு வேலை செய்வேன். நான் போயிருக்கும்போது இங்கே யார் வந்தாலும் உள்ளே விடாதே, பத்திரம். அவன் இராஜாவா யிருந்தாலும்சரி, தெரியுமா ? நான் சொல் வது கவனத்திலிருக்கட்டும்" என்றான்.

அப்பெண் "ஐயா அப்படியே அதிக ஜாக்கிரதையாய்ப் பார்த்துக் கொள்ளுகிறேன்" என்றாள்.

இப்போது அக்குள்ளனைத் தேடிப்பிடிக்க வென்றால் பொறுமையும் தந்திரமும் சாமர்த்தியமும் வேண்டும். ஆயி னும் கமலநாதன் அதே யிரவு ஒன்பது மணிக்குள் எவ்வித சாமர்த்தியத்தாலோ அவன் ஒளிந்திருக்குமிடத்தைக் கண்டு பிடித்து விட்டான். அந்த விடம் மகா போக்கிரிகள் இருக் கும் இடம். வீடுபுகுந்து களவாடும் கள்ளர்களும், வழிபறிக் கும் கொள்ளைக்காரரும், கொலைக்கஞ்சாப் பாதகரும் எப் போதும் அங்கே யிருக்கக்காணலாம். எதற்கும் துணிந்து போலீஸாருக்கு அகப்படாமல் ஒளித்திருப்பவர்க ளெல் லாம் அங்கேதா னிருப்பது. பெரிய நகரங்களில் இப்படிப் பட்ட விடங்கள் இருப்பது சுபாவம். இது இப்படிப்பட்ட மிக்க அபாயமான விடமென்று கமலநாதனுக்குத் தெரியும். இங்கே மிகத் தந்திரமாயும் சாமர்த்தியமாயும் வேலை செய் தாலன்றி காரியம் அனுகூலமாகாது. போலீஸாரை யிந்த விடத்திற்குத் துணை யழைக்கவும் உதவாது. இந்தச் சம யத்தில் தனக்கு உதவி செய்யக்கூடிய ஆசாமி அந்த நகரத்

தில் ஒருவனே யிருக்கிறான். அவன் நமது ஜீவாஜியே. ஆனால் கமலநாதனோ ஜீவாஜியின் உதவியைக் கோருவ தென்று கொஞ்சம்கூட உத்தேசிக்கவேயில்லை. "ஜெய மடைந்தால் நமது முயற்சியாலே ஜெயமடைய வேண்டும். இன்றேல் தோல்வியடைந்தாலும் சரி," என்று நிர்மான மாய் எண்ணிக்கொண்டான்.

கமலநாதன் அந்தக்கட்டிடத்தைப் பார்த்தான். அது ஒரு புராதனமான கட்டிடம். எந்தநிமிஷத்திலோ அடி யோடு விழுந்துவிடும்போ லிருந்தது. அதன் மத்தியில் ஒரு விசாலமான கூடமிருந்தது. அது மிக்க அசுத்தமாயும் இருளடைந்துமிருந்தது. கமலநாதன் கள்ளனைப் போல் பதுங்கிக்கொண்டே கட்டிடத்திற்குள் நுழைந்தான். அக் கூடத்தின் கோடிக்குச்சென்றபோது அங்கே வெளியான ஒருபெரிய முற்றம் இருந்தது. அம்முற்றத்தின் மத்தியில் பல டெலிபோன் கம்பிகளையும் தந்திக்கம்பிகளையும் தாங்கிக் கொண்டு ஒரு உயரமான கம்பம் நின்றுகொண்டிருந்தது.

கமலநாதன் நன்றாய்ப் பார்த்தபோது வாசற்படி அல்லது சாளரங்களின் வழியா யுள்ளே நுழைவது மிக்க கஷ்டமென்று தெரிந்தது; ஆனால் மேலே யொரு சாளரம் தெரிந்தது. முன் கூறிய கம்பத்தின்மேலேறினால் மேலே சுவரிலிருக்கும் ஒரு கொடுங்கையைப் பற்றி நின்று சாளரத் தில் நுழையலாமென்று கண்டான்.

இந்தயோசனை துரிதமாய் இவனுக்குள் தோன்றி னாலும், உடனேயவன் அப்படிச்செய்யவில்லை. கட்டி டத்தை நன்றாய்ச் சுற்றிச்சுற்றிப் பார்த்தான். ஒவ்வொரு இருண்டமூலையிலும் யாராவது ஒளிந்திருந்து தன்னைப் பார்க்கிறார்களா வென்று சாக்கிரதையோடு நன்றாய்ப் பார்த்தான். குப்பைநிறைந்து கிடக்கும் ஒரு மூலையில் பார்த்தபோது அழுக்கடைந்த உடைகளால் மூடப்பட்டு

கும்பலாய் மனிதனைப்போன்ற ஒரு உருவம் கிடப்பதுபோ லிருந்தது.

கமலநாதன் சட்டென்று அவன் தோள்களைப் பிடித்து அவன் எழுந்திருக்காதபடி கெட்டியாய் இறுக்கிக் கொண் டான். அம்மனிதன் "ஏ ஏ, என்ன ஒன்றும்" என்றான். அவன் தடுமாற்றத்தோடு குளறிக்கொண்டு பேசுகிறமாதிரி யால் அவன் குடித்திருக்கும் நிலைமை தெரிந்தது.

கமலநாதன்.—"உன்னைப் பேசாமலிருக்கச் சொல்லுகிறேன் அவ்வளவுதான்" என்றான்.

அவன்.—"நான்—நான் சும்மாயில்லையா?" என்றான்.

கமலநாதன்.—"இம்மாதிரி கெட்டியாய்ப் பேசினால் எங்கே சும்மாயிருப்பதற் கர்த்தம்?" என்றான்.

அம்மனிதன்.—"ஆ! நான் எங்கேயிருக்கிறேன்? நீ யார்? நான் நினைக்கிறேன்—நீ—நீமேலேயிருந்து வந்த வரா?" என்றான்.

அவன் அளவுமீறிக் குடித்திருக்கிறானென்று நன்றாய்த் தெரிகிறது. பேச்சு தொனி, குளறல், தடுமாற்றம் எல்லா வற்றையும் அபினயிப்பது அசாத்தியம். இதுவரையில் கமலநாதனுக்குத் திட்டமாய்த் தெரிந்து விட்டது. அவன் சேபியில் ஒரு சிறு கைராந்தல் இருந்தது. ஆனால் அந்த சமயம் அதைக்கொளுத்துவது நல்லதல்ல. ஏனெனில் யாராவது வெளிச்சத்தைப் பார்த்துவிட்டால் தன்காரியம் கெட்டுவிடும். இவன் இதைப்பற்றி சிந்தித்துக் கொண்டே யிருக்கையில், அம்மனிதன் இவன் தோளின் மேல் சாய்ந்து கொண்டு உறக்கம்பிடித்துப் பெருமூச்சு விட்டான்.

கமலநாதன், "இங்கே என்வேலைகள் முடியுந்தனி லும் இவனைச் சும்மா விட்டுவைக்கவேண்டும்" என்று எண்ணிக்கொண்டு, அவனைப் பிடித்து மெதுவாய் இருட் டாகிய இன்னொரு மூலைக்குக் கொண்டுபோய் படுக்க வைத்

தான். பிறகு முற்றத்திற்கு வந்து சற்றுநேரம் கவனமாய் உற்றுக்கேட்டான். எங்கும் எள்ளளவு சந்தடியுமில்லை. கட்டிடத்தின் சாளரங்களில் சிலவற்றில்மட்டும் மங்கலான தீபவொளி தோன்றியது. வீதியில் சற்று தூரத்தில் அநேகம்பேர் நடக்கும் காலடிச் சத்தம் கேட்டது.

கமலநாதன் யாரும் தன்னைப் பார்த்துக்கொண்டிருக்க வில்லை யென்று மறுபடி நன்றாய்ப்பார்த்துவிட்டு அக்கம் பத்தின்மேல் ஏறத்தொடங்கினான். சிலம்பவித்தையில் கைதேர்ந்த அவனுக்கு அது ஒரு அசாத்தியமான வேலை யல்ல, அபாயமானது மல்ல. இப்படிப்பட்ட வேலை அவன் செய்வது இது முதற்றடவையல்ல. அவன் அக்கம்பத்தின் மேலேறிக் கையால் சுவரின் கொடுங்கையைப் பற்றினான். மறுநிமிஷம் அவன் திடுக்கிட்டு நிற்க வேண்டியதாயிற்று. ஏனெனில் தனக்கு நேராய்க் கம்பத்தின் கீழ் ஆட்கள்பேசும் சத்தம் கேட்டது. அவன் உடனே மேலேறாமல் நின்று சந்தடி செய்யாமல் அக்கம்பத்தைக் கெட்டியாய்ப் பிடித்துக் கொண்டான்.

கீழே இருள் அதிகமாயிருந்த படியால் கண்ணுக்கு ஒன்றும் புலப்படவில்லை. ஆனால் ஆட்கள் முரட்டுத்தன மாய்ப் பேசும் சத்தமட்டும் அவன் செவிகளில்கேட்டது. உற்றுக்கேட்டான்.

முதலில் ஒருவன் "எங்கே வெட்டுகிற தென்று தெரி கிறதா?" என்று கேட்டான்.

மற்றவன்.—"ஆகா, நன்றாய்த் தெரிகிறது" என்றான்.

இச்சம்பாஷணையின் கருத்து இன்னதென்று அவன் யூகித்துணர்வதற்குள் அவன் நெஞ்சம் நடுங்கும்படி அது தானே வெளியாய்விட்டது. எவ்வாறெனில், தான் ஏறி யிருக்கும் கம்பத்தின் அடியில் வெட்டுப்படும் சத்தம் தாக் தாக் என்று கேட்க ஆரம்பித்தது. அடிகள் ஒன்றின் மேல் ஒன்றாய்ப் பலத்து விழுகின்றன.

கமலநாதன் என்ன செய்வான். கலங்காத அவன் சித்தமும் கலங்கிவிட்டது. சுவரின்கொடுங்கைமேல் ஏறலாமென்றால் இன்னும் இரண்டடி மேலேறிச் செல்ல வேண்டும். நாலைந்தடி விழுந்ததும் தன்காலின்கீழ் பிடித்திருக்கும் கம்பம் தள்ளாடுவதைக்கண்டான். மறுநிமிடமே அது தடாலென்று சாய்ந்து அடியோடு பூமியில்விழுந்தது.

10-வது அத்தியாயம்.

சரவணனும் கொள்ளிவீரனும்—சரவணனும் இராங்கனும்—சரவணன் ஆபத்தும் அவன் சாமர்த்தியமும்

முன் அத்தியாயத்தினிறுதியில் கூறப்பட்ட சம்பவங்கள் நடக்குந்தினம் மாலை தீபம்வைக்கும் சமயம் சரவணன் ஜனசந்தடியான வீதியில் சென்றுகொண்டிருக்கிறான். "கமலநாதன் பக்காபேர்வழி; உள்ளங்கால் முதல் உச்சந்தலைவரையில் பக்கா ஆசாமி" என்று தனக்குத் தானே கூறிக்கொண்டு போகிறான். வீதியிலிருக்கும் சந்தடிகளையும் காட்சிகளையும் அவன் கவனிக்கவேயில்லை. ஆனால் சூக்ஷ்மமான அவன் பார்வைக்கு நடக்கிற அற்ப விஷயமும் அகப்படாமற் போகாது.

இப்போது அவன் நாட்டத்தில் ஒரு தொழிலும் இல்லாவிட்டாலும், ஏதாவது பிரசித்திதாத்தக்க ஒரு வேலையைச் செய்து முடிப்பதே சரியென்ற தீர்மானத்தோடு புறப்பட்டான். "நான் நேற்று முழுதும் அலைந்து வீண் காலம் போக்கினேன். ஒரு வேலையும் செய்யவில்லை. இன்றைக்கும் ஒன்றும்செய்யாமல் வீண்காலம்போக்குவேனேயாயின், அந்த அறிவாளியான துப்பறியும் ஆசாமி நம்மைச் சுத்த மக்கு என்று எண்ணிவிடுவான். நம்மையொன்றுக்கும் பயனில்லாத சக்கையென்றே தீர்மானித்து

விடுவான்" என்று தனக்குத்தானே கூறிக்கொண்டு சென்றான்.

சிறுவன் ஒரு மூலைப்பண்டை வந்ததும் நின்று எச்சரிக்கையாய்த் தன்னைச்சுற்றிப் பார்த்தான். அதேசமயம் தடிந்த ஒரு மனிதன் ஜாடையாய்த் தன்னைப்பார்த்துக் கொண்டே வீதியின் மறுபக்கம் வருவதைக் கண்டான். அவன் ஒரு நிமிஷமட்டுமே பார்த்துவிட்டுச் சட்டென்று திருப்பிக்கொண்டான். அதனால் அவன்பார்க்கிறது சிறுவனுக்குத் தெரியக்கூடாதென்பது அவன் எண்ணம் என்று தெரிந்தது. ஆனால் அவன் எண்ணம் நிறைவேறவில்லை. சரவணன் அவன்பார்ப்பதைக் கண்டுகொண்டான். அவன் அம்மனிதனைப் பார்க்காதவன் போலவே அங்கிருந்த ஒரு பட்டாணிக்கடைக்கருகில் சென்று அக்கடையிலிருந்த சிறுவனை நோக்கி, "என்ன தம்பி! யேரம் எப்படியிருக்கிறது?" என்றான்.

அச்சிறுவன்.—"ஆ! சரவணா! ஒன்றும் விசேஷமில்லை. நீ எப்படியிருக்கிறாய்?" என்றான்.

சரவணன்.—நான் ஒருவேலையு மின்றிச் சும்மாயிருக்கிறேன்.

மற்றவன்.—ஏன் வேலையைவிட்டு நீக்கிவிட்டார்களோ?

சரவணன்.—இல்லை, நானே நீங்கிக்கொண்டேன்.

இரங்கன் என்ற அச்சிறுவனும் சரவணனும் ஒரு காலத்தில் கூட்டாளிகளா யிருந்தார்கள். ஆகையால் அனாதையாயிருந்த சரவணனுக்கு அச்சாபீசில் திடீலென்று வேலைகிடைத்தது இரங்கனுக்குச் சற்று பொறாமையே.

சரவணன் அவனை நோக்கி "அந்த வேலை எனக்குச் சள்ளையா யிருந்தபடியால் பழையபடி தெருச்சுற்ற வந்துவிட்டேன்" என்றான்.

இரங்கன்.—"உனக்கு வேலைகொடுத்த ஆள் சுடப்பட்ட

பிறகு கதிரேசம்பிள்ளைக்கு உன் விஷயம் சரிப்பட வில்லைபோ லிருக்கிறது" என்று தந்திரத்தோடுகூறி னான்.

சரவணன்.—அவனுக்கு நான் சரிப்படாமற் போகவில்லை. எனக்குத்தான் அவன் சரிப்படவில்லை. உங்கள் இரு வரில் ஒருவர் வெளிப்படவேண்டியதா யிருந்தபோது நாமே போய்விடலா மென்று வந்துவிட்டேன். மெது வாய்ப்பேசு, தெரியுமா, உன் கடையைச் சரக்கோடு விற்றுவிடுகிறாயா ?

இரங்கன்.—என்ன கொடுக்கிறாய் ?

சரவணன்.—ஐம்பது ரூபாய்.

இரங்கன்.—ஓ! ஐம்பது ரூபாய்க்கா கடையையே வாங்கிக் கொள்ளப் பார்க்கிறாய் ! பேஷ், நன்றாய்ச்சாப்பிடலா மென்று பார்க்கிறாயோ ?

சரவணன்.—நீ ஒப்பாததே நல்லதாய்ப் போயிற்று. இந்தப் பட்டாணிப்போம் யாருக்கு வேண்டும். கிழங்களுக்கும் முடவருக்குமே சரி. என்போன்ற வாலிபருக்கு இது உதவுமா. நல்லது இரங்கா ! நான் போய்வருகிறேன்.

சரவணன் இவ்வாறு இரங்கனிடம் பேசிக்கொண்டே யிருந்தாலும் தன்காரியத்தைமட்டும் மறந்தவனல்ல. அந்த மனிதன் தன்னைத் தாண்டித் துரிதமாய்ச் செல்வதைக கண்டான்.

இவன் நமது திருஷ்டிக்கு மறைவாய்ப் போகப்பார்க் கிறான் என்று சரவணன் தனக்குத்தானே கூறிக்கொண் டான். துரிதமாய் நடக்கும் அம்மனிதன்முன் ஒரு பாலம் இருந்தது. அவன் பாலத்தைக் கடந்து போனான் போல் தோன்றியது. சரவணன் பாலத்தைக் கடக்கச் சுங்கக் காசு கொடுப்பதற்காகத் தன் ஜேபியில் கையிட்டுப்பார்த் தான். அடடா ! அதில் ஒருகாசு மில்லை. அச்சமயம

நாணயமான உடை யுடுத்திக் கொண்டிருந்த ஒரு பெரிய மனிதன் பாலத்தை நோக்கிப் போய்க்கொண்டிருப்பதைக் கண்டான். தன்னிடத்திலோ காசில்லை, ஜேபியிலிருந்தது மாயமாய்ப்போய்விட்டது. காரணம் ஜேபியில் ஒரு துவாரம் இருந்தது. அவன் வரும்போது செலவிற்குப் போதுமான பணம் எடுத்துக்கொண்டே வந்தான். எல்லாம் எங்கோ விழுந்துவிட்டது. என்ன செய்வான் பாவம்! நல்ல சமயத்தில் பாலத்தைத் தாண்டத் தடைபாய்விட்டது. அடடா காசில்லாததால் அவனை விட்டுவிடுகிறதா என்று சிந்தித்தான். அச்சமயந்தான் அந்த நாணயமான மனிதனைக் கண்டான், அவன் ஊருக்குப் புதுமனிதன் என்று தெரிந்தது. சரவணன் துரிதமாய்ச் சென்று அம்மனிதன் தோளைப்பற்றி "ஐயா மன்னிக்க வேண்டும். மீதியாய்ச் சில்லறையிருந்தால் பாலச்சுங்கம் கொடுத்து எனக்கு உதவி செய்தால் நலம். என் ஜேபியில் பொத்தலைப் பாரும். எல்லாம் வழியில் எங்கோ விழுந்து விட்டன" என்றான்.

அம்மனிதன் தன் ஜேபியிலிருந்து இரண்டணா எடுத்து சரவணனிடம் கொடுத்துவிட்டுத் துரிதமாய்ப் போய்விட்டான். சரவணனும் துரிதமாய்ச் சென்று சுங்கங்கொடுத்துவிட்டு பாலத்தைக்கடந்து முன் சென்ற மனிதனைத் தேடிககொண்டு நடந்தான்.

அவன் சற்றுதூரம் சென்ற பின்னும் அம்மனிதன் தென்படவில்லை. அவன் அடியோடு காணாமற் போய் விடுவானென்று பயந்து அதி துரிதமாய்ச் சென்றான். கடைசியில் ஒருவிடத்தில் நின்று திரும்பிப்பார்த்தான். "அடடா கடைசியில் அவன் கம்பிங்கா கொடுத்துவிட்டான்போலிருக்கிறது" என்று கூறிக்கொண்டான். "மறுபிடம் இல்லை அவன் அதோவிருக்கிறான்" என்று ஒரு சத்தம் அவன் சமீபத்தில் கேட்டது. திடுக்கிட்டுப் பார்த்

தான். தான் தேடிக்கொண்டிருந்த அதே மனிதன் தன் முகத்திற்கு முன் நிற்பதைக் கண்டான். சரவணன் அவன் கைக்கு அகப்படாமல் பின்னிடைவதற்குள் அவன் எட்டிச் சரவணன் தோளை முரட்டுத் தனமாய்ப் பிடித்துக் கொண்டான்.

சரவணன் அவன் முகத்தைக் கண்டதும் "ஆ! கொள்ளிவீரன்!" என்றான். அதற்கு அம்முரடன் "ஆம், நீ என் பின்னால் வேவுபார்த்துக்கொண்டு வந்தாயோ?" என்று உறுமினான். ஓகோ இவன் நம்மைத்தெரிந்து கொண்டான் என்று சரவணனுக்கு அதிக்கையாய் விட்டது. அதோடு அவசியம் நேரிட்டால் தனக்கு உதவி செய்ய யாரும் சமீபத்தி லில்லையென்றும் தெரிந்து கொண்டான். சிலபெண்கள் மட்டும் ஒரு கூட்டமாய்ப் பேசிக்கொண்டும், நகைத்துக்கொண்டும் செல்வதைக் கண்டான். இன்னொரு வயோதிகன் இரும்புக் கிராதியைப் பிடித்துக்கொண்டு அருகிலுள்ள ஆற்றின் காட்சியைப்பார்த்துக்கொண்டிருந்தான். சற்று தூரத்தில் இன்னும் சிலர் போய்க்கொண்டிருந்தார்கள். ஆனால் அதிஷ்டம் எல்லாரும் ஸ்திரீகளாகவும் சிறுவர்களாகவுமே யிருந்தார்கள். சரவணன் ஏககாலத்தில் இவையாவும் தெரிந்து கொண்டான். பிறகு அவன் அம்முரடனை நோக்கி "விடு என்னை, நான் போக வேண்டும்" என்றான்.

கொள்ளிவீரன்.—"நீ ஏன் என்பின்னால் வேவுபார்க்கிறாய்? அதைக்கூறு" என்றான்.

சரவணன்.—நீ இப்பாலத்தைக்கடந்து செல்வது போல நானும் செல்ல எனக்குப்பாத்திய மில்லையோ? நான் உன்மேல் வேவுபார்க்கிறேனென்று எப்படி அறிந்து கொண்டாய்?

வீரன்.—எப்படி யறிந்துகொண்டேனா? நான் பார்க்க

வில்லை யென்று எண்ணிக்கொண்டாயோ? இங்கே பார்! என்மேல் மோருள் இருக்கும்படி உன்னை யார் அனுப்பியது? நிஜத்தைக் கூறு.

சரவணன்.—"ஒருவருமனுப்பவில்லை, இதைவிட்டு வேறு விதமான பதில் என்வாயிலிருந்து வரும்படி செய்ய உன்னால் கூடுமானால் ஏதோ செய் பார்ப்போம். அவ்வளவே நான் கூறுவது" என்றான்.

அம்முரடன் சுற்றுமுற்றும் பார்த்தான். அச்சமயம் இருந்ததுபோல் அந்தவிடம் ஒருபோதும் அவ்வளவு நிச்சந்தடியா யிருந்ததில்லை. இடம் காலம் முதலிய வனைத்தும் அந்த முரடனுடைய துர்ச்சிந்தனைக்கு ஒத்தனவாயிருந்தன. அவன் சிறுவன் புயத்தைப் பின்னும் கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டு "பயலே! நீ மகா அழுத்த நெஞ்சுடையவன்" என்றான். சிறுவன் விடு என்னை யென்று தன்னாலானமட்டும் விடுவித்துக்கொள்ளப் பார்த்தான். அவனால் முடிய வில்லை. அதன்பிறகு அவன் உரத்த சத்தமாய்க் கோ வென்று ஒரு பெருங்கூச்சலிட்டுவிட்டு அதே நிமிஷம் அடியற்றமரம்போல் தடாலென்று பூமியில் விழுந்துவிட்டான். பேச்சுமூச்சில்லை. மங்கலான அவ்வெளிச்சத்தில் சிறுவன் முகம் மிக்க விகாரமடைந்திருப்பதுபோல் தோன்றியது. அவன் உதட்டிலும் கன்னங்களிலும் இரத்தம் வடிந்தது.

இதைக்கண்டதே கொள்ளிவீரன் தட்டென்று தான் பிடித்தபிடியை விட்டுவிட்டான். சிறுவனை அவன் விழுந்த விடத்திலேயே கிடக்க விட்டுவிட்டு யாராவது தன்னைப் பார்க்கிறார்களாவென்று சுற்றுமுற்றும் பார்த்தான். தன்னை நோக்கியொரு மனிதன் ஓடி வருவதைக்கண்டான். வருகிறவன் போலீஸ்காரனா அல்லது சாதாரண மனிதனா வென்று கூட நிதானிக்காமல் உடனே அதை விட்டு ஓட்டம் பிடித்தான். வந்தவன் பாலத்தண்டையிருக்கும் போலீஸ்காரன்.

அவன் ஓடுகிறவனைத் துறத்திப்பிடிக்க எத்தனிக்காமல் கீழே விழுந்துகிடக்கும் சிறுவனிடத்தில் வந்தான். சிறுவன் அப்போதுதான் மெதுவாய் எழுந்திருக்கிறான். போலீஸ் காரன் அவன் அருகில் வந்து,

"என்ன சண்டை? அவன் உன்னைக்கொல்லப் பார்த் தானே? என்று கேட்டான். சரவணன் ஒரு பதிலும் கூற வில்லை; அந்தப் போலீஸ்காரன் நீட்டிய கைக்கு அகப்படா மல் விலகிக் கொண்டு கொள்ளிவீரன் ஓடியவழியே யதி வேகமாய் ஓடினான்.

இந்தத் துஷ்டனால் இவ்வளவு கஷ்டப்பட்டு விட்டு கடைசியில் இவனைவிட்டுவிட்டுப் போகிறதா, எதற்கும் இன் னொருமுறை பார்த்தே விடுவோம் என்று தீர்மானித்துக் கொண்டான். இவன் மூர்ச்சையாய் விழுந்து விட்டது பொய்ப் பாசாங்கே. அந்த முரடன் அதனால் ஏமாந்து விட் டான். போலீஸ்காரனிடம் விபரம் கூறிக்கொண்டிருந்தால் எல்லாம் மிஞ்சிப்போய்விடுமென்றே சிறுவன் அவனிடம் ஒன்றும்பேசாமல் ஓட்டம்பிடித்தான். வீரன் எங்கேபோவ தையும், என்ன காரியமாய்ப் போகிறனென்பதையும் கண் டறிய வேண்டுமென்பது சிறுவன் எண்ணம். "போலீஸா ருக்குச் சம்பளம்கொடுத்து என்போன்ற சிறுவர்களுக்கு உதவிசெய்யும்படி வைத்திருப்பது நல்ல ஏற்பாடுதான். ஆயி னும் எனக்குக் கடவுள் இரண்டு நல்ல கால்களைத்தந்திருக் கும் வரையில் பாபம் அவர்களுக்கு ஏன் வீண்சிரமம் கொ டுக்கவேண்டும். அதுசரியல்ல ஆ! அந்தப்பயல் அதோபோ கிறான்'' என்று கூறிக்கொண்டே போகும்போது கொள்ளி வீரன் தூரத்தில் செல்வதைப் பார்த்து விட்டான். அம்முர டன் அதிகவேகமாய்ப் போய்க்கொண் டிருக்கிறான். வலம் இடம் திரும்பாமல் நேராய்ச்செல்வதைக் கண்ட சிறுவன் தானும் அவன்கண்ணுக்குப் புலப்படாமல் பின்னால்தூரத்தி லேயே சென்றான்.

வீரன் பாலத்தைக்கடந்து ஒரு பெரிய வீதிக்குச்சென்று அங்கிருந்த ஒரு காபிஹோட்டலுக்குள் நுழைந்தான். சரவணன் முன்னே அக்கட்டிடத்தை நன்றாய்ப் பார்த்தான். அவன் அதன் ஓரமாய்ப் போகும்போது ஒரு சிறுவன் வாசற்படியண்டை வந்து நின்றான். சரவணன் அவனை நோக்கி "ஹோட்டல் எப்படியிருக்கிறது. கிராக்கிகள் அதிகமோ?" என்றான். அச்சிறுவன் அப்படி யொன்றும் அதிகமில்லை யென்றான். சரவணன் "இப்போது உள்ளே நுழைந்தானே இவன் அடிக்கடி இங்கே வருவதுதானோ?" என்று வினவினான்.

அச்சிறுவன்.—ஒரு தரமோ இரண்டுதரமோதான் அவனை இங்கே பார்த்திருக்கிறேன். அவன் அதிகமாய் வருவதில்லை.

சரவணன்.—அவன் காபிசாப்பிடத்தான் வந்தானோ? பணம் கொடுத்து விடுவானோ?

சிறுவன்.—ஆமா! கொடுத்துத்தான் தீரவேண்டும். இல்லாவிட்டால் வெளியே போகவேண்டியதுதான்.

சரவணன்.—அப்படியானால் வெளியில் தள்ளப் படுவானென்றே நம்புகிறேன். சற்று நேரத்திற்குமுன் பாலத் தண்டை சுங்கம் கொடுக்க முடியாமல் விழித்தானே.

சிறுவன்.—ஓஹோ! உனக்குத்தெரியுமோ அவன்?

சரவணன்.—கொஞ்சம் தெரியும்.

சிறுவன்.—அவன் ஒரு போக்கிரியல்லவா?

சரவணன்.—"அதெல்லாம் நீங்களே தெரிந்து கொள்ள வேண்டும், நானா கூறுவது. நீ என்ன ஒன்றும் தெரியாத குழந்தையோ" என்று கூறிவிட்டு அதைவிட்டுப் போகிறவன்போல் அபினயித்தான்.

ஹோட்டல் சிறுவன் அதிக ஆவலோடு அவனை இரு

இருவென்று போகாதபடி நிறுத்தினன். அவன் மெதுவாய்ச் சரவணன் அருகில்வந்து "அவனைப்பற்றி யுனக்கென்ன தெரியும்?" என்று கேட்டான். சரவணன் "அவ்வளவு அதிகமாயொன்றுந் தெரியாது" என்றான்.

அச்சிறுவன்.—"அவன் எங்களை எதிலாவது ஏமாற்றுவதற்கு வந்து அது சங்கதி யுனக்குத் தெரிந்திருந்தால் அதைக் கூறிவிடு, இல்லாவிட்டால் உனக்குக் கெடுதியாய் முடியும" என்றான்.

சரவணன்.—"நீ ரொம்ப தூரம் போய்விடாதே; என்னைத் தொடாமல் எட்டநில்; இல்லாவிட்டால் சீக்கிரத்தில் வருத்தப்படும்படி நேரிடும்" என்று சாந்தத்தோடு திண்ணிதமாய்க்கூறினன்.

அச்சிறுவன் சட்டென்று சரவணன்மேல் வைத்த கையை யெடுத்துவிட்டு கல்லதனமாய் "இதோபார் உனக்குத்தகுந்த இனம் கிடைக்கும்" என்றான்.

சரவணன்.—"நான் ஒன்றும் சம்பளம் கேட்கவில்லை. ஆனால் நீ என்னை மிரட்டப்பார்க்காதே. நான் அதற்கெல்லாம் இணங்குகிற ஆசாமியல்ல; ஒன்று கூறுகிறேன். அவனை வெளியில் தள்ளாதே. அவன் யாரையோ சந்திக்க இங்கே வந்தான்போல் காண்கிறது. மேலும் ஒரு போலீஸ்காரன் அவன்மேல் மோகூரையிருக்கிறான்போல் தெரிகிறது. ஏதோ ஒரு குற்றத்தில் சம்பந்தப்பட்டிருக்கிறான். அவனைப்பிடிக்கப் போலீஸ்காரன் வந்தால் அப்போது வேடிக்கை பார்க்கலாமென்றுதான் இங்கே வந்தேன்" என்றான்.

இதைக்கேட்ட சிறுவன் "நிஜமாகவே இது முக்கியமான சங்கதி. இதைப்போய் எஜமானனிடம் கூறவேண்டும்" என்றான்.

சரவணன்.—ஒரு நிமிஷம்பொறு.

சிறுவன்.—என்ன ! உனக்கென்ன வேண்டும்?

சரவணன்.—"அவன் கண்ணுக்கு அகப்படாமல் மறைவாயிருந்து நான் அவனைப் பார்க்கும்படி யுள்ளே ஒருவிடத்தில் என்னை யொளித்துவைக்க முடியாதோ? என்னை நான் சாக்கிரதையாய்ப் பார்த்துக் கொள்வேன், அதைப்பற்றி யுனக்கு ஒரு கலவரமும் வேண்டாம்" என்றான்.

அச்சிறுவன்.—"ஆகட்டும், அப்படியே பார்க்கிறேன், என் கூடவா உள்ளே" என்றான்.

சரவணன்.—"வேண்டாம், நீபோய் அவன் இருக்கிறவிடத்தைப் பார்த்துக்கொண்டுவா. அவன் என்னைப் பார்த்துவிட்டால் கெடுதிசெய்ய எத்தனிப்பான். நான் அவன் மேல் போகுலிருப்பதாய் அவன் சந்தேகங்கொண்டிருக்கிறான்" என்றான்.

அச்சிறுவன் ஹோட்டலுக்குள் சென்று சற்று நேரம் கழித்து சந்தோஷமான முகத்தோடு திரும்பி வந்தான். வந்ததும் சரவணனை நோக்கி, "அவனோடு இன்னொருவன் உட்கார்ந்து பேசிக்கொண்டிருக்கிறான். அவன் இந்த முரடனை இரகசியமான ஒருஅறைக்கு அழைத்துக்கொண்டுபோனான். இருவரும் மிகவும் சிரத்தையோடு பேசிக்கொண்டிருக்கிறார்கள். நீ கூறியபடி இவனிடம் காசில்லை. அவனே இவனுக்குப் பணம் கொடுத்தான்" என்றான்.

இதைக்கேட்டதே சரவணனுக்கு மிக்க சந்தோஷமும் ஆவலுமுண்டாய்விட்டது. அவன் சிறுவனை நோக்கி "அவன் கூட இருப்பவன் கூட்டாளியாயிராது. போலீஸ்காரனாயிருக்கும். ஹோட்டல்காரருக்குத் தான் துப்பறிபவன் என்று தெரியாமலிருக்க அப்படிச் செய்கிறான்" என்றான்.

சிறுவன்.—"நீ மகா சாமார்த்திய முள்ளவன். என் கூடவா. நீ அவர்களைப் பார்க்கும்படியானவிடம் காட்டுகிறேன்.

அவர்கள் கண்களுக்குப் புலப்படாமல் அவர்கள் செய்கைகளை நீ நன்ருய்ப்பார்க்கலாம்'' என்றுகூறிச் சரவணனை யுள்ளே யழைத்துக்கொண்டு சென்ருன்.

சிறுவன் சரவணனை யழைத்துக்கொண்டு சிலபடிக்கட்டுகளின் வழியாய்ச்சென்று கடைசியில் நெருக்கமான ஒருவிடத்திற்குச் சென்ருன். அது கொள்ளிவீரனும் மற்ருெருவனும் பேசிக்கொண்டிருக்கும் அறைக்குப் பக்கத்திலிருக்குமிடம். அங்கே பலவித பழையசாமான்கள் வைக்கப்பட்டிருந்தன. சரவணனை யங்கே விட்டுவிட்டுச் சிறுவன் தன் வேலையைக் கவனிக்கப் போய்விட்டான்.

சரவணனிருக்கும் அறைக்கும் பக்கத்தறைக்கும் இடையில் ஒரு பலகைச் சுவர் இருந்தது. அதில் ஒரு சிறு துவாரம் இருந்தது. சரவணன் அதில் செவியை வைத்துக் கேட்டான். அடியிற்கண்ட சம்பாஷணை யவன் செவியிற் கேட்டது.

கொள்ளிவீரன்.—நான் என் வேலையை முடித்து விட்டேன். இனி எனக்குச் சேரவேண்டிய பணத்தைக் கொடுத்து விட்டால் நான் போய்விடுவேன்.

மற்றவன் தன் சுயமான குரலை மாற்றி மாறுகுரலாய்;—''முடியாதகாரியம். இன்னம் வேலை முடியவில்லை'' என்ருன்.

வீரன்.—அப்படியாளுல் நான் இங்கே தொங்கிக் கொண்டிருந்து கடைசியில் அகப்பட்டுக் கொள்ள வேண்டுமென்கிரயோ?

மற்றவன்.—நீ ஆரம்பித்த காரியத்தை நீ முடித்துவிடவேண்டும். உனக்கு வேண்டியபணம் எல்லாம் கொடுத்துவிடுகிறேன். ஆனல் உன்வேலை முடியுமட்டும் உன்னையனுப்பமாட்டேன்.

வீரன்.—நான் இதோடு கைவிட்டுவிடுவ தானலோ?

மற்றவன்.—அப்படியானால் அத்தீர்மானத்தை மாற்றிவிட வேண்டியதே. அவ்வளவுதான். நான் உன்கையில் சிக்கிக்கொண்டிருப்பதாகவும் உன்னிஷ்டப்படி என்னை யாட்டலாமென்றும் நீ எண்ணிக்கொள்ளலாகாது. நான் எவ்வளவு இதில் சிக்கிக்கொண்டிருக்கிறேனோ அவ்வளவு நீயும் சிக்கிக்கொண்டிருக்கிறாய். உன்னிலும் எனக்கு ஒரு சௌகரியமிருக்கிறது. அதாவது கையில் ரொக்கப்பணம் இருக்கிறது. நீ பின்வாங்கினால் பெரிய ஆபத்தில் சிக்கிக் கொள்வாய். நானோ என்னை நான் காப்பாற்றிக்கொள்வேன்; சங்கதி தெரிகிறதா? அது ஒரு காரணம். இன்னொன்று உன்னைக் குடிவெறியில்லாமல் வைத்துக்கொண்டிருக்க வேண்டும்" என்றான்.

வீரன் பதிலுக்குக் கோபமாய் என்னமோ கூறிவிட்டுப் பேசாமலிருந்தான்.

இவர்கள் இருவருக்கும் ஒரே குற்றத்தில் சம்பந்தமிருக்கிறதென்றும், வீரன் மற்றவனால் தூண்டப்பட்டு கூலிக்கு அக்குற்றத்தைச் செய்திருக்கிறானென்றும் சரவணன் தெரிந்துகொண்டான். அவன் சந்தின்வழியாகப் பார்த்தபோது உள்ளேயிருக்கும் இருவர்முகங்களும் நன்றாய் விளங்கவில்லை. வீரன் கூட இருப்பவன் மிகத்தந்திரமாய் மாறுவேடமணிந்திருந்தான்; ஆயினும் அவனுடைய ஜாடைகளும் பேச்சுமாதிரியும் நடையும் தான் முன்னே கண்டவை போலிருந்தன.

"இது யார்? நான் பார்த்த மனிதனைப்போலிருக்கிறது. யார் அவன்? தாமோதரனல்ல பின்னை யார்? பூராய் மாறுவேடமணிந்திருக்கிறான்; யாராயிருப்பான்?" என்று சரவணன் சிந்தித்துக்கொண்டிருந்தான். அச்சமயம் வீரனோடிருந்த மனிதன் மறுபடி பேச ஆரம்பித்தான்.

"1500 ரூபாய்க்கு இவ்வேலையை முடிப்பதாய் நீ ஒப்புக்கொண்டாய். நீ யுடனே ஆலசியம் செய்யாமல் இதை முழுதும் நிறைவேற்றினால் அப்படி இரண்டத்தனை தருகிறேன். என்ன சொல்லுகிறாய்?" என்றான்.

வீரன் தட்டென்றெழுந்து மூவாயிரமா? என்றான்.

மற்றவன் "ஆம் வாயாற் கூறிவிட்டேன்; என்ன சொல்லுகிறாய்?" என்றான்.

வீரன்.—என்னை யின்னம் என்ன செய்யச்சொல்லுகிறாய்?

மற்றவன்.—"இரண்டிலொன்று முடித்துவிட வேண்டும். ஒன்று தக்கவேலைசெய்து வேலாயுதன் குற்றவாளியென்று ரூசுப்படுத்தி விடவேண்டும். அப்போது துப்பறிபவன் இன்னும் இதில் தலையிட மாட்டான். அல்லது கமலநாதன், அந்த ஜீவாஜி, இவர்கள் இருவரையும் அடியோடு ஒழித்து விடவேண்டும்" என்றான்.

வீரன்.—"மூவாயிர ரூபாய்க்கு அவர்கள் இருவரையும் கொல்லச் சொல்லுகிறாயா? அப்படி நினைக்காதே. அவர்களை யடிக்கப்பார்ப்பது மோசமானவேலை. உனக்கு அதிக செலவுபிடிக்கும். அது முன்போல் பொட்டென்று முடிகிறவேலையல்ல. அவர்களை யொழிக்கத் தடையில்லை. ஆனால் தகுந்தவிலை தரவேண்டும்" என்றான். மற்றவன் சற்றுநேரம் சும்மாயிருந்து, பிறகு "உன் விலை யென்ன கூறு பார்ப்போம்" என்றான்.

வீரன்.—"செலவின்றி பதினைந்தாயிரம் ரூபாய் தரவேண்டும்" என்றான்.

மற்றவன்.—மிக்க அதிகம்.

வீரன்.—அப்படியானால் வேறே ஆளைத்தேடிக்கொள், எனக்குச் சேரவேண்டியதைக் கொடுத்து விடு.

மற்றவன்.—அப்படி யல்ல, நீயே யதைச்செய்யவேண்டும்.

உனக்குத் துணிகரமான ஆட்கள் கிடைப்பார்கள். நீ கேட்டதொகை கொடுத்து விடுகிறேன்.

வீரன்.—"அப்படியானால் சரி. ஒப்புக்கொள்ளுகிறேன்" என்றான்.

மற்றவன்.—"சரி வேலைக்கு ஆரம்பஞ்செய்" என்றான்.

வீரன்.—"அவ்வளவு அவசரப்படவேண்டாம் எனக்கு உன் உதவி வேண்டும். கமலநாதன் விஷயத்தில் மட்டுமாவது நான் கூறுகிறபடி நீ யவனை யேமாற்றி யழைத்து வரவேண்டும். அவன் பொல்லாத புலி. நீ மிகவும் சாக்கிரதையாயவனைக் கொண்டுவரவேண்டும். அவனை யெப்படி வஞ்சித்துக் கொண்டுவரவேண்டுமென்பதைக் கூறுகிறேன்" என்று விவரமாய்த் தன் யோசனைகளையெல்லாம் கூறினான்.

சரவணன் ஒருவார்த்தைகூட விடாமல் எல்லாவற்றையும் கேட்டுக்கொண்டான். இருவரும் பேசிக்கொண்டிருக்கையில் மிகச்சாக்கிரதையாய்ப் பேசிக்கொண்டிருக்க அம்மனிதன் ஆத்திரத்தால் அபினயத்தை மறந்து சற்றுநேரம் தன் சுயக்குரலால் பேசிவிட்டான். அதைக்கேட்டதே சரவணன் துள்ளி யெழுந்து,

"ஆ! இக்குரல்!" என்று அடங்காவியப்பும், பயமும், கலவரமுமடைந்து பிரமித்து நின்றான். அவன்முகம் வெளுத்து விட்டது. இன்னம் என்ன பேசுகிறார்களென்பதையும் எதிர்பாராமல் உடனே புறப்பட்டு மெதுவாய் அதை விட்டுப் புறப்பட்டு வீதியைக்கடந்து வேகமாய் நடந்து கொண்டே "ஆ! இப்போ தெரிந்துகொண்டேன். இவனே சபாபதிப்பிள்ளையைக் கொன்றவன். இவனும் அவனும் மற்ற சங்கதிகளை கமலநாதன்தான் யூகித்தறிய வேண்டும். இப்போது எல்லாம் வெளிச்சமாய்த் தெரிந்து விடும். ஆகா! எனக்கு இந்த உளவு அகப்பட்டது மிக்க

கலமாயிற்று; அன்றிரவு அச்சாபீசில் கேட்ட சங்கதியும் இப்போது வெளியாயிற்று. இனி சும்மாயிருக்கலாகாது. கமலநாதனையும் ஜீவாஜியையும் இவர்கள் கொல்லும்படி விட்டுவிட்டு நான் சும்மாயிருப்பேனே? ஒருக்காலுமில்லை'' என்று கூறிக்கொண்டான்.

11-வது அத்தியாயம்.

சரவணன் சாமர்த்தியச் செயல்கள்—துஷ்டரின் திகைப்பு—கமலநாதன் சாமார்த்தியமாய்த் தப்பித்தல்—கமலநாதனும் தள்ளனும்—களவுபோன பெருவிரற்துறி முதலியவை சிக்கல்—துமாப்பனும் கமலநாதனும்—மறுபடி ஆபத்து—வேலாயுதன் உதவி—சரவணன் சமயோசித உதவி.

காபிஹோட்டலிலிருந்து புறப்பட்ட சரவணன் புட்டத்தில் குதிக்கால் படும்படி வெகுவேகமா யோடினான். எல்லாசங்கதிகளையும் போலீஸாரிடம் கூறி விடலாமாவென்று நினைத்தான். ஆனால் அப்படி செய்யக் கூடாதென்று கமலநாதன் கூறியதை நினைத்து விட்டுவிட்டான். அவன் மனதில் பலவித யோஜனைகளுதித்தன. இதற்குள் பொழுதும் பூரணமாயஸ்தமித்து எங்கும் இருள்மூடிக் கொண்டது. கடைசியில் மிக்க அபாயகரமான ஒரு பெரிய வீதியில் நுழைந்தான். ஒருவிடத்தில் செல்லும்போது கும்பலாய் சிலர் கோபத்தோடு சண்டையிடும் சத்தம் கேட்டது. அந்தக் கூச்சலுக்கிடையில் கமலநாதன் குரலும் கேட்கவே கமலநாதன் மிக்க அபாயத்தில் சிக்கிக்கொண்டானென்று தெரிந்துக்கொண்டான்.

ஒரு சிறுவன் அப்படிப்பட்ட ஆபத்தில் எப்படி உதவி செய்யக்கூடும். தன் தேகபலம் ஒருபயனுமில்லையென்றுதெரியும். உடனே அருகிலிருக்கும் போலீஸ் ஸ்டேஷனுக்குத் துரிதமாயோடினான்.

முன்னே தந்திக்கம்பி தடாலென்று விழுந்ததாய்க் கூறினேமல்லவா. அங்கு நின்றிருந்த இரண்டு துஷ்டர்களும் விழுந்த அக்கம்பத்தின் முனையண்டையோடினார்கள். அதன் மேலேறியிருந்த மனிதன் கீழே விழுந்திருப்பானென்று எதிர் பார்த்தார்கள். மேலும் அவன் கீழேயிருந்த கருங்கல்லின் மேல் விழுந்து நசுங்குண்டு பொத்தையாய் விட்டிருப்பானென்று எதிர் பார்த்தார்கள். இருவரில் ஒருவன் ஒரு இராந்தல் வெளிச்சத்தைக் காட்டினான்.

கம்பம் உடைந்து விழுந்து கிடந்தது. தந்திக்கம்பி அறுந்து விழுந்திருந்தது. இவ்வளவே. இறந்த மனிதனாவது உயிரோடிருக்கிற மனிதனாவது யாருமங்கில்லை. கம்பத்தின் மேலேறியிருந்தவன் என்னகெதி யானதும் தெரியவில்லை. இருவரில் கையில் கோடாரியை வைத்திருந்தவன் "கடைசியில் அவன் அகப்படவேயில்லை" என்றான்.

மற்றவன் "அப்படியிராது. அவன் இங்கேதான் எங்கேயாவது இருக்கவேண்டும். இப்படிவா" என்று மெதுவாய்க் கூறினான்.

ஆனால் அவர்கள் எங்கும் தேடிப்பார்த்தும் ஆள் அகப்படவில்லை. இவர்கள் கொன்றுவிட நினைத்த கமலநாதன் எப்படியோ தப்பித்துக்கொண்டு போய்விட்டான்.

இது எப்படி நேரிட்டதென்று பார்ப்போம்.

தான் ஏறியிருக்கும் கம்பம் விழுந்து விடுமென்று தெரிந்ததே கமலநாதன் இரண்டெட்டாய் எட்டித் தன் பலங்கொண்டமட்டும் தாவிச் சுவரின் கொடுக்கையைப் பற்றினான். அதேசமயம் கம்பம்சாய ஆரம்பிக்கவே கொடுக்கையைக் கெட்டியாய்ப்பிடித்துக்கொண்டு, கம்பத்தைவிட்டுச் சற்றுநேரம் அந்தரத்தில் தொங்கினான். கீழேயிருப்பவர்கள் பேசுவது அவன் செவிகளில் விழுகிறது. இராந்தல் வெளிச்சத்தையும் பார்த்தான். இன்னும் ஒரு வினாடி

யாவது ஆலசியம் செய்தால் மோசம்வரும் என்றும், பேரடி எதிரிகள் தன்னைக் கொல்லப் பார்க்கிறார்களென்றும் தெரிந்துகொண்டான். இப்போது மிக்க ஜாக்கிரதையாயும் துணிகரமாயும் வேலைசெய்தால்தான் தப்பலாம். அங்கிருந்து சாதுர்யமாய்க் கூரைமேல் பாய்ந்தேறினான். இனிக் கீழிருப்பவர்களின் இராந்தல் ஒளி இவன்மேற் படாது.

கூரைமேலிருந்து அங்கிருந்த சாளரத்தைத் திறந்து உள்ளே குதித்தான். இப்போது அவன் இறங்கிய அறை சிறியதாயும் இருட்டாயுமிருந்தது. அந்த அறையிலிருந்து வெளிப்பட்டு ஒரு நெருக்கமான தாழ்வாரத்திற்குச் சென்றான். உடனே காலடிச்சத்தம் கேட்டுத் தட்டென்று நின்றான். அச்சத்தம் சமீபத்திலிருக்கும் அறையிலிருந்து வந்தது. கமலநாதன் அதன் வாசற்படியண்டை சென்று ஒற்றுக்கேட்டான். அச்சமயம் திடீரென்று கதவுதிறக்கப்பட்டது. கமலநாதன் அங்கிருந்து திரும்புவதற்குள் அக்கதவு அவன் தோளிற்றாக்கியது.

கதவு திறக்கப்பட்டதும் குள்ளன் எட்டிப்பார்த்துக் கமலநாதனைக்கண்டு பயந்து அலறிவிட்டுக்கொண்டு மறுபடி கதவை மூடிக்கொள்ளப் பார்த்தான். ஆனால் கமலநாதன் குறுக்கேநின்று கதவைப் பிடித்து அழுத்தித் தள்ளவே, அந்தவேகத்தால் குள்ளன் கமலநாதன்மேல் விழவந்தான். கமலநாதன் உடனே எட்டி அவன் தொண்டையைக் கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டு, "பேசினால் இப்படியே கொன்று விடுவேன்" என்று பயமுறுத்தினான்.

குள்ளன் "இல்லையில்லை. கொன்றுவிடாதே" என்று கெஞ்சினான். அவன் அவ்வாறு கூறிக்கொண்டிருக்கும்போதே கமலநாதன் அவனைச்சுழற்றித் தரையில் மோதிக்கொள்ளும்படி வீழ்த்தி மறுநிமிடம் இரண்டு கைகளுக்கும் விலங்கு பூட்டிவிட்டான்.

அதன் பிறகு அவனை நிற்கும்படிசெய்து கமலநாதன் வாய்திறந்து பேசத்தொடங்கினன். "அடே இந்தத் தரம் உன்னைச்சரியாய் அழுக்திவிடுகிறேன். ஒரேநிமிஷம் அவகாசந்தருகிறேன். அதற்குள் நீ என் அறையிலிருந்து களவாடிவந்த சாமான்களை யெடுத்துக்கொடு. அப்படியுடனே செய்யாவிட்டால் உடனே நேராய்ப் போலீஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டுபோகிறேன். அங்கே கொண்டு போய் உன்மேல் கொலைக்குற்றம் சாட்டப்போகிறேன். கட்டாயம் அப்படியே செய்வேன்" என்றான்.

இவ்வார்த்தைகளைக் கேட்டதே குள்ளக்கள்ளன் முகம் வெளுத்து நடுக்கங்கொண்டு "ஐயோ! நான் யாரையும் கொல்லவில்லையே" என்றான்.

கமலநாதன்.—"பத்திரம் ஒரே நிமிஷந்தான் உனக்கு அவகாசம் கொடுத்திருக்கிறேன்" என்றான்.

குள்ளன்.—"பொறு பொறு. அவ்வளவு சீக்கிரத்தில் அவைகளை யெடுக்கமுடியாது" என்றான்.

கமலநாதன்,—"இல்லை உன்னால் முடியும். அவைகள் இங்கே யிவ்வறையிலேயே யிருக்கின்றன. சீக்கிரம் போக வேண்டும்" என்றான்.

குள்ளன் இனியாலசியம்செய்வது அபாயமென்றறிந்துகொண்டான். உடனே துரிதமாய் அறைக்குள் சென்றான். கமலநாதனும் பின்னால்சென்றான். குள்ளன் அங்கிருந்த ஒருபழைய பீரோவைத்திறந்து அதிலிருந்து ஒரு சிறு பெட்டியை யெடுத்து, அதைக் கமலநாதனிடம் கொடுத்து, "உன் அறையிலிருந்து எடுத்த சாமான்களெல்லாம் அப்படியே யிதிலிருக்கின்றன" என்றான். கமலநாதன் பெட்டியைத் திறந்து பார்க்க, காணமற்போன சாமான்களெல்லாம் அப்படியே யிருந்தன. பெட்டியை யப்படியே தன் உட்சட்டைச்சேபியில் வைத்துக்கொண்டு

குள்ளனை நோக்கி, "நான் இப்போது உன்னை விட்டு விடு கிறேன். ஏனெனில் எனக்கு வேலையிருக்கிறது, ஆனால் இன்னம் இரண்டொருமணிநேரம் வரையில் நீ என்பின்னால் வேவுபார்க்காதபடி நிச்சயம் செய்துகொள்ள வேண்டும்" என்றுகூறிவிட்டு, அவன் என்ன வேண்டிக்கொண்டும் சட்டைசெய்யாமல், அவன்வாய்க்குத் துணியடைத்துக் கைகளையும் கால்களையும்கட்டிக் குண்டுக்கட்டாகத் தூக்கிக் கொண்டுபோய், அறையில்போட்டுக் கதவைமூடிக்கொண்டு, ஜாக்கிரதையாய் அந்த வீட்டைவிட்டு வெளியில் புறப் பட்டுத் தான் முன் பிராணபத்தில் சிக்கிக் கொண்ட அந்த முற்றத்திற்கு வந்ததும் மெதுவாய் ஒற்றுக்கேட்டான்.

அங்கே ஒருவருமில்லை. தான்முன்னை ஒரு மூலையில் உட்கார வைத்துவிட்டு வந்த அந்தக்குடிகாரனை நினைத்துக் கொண்டான். சற்று நேரத்திற்குள் அவன் தான் விட்ட நிலையிலேயே யிருக்கக் கண்டான். அவனை உறக்கத்திலிரு ந்து எழுப்புவது இலேசாயில்லை. கடைசியில் மெதுவாய் எழுப்பினான். அவன் நிமிர்ந்து உட்கார்ந்து:—

"என்ன! எப்படியிருக்கிறாய் நீ? எழுந்திருக்கிற வேளைதானா?" என்றான்.

கமலநாதன்.—"நீயும் நடக்கையைத் திருப்ப வேண்டிய வேளைதான். எதோ உன்முகத்தைக் காணலாம்" என்று தன் ஜேபியிலிருந்த இராந்தலை யெடுத்து அவன் முகத்தைப் பார்த்தான்.

அவன் வதனத்தைக்கண்டதே கமலநாதன் திடுக்கிட் டான். அவன்முகம் நல்ல வாலிபமான முகம். அழகான முகம். ஆனால்அவன் உடைகள் மண்படிந்து சேறாய்க்கிடந் தன. கமலநாதன் "ஆ! குமரப்பா! நீயா இங்கேயிப்படி?" என்றான்.

தன்பெயரைக் கேட்டதே அவன் சற்று சமாளித்து

உன்னிப்பாய்க் கமலநாதனைப்பார்த்துத் தெரிந்துகொண்டு, பிறகு தன் உடைகளைக்குனிந்துபார்த்து "நான் எங்கேயிருக்கிறேன். எப்படி இங்கே வந்தேன்?" என்றான்.

கமலநாதன் தலைவெட்டி வீதியில் என்றான். குமரப்பன் "ஆ! அப்படியா? இந்த உடைகள் எப்படி வந்தன? நான் அணிந்துகொண்டிருந்தவை யிவையல்லவே; எங்கே—எப்போ—எப்படியோ தெரியவில்லை. ஏன் என்னைப்பிடித்துக்கொண்டிருக்கிறாய்? நீ துப்பறியும் கமலநாதனல்லவா?" என்றான்.

கமலநாதன்.—"ஆம் நான் உன்னை இச்சந்தில் குப்பைகளில் உட்கார்ந்திருக்கக்கண்டேன். இன்று காலை நீ வீட்டை விட்டுப் புறப்படும்போது நல்ல உடைகள் அணிந்திருக்கவில்லையா? இவைகள் கரடுமுரடாயும் கிழிந்தும் இருக்கின்றனவே" என்றான்.

குமரப்பன்.—"நான் இந்த உடுப்புகளையா அணிந்துகொண்டிருந்தேன். நான் இந்த சங்கடப்பட்டிருக்க வேண்டும். துஷ்டர்கள் என் பணம் கெடியாரம் முதலியவைகளையெல்லாம் திருடிக்கொண்டதோடு என் உடைகளையும் மாற்றிவிட்டார்கள். ஐயோ கடவுளே! இவைகளை யார் கடைசியில் அணிந்துகொண்டிருந்தார்களோ? நான் என்ன செய்ய?" என்றான்.

கமலநாதன்.—நீ வீட்டிற்குப் போய் தேகத்தைச் சுத்தி செய்துகொள். நானில்லாவிட்டால் உன்னைக்கொன்று விட்டிருப்பார்கள்; நல்லது கடைசியாய் உனக்கு ஸ்மரணையிருந்தபோது எங்கேயிருந்தாய்?

குமரப்பன்.—பெரியமார்க்கட்டுக் கெதிரிலிருக்கும் சாராயக் கடையில்.

கமலநாதன்.—உன்கூட யாரிருந்தது?

குமரப்பன்.—ஒரு வாலிபன் மூக்குக்கண்ணாடி போட்டுக்

கொண்டிருந்தான். நல்ல வேடிக்கையானவன். ஜேபி நிறைய பணம் வைத்துக்கொண்டிருந்தான். ஆ! அவன் என்னைச் சதாசிவம் பிள்ளை கொலையைப்பற்றி நோண்டி நோண்டிப் பலகேள்விகள் கேட்டான். அதெல்லாம் நிஜமோ அல்லது நான் கனவுதான் கண்டேனோ?

கமலநாதன்.—நிஜமாகவேயிருக்கும். அவன் ஒரு துப்பறிபவனாயிருக்கவேண்டும். பலபேர் இக்கேஸில் வேலை செய்கிறார்கள். அவர்களில் அவனொருவனாயிருக்கும். அவனுக்கு நீ கூறியதையெல்லாம் கவனமா யென்னிடம் கூறினால் நல்லது. ஒரு குற்றத்தை யெப்போதுமே மூடிவைக்கமுடியாது. தைரியமாய் எல்லாம் கூறிவிடு என்றான். குமாரப்பன் கலவரத்தோடு நாற்புறமும் பார்த்து இல்லை இல்லை. என்னை யிந்த விடத்தைவிட்டு அப்புறம் அழைத்துப்போ. உனக்கு நல்ல இனாம் தருகிறேன். நீ நல்ல யோக்கியமான பெரிய மனிதன். அது எனக்குத் தெரியும் என்றான்.

கமலநாதன் "வா நான் உன்னை வீட்டிற்கழைத்துக் கொண்டுபோகிறேன்" என்று அவன் கரத்தைப் பிடித்துக்கொண்டு அதைவிட்டுப் புறப்பட்டான். குமாரப்பன் நம்பிக்கையோடு கமலநாதன் தோள்மேல் கைபோட்டுக் கொண்டு மெதுவாய் நடந்தான். அவர்கள் மூன்றடிகூடச் செல்லவில்லை; அதற்குள் பின்னாலிருந்து ஆட்கள் வருகிற காலடிச்சத்தம் கேட்டு ஏதோ அபாயமென்று சட்டென்று திரும்பினார்கள். அதேநிமிஷம் எழெட்டுப் போக்கிரிகள் வந்து அவர்களைச் சூழ்ந்துகொண்டார்கள். கழிகளும் கத்திகளும் ஓங்கப்பட்டன.

அந்தக் கூட்டத்திலிருந்த ஒருவன் "இதுதான் உனக்குச் சமயம். தீர்த்துவிடு, அவனை விட்டுவிடாதே" என்று

கூவினன். கமலநாதன் ஒருபோதும் இப்படிப்பட்ட அபாயத்திற் சிக்குண்டதில்லை. அவன் சுறு சுறுப்பும் சாமார்த்தியமும் இப்போது போதுமானதாய்த் தோன்றவில்லை. ஆயினும் தன் பலங்கொண்டமட்டும் வலமும் இடமும் சக்கரம்போல் சுழன்று படபடவென்று குத்தும் உதையும்விட்டான். ஆனல் மறுநிமிடம் பின்பக்கத்தி லிருந்தவர்கள் அவன் புயங்களைப் பிடித்துக்கொண்டு தலைமீதும் தோட்கள் மீதும் பலமான அடிகள்கொடுத்தார்கள். எண்ணிக்கையில் அதிக ஆசாமிகளா யிருந்தாலும் கமலநாதன் சுலபத்தில் அடக்கப்படக்கூடிய ஆசாமியல்ல. தன்மேல் அடிவிழுவதற்குள் எதிரிகளில் இருவரைக்கீழே வீழ்த்திவிட்டான். பிறகு ஆறு ஏழுபேர் தன்னைக் கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டபோது என்ன செய்வான். அதிக உக்கிரமாய் உதைத்துக்கொண்டான். அச்சமயம் ஓகோ! நமக்குக்கெட்டவேளையென்று சிந்தித்தான். கடைசியில் இந்தப் போக்கிரிப் பயல்களால் நாம் கொல்லப்படப்போகிறோம் என்று எண்ணிக் கொண்டான்.

குமரப்பன் தள்ளாடிக்கொண்டேனும் கமலநாதனுக்குத்துணையாய் நிற்கமுயன்றான். ஆனல் ஒரு விநாடியில் அவன் அப்புறம் தள்ளப்பட்டுக் கமலநாதன் ஒருவனே அத்தனைபேரிடமும் சிக்கிக்கொண்டான். அவன் பாடு தலைகிறுகிறுத்தது. அடிகள் விழவிழ ஆயாசமடைந்தான். தள்ளாடிக் கீழே விழப்போகிறோமென்று நினைத்தான். இனியொருவிநாடிகூட சமாளிக்கமுடியா தென்று அவன் மனதிற்பட்டது.

அச்சமயம் சமீபத்திலிருந்த யாரோ ஒருவர் கூச்சலிட்டது கேட்டது. அக்குழப்பத்தின் மத்தியில் இன்னொரு உருவம்தோன்றியதைக் கண்டான். ஒருமனிதன் தன்மேல் விழும் குத்துகளைச் சட்டைசெய்யாமலே அத்தனை பேரையும் மாறிமாறியடிப்பதைக் கண்டான். அச்சமயம் அருகி

விருந்த ஒரு சாளரத்திலிருந்து திடீரென்று ஒருவெளிச்சம் தோன்றியது. அதனால் அங்கிருந்த காட்சி முழுமையும் பளிச்சென்று தெரிந்தது. இந்தவெளிச்சத்தில் கமலநாத னுக்குத் துணையாய் வந்தவனுடைய முகம் நன்றாய்த் தெரிந்தது. அவன் சரசாபாயென்ற மறுபெயருடைய சுவர்ணாம் பாளின் தந்தையாகிய வேலாயுதனே.

இச்சமயம் நமது உயிர்தப்பியது வேலாயுதனாலென்று கமலநாதன் தெரிந்துகொண்டான். வேலாயுதன் அதிக மும் மரமாய்ப் புகுந்து சிலையாமலடிக்க ஆரம்பிக்கவே அந்தத் துஷ்டர்கள் கமலநாதனைச்சற்று விட்டு வேலாயுதன்மேல் திரும்பினார்கள். ஆனால் சண்டையின்னும்முடியவில்லை. கமல நாதனுக்குச் சற்று அவகாசம் கொடுக்கப்பட்டது. ஏனெ னில் அந்தப்போக்கிரிகள் மறுபடி யவன்மேல் திரும்பினார் கள். அந்த இருட்டில் துப்பாக்கியெடுக்க அவனுக்குப் பய மாயிருந்தது. ஏனெனில் ஒருசமயம் பிசகாய் வேலாயுதனை யாவது குமரப்பனையாவது சுட்டுவிட்டால் என்னசெய்வ தென்று அஞ்சினான்.

மறுபடி கமலநாதனை யிறுக்கிப் பிடித்துக்கொண்டார் கள். அச்சமயம் இன்னொரு கூச்சல்கேட்டது. இச்சமயம் அக்கூச்சல் ஒருசிறுவனுடைய குரலாயிருந்தது. தனக்குத் தெரிந்த குரலாயுமிருந்தது. இதுமட்டுமல்ல. அச்சிறுவன் கூச்சலிட்டுக் கூறும்வார்த்தைகளும் கமலநாதனுக்கு நன் றாய்த் தெரிந்தது.

“இதோ நாங்கள் வருகிறோம். இரட்டைக் குழலோடு பலத்தகைகள்” என்று அச்சிறுவன் கூவினான்.

அவ்வாறு கூவிய சிறுவன் மறுகிமிடமே சற்றும் பயப் படாமல்துணிகரமாய் அக்கூட்டத்திற்குள் நுழைந்தான். உடனே அவன்மேல் ஒருபலமான குத்துவிழ அவன் தடுமா றிப்பின்னிடைய வேண்டிய தாயிற்று. ஆனால் அவன் தனி

யாய் வரவில்லை. அவனோடுகூட வந்தவர்கள் அவ்வளவு சலபத்தில் பின்னிடைகிறவர்களல்ல. ஆறுபேர் பலாட்டியர்களானபோலீஸ்காரர்கள் வந்திருந்தார்கள். சரவணன் அவர்களைச் சமீபத்திலிருந்த போலீஸ் ஸ்டேஷனிலிருந்து அழைத்துவந்தான். போலீஸ்காரர் கைகளிற்பிடித்துவந்த சோட்டாதடிகளோடு அந்தப்போக்கிரிகள் கூட்டத்திற்குள் நுழைந்தார்கள். உடனே இரண்டு நிமிஷத்தில் சண்டை முடிவிற்கு வந்துவிட்டது. போக்கிரிகள் மூவர் இரத்தம் ஒழுகிக்கொண்டு அடிபட்டுத் தரையில் சாய்ந்து விட்டார்கள். ஐந்துபேர் கைகளில் விலங்கிடப்பட்டு ஒடுக்கி யுட்கார்ந்துவிட்டார்கள். அப்படியுட்கார்ந்த ஆட்களில் ஒருவன் கெட்டையாய்ச் சாய்வான தலைப்பாகையும் கொள்ளிக் கட்டைகள்போன்ற கண்களும் உடையவனு யிருந்தான். அவனுடைய இடது கன்னத்தில் ஒரு காயவடு விருந்தது. அவன்றான் கொள்ளிவீரன் என்னும் துஷ்டன்.

கமலநாதன் சுமாராய்ச் சமாளித்துக் கொண்டு நடந்த சங்கதிகளைக் கூறியபின், போலீஸ்காரரில் ஒருவன் அவனை நோக்கி "இவர்களையென்ன செய்வது?" என்றான்.

கமலநாதன் "கொல்லவேண்டுமென்றஎண்ணத்தோடு என்னை வழிமடக்கி யடித்ததாகக் குற்றம்சாட்டி ஸ்டேஷனில் அடைத்துவையுங்கள்" என்றான். அவன் கொள்ளிவீரன் அருகிற்சென்று "உன்கையைத் தூக்கு" என்றான். அந்தத்துஷ்டன் ஏன் என்றான். கமலநாதன் "ஏனென்றால் நான் கூறுவதனால்" என்றான். வீரன் "தூக்கமாட்டேன்" என்றான்.

கமலநாதன் உடனே அவனுடைய வலது கையைப்பிடித்துத் தூக்கிப்பார்த்துவிட்டுப் பிறகு விட்டுவிட்டான். போலீஸ்காரன் இதை யாச்சரியமாய்ப் பார்த்தான். வீரனுக்கும் அது இன்னகாரணத்திற்காக என்று தெரியாமல் குழப்ப

மாகவே யிருந்தது. கமலநாதன் அச்சமயத்தில் யாருக்கும் ஒரு விவரமும் கூற முயலவில்லை.

சரவணன் தன்மேல் விழுந்த குத்துகளைச் சமாளித்துக்கொண்டு கமலநாதன் பக்கத்தில் வந்து நின்றான். அவன் நுட்பபுத்தியால் கமலநாதன் செய்கையைக் கண்டதோடு அதன் கருத்தையும் அறிந்துகொண்டான். அதாவது இப்போது கமலநாதனிடம் கொள்ளிவீரனுடைய வலதுகைப் பெருவிரலின் குறியும் சிக்கியது.

போலீஸ்காரர்கள் கமலநாதன், சரவணன், குமரப்பன் மூவரைமட்டும் அங்கேவிட்டுவிட்டு மற்றவரைப் பிடித்துக்கொண்டு ஸ்டேஷனுக்குச் சென்றார்கள். வேலாயுதன் மாயமாய்ப் போய்விட்டான். கமலநாதன் அவன் போய்விட்டதையறிந்து, "அடடா அவன் சற்று நிற்காமற் போய்விட்டானே, அவன் நமக்குச் செய்த உதவிக்கு நமது வந்தனத்தைக் கூறக்கூட சமயமில்லாமற் போயிற்றே. அவன் ஒரு அபூர்வமான மனிதனே; உண்மையாகவே அவன் சாதாரணமானவனல்ல. ஒரு காலத்தில் அவன் தன் உயிருக்குத் துணிந்து நமது உயிரைக் காப்பாற்றினான்" என்று கூறிக்கொண்டான்.

அவர்கள் அம்முற்றத்தைவிட்டுப் புறப்பட்டுச் செல்லும்போது கமலநாதன் சரவணனைப் புகழ்ந்து பேசினான். அதைக்கேட்கச் சிறுவனுடைய உள்ளம்பூரித்தது. வீதியின் கோடியிற் சென்றபின் மூவரும் பிரிந்துவிட்டார்கள். குமரப்பனுக்கு வெறி தெளிந்துவிட்டதால் தானே வீட்டிற்குப் போய்ச்சேரத் திரும்பினான். கமலநாதன் சரவணனைநோக்கி நீ வீட்டிற்குச்சென்று இளைப்பை யாற்றிக்கொண்டு நாளைக் காலை என் அறைக்குவா என்று கூறி, அச்சிறுவனை யனுப்பிவிட்டுத் தான் தனியே தன் விடுதியை நோக்கி நடந்தான்.

சரவணனை யனுப்பிவிட்டுச் சற்றுதூரம் போவதற்குள் சமீபத்திலிருந்து கூச்சலும் ஆட்கள் துரிதமாய் ஓடிவரும் சத்தமும் கேட்டுத் திடுக்கிட்டு, அத்திக்கை நோக்கிச் சரசர வென்று நடந்தான். அவன் அந்த விடத்திற்குச் சென்ற போது இரண்டு போலீஸ்காரர் ஒருவனைப் பிடித்துக்கொண் டிருப்பதையும், அருகில் இரண்டு பெண்கள் நிற்பதையும் அப்பெண்களில் ஒருத்தி தன்கரத்தில் ஒரு கைத்துப்பாக் கியை வைத்துக்கொண்டு அதனால் சுட்டுவிடுவேனென்று போலீஸ்காரரைப் பயமுறுத்துவதையும் கண்டான்.

கமலநாதன் அம்மூவரையும் உடனே யின்னாரென்று தெரிந்துகொண்டான். போலிஸாரிடம் அகப்பட்டிருப்ப வன் வேலாயுதன். துப்பாக்கி வைத்துக்கொண்டிருப்பவள் சுவர்ணம்பாள். கூட இருப்பவள் புஷ்பாங்கி. கமலநாதன் அவர்களுக் கிடையிற்சென்று போலீஸ்காரரை நோக்கி "இதென்ன சமாசாரம்?" என்றான்.

போலீஸ்காரரில் ஒருவன்.—"துப்பறியும் உங்களுக்கு முன் பே நாங்கள் சபாபதிப்பிள்ளையைக் கொன்ற இவனைப் பிடித்துக் கொண்டோம்; இதுதான் சங்கதி" என்றான்.

சுவர்ணம்பாள்.—"இவர் நிரபராதி. நீங்கள் இவரைப் பிடித் துக்கொண்டு போகக்கூடாது" என்று தன்கண்களில் கோபத்தீயெழக் கூறினாள்.

கமலநாதன் சாந்தமாய்ப் போலீஸ்காரரை நோக்கி, "இம் மனிதனை விட்டுவிடுங்கள். இவன் இப்போதுதான் என் உயி ரைக் காப்பாற்றினான். நான் எப்படி நிரபராதியோ அப்படி இவனும் நிரபராதியே, இவனை விட்டுவிடுங்கள். அப்படி இவன் வேண்டுமானால் எப்போது கோருகிறீர்களோ அப் போது இவனை வரும்படி செய்கிறேன். இவனுக்கு நானே பொறுப்பாளியா யிருக்கிறேன். நாளைக்கு உண்மையான குற்றவாளியை யுங்கள் முன்னே நிறுத்துகிறேன்" என் றான்.

போலீஸ்காரருக்குக் கமலநாதன் நன்ருய்த் தெரியும். அவன் எள்ளளவும் வார்த்தை பிசகமாட்டானென்று அவர்கள் அறிவார்கள். ஆகவே அவர்கள் உடனே வேலாயுதனை விட்டுவிட்டு "தாங்கள் இவனுக்காகப் பொறுப்பாயிருப்பதானல் நாங்கள் விட்டுவிடத் தடையேயில்லை" என்று கூறினர்கள்.

போலீஸார் சென்றபின்பு வேலாயுதனும் சுவர்ணும்பாளும் கமலநாதனுடைய கரங்களைப் பிடித்துக்கொண்டு வந்தனம் கூறும்போது, கமலநாதன் அவர்களை நோக்கி, "வந்தனம்கூற இது சமயமல்ல. நான் இம்மனிதனுக்குச் செய்ததைவிட இவன் எனக்கு அதிகமாய்ச் செய்திருக்கிருன். ஏனெனில் இவன் என்உயிரையே காப்பாற்றியிருக்கிருன். இவன்மேல் அவர்கள் சந்தேகப்பட்டிருக்கிற குற்றத்திற்காக இவன் விசாரிக்கப்பட்டாலும் தண்டிக்கப்படமாட்டான். ஏனெனில் இவன் நிரபராதி. தப்பறிபவர்களாகிய நாங்கள் உண்மையான குற்றவாளியைத் தப்பவிட்டு அவனுக்குப்பதில் நிரபராதி தண்டிக்கப்படும்படிவிட மாட்டோம். இந்தவிஷயத்தைப்பற்றி இன்னொரு சமயம் பேசலாம். இந்த இரவு நீங்கள் உங்கள் வாசஸ்தலத்திற்குச் சென்று நாளைக்கு என்ன சம்பவிக்கிறதென்று பார்த்துக் கொண்டிருங்கள்" என்ருன்.

அப்படிக் கூறியும் சற்றுநேரம் அவர்கள் அப்போது நடந்த சம்பவங்களைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்து பிறகு பிரிந்துசென்ருர்கள். சுவர்ணும்பாள் அந்த இரவுமுழுதும் யௌவன வாலிபனை கமலநாதன் உருவத்தையே சிந்தித்துக்கொண்டிருந்தாள். கமலநாதனே தன்னிடத்தில் சிக்கிய விறற்குறியை மற்றவைகளோடு சேர்த்துக் கடைசித்தடவையாய்ப் பரீட்சித்துப் பார்த்தான். மெழுகில் எடுத்த இரண்டு குறிகளில் ஒன்று அந்த இரத்தக்குறிக்குஒவ்வொரு

அம்சத்திலும் சரியாய் ஒத்திருக்கது. இனிக் குற்றவாளியை ருசுப்படுத்த வேண்டிய ஒரு வேலையே பாக்கி யிருக்கிறது.

12-வது அத்தியாயம்.

கமலநாதனும் கதிரேசம்பிள்ளையும்—கொலையாளி யகப்பட்டான்—கமலநாதனுடைய முடிவான ஜெயம்-இரண்டு துப்பறியும் நிபுணர்களும் சமயத்தில் சந்தித்தல்—கொலைக்கு முக்காரணன் சிறையாக்கப்படல்—ஸ்ரீவாஜியும் போலீஸ் இன்ஸ்பெக்டரும் கள்ளநோட்டும்.

முன் அத்தியாயத்தில் கூறியசம்பவங்கள் நடந்த மறு நாள் காலை ஒன்பது மணிக்குக் கமலநாதன் கதிரேசம்பிள்ளையின் வீட்டைநோக்கிச் சென்றான். கதிரேசம் பிள்ளை அச்சமயம் தன் ஆபீஸ் அறையிலிருந்தான். கமலநாதன் நிதானமாய் அவ்வறையைத் தேடிக் கொண்டு அவ்விடத்திற்குச் சென்றான். அந்த அறையின் வாசற்படியண்டை நின்று கொண்டிருந்த காவலனான சிறுவனை யப்புறம் தள்ளிவிட்டுக் கமலநாதன் அந்த அறைக்குட்சென்றான்.

கமலநாதன் கதவைத் திறந்துகொண்டு உள்ளே சென்றதே கதிரேசம் பிள்ளை அவனைக்கண்டு கோபத்தோடு,

“நான் இங்கேயிருக்கிறேனென்று காவலிருக்கும் சிறுவன் கூறினானா?” என்றான்.

கமலநாதன் சாந்தமாகவே “இல்லை. நீ இங்கிருப்பதை நான் இன்னொரு மூலமாய் அறிந்து கொண்டேன்” என்று கூறிவிட்டுக் கதவை மூடி யதன்மேல் சாய்ந்து கொண்டு கதிரேசம் பிள்ளையை உற்றுநோக்கி, “நான் மகா முக்கியமான சமாசாரம் கொண்டுவந்திருக்கிறேன். அதைப் பற்றி யுனக்கு அக்கறை யிருப்பதால் ஒரு சடங்கு மில்லாமலே யதைக்கேட்பாயென்று நினைத்தேன்” என்றான்

கதிரேசம்பிள்ளை இதைக் கேட்டதே நாற்காலியிற் சாய்ந்து என்ன சமாசாரம்? என்றான்.

கமலநாதன்.—"அச்சாபீஸில் நடந்த கொலையின் இரகசியத்தைக் கண்டுபிடித்து விட்டேன். உன் கூட்டாளியைக் கொன்றவன் இன்னனென்று தெரிந்து கொண்டேன். ஒரு சந்தேகமுமின்றித் தெரிந்து கொண்டேன்" என்றான்.

இம்மொழிகளைக் கேட்டதே கதிரேசம் பிள்ளையின் முகம் சவம்போல் வெளுத்து விட்டது. கைகால்கள் நடுக்க மெடுத்துக் கொண்டன. அவன் துள்ளிக் குதித்தெழுந்து,

"நீ—நீ—உனக்கு நிச்சயமாய்த் தெரியாது" என்று வாய்குளறிக்கொண்டே கூறினான்.

கமலநாதன்.—"ஒரு ஐயமுமின்றி யுண்மையாகவே தெரியும்" என்றான்.

கதிரேசம்பிள்ளை.—வேலாயுதனா? என்றான்.

கமலநாதன் அல்லவென்றான்.

கதிரேசம்பிள்ளை "அப்படியானால் தாமோதரன்" என்றான். கமலநாதன் "தாமோதரனுமல்ல; சபாபதிப் பிள்ளையைத் துப்பாக்கியால் சுட்டவன் இப்போது க்ஷேமமாய்ச் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டிருக்கிறான். ஆனால் அக்கொலையில் அவன்மட்டுமே சம்பந்தப்பட்டவனல்ல. அவன் இன்னொருவன் கைக்கோலாயிருந்தான். அவனைக் கொலை செய்யக் கூலிகொடுத்துத் தூண்டியவன் வேறே யொருவன். அவனே கொலைக்கு மூலகாரணம். இப்போது அடைக்கப் பட்டிருப்பவன் ஒரு பிரசித்திபெற்ற போக்கிரி. அவன் பெயர் கொள்ளிவீரன். அவனுக்கு முரடன் என்றே பெயர். இன்றுகாலை நான் அவனைக்காணச் சென்றேன். அவன் செய்த குற்றத்திற்கு என்னிடத்திலிருக்கும் ருசு இப்படிப் பட்டதென்று அவனுக்குக் கூறியபிறகு அவன் நடந்தசங்

கதி முழுதும் விவரமாய்க்கூறினேன். அது நான் சந்தேகித்ததற்குச் சரியாயிருந்தது. நான் உன் இடத்திலிருந்தால் ஒருபோதும் ஆயுதம் எடுக்கவேமாட்டேன். நீ என்னோடு கூடவந்து, நீ சபாபதிப்பிள்ளையைக் கொல்லச் செய்ததாக உன்மேல் சாட்டப்படும் குற்றச்சாட்டிற்கு பதில் கூற வேண்டும்" என்று கூறிக்கொண்டிருந்தவன் தட்டென்று ஒரு பாய்ச்சலாய்க் கதிரேசம்பிள்ளைமேல் பாய்ந்து அவன் தன்னைச் சுட நீட்டிய துப்பாக்கியைப் பிடுங்கிக் கொண்டான்.

அதே நிமிஷம் கதவுதிறக்கப் பட்டதும் இரண்டு போலீஸ்காரர்களும் அவர்கள் பின்னால் ஜீவாஜியும் உள்ளே வந்தார்கள். ஜீவாஜி கமலநாதனைக் கண்டதும் அவனருகில் வந்து, பக்ஷத்தோடு மிருதுவசனமாய், "நண்பனே! நீ ஜெயமடைந்தாய். அதற்காக நான் மிக்க சந்தோஷங்கொண்டாடுகிறேன். நீ என்ன காரியமாக இங்குவந்தாயோ அதே காரணமாகவே நானும் வந்தேன். நீ யுள்ளே நுழைவதைப் பார்த்தபோது உன் காரியம் இன்னதென் றறிந்துகொண்டேன். நாமிருவரும் இந்த இரகசியத்தைக் கண்டு பிடித்து விட்டோம். ஆனால் நீ இரண்டொரு நிமிஷம் எனக்கு முந்தி விட்டாய். நான் கதிரேசம்பிள்ளையின் வர்த்தக நிலைமை எப்படியிருக்கிறதென்று ஆராய்ந்து பார்த்தபோது, இவன் கம்பெனிப் பணத்தை ஏராளமாக எடுத்து இரகசியமாகச் சில வியாபாரங்கள் நடத்தியதாகவும், அதில் பெரியநஷ்டம் வந்து விட்டதாகவும், கொலைநடந்ததினத்திற்கு முன் நாள் சபாபதிப்பிள்ளை யதைக் கண்டுபிடித்து விட்டதாகவும் தெரியவந்தது. கதிரேசம்பிள்ளை மோசம்செய்து கள்ளக் கையொப்பம் இட்டதோடு பொய்க்கணக்கும் எழுதி யிருக்கிறான். இனி யிவையாவும் வெளிவந்துவிடுமென் றஞ்சிக் கொள்ளிவீரனைவழைத்து அவன் சபாபதிப் பிள்ளையைக்

கொன்றுவிட்டால் பெருந்தொகை கொடுப்பதாய்க் கூறினன். அந்தப்போக்கிரிப்பயல் அதற்குச் சம்மதித்து அவ்வாறே செய்துவிட்டான். துப்பாக்கி வெடிகிளம்பியபோது கதிரேசம்பிள்ளை ஆபீஸ் அறையின் முன்பாகத்தி லிருந்தவன், சாளரத்தின் கதவைத்திறந்து மறுபக்கம் குதித்து அப்புறம் போய்விட்டான். கொலைசெய்தவனும் அவன் பின்னலேயே ஓடினன். சாளரத்தின் இலைக்கதவி லிருந்த இரத்தக் கறையான விரற்குறி அவனுடைய தென்றே நம்புகிறேன். அந்த உளவைப்பிடித்துக்கொண்டே நீ முழுதும் ஜெயமடைந்தாய்.

பக்கத்துக் கட்டடத்திலும் ஒரு சாளரத்தின் கதவு திறந்திருந்தது உனக்குக் கவனமிருக்கும் என்று நம்புகிறேன். கொலையாளி அதன் வழியாய் அடுத்த கட்டடத்திற்குள் நுழைந்து கொண்டான். தாமோதரன் மறைவிலிருந்து நடந்த சங்கதியைப் பார்த்துக்கொண் டிருந்தான். அவன் இன்றுகாலை யாவற்றையும் ஒளியாமல் கூறிவிட்டான். சபாபதிப்பிள்ளை தற்கொலை செய்து கொண்டார் என்று கூச்சலிட்டவன் அவன்றான். அவன் தன் எஜமானனை மறைத்து வைக்கலா மென்றெண்ணி யப்படிச் செய்தான். மேலும் கதிரேசம்பிள்ளை செய்திருக்கும் மோசத்திற்கு அவன் உடந்தையாயிருப்பதால் அதை யெல்லாம் அவன் வெளியிடமுடியாது. இதன்றி கைக்கூலியும் வாங்கிக்கொண்டான். அதனுல் கொலைக்குற்றத்திற்குத் தான் உடந்தையென்று எங்கே சந்தேகமுண்டாகிவிடுமோ வென்று பயந்துஒளிந்து கொண்டிருந்தான், கடைசியில் அவன் அச்சாபீஸின் நிலவறைகளிலிருந்துஒரு கள்ளவழியாய் வெளிப்பட்டு ஓட்டம் பிடித்தான். நான்றான் அவ்வழியைக் கண்டுபிடித்து அவனை அச்சாபீஸிலிருந்து வெளியே துரத்தி விட்டேன்" என்று இவ்விஷயங்களை யெல்லாம் துரிதமாய்க் கூறினன்.

தான் தப்பவழியின்றிச் சிக்கிக்கொண்டதைக் கதிரேசம்பிள்ளை யுணர்ந்ததே திகிலால் மூர்ச்சையாய்விட்டான். போலீஸ்காரனும் அங்கு வரவழைக்கப்பட்ட டாக்டரும் மூர்ச்சை தெளிவித்தார்கள்.

கமலநாதன் தனக்குமுன்பு ஜெயமடைந்துவிட்டானென்று ஜீவாஜிக்கு அவன்மேல் குரோதம் கிடையாது. ஆனால் நாம் முன்னடியாகவே காரியத்தை முடித்துவிடாமற் போய்விட்டோமே யென்ற மனஸ்தாபம்மட்டும் கொஞ்சமுண்டு. ஆனால் மற்றொருவிஷயத்தில் அவன் மனதிற்குத் திருப்தியுண்டாயிருந்தது. அதாவது அவன் கொலைக்கேஸைக் கண்டுபிடிக்கப் பிரயத்தனப் பட்டபோது தற்செயலாய் மிக்க அபாயகரமான கள்ளநாணயம் அச்சடிக்கும் கள்ளக்கூட்டத்தாருடைய தொழிற்சாலையைக் கண்டுபிடித்துவிட்டான். தொள்ளிவிநனைப் பின்பற்றிச் சென்றசமயம், சாராயக்கிடங்கண்டை யொருவீட்டிற்குள் ஜீவாஜி நுழைந்துபார்த்தபோது அங்கே ஒரு அறையில் கள்ளநோட்டுகள் அச்சடித்துக்கொண்டிருப்பதைக்கண்ட விஷயம் நேயர்கள் மறந்துவிட்டிருக்கமாட்டார்கள். அந்தக்கள்ளக் கூட்டத்தாரைப் பிடித்துவிட்டால் கமலநாதன் கண்டுபிடித்த கொலைக்கேஸுக்கு அது சமதையாய்விடும் என்பது ஜீவாஜியின் எண்ணம்.

ஜீவாஜி அச்சாபீஸிலிருந்து கமலநாதனை விட்டுப் பிரிந்து சென்றபோது, இன்றிரவு எப்படியாவது அந்தக் கள்ளநாணயம் செய்யும் கள்ளக்கூட்டத்தைப் பிடித்து விடவேண்டுமென்று உத்தேசித்துக் கொண்டான். அதனால் அச்சாபீஸிலிருந்து நேராய்ப் பிரதம போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்றான். அங்கிருந்த தலைமை இன்ஸ்பெக்டர் ஜீவாஜியைக் கண்டதே எழுதுவதைவிட்டெழுந்து முகமலர்ச்சியோடு கைலாகு கொடுத்து " ஆ ! ஜீவாஜி ! உன்னை அச்சம

யம் காண்பது மிக்க சந்தோஷமா யிருக்கிறது. வேலை யதிகம்போலிருக்கிறது. இங்கு வருவதே கருட சேவை யாதிரியாய்விட்டது. நாற்காலியை யருகில் இழுத்துக் கொள். உன்னால் ஆகவேண்டிய வேலை இன்னதென்றுகூறு கிறேன். அது உன்சாமர்த்தியம் முழுதும் வெளியிலிழுக் கக் கூடியவேலை. அவ்வாறு நாங்கள் நினைக்கிறோம்" என்றான்.

ஜீவாஜி.—நான் துரைத்தனத்திற்கு எவ்வளவோ உதவி செய்துகொண் டிருக்கிறேன்.

இன்ஸ்பெக்டர்.—தவறின்றிச் செய்திருக்கிறாய். அதைப் பற்றி அய்யமில்லை. இப்போது நான் கூறப்போகிற திருக்கிறதே இது மிக்க பிரமாதமானது. இதனால் துரைத்தனத்தார் மனம் மிக்க கலக்கமடைந்திருக் கிறது. இது மட்டுமல்ல; இதைச்சீக்கிரம் அடக்கா விட்டால் நாடெங்கும் குழப்பமாய்விடும். துரைத் தனத்தார்பாடு பெரிய இக்கட்டாய் முடியும். உனக்கு இப்போது மற்றவேலைகள் அதிகமா யில்லையென் றெண்ணுகிறேன்.

ஜீவாஜி.—தற்சமயம் கொஞ்சம் குறைவே.

இன்ஸ்பெக்டர் அதன் பிறகு எழுந்து அங்கிருந்தஒரு அலமாரியைத் திறந்து அதன் ஒரு அறையிலிருந்து ஒரு நூறுரூபாய்நோட்டை யெடுத்துக்கொண்டுவந்து ஜீவாஜியை நோக்கி, "கள்ள நோட்டுகள் நாணயங்கள் இவைகளைக் கண் டுபிடிப்பதில் நீ பிரக்யாதி பெற்றவனென்று நம்புகிறேன்", என்றான்.

ஜீவாஜி புன்னகையோடு நாட்பட்ட அநுபவத்தால் அந்த விஷயத்தில் கொஞ்சம் புத்தியுண்டு என்றான்.

இன்ஸ்பெக்டர்.—"துரைத்தன பிரதம பொக்கிஷக்கா ரரே அவ்வாறு கூறினார். இதோ இந்த நோட்டைப்

பார்" என்று ஒரு நூறு ரூபா நோட்டை யவன் கரத்திலளித்தான்.

ஜீவாஜி அந்தநோட்டை வாங்கிச் சுமார் ஐந்து நிமிஷம் வரைச் சாக்கிரதையாய்ப் பார்த்து விட்டுக் கடைசியில் "இது கள்ளநோட்டே" என்றான்.

இன்ஸ்பெக்டர்.—ஆ! கடந்த இருபத்துநான்கு மணிநேரத்தில் நான்குபேர் பாங்கி ஷராப்புக்காரர்கள் இதை நல்லநோட்டென்று கூறிவிட்டிருக்கிறார்கள்.

ஜீவாஜி.—நால்வரும் பிசகி விட்டார்கள். ஆனால் இந்த நோட்டு மிக்க சாமார்த்தியமாய்ச் செய்யப்பட்டிருக்கிறது. இதுவரையில் இவ்வளவு தந்திரமாய்ச் செய்யப்பட்ட நோட்டை நான் கண்டதேயில்லை.

இன்ஸ்பெக்டர்.—இது கள்ளநோட்டு என்று நான் கூறிய போது அவர்கள் அப்படித்தான் சொன்னார்கள். இது செய்யப்பட்ட அச்சோ?

ஜீவாஜி.—"அச்சு களவாடப்பட்ட அச்சல்ல" என்று உறுதியாய்க் கூறினான்.

இதைக்கேட்ட இன்ஸ்பெக்டர் மிக்க வியப்படைந்து "அப்படியிருக்க நீ எப்படி இதைக் கள்ளநோட்டென்றறிந்து கொண்டாய்?" என்று வினவினான்.

ஜீவாஜி.—நான் உனக்கு அதைக்காட்டுகிறேன். ஒரு கள்ள நோட்டைக் கண்டு பிடிக்க என்னிடம் பத்துவிதபரீட்சைகளிருக்கின்றன. இந்தநோட்டு ஒன்பது பரீட்சைகளுக்குத் தப்பித்துக்கொண்டது, பத்தாவது பரீட்சையில் சிக்கிக்கொண்டது. சரியான ஒருநோட்டு உன்னிடமிருக்கிறதா?" என்றான்.

இன்ஸ்பெக்டர் இதோ இருக்கிறதென்று இன்னொரு நூறு ரூபாய் நோட்டை எடுத்துக் கொடுத்தான். ஜீவாஜி யதைப்பார்த்து, "இதோ மூலையில் வெட்டியிருக்கிறதேயென்

றான். இன்ஸ்பெக்டர் இரண்டு நோட்டுகளில் கள்ளநோட்டு இன்னதென்று தெரியாமல் மயங்கிவிடுவேனென்ற பயத்தால் அப்படிச்செய்திருக்கிறேன் என்றான்.

ஜீவாஜி அதன் பிறகு தான் கள்ளநோட்டைக் கண்டு பிடித்த அதி நுட்பமான மார்க்கத்தை இன்ஸ்பெக்டருக்குக் காட்டினான். இன்ஸ்பெக்டர் மிக்கவியப்படைந்து, "இது வரையில் ஐந்துவிதமான பரீட்சைகள்தான் எனக்குத் தெரியும். இந்தப் பத்துக் குற்றங்களை இப்போதுதானறிந்தேன்" என்றான்.

ஜீவாஜி "ஒவ்வொன்றில் பத்துக்குற்றமுமிருக்கும், சிலவற்றில் ஒன்பது, எட்டு, ஆறு, ஐந்து, நான்கு இருக்கும். இதில் ஒன்றுமட்டுமே யிருப்பதால் இது எவ்வளவு சாமார்த்தியமாய்ச் செய்யப்பட்டிருக்கிறதென்று தெரிகிறதுபார்" என்றான்.

இப்படிப்பட்ட நோட்டைச் செய்தவர்கள் எப்படிப்பட்ட கள்ளப் பயல்களாயிருக்க வேண்டும் என்று ஜீவாஜி தன் மனதில் சிந்தித்துக்கொண்டு, இவர்களை எப்படியாவது பிடிக்க வேண்டுமென்று தீர்மானித்துக் கொண்டான். இன்ஸ்பெக்டர் ஆவலோடு அவன் முகத்தைப்பார்த்துக் கொண்டேயிருந்தான்.

ஜீவாஜி.—"என்ன ஆனாலும் சரி, இவர்களைப் பிடிக்கவே வேண்டும்" என்றான்.

இன்ஸ்பெக்டர்.—அதுதானே முடியாத காரியமாயிருக்கிறது. துரைத்தன பொக்கிஷக்காரர் ஊணுறக்கமின்றி ஏக்கம் பிடித்துக்கிடக்கிறார். ஜனங்களுக்குள் திகில் பிடித்து விட்டால் துரைத்தன நோட்டுகளெல்லாம் ஏககாலத்தில் வாபீசு வந்துவிடும். அப்போது பணத்திற்குத் திண்டாட்டமாய்விடும். அதனால் அவர்கள் எனக்குக் கண்டிப்பான உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள்.

எத்தனையோ பாடுபட்டும் ஒரு உளவு கூட அகப்படவில்லை. என்னசெய்வேன்? இந்த நோட்டு பாங்கியிலிருந்து நேற்று வந்தது. இரவு முழுதும் எனக்கு நித்திரையே கிடையாது.

ஜீவாஜி.—இப்படிப்பட்ட நோட்டுகள் எத்தனை வெளிவந்திருக்கின்றனவோ சொல்லமுடியாதென்று நினைக்கிறேன்.

இன்ஸ்பெக்டர்.—ஒவ்வொரு பாங்கிக்கும் எச்சரிக்கை செய்திருக்கிறோம். ஆனால் பொதுஜனங்கள் ஏமாந்து விடுவார்களே.

ஜீவாஜி.—நீர் இன்னும் ஏதாவது எனக்குக்கூறவேண்டியதிருக்கிறதோ?

இன்ஸ்பெக்டர்.—"ஒன்றுமில்லை. எனக்கு ஒன்றுமே தெரியவில்லை. எல்லாம் சர்வசூன்யமாயிருக்கிறது. இந்த நோட்டு கள்ளநோட்டு என்று தெரிந்துகொள்ளவேயென்றால் முடியவில்லை. கஷ்டத்திற்குப் பால்மாறாமல் எப்படியாவது இதைக்கண்டுபிடித்து விடவேண்டும்" என்றான்.

13-வது அத்தியாயம்

கள்ளநாணயங்கள் செய்யுமிடம்— திடுக்கிடும் சம்பவங்கள்— ஜீவாஜியின் ஆச்சரிய சாமர்த்தியம்—கள்ளநாணயம் செய்யும் கள்ளக் கூட்டம் பிடிக்கப்படுவது.

ஜீவாஜி நாற்காலியில் சாய்ந்து புன்னகையோடு "இந்த நிமிஷம் வேண்டுமானாலும் அக்கள்ளர் இருக்குமிடத்தை நான் கண்டுபிடிக்கக் கூடியதாயிருந்தாலோ?" என்றான்.

இன்ஸ்பெக்டர் மிக்க வியப்படைந்து, "என்ன?" என்று திடுக்கிட்டெழுந்தான்.

ஜீவாஜி —ஒரு நிமிஷம்பொறும், அப்படிச்செய்ய என்னால கூடும் என்று நினைத்துக்கொள்வோம் ?" என்றான்.

இன்ஸ்பெக்டர் ஆத்திரத்தோடு "சொல்லு, விவரமாய்க்கூறு" என்றார்.

ஜீவாஜி.—"நான் சபாபதிப்பிள்ளை கொலைக்கேஸில் கொஞ்சம் சிரத்தையெடுத்துக்கொண்டேனென்பது உமக்குத் தெரியுமல்லவா ?" என்றான்.

இன்ஸ்பெக்டர் மிக்க ஆத்திரத்தோடு "இதற்கும் அதற்கும் ஒரு சம்பந்தமுமில்லை. இந்தச்சங்கதியைக் கூறு" என்றார்.

ஜீவாஜி.—"அது உண்மையே. ஆனால் அந்தக் கொலைக்கேஸ் விஷயமாய் ஒரு இடத்திற்குச் சென்றபோது தற்செயலாய் இக்கள்ளநாணயம் செய்யும் கூட்டத்தைப் பற்றியொரு உளவு அகப்பட்டது. அதைக்கொண்டு அக்கள்ளரை யெந்த நிமிஷத்திலும் வேண்டுமாயினும் பிடித்துவிடக்கூடும்" என்றான்.

இதைக்கேட்ட இன்ஸ்பெக்டர் மிக்க வியப்படைந்து தயவுசெய்து எல்லாசங்கதியும் விவரமாகக் கூறவேண்டுமெ அவர்களைப்பிடிக்க எவ்வளவு ஆதாரம் இருக்கிறதோ தெரியவேண்டும் என்று வேண்டிக் கொண்டார். அதன் பிறகு ஜீவாஜி தான் கொள்ளிவீரனைத் தேடிக்கொண்டு போனதும் அங்கே அக்கள்ளரைக்கண்டதுமாகிய விஷயங்களை யெல்லாம் விவரமாகக் கூறினான்.

இதைக்கேட்டதே இன்ஸ்பெக்டர் மிக்க சந்தோஷமடைந்து "சீக்கிரம் பிடித்து விடவேண்டும். அவர்கள் சந்தேகம் கொண்டு ஓடிவிடுவதற்குள் தாமதிக்காமல் பிடித்துக்கொள்ளவேண்டும். இன்னம் அதிக நோட்டுகளை யவர்கள் வெளியிடுமுன் வேலை முடிந்துவிட வேண்டும்" என்று ஆவலோடு கூறினார்.

ஜீவாஜி— நான் இப்போதே ஆரம்பம் செய்யத் தயாராயிருக்கிறேன். நான் அந்த வேலையாகத்தான் இங்கே வந்தது. ஆனால் எனக்குக் கொஞ்சம் பக்கத்துணை வேண்டும்" என்றான்.

இன்ஸ்பெக்டர் "உனக்கு யாரார் வேண்டுமோ, எத்தனை பேர் வேண்டுமோ அழைத்துக் கொண்டுபோ; முதலில் நீ எப்படி வேலைசெய்ய உத்தேசித்திருக்கிறாய்? கூறு பார்ப்போம்" என்றார்.

ஜீவாஜி.—இருட்டாயிருக்கும் சமயத்தில் ஆற்றின் மேற்பாகத்திலிருந்து போகவேண்டும். சாராயக்கிடங்கின் பக்கம் நல்ல காவல் வைத்திருப்பார்கள்.

இன்ஸ்பெக்டர்.—அதெல்லாம் உன் ஏற்பாடு. உன் யோசனைப்படி செய். ஆற்றுப் போலீஸ் இன்ஸ்பெக்டருக்கு ஒரு கடிதம் தருகிறேன். உனக்கு வேண்டிய நம்பகமான ஆட்களைக் கொடுப்பார். எதற்கும் நமது ஆட்களில் இரண்டொருவரைக்கூட அழைத்துப்போ.

ஜீவாஜி.—இங்கிருந்து மல்லயாண்டியை மட்டும் அனுப்பினால் போதும். மற்ற ஆட்களை அங்கிருந்து அழைத்துக்கொள்வேன்.

மல்லயாண்டி யென்பவன் ஜீவாஜிக்கு நன்றாய்த் தெரிந்த சிநேகன். மிக்க தைரியமும் பலமுமுள்ளவன், சத்தியவான். இன்ஸ்பெக்டர் மல்லயாண்டியை யுடனே யழைப்பித்து ஜீவாஜி வந்திருக்கும் அலுவலைக் கூறியதே அவன் மிக்க சந்தோஷத்தோடு கூடச்செல்வதாய் ஒப்புக்கொண்டான்.

இன்ஸ்பெக்டரும் ஜீவாஜியும் சம்பாஷித்தான இரண்டு மணி நேரத்திற்குள் ஆற்றுப் போலீஸ்காரர் இருக்கும் பிரதம ஸ்டேஷனண்டையிலிருந்து இரண்டு படகுகள் புறப்படுவதைக் காணலாம். முதல் படகில் இரண்டே பேர்

தண்டுவலித்துக் கொண்டு சென்றார்கள். அதற்குச் சற்று தூரம் பின்னால்செல்லும் படகில் பத்துப்பேர் காத்திர ரூபிகள், நல்ல பலசாலிகள் உட்கார்ந் திருக்கிறார்கள்.

ஜீவாஜியும் மலையாண்டியும் முன்னே போவதென்றும், கூடுமானால் சாராயக்கிடங்கிற் கருகில் கரையேறுவதென்றும், மற்றவர்கள் பின்னால்சென்று அங்கு கரையேறி நின்றிருந்து, முன்னே சென்றவர்கள் சமிக்ஞை செய்யும்போது ஓடிப்போய் அவர்களோடு கலந்து கொள்வதென்றும் ஏற்பாடு.

முன்னே சென்ற இருவரும் படகு செலுத்துவதில் சமர்த்தர்கள். அதிக இருட்டாயிருந்ததால் பின்னால் செல்பவர்கள் முன் செல்பவர்களைத் தொடர்ந்து செல்வது அதிககஷ்ட சாத்தியமாயிருந்தது. இரண்டாவது படகை வலிப்பவன் சாக்கிரதையோடு முன் செல்லும் படகைப் பார்த்தபடியே சென்றான். அச்சமயம் ஒரு இருண்ட மூலையிலிருந்து ஒரு சிறு படகு ஒரே ஆளால் வலிக்கப்பட்டு அம்புபோல் புறப்பட்டது. அதைக்கண்டதே பெரிய படகை யோட்டுபவன் " ஆ! அவன் காவலிருந்தவன். கள்ளர்களை எச்சரிக்கை செய்யப்போகிறான் " என்றான். மற்றவர்கள், " அப்படியானால் உன்பலமெல்லாம் காட்டித்துரிதமாய் விடு. இன்றேல் அவன் எல்லாவற்றையும் கெடுத்துவிடுவான். நமக்கு அவமானமே கிடைக்கும் " என்றார்கள்.

ஆனால் அன்று இந்தத்தனி மனிதன் விவகாரம் கெட வேண்டுமென்று விதியிருந்தது. ஏனெனில் அவன் இருட்டிலிருந்து புறப்படும்போதே நான்கு கூர்மையான கண்கள் அவன்மேல் தம் பார்வையை நாட்டின. ஜீவாஜியும் மலையாண்டியும் எச்சரிக்கையாகவே யிருந்தபடியால், உடனே தங்கள் படகைத் திருப்பி அவன் இவர்களைப் பார்ப்பதற்குள் இவர்கள் அவன் படகின் பக்கத்தில் நெருங்கிவிட்டார்கள். இரண்டு படகுகளும் உராய்ந்து கொண்டன.

மலையாண்டி சட்டென்று அப்படகைப் பிடித்துக் கொண்டான். ஜீவாஜி தன் கைத்துப்பாக்கியை அப்படகி லிருந்த மனிதன் கன்னத்திற்கு நேராய் நீட்டி, "ஒரு க்ஷிணம் நில்; இந்த இருட்டில் எங்கே போகிறாய்?" என்று அதட்டிக்கேட்டான்.

அம்மனிதன்.—"அதைப்பற்றி உனக்கு அக்கரையில்லை" என்றான்.

ஜீவாஜி.—"எப்படியிருந்தாலும், உன்னை இன்னம் ஒரு அடி கூடப் போகவிடாமல் தடுப்பது என் அக்கரையென்று காட்டுகிறேன். இதென்ன தெரியுமா?" என்று தன் மேல் சட்டையை நீக்கி யுள்ளே தொங்கவிட்டிருக்கும் உத்தியோகப் பதக்கத்தைக்காட்டினான்.

அப்பதக்கத்தைக் கண்டவுடனே யம்மனிதன் முகம் வெளுத்து நடுக்கங்கொண்டு வாய் குழறிக்கொண்டே "போலீஸ்" என்றான்.

ஜீவாஜி.—"ஆ! தெரிகிறதா! இப்பதக்கத்தை யிதுவரை யில் பார்க்காவிட்டாலும் கேள்விப்பட்டாவது இருப் பாய். இப்போது நீ இந்தவிடத்தில் என்னவேலை செய்கிறாய்? ஒளிக்காமல் கூறு பார்ப்போம்" என் றான்.

அம்மனிதன் "நான் சொல்லவேண்டியது ஒன்றுமே யில்லை" என்றான். ஜீவாஜி:—"அப்படியானால், பாபம் இந்த இரவு உனக்குக் கஷ்டமான காலமாய் முடியும். நீ பேசாமல் நாங்கள் கேட்கும் சங்கதியைப் பற்றி யுனக்குத் தெரிந்த உண்மையைக் கூறிவிட்டால் வீணாய் நீ சிறைச் சாலைக்கு வரவேண்டிய கஷ்டம் நீங்கி விடும்" என்றான்.

இதைக்கேட்டவுடனே அவனுக்கு அதிக நடுக்கமுண்டாய் விட்டது. சற்றுநேரம் திகைத்தபின் "நீங்கள் என்ன தெரிந்துகொள்ளவேண்டும்" என்றான்.

ஜீவாஜீ.—“அந்தப் பழைய சாராயக்கிடங்கில் இப்போது வேலை செய்துகொண்டிருக்கிறார்களோ?” என்று கேட்டான்.

அம்மனிதன்.—“ஆ! நீங்கள் தெரிந்துகொண்டிருக்கிறீர்கள். எல்லாம் கூறிவிட்டால், நான் எப்படித் தப்புவது?” என்றான்.

ஜீவாஜீ.—இன்றிரவு உன்னைப் பத்திரமாய்ப் பார்த்துக் கொள்ளுகிறோம். காலையில் நீ உன் இஷ்டப்படி போகலாம்.

அம்மனிதன் அக்கள்ளர் கூட்டத்தைச் சேர்ந்தவனல்ல, வெளியாள். யாராவது வந்தால் எச்சரிக்கைசெய்வதற்காகக் கூலிக்கு அமர்த்தப்பட்டவன். ஜீவாஜீ அவனைக் கண்டபோதே அதை யறிந்துகொண்டான். அதனால்தான் அவனைக் காலையில் விட்டு விடுவதாய் வாக்களித்தான். அம்மனிதன் கள்ளர் அதிக சிரத்தையாய் வேலைசெய்வதாயும், அன்றே கடைசி இரவென்றும், மறுநாட் காலை கூட்டம் கலைந்துவிடுமென்றும் கூறினான்.

இனித் தாமதிப்பதில் மோசம்வரும். பெரியபடகும் அதற்குள் வந்துசேர்ந்து கொண்டபடியால் அம்மனிதன் அதிலிருப்பவர்கள் வசத்தில் ஒப்புவிக்கப்பட்டான். கரையில் அவர்களை யெல்லாம் விட்டு விட்டு ஜீவாஜீயும் மலையாண்டியும் புறப்பட்டார்கள்.

இருவரும் கள்ளர் இருக்கும் கட்டிடத்தண்டை சென்றதே சுவரேறி உள்ளேயிறங்கி, ஜீவாஜீ முன்கண்ட விடத்தில் சேர்ந்தார்கள். ஜீவாஜீ முன் சென்றமாதிரியே நிலக்கரியிருக்கும் சுரங்கத்தின் வழியே சென்றார்கள். கடைசியில் கள்ளர் வேலைசெய்யும் அறையின் கதவண்டை சென்று துவாரத்தின் வழியாய்ப் பார்த்தார்கள். இப்போது அங்கே அதிக ஆட்கள் இருந்தார்கள். சுமார்

பத்துப் பன்னிரண்டுபேர், எல்லாரும் துணிகரமான முரட்டுப் போக்கிரிகள் இருந்தார்கள்.

கள்ளர்கள் கூட்டம் கூட்டமாய்ப்பிரிந்து நின்று பேசிக்கொண்டும் நகைத்துக்கொண்டும் இருந்தார்கள். அவர்களுடைய கஷ்டமான வேலை முடிந்ததென்று தெரிந்தது. கஷ்டத்திற்குப் பலமான இலாபம் கிடைக்குமென்று எதிர்பார்த்துக்கொண் டிருக்கிறார்கள். திடீரென்று அவர்களில் ஒருவன் முன்னே வந்து நின்றதே யாவரும் தட்டென்று பேச்சை நிறுத்தி விட்டார்கள். இதனால் அவன்றான் தலைவனென்று தெரிந்தது. அவன் மற்றொருவனை நோக்கி எங்கே எல்லாருடைய பெயரையும் கூப்பிடு என்றான்.

அவ்வாறே எல்லாருடைய பெயர்களும் தெரிந்தபின், முதல் அழைக்கப்பட்டவன் முன்னே வந்து நின்றான்.

தலைவன்.—அவனை நோக்கி, "மாயாண்டி! நீ காலை நான்கு மணி இரயிலிலேறிப் பொன்னூர் மார்க்கமாய்த் தேவநகர் மாகாணத்திற்குச் செல்லவேண்டும். மூன்று நாள் கழித்து மறுபடி வந்து நமது கட்டளையை யறிந்து கொள்ள வேண்டும்" என்றான்.

மாயாண்டி—"அப்படியே செய்கிறேன். இவைகளைப் பறக்கவிடுவதில் ஒரு கஷ்டமுமில்லை" என்றான்.

இவ்வாறு ஒன்பது பேர் அழைப்பட்டு ஒவ்வொரு மாகாணத்திற்கும் செல்லும்படி கட்டளை யிடப்பட்டார்கள். துரைத்தனத்தாருக்குத் தங்கள் நடக்கை எள்ளளவு கூடத் தெரியாதென்பதே அவர்கள் நம்பிக்கை. ஒரு மாதத்திற்குள் இக்கள்ள நோட்டுகள் கட்டுக் கட்டாய்த் தேசமெங்கும் நிறைந்து விடும். பிறகு எங்கும் பெரிய திகிலும் குழப்பமும் உண்டாய் விடும். துரைத்தனத்தாருக்குப் பெரிய இக்கட்டாய் முடிந்து விடும். ஜீவாஜி ஒருவன் இப்படி நேரிடவிடக்கூடாதென்று தீர்மானங்கொண்டிருந்தான்.

கள்ளர்கள் கூட்டமாய் நின்று பேசிக்கொண்டிருக்கிறார்கள். ஜீவாஜி மலையாண்டியின் செவியில் என்னமோ குசுகுசு வென்று கூறிவிட்டுத் தன் ஜேபியிலிருந்து ஒருபிகிலை யெடுத்துக் கெட்டியாய் ஊதினான். ஊதிக்கொண்டே தன்புயத்தால் கதவை நெட்டித்தள்ளக் கதவு படீரென்று திறந்துகொண்டது. ஜீவாஜி கள்ளர் இருக்கும் அறைக்குள் புகுந்தான். மலையாண்டி யவன் பக்கத்திலேயே நுழைந்தான்.

ஒரு பெரிய பூதமானது திடீரென்று தங்கள் எதிரில் வந்து அகோரரூபத்தோடு நின்றால் கூட அக்கள்ளர் அவ்வளவு பயமடைய மாட்டார்கள். தங்கள் எதிரில் திடீரென்று வந்து நின்ற இரண்டு துப்பறியும் ஆசாமிகளைக் கண்ட கள்ளர் பயந்து திகிலால் பிரமித்து நின்றார்கள். சிலர் ஓடுவதற்கு வழியெங்கே யிருக்கிறதென்று பார்த்தார்கள். அச்சமயம் அவர்கள் தலைவன்,

"கோழைகளே! நில்லுங்கள். இரண்டு பேருக்கு முன் ஓட்டமெடுக்கிற ஆண் பிள்ளைகள் தானா நீங்கள்?" என்றான்.

இரண்டு துப்பறியும் ஆட்களும் தங்கள் கைகளிற் பிடித்த துப்பாக்கிகளை நீட்டி "உங்களில் எவனாவது ஒரு அடி யப்புறம் பெயர்ந்தால் தட்சணம் அவன் ஆயுள் முடிந்தது" என்றார்கள்.

அப்போது கள்ளர் தலைவன் "நீ யுன் முடிவைக் கூறிவிட்டாய்" என்று தன் இடுப்பிலிருக்கும் துப்பாக்கியை யெடுக்க இடுப்பில் கையைவைத்தான். அதே நிமிடம் அவன் புயத்தில் ஒரு துப்பாக்கிக் குண்டு பாய்ந்ததும் தலையைக் கவிழ்த்தபடி தரையில் விழுந்தான்.

அச்சமயம் கதவு மறுபடி திறக்கப்பட்டதும் பன்னிரண்டு பேர் ஆயுதம்தரித்த போலீஸார் உள்ளே நுழைந்தார்கள்.

ஜீவாஜி கள்ளரை நோக்கி "உங்கள் ஆட்டம் முடிந்து விட்டது. பேசாமல் அடங்கி விடுங்கள்" என்றான்.

கள்ளரில் மிக்க துணிகரமான இரண்டொருவருக்கு மட்டும் ஒரு கை பார்க்கப் பிரியமாயிருந்தாலும், பெரும்பாலார்க்குத் தங்களை யொப்புக்கொடுத்து விடுவதே உத்தமம் என்று தோன்றியது. உடனே அவர்களிடமிருந்த ஆயுதங்கள் பிடுங்கப்பட்டன. ஒவ்வொருவனும் சோதனை செய்யப்பட்ட பின்பு எல்லார் கைகளுக்கும் விலங்கு பூட்டப்பட்டது. அறையிலிருந்த அச்சுகளும், மற்றக்கருவிகளும், கத்தைக் கத்தைகளாய் வைக்கப்பட்டிருந்த கள்ள நோட்டுகளும், இன்னும் எல்லாச் சாமான்களும் போலீஸார் வசமாயின. உடனே ஸ்டேஷனுக்கு ஒரு ஆள் அனுப்பப்பட்டான். சீக்கிரத்தில் இவர்களுக்கு உதவியாக இன்னும் சில போலீஸார் வந்துவிட்டார்கள். அதன் பிறகு கள்ளர்களும் சாமான்களும் போலீஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டுபோகப்பட்டார்கள்.

அன்று இரவு ஜீவாஜி மிக்க சந்தோஷத்தோடு நித்திரைக்குச் சென்றான். சபாபதிப்பிள்ளை கொலைக்கேஸில் தாம் ஜெயமடையவில்லையே யென்பதைப்பற்றி யவனுக்கு எள்ளளவு கவலையுமில்லை.

14-வது அத்தியாயம்.

நீதிசபையில் குற்றவிசாரணைகள்—குற்றவாளிகள் தண்டனையடைதல்—முடிவான சம்பவங்கள்.

கதிரேசம்பிள்ளைக்கு மூர்ச்சை தெளிந்ததே அவன் போலீஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டுபோகப்பட்டான். இச்சங்கதி பரந்ததே நகரமெங்கும் பெருங் குழப்பமுண்டாயிற்று. யாவரும் மிக்க ஆச்சரியமடைந்தார்கள்.

மறுவாரம் நீதிச்சபையில் விசாரணை யாரம்பமாயிற்று. அன்று அங்கு கூடிய ஜனங்களுக்கு இடம்போதவில்லை. ஏனெனில் கதிரேசம்பிள்ளையை இதுகாறும் யாவரும் மகா உத்தமவானான பெரியமனிதன் என்று எண்ணிக்கொண் டிருந்தபடியால் இப்பேர்த்தி அவனே தன் கூட்டாளியைக் கொலை செய்தானென்ற சங்கதியைக் கேட்க யாவரும் இது நிஜமோ பொய்யோ பார்க்கவேண்டுமென்று நீதிச்சபையில் வந்து சூழ்ந்து விட்டார்கள். ஜூரர்கள் ஒரு புறம் ஆசனத்தி லமர்ந்தார்கள். விசாரணை யாரம்பமாய் விட்டது.

கமலநாதன், ஜீவாஜி, சரவணன், தாமோதரன், கொள்ளிவீரன், சுவர்ணம்பாள் இவர்கள் சாக்ஷிகளாய் விசாரிக்கப்பட்டார்கள்.

கமலநாதனும், ஜீவாஜியும் நீதிச்சபைமுன் நின்று, கதிரேசம்பிள்ளையும் கொலையுண்ட சபாபதிப்பிள்ளையும் அச்சாபீஸில் கூட்டாளிகளென்றும், கதிரேசம்பிள்ளை பொதுப் பணத்தில் எடுத்துச் செலவுசெய்து விட்டதாகவும், அச்சங்கதியைச் சபாபதிப்பிள்ளை தெரிந்துகொண்டபடியால் கதிரேசம்பிள்ளை யவனைக் கொல்ல வேண்டியதாய் நேரிட்டதென்றும் நிரூபித்தார்கள்.

சரவணன் சாக்ஷிக் கூண்டில் நின்று, தாமோதரன், கொலை நடந்தவுடனே சபாபதிப்பிள்ளை தற்கொலை செய்துகொண்டார் என்று கூவியதாகவும், பிறகு அவன் அச்சாபீஸில் ஒளிந்துகொண் டிருந்தா னென்றும், அவனும் கதிரேசம்பிள்ளையின் புத்திரனாகிய குமரப்பனும் அச்சாபீஸில் இரகசியமாய்ப் பேசிக்கொண்ட விஷயங்களையும் நிரூபித்ததோடு, ஹோட்டலில் கொள்ளிவீரனும் மாறுவேட மணிந்துகொண் டிருந்த கதிரேசம்பிள்ளையும் பேசிக்கொண் டிருந்த விஷயங்களையும் நிரூபித்து விட்டான்.

இதனால் கதிரேசம் பிள்ளை கொள்ளிவீரனுக்குக் கைக் கூலிகொடுத்துச் சபாபதிப் பிள்ளையைக் கொல்லுவித்தா னென்றும், பிறகு அச்சங்கதி வெளிவராமலிருக்கக் கமலநாதனையும் ஜீவாஜியையும் கூடக் கொன்றுவிட இருவரும் ஆலோசனை செய்தார்களென்றும் ருசுவாய்விட்டது.

தாமோதரனை விசாரித்தபோது அவன்—

" என் எஜமானாகிய கதிரேசம் பிள்ளை கம்பெனிப் பணத்தில் பெருந்தொகை யெடுத்துச் செலவுசெய்து விட்டார். இச்சங்கதி சபாபதிப்பிள்ளைக்கு எப்படியோ தெரிந்து விட்டது. அவர் "இதைநீர் சீக்கிரத்தில் சரி செய்யாவிட்டால் இதைப்பற்றி மனஸ்தாபம் நேரிடும்" என்று கூறினார். பிறகு கொள்ளிவீரன் சபாபதிப் பிள்ளையைச் சுடும் போதும் அவன் சாளரத்தின் வழியாய் வெளித் தாண்டும் போதும் நான் பார்த்தேன். இது கதிரேசம் பிள்ளையின் தூண்டுதலால் நடந்ததென்று எனக்குத் தெரியும். ஆகையால் அதை மறைப்பதற்காகச் சபாபதிப்பிள்ளை தற்கொலை புரிந்து கொண்டார் என்ற வதந்தி யுண்டாக்கினேன். போலீஸார் என்னை விசாரிக்கும்போது அவர்கள் என்னென்ன கேள்விகேட்பார்களோவென்று பயந்துகொண்டு ஓடிப்போய் அச்சாபீசுக்குள் ஒளிந்துகொண்டேன். குப்பன் அங்குவந்து என்னைக் கண்டபோது அவனுக்கு என் இரகசியத்தைக் கூறினேன்," என்று உண்மையாய் நடந்த சங்கதியாவும் கூறிவிட்டான்.

கொள்ளிவீரனை விசாரித்தபோது அவன் அடியிற்கண்ட படி கூறினான்.—

"கதிரேசம்பிள்ளை கம்பெனிப் பணத்தில் பெருந்தொகை யெடுத்துச் செலவுசெய்து விட்டார். அதை மறைக்கத் தப்புக்கணக்கு எழுதியதோடு கள்ளக் கையொப்பம் வைத்துப் பத்திரங்கள் பிறப்பித்திருந்தார். கொலை நடந்த தினத்திற்கு முன்னாள் சபாபதிப்பிள்ளை யவைகளை யெல்லாம் கண்டுவிட்டார். இனி யாவும் வெளிவந்தால் தனக்கு மோசமாகுமென் றெண்ணிக் கதிரேசம்பிள்ளை என்னிடம் வந்து சபாபதிப் பிள்ளையைக் கொன்றுவிடும்படி ஏற்பாடு செய்

தார்'' என்றும் தான் முன் ஒப்புக்கொண்டபடியே சபாபதிப் பிள்ளையைக் கொன்றுவிட்டுச் சாளரத்தின் வழியாய் வெளிப்பட்டுப் பக்கத்திலிருந்த கட்டிடத்திற்குள் நுழைந்து போய் விட்டதாகவும், அப்போது தன் இரத்தக்கறைபட்ட கையால் சாளரக்கதவைப் பிடித்துத் தாண்டியபோது தன் பெருவிரற்கறை யதில் பதிந்துவிட்டதாயும், பிறகு தனக்குச் சேரவேண்டிய பணத்தைக் கேட்பதற்காக ஒரு ஹோட்டலில் கதிரேசம் பிள்ளையைச் சந்தித்தபோது, அவர் மாறுவேடமணிந்து வந்து தன்னைச் சந்தித்ததாயும், பணம் கேட்டபோது "நீ தொடங்கிய வேலையைப் பூர்த்தி செய்தாலன்றிப் பணம் கொடேன். அதாவது துப்பறிபவர்களான கமலநாதனையும் ஜீவாஜியையும் கூடக் கொன்று விட்டால் தான் இச்சங்கதி வெளிப்படாமலிருக்கு மென்றும், அவ்வாறே யவர்களையும் கொன்று விட்டால் எனக்குச் சேரவேண்டிய 1500 ரூபாய்க்குப் பதிலாக மூவாயிரம் ரூபாய் தருவதாகவும் கூறினார்'' என்றும், அவ்வாறே பிறகு தான் கமலநாதனைக் கொல்லமுயன்றபோது அவன் தந்திக்கம்பியிலேறித் தப்பித்துக் கொண்டது முதலிய எல்லா விஷயங்களையும் கூறி விட்டான்.

கடைசியில் நியாயாதிபதி கதிரேசம் பிள்ளையை நோக்கி "உன்மேல் இக்குற்றங்கள் ருசுவாயிருப்பதால் உன்னைத் தண்டிக்கப் போகிறேன். இப்போதாவது உண்மையைக் கூறுகிறாயா?'' என்று கேட்டபோது கதிரேசம் பிள்ளை பெருந் துயரத்தோடு யாவையும் ஒப்புக் கொண்டார்.

நியாயாதிபதி ஜூரர்களைக் கேட்டபோது அவர்களும் கதிரேசம் பிள்ளையும் கொள்ளிவீரனும் இருவரும் குற்றவாளிகளே யென்று கூறிவிட்டார்கள். ஆகையால் நியாயாதிபதி இருவருக்கும் மரணதண்டனை விதித்துவிட்டார்.

ஜீவாஜியால் பிடிக்கப்பட்ட குற்றவாளிகள்மேல் கள்ளநாணயம் செய்தகுற்றம் ருசுவாய்விட்ட படியால் அவர்களனைவருக்கும் மரண பரியந்தம் தீபாந்தரசிட்சை விதிக்கப்பட்டது.

ஜீவாஜிக்குந் திறைத்தனத்தால் பெரும்பரிசும் கீர்த்தியும் கிடைத்தது.

கமலநாதனுடைய பெயர் எங்கும் புகழ் பெற்றது. கமலநாதன் கதிரேசம் பிள்ளையின் புத்திரனாகிய குமரப்பனை நோக்கி,

“உன் தந்தை இக்கொலையை நடத்திவிட்டு அக்குற்றத்தைச் சுவர்ணம்பாளின் தந்தையாகிய வேலாயுதன் மேல் சுமத்தப் பார்த்தார். வேலாயுதன் இனிக்கெட்ட வழிகளில் பிரவேசிக்க மாட்டான். நீ உன் தந்தை செய்த பாபம் பரிகாரமாவதற்காக அவனை முன்போல் கம்பெனியில் கூட்டாளியாய்ச் சேர்த்துக்கொள். சுவர்ணம்பாள் மிக்க யோக்யவதி. நீ யவளை மணம்புரிந்து கொண்டால் க்ஷேமப்படுவாய். நான் அவளைச் சம்மதிக்கச் செய்கிறேன்” என்றான். குமரப்பன் அவ்வாறே யொப்புக் கொண்டான்.

அதன்படிக்கு ஆறுமாதங்கள் கடந்த பிறகு, குமரப்பனுக்கும் சுவர்ணம்பாளுக்கும் திருமணம் முடிந்தது. வேலாயுதன் கம்பெனியில் முன்போல் கூட்டாளியாய்ச் சேர்ந்து தன் புத்திரியுடனே வசித்துக்கொண்டிருந்தான்.

வேலாயுதன் தன் வரையில் பல தகாத நடவடிக்கைகளில் தலையிட்ட போதிலும், ஒருவருக்குந் தீங்கிழைத்தவனல்ல. ஆகையால் அவன் ஆபத்துகளில் சிக்கிறபோதும் கடவுள் அவனைக் கைவிடாது காப்பாற்றினார். சுவர்ணம்பாளுடைய நேர்மையான குணத்தால் குமரப்பனும் தன் தீயநடக்கைகளை விட்டுவிட்டு சுகத்தோடும் க்ஷேமத்தோடும் வாழ்ந்து கொண்டிருந்தான். கதிரேசம்பிள்ளையும் கொள்ளிவீரனும் எவ்வளவு தந்திர சாமர்த்தியத்தோடு தங்கள் குற்றத்தைச் செய்திருந்த போதிலும் முடிவில் சிக்கிக்கொண்டு தண்டனைக்குள்ளானார்கள்.

நன்மை நன்மையையும் தீமை தீமையையுமே விளைவிக்கும்.

ஓம் தத் ஸத்

"ஆனந்தபோதினி"

ஓர் இனிய மாதாந்தத் தமிழ்ச் சஞ்சிகை.

இச்சஞ்சிகை 1915ஞு ஜூலைமீ முதல் சென்னையில் பிரசுரி க்கப்பட்டு வருகிறது தற்காலம் குன்றியிருக்கும் நமது தமிழ் பாஷையின் அபிவிர்த்தியையும், நமது நாட்டாருடைய இலெள கிக ஆசார ஒழுக்கங்களின் சீர்திருத்தத்தையும், ஆன்மார்த் ஞானாபிவிர்த்தியையும். பெண் கல்வியையும் நோக்கமாய் கொண்டே இசசஞ்சிகை பிரசுரிக்கப்பட்டு வருகிறது. பிரதிசஞ் சிகையிலும், மேற்கண்ட விஷயங்களோடு, நமது சிறுவர், சிறு களுக்கும், ஸ்திரீகளுக்கும் அவசியமான நீதிகளும், புத்திம களும் காணலாம். எல்லா விஷயங்களும் உலக அநுபவமுடை கல்வியாளரால் வரையப் படுகின்றன. இவையன்றி ம-ா-ா-ஸ்ரீ ஆரணி குப்புசாமி முதலியாரவர்களால் மிக்க நேர்த்தியான ந நாவல்களும் தொடர்ச்சியாய் எழுதப்பட்டு வருகின்றன. இ போது இது நமது நாட்டில் பிரசுரிக்கப்படும் எல்லாத் தமிழ் சஞ்சிகைகளையும் விட அதிகமான சந்தாதாரரையுடையது. இ ஜாதிமத பேதமின்றி ஒவ்வொரு மாணவனும், புருடனும், ஸ்தி யும் அவசியம் வாசிக்கத்தக்கது. இது நமது நாட்டாரது நன்மை யொன்றைமட்டும் கருதியே பிரசுரிக்கப்படுவதால். டெம்மி பக்கம் அளவில், 40 பக்கம் விஷயங்களுள்ள இச்சஞ்சிகை க்குத் தபாற்கூலி யுள்பட வருட சந்தா 1 ரூபாதான் ஏற்படு த்தப்பட் டிருக்கிறது. பினாங்கு, ஸிங்கப்பூர் முதலியவெளி நா களுக்கு ரூபா 1-4-0. மாதிரி காப்பி வேண்டுவோர் 1 அ ஸ்டாம்பு அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியார் இயற்றிய நாவல்கள்.

	ரூ.	அ.		ரூ.	அ.
இரத்தினபுரி இரகசியம் 2-பாகமும்	3	8	தினகரசுந்தரி	1	
கற்கோட்டை	2	0	பத்மாஸனி	0	
தேவசுந்தரி	1	4	வீரநாதன்	0	
கனகபூஷணம் (மறுபதிப்பில்)			ஆனந்தசிங் (மறுபதிப்பில்)		
சுவர்ணாம்பாள்	0	12	பவளத்தீவு-அச்சில்		
கமலசேகரன்	1	4	பூங்கோதை	0	
மதனபூஷணம்	1	0	மின்சாரமாயவன்	1	
ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸருடையசரித்திர உபதேசங்கள்	1	12	குணசுந்தரன்	0	
			சகோதரவாஞ்சை	0	
			ஹைஸ்கூல் பதிப்பு	0	

விலாசம் : **மானேஜர், "ஆனந்தபோதினி" ஆபீஸ்,**
நெ. 6, வெங்கடேச மேஸ்திரி வீதி, சௌகார்பேட், மதரா

Printed at the "Ananda Bodhini" Power Press, Madras.